C73 | 86

வெளியீடு 19-3-1986 Issued 19—3—1986

2884

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜூலை 11, 1985 - தொகுதி XIII எண் 1
Thursday, the 11th July 1985 - Volume XIII No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly, Secretariat, Fort St. George,**
**Madras - 600009**

விலை: ரு. 3-00 காசுகள்; [Price Rs. 3-00 paise

2884

T.N.L.A. Debates

Official Report

Vol XIII No 1

11th July 1985


D
V211,31 N85
N85·13·1;1
136421

V211.31 1185
NF 85 . 10-1 1)
13642!
சென்னை-600 009.

உள்ளடக்கம்.

11—7—1985

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. | iv—vi |
| (ii) Personnel of the Government of Tamil Nadu. .. | vii—viii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. | ix—x |
| (iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற பெயர்ப்பட்டியல்) .. | x—xviii |
| 1. வினாக்கள்—விடைகள் : உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 1—31 |
| 2. பேரவை முன்னவருக்குப் பிறந்த நாள் வாழ்த்து | 31 |
| 3. தகவல் கோரல் : மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்படுகிற நாளில் சட்ட முன்வடிவுகளையும் எடுத்துக் கொள்வது .. | 31 |
| 4. ஒழுங்குப் பிரச்சனை : பேரவைச் செயலகத்தின் இலச்சினையை வெளியார் பயன்படுத்துவது—தீர்ப்பு .. | 32—33 |
| 5. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) மேட்டுப்பாளையம் காந்தி மைதானத்தில் சேரும் காய்கறிக் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவது .. | 33—35 |
| (ஆ) முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களது உண்ணாவிரத நோன்புப் போராட்டம் .. | 35—42 |
| 6. அரசினர் சட்ட முன் வடிவுகள் : | |
| (அ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதி நிலை அளித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1985 .. | 42 |
| (ஆ) விளம்பரப் பலகைகள் கையகப்படுத்துதல் சட்டமுன் வடிவு, 1985 .. | 99—132 |

| | பக்கங்கள் |
|---|---|
| மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் | 99—102<br>125 132 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 102—107 |
| டாக்டர் கே. சௌரிராஜன் | 107—112 |
| திரு. அ. ரகுமான்கான் | 112—120 |
| * திரு. செ. செம்பலை | 120—122 |
| * திரு. கு. சுப்பராயன் | 122—124 |
| திரு. குமரி அனந்தன் | 124 |
| (இ) மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1985 .. | 133—137 |
| மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் | 133—134<br>136—137 |
| *திரு. பொன். முத்துராமலிங்கம் | 134—135 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 135—136 |
| (ஈ) தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1985 .. | 138—141 |
| மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் | 138, 139,<br>140—141 |
| திரு. ப. பொன்னுரங்கம் | 139 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 139—140 |
| 7. வரவு-செலவுத் திட்டம், 1985–86, வாக்கெடுப்பு; | |
| கோரிக்கை எண். 31— பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன்— தொடர்ச்சி | 42—98 |
| திரு. வி. கே. இராசு | 43—48 |
| *திருமதி பி. லட்சுமி | 48—51 |
| திரு. எம். செல்லமுத்து | 51—56 |
| திரு. எஸ். பாலசுப்பிரமணியன் | 57—58 |
| திரு. ஆர்.எஸ். ஆறுமுகம் | 60—63 |
| திரு. கு. தமிழரசன் | 63—70 |
| திரு. பொ. உத்திராபதி | 70—76 |
| திரு. எஸ். என். இராமசாமி | 76—78 |
| திரு. சி. சிவப்பிரகாசம் | 78—83 |
| திரு. பி. ஆர். திருஞானம் | 83—86 |
| மாண்புமிகு திரு. எ. அருணாசலம் | 86—98 |



| | பக்கங்கள். |
|---|---|
| கோரிக்கை எண். 21— மீனளம் | |
| கோரிக்கை எண். 32— பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் .. | 142 |
| மாண்புமிகு திரு. எம்.ஆர். கோவேந்தன் | 142,<br>218—234 |
| திரு. வை. பாலச்சந்திரன் | 143—148 |
| * திரு. மு. ஆனந்தன் | 148—150 |
| * திரு. எஸ். வேணுகோபால் | 150—157 |
| திரு. அ. வெங்கடாசலம் | 157—161 |
| திரு. ப. பொன்னுரங்கம் | 161—173 |
| திரு. செ. செம்மலை | 173—179 |
| திரு. ஜி.கே. பிரான்சிஸ் | 179—182 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 182—189 |
| * திருமதி பா. வளர்மதி | 190—195 |
| திரு. பொ. உத்திராபதி | 195—200 |
| * திரு. சா. ஞானசுந்தரம் | 200—203 |
| திரு. எஸ். என். இராமசாமி | 203—206 |
| * திரு. பி.கே.எம். முத்துராமலிங்கம் | 206—208 |
| திரு. க. சோலைராசு | 208—210 |
| *திருமதி. தா. இராசாம்பாள் | 210—218 |
| 8. அறிவிப்பு : | |
| விளம்பரப் பலகைகள் கையகப்படுத்துதல் சட்டமுன் வடிவு, 1985 .. | 98 |
| 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 235—236 |

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)— வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)— ஆதி திராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எா். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)— பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத்துறை அமைச்சர்)— மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த் துறை அமைச்சர்)— கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா.ஜ.மு. யூசுப் : (பொதுப் பணித் துறை அமைச்சர்)— பொதுப் பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ; (கூட்டுறவுத் துறை அமைச்சர்)— கூட்டுறவு.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU.

### THIRU SUNDARLAL KHURANA.

*Members of the Council of Ministers* :

1. The HON. Dr. M. G. RAMACHANDRAN : (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. The HON. Dr. V.R. NEDUNCHEZHIAN : (*Minister for Finance*)—Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps, and Ex-servicemen.

3. The HON. THIRU S. RAMACHANDRAN : (*Minister for Electricity*)—El ctricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Piess.

4. The HON. THIRU K. A. KRISHNASAMY : (*Minister for Labour*)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The HON. THIRU R. M. VEERAPPAN : (*Minister for Information and Religious Endowments*) -Information and Publicity Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest,-Cinchona and grant of Liquor permits.

6. The HON. THIRU K. RAJARAM : (*Minister for Industries*)—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The HON. THIRU P. U. SHANMUGAM : (*Minister for Local Administration*) —Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Ind btedn ss

8. The HON. THIRU C. ARANGANAYAGAM : (*Minister for Education*) —Education, Official Language, Tamil Development and Culture.

9. The HON. Dr. K. KALIMUTHU : (*Minister for Agriculture*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. The HON. THIRU C. PONNAIYAN : (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation of Money Lending and Legislation on Chits.

11. The HON. Dr. H.V. HANDE : (*Minister for Health*)—Health and Environmental Pollution Control.

12. The HON. THIRU S. MUTHUSWAMY : (*Minister for Transport*)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

13. The HON. THIRU S. THIRUNAVUKKARASU : (*Minister for Food*) —Food, Price Control and Census.

14. The HON. THIRU V. V. SWAMINATHAN : (*Minister for Handlooms*)—Handlooms and Textiles.

15. The HON. THIRU R. SOUNDARARAJAN : (*Minister for Nutritious Meals*)—Nutritious Meals.

16. The HON. THIRU T. VEERASAMY : (*Minister for Commercial Taxes*)—Commercial Taxes.

17. The HON. THIRU N. NALLUSAMY : (*Minister for Housing*)—Housing and Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

18. The HON. THIRU ANOOR P. G. JAGADEESAN : (*Minister for Rural Industries*)—Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The HON. THIRU T. RAMASAMY : (*Minister for Rehabilitation and Employment*)— Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. The HON. THIRU A. ARUNACHALAM : (*Minister for Adi Dravidar Welfare*)—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The HON. THIRU M. R. GOVENDAN : (*Minister for Backward Classes*)—Backward Classes and Fisheries.

22. The HON. TMT. GOMATHI SRINIVASAN : (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages, and Correctional Administration.

23. The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY : (*Minister for Khadi*)—Khadi, Bhoodan and Gramdhan.

24. The HON. THIRU Y. S. M. YUSUF : (*Minister for Public Works*)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The HON. THIRU K.K.S.S.R. RAMACHANDRAN : (*Minister or Co-operation*)—Co-operation.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு.

திரு. செ. செம்மலை.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.

திரு. மு. இராமநாதன்.

திரு. வே. இரா. ஜெயராமன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### இணைச் செயலாளர்

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. வி. சீதாராமன், பி.காம், பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்கள்

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்சி.

திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள்

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,

திரு. பெ. சு. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,

திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.,

திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.

### எஸ்டேட் அலுவலர்கள்

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

திரு. கேசவராம், பி.ஏ.

2884

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

## திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம். சர்க்கரைப் பாகு கழிவு, தொல் பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின்துறை அமைச்சர்) —மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத் துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், கால் நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகுதிரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்) —கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட.)

11. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (கைத்தறித் துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன்: (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுச்சாமி : (வீட்டு வசதித் துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 49 உச்சி, திரு கே. .. .. | கூடலூர் |
| 50 உத்திராபதி, திரு பொ... .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 51 எத்திராசன், திரு கி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 52 கணபதி, திரு கே. ஆர். .. | சிதம்பரம் |
| 53 கதிர்வேலு, திரு மா. .. .. | ராணிப்பேட்டை |
| 54 கந்தசாமி, திரு கா. வே. .. | கிணத்துக்கடவு |
| 55 கந்தசாமி, திரு பெ. .. .. | பொங்கலூர் |
| 56 கல்லன், திரு கே. .. .. | உதகமண்டலம் |
| 57 கலிதீர்த்தான், திரு சோ. .. | சங்கராபுரம் |
| 58 காளிமுத்து, டாக்டர் கா. .. | மதுரை கிழக்கு |
| 59 கிருஷ்ணசாமி, திரு கே. ஏ. .. | ஆயிரம் விளக்கு |
| 60 கிருஷ்ணசாமி, திரு வி. இரா. .. | அணைக்கட்டு |
| 61 கிருஷ்ணமூர்த்தி, திரு கி. .. | கும்பகோணம் |
| 62 கிருஷ்ணராஜ், திரு ஜி. .. .. | சேலம்—1 |
| 63 குப்புசாமி, திரு கு. .. .. | ஒட்டன்சத்திரம் |
| 64 குமர குருபர ராமநாதன், திரு, ச. | விளாத்திகுளம் |
| 65 குமரி அனந்தன், திரு .. | ராதாபுரம் |
| 66 குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர் |
| 67 கோமதி சீனிவாசன், திருமதி. .. | வலங்கைமான் (செ.வ) |
| 68 கோவிந்தசாமி, திரு ஆர். .. | குடியாத்தம் |
| 69 கோவிந்தசாமி, திரு ச... .. | எடப்பாடி |
| 70 கோவேந்தன், திரு எம். ஆர். .. | பேராவூரணி |
| 71 சங்கரலிங்கம், திரு ச. .. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72 சண்முகம், திரு இரா. .. .. | திருத்தணி |
| 73 சண்முகம், திரு என். .. .. | சோளிங்கர் |
| 74 சண்முகம், திரு ப உ. .. | மேல் மலையனூர் |
| 75 சண்முகையா பாண்டியன் திரு... | ஆலங்குளம் |
| 76 சந்திரசேகர், திரு மு. .. | முகையூர் |
| 77 சந்திரசேகரன், திரு ஆ. .. | சோழவந்தான் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 78 சம்சுல் ஆலம், திரு வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டினம் |
| 80 சரோஜா, திருமதி இரா. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81 சாமிக்கண்ணு, திரு தா. .. | செங்கம் (செ.வ.; |
| 82 சித்தன், திரு என். எஸ். வி. .. | திருமங்கலம் |
| 83 சிந்தன், திரு வி. பி. .. .. | வில்லிவாக்கம் |
| 84 சிவக்குமார், திரு ஆர். .. .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85 சிவக்குமார், திரு எம். .. | கூனூர் (செ.வ.) |
| 86 சிவஞானம், திரு ந. .. | திருவோணம் |
| 87 சிவப்பிரகாசம், திரு சீ... .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88 சிவராமன், திரு எஸ். .. .. | சின்னசேலம் |
| 89 சிவராஜ், திரு சு. .. .. | ரிஷிவந்தியம் |
| 90 சின்னக்குழந்தை, திரு மு. .. | ஆரணி |
| 91 சின்னச்சாமி, திரு ரா. .. .. | தர்மபுரி |
| 92 சின்னசாமி, திரு வே. கு. .. | பவானிசாகர் |
| 93 சின்னராசு, திரு க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 94 சின்னராசு, திரு மா. .. | மேட்டுப்பாளையம் |
| 95 சுந்தரதாஸ், திரு மா. .. | விளவன்கோடு |
| 96 சுப்புராயர், திரு சி. .. | கம்பம் |
| 97 சுப்பராயன், திரு கு. .. | திருப்பூர் |
| 98 சுப்பிரமணிய ஆதித்தன், திரு எஸ். ஆர். .. | திருச்செந்தூர் |
| 99 சுப்பிரமணியன், திரு உ. .. | சிவகங்கை |
| 100 சுப்பிரமணியன், திரு வி. .. | கண்டமங்கலம் (செ.வ) |
| 101 சுவாமிநாதன், திரு வி. வி. .. | புவனகிரி |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்—தொடர்ச்சி

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்
திரு. பி. கோதண்டராமன்.

தலைமை நிருபர்
திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம்.ஏ.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.**

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 | அண்ணாதாசன், திரு எம். .. | திருவரம்பூர் |
| 2 | அப்துல் சமத், திரு ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி. |
| 3 | அப்துல் மஜீத், திரு எச். .. | வாணியம்பாடி |
| 4 | அரங்கநாயகம், திரு செ. .. | தொண்டாமுத்தூர் |
| 5 | அரிக்குமார், திரு இரா. .. | பேரணமல்லூர் |
| 6 | அருணாசலம், திரு இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 7 | அருணாசலம், திரு எ. .. | வரகூர் (செ.வ.) |
| 8 | அன்பழகன், திரு க. .. .. | பார்க்டவுன் |
| 9 | அன்பழகன் திரு கே. .. .. | ஓமலூர் |
| 10 | அன்பழகன், திரு தி. .. .. | நாட்ராம்பள்ளி |
| 11 | அன்பழகன், திரு பொ. .. | இளையான்குடி |
| 12 | ஆண்டி அம்பலம், திரு மெ. .. | நத்தம் |
| 13 | ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு .. | ஆண்டிமடம் |
| 14 | ஆபிரகாம், திரு ம. .. .. | ஆலந்தூர் |
| 15 | ஆறுமுகம், திரு அ. .. .. | வந்தவாசி |
| 16 | ஆறுமுகம், திரு எச். ஜி. .. | பென்னாகரம். |
| 17 | ஆறுமுகம், திரு ஆர். எஸ். .. | ஓட்டப்பிடாரம் (செ.வ) |
| 18 | ஆறுமுகம், திரு எ. எஸ். ஏ. .. | விருதுநகர் |
| 19 | ஆறுமுகம், திரு செ. .. | மதுராந்தகம் |
| 20 | ஆறுமுகம், திரு சேலம் மு. .. | சேலம்—2. |
| 21 | ஆனந்த கிருஷ்ணா, திரு ஜி. .. | பூந்தமல்லி |
| 22 | ஆனந்தன், திரு மு. .. | உளுந்தூர்பேட்டை |
| | இரகுபதி, திரு கோ. .. | காட்பாடி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 24 | இரகுமான்கான், திரு அ. .. | சேப்பாக்கம். |
| 25 | இரத்தினம், திரு எம். வி. .. | பொள்ளாச்சி |
| 26 | இரத்தினவேலு, திரு சே. .. | முசிறி |
| 27 | இராசமாணிக்கம், திரு ஆர். .. | அரூர் (செ.வ.) |
| 28 | இராசமணிக்கம், திரு எல்ல. .. | தாம்பரம் |
| 29 | இராசரத்தினம், திரு எப். எம் .. | கொளச்சல் |
| 30 | இராசரத்தினம், என்கிற மணி திரு எம். .. | விழுப்புரம் |
| 31 | இராசாங்கம், திரு மு. .. | திருவிடைமருதூர் |
| 32 | இராசாம்பாள், திருமதி த. .. | தலைவாசல் (செ.வ.) |
| 33 | இராசாராம், திரு க. .. .. | பனமரத்துப்பட்டி |
| 34 | இராசாராமன், திரு எஸ். .. | பாபநாசம் |
| 35 | இராசு, திரு வி. கே. .. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 36 | இராசேந்திரன், திரு எஸ். என்... | தூத்துக்குடி |
| 37 | இராமச்சந்திரன், டாக்டர் எம்.ஜி. | ஆண்டிப்பட்டி |
| 38 | இராமச்சந்திரன், திரு கே.எஸ்.எம். | போடிநாயக்கனூர் |
| 39 | இராமச்சந்திரன், திரு கே.கே. எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 40 | இராமச்சந்திரன், திரு ச. .. | பண்ருட்டி |
| 41 | இராமச்சந்திரன், திரு சோ.மா. | அண்ணாநகர் |
| 42 | இராமச்சந்திரன், திரு ப. ந. .. | பட்டுக்கோட்டை |
| 43 | இராமசாமி திரு எஸ். என். .. | சாத்தான்குளம் |
| 44 | இராமசாமி, திரு த. .. .. | இராமநாதபுரம் |
| 45 | இராமநாதன், திரு மு. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 46 | இராமலிங்கம், டாக்டர் கே.பி... | ராசிபுரம் |
| 47 | இளங்கோவன், திரு ஈ.வே.கி.ச... | சத்தியமங்கலம் |
| 48 | ஈஸ்வரன், திரு ஆர். .. .... | வாசுதேவ நல்லூர் (செ.வ) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 102 செங்காளியப்பன், திரு ஆர். | சிங்காநல்லூர் |
| 103 செங்கோட்டையன், திரு கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம். |
| 104 செங்கோட்டையன், திரு பெ. | கபிலர்மலை. |
| 105 செம்மலை, திரு செ. | தாரமங்கலம் |
| 106 செல்லமுத்து, திரு எம். | திருவாரூர் (செ.வ.). |
| 107 செல்லப்பா, திரு வி. கோ. | கடலூர் |
| 108 செல்வராசன், திரு அ. | துறைமுகம் |
| 109 சேகர், திரு கே. பி. கே. | பொன்னேரி (செ.வ.) |
| 110 சொர்ணலிங்கம், திரு கா. | திருவாடானை |
| 111 சோலைராசு, திரு க. | மருங்காபுரி |
| 112 சைதை துரைசாமி, திரு சா. | சைதாப்பேட்டை |
| 113 சௌந்திரராஜன், திரு ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114 சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115 ஞானசுந்தரம், திரு சா. | மன்னார்குடி |
| 116 டேனியல்ராஜ், திரு எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117 தங்கமணி, திரு மு. | மாயூரம் |
| 118 தங்கமணி, திரு கே. எம். | திண்டிவனம் |
| 119 தங்கராசு, திரு ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120 தங்கராசு, திரு செ. | மங்களூர் (செ.வ.) |
| 121 தங்கவேல்ராஜ், திரு பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 122 தங்கவேலு, திரு வி. | வால்பாறை (செ.வ.) |
| 123 தமிழ்மணி, திரு | திருப்போரூர் (செ.வ.) |
| 124 தமிழரசன், திரு கு. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 125 தனபால், திரு ப. | சங்கரி (செ.வ.) |
| 126 தாமரைக்கனி, திரு இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127 தியாகராசன், திரு ஆர். | விருத்தாசலம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 128 திருஞானம், திரு பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.) |
| 129 திருநாவுக்கரசு, திரு எஸ். | அறந்தாங்கி |
| 130 திருமலைச்சாமி கவுண்டர், திரு சு. | உடுமலைப்பேட்டை |
| 131 தீர்த்தகிரி கவுண்டர், திரு டி. | மொரப்பூர் |
| 132 தீர்த்தராமன், திரு ப. | பாலக்கோடு |
| 133 துரை அன்பரசன், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134 துரை கிருஷ்ணமூர்த்தி, திரு | தஞ்சாவூர். |
| 135 துரை கோவிந்தராசன், திரு | திருவையாறு |
| 136 துரைராசு, திரு எஸ். பி. | காரைக்குடி |
| 137 துரை ராமசாமி, திரு | வெள்ளக்கோவில் |
| 138 தெய்வநாயகம், திரு எ. | மதுரை சென்ட்ரல் |
| 139 தேவராஜ், திரு வி. எம். | வேலூர் |
| 140 நடராசன், திரு ஆ. | பேரூர் |
| 141 நரசிம்ம பல்லவன், திரு க. | உத்திரமேரூர் |
| 142 நரசிம்மன், திரு பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143 நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144 நல்லுசாமி, திரு என். | திருச்சிராப்பள்ளி–2 |
| 145 நாச்சிமுத்து, திரு கே. பி. | மேட்டூர் |
| 146 நாராயணன், திரு எஸ். | திருநெல்வேலி |
| 147 நாராயணன், திரு பு. கோ. | பவானி |
| 148 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர். |
| 149 பட்டாபிராமன், திரு சை. | திருவள்ளூர் |
| 150 பரமசிவம், திரு பா. ந. | பல்லடம் |
| 151 பரிதி இளம்வழுதி, திரு | பெரம்பூர் |
| 152 பழனி, திரு த. | ஆற்காடு |
| 153 பழனிச்சாமி, திரு கா. செ. | காங்கேயம் |
| 154 பழனிமுத்து, திரு சி. | ஆத்தூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 155 பாண்டியன், திரு பி. எச். | சேரன்மாதேவி |
| 156 பாண்டுரங்கன், திரு மு. | கலசப்பாக்கம் |
| 157 பாப்பா சுப்பிரமணியன், திரு | குத்தாலம் |
| 158 பாரதி, திரு ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159 பாரமலை, திரு க. | மானாமதுரை (செ.வ.) |
| 160 பாலகிருஷ்ணன், திரு ச. | மொடக்குறிச்சி |
| 161 பாலகிருஷ்ணன், திரு வி. | சிவகாசி |
| 162 பாலச்சந்திரன், திரு வை. | பத்மநாபபுரம் |
| 163 பாலசுப்பிரமணியன், திரு க. | சீர்காழி (செ.வ.) |
| 164 பாலசுப்பிரமணியன், திரு எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165 பாலசுப்பிரமணியன், திரு வி. பி. | வேடசந்தூர் |
| 166 பாலன், திரு சு. | எழும்பூர் |
| 167 பாலாஜி, திரு கே. | காஞ்சிபுரம் |
| 168 பாலுச்சாமி, திரு ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169 பாலுசாமி, திரு அ. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 170 பிச்சை, திரு மு. | அருப்புக்கோட்டை |
| 171 பிரணவநாதன், திரு அ. | கடலாடி |
| 172 பிரேம்குமார், திரு ஆ. | திண்டுக்கல் |
| 173 புருசோத்தமன், திரு எஸ். | அரியலூர் |
| 174 புஷ்பராசு, திரு த. | திருமயம் |
| 175 பெரியசாமி, திரு அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176 பெரியசாமி, திரு ரா. | தொட்டியம் |
| 177 பெருமாள், திரு தெ. | கடையநல்லூர் |
| 178 பெருமாள், பிள்ளை திரு கோ. | கன்னியாகுமரி |
| 179 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.). |
| 180 பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 181 பொன்னுரங்கம், திரு ப. | ராயபுரம் |
| 182 பொன்னையன், திரு சி. | திருச்செங்கோடு |
| 183 மணவாளன், திரு எஸ். பி. | திருப்பத்தூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 184 மணிமாறன், திரு மா. | நன்னிலம் (செ.வ.) |
| 185 மலர்மன்னன், திரு அ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 186 மனோகரன், திரு கி. | புரசைவாக்கம் |
| 187 மனோகரன், திரு தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 188 மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 189 மாதவன், திரு செ. | திருப்பத்தூர் |
| 190 மாதையன், திரு யு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 191 மாரிமுத்து, திரு த. | குளத்தூர் (செ.வ.) |
| 192 மாரிமுத்து, திரு மு. | திருப்பரங்குன்றம் |
| 193 மீனாட்சி சுந்தரம், திரு மா. | வேதாரண்யம் |
| 194 முகம்மதுகனி, திரு ஜே. | புதுக்கோட்டை |
| 195 முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 196 முசிறிபுத்தன், திரு பி. | குளித்தலை |
| 197 முத்துசாமி, திரு சு. | ஈரோடு |
| 198 முத்துராமலிங்கம் திரு பி.கே.எம். | உசிலம்பட்டி |
| 199 பொன் முத்துராமலிங்கம், திரு | மதுரை மேற்கு |
| 200 முத்துவேல், திரு கே. | முதுகுளத்தூர் |
| 201 முத்தையா, திரு இரா. | சேடப்பட்டி |
| 202 முருகன், திரு கி. | செய்யாறு |
| 203 முருகானந்தம், திரு டி. என். | செஞ்சி |
| 204 முனிரத்தினம், திரு இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205 யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 206 ரமணி, திரு கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207 ரவீந்திரன், திரு ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208 ராமஜெயம், திரு ம. நா. | வானூர் (செ.வ.) |
| 209 ராமன், திரு கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210 ராஜாபாபு, திரு ஜெ. | போளூர் |
| 211 ரெங்கசாமி, திரு ஆர். | கோவில்பட்டி |
| 212 ரெத்தினராஜ், திரு எஸ். | நாகர்கோவில் |
| 213 லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ.வ.) |
| 214 வேலு, திரு கூடலூர் இ. வி. | தண்டராம்பட்டு |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 215 | வடிவேல், திரு கு. .. .. | கரூர் |
| 216 | வளர்மதி, திருமதி பா. .. | மயிலாப்பூர் |
| 217 | விஜயபாலன், திரு என். .. | பூம்புகார் |
| 218 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |
| 219 | வீராணம்பலம், திரு. க. வெ. .. | மேலூர் |
| 220 | வீரய்யன், திரு கோ. .. | நாகப்பட்டினம் |
| 221 | வீராசாமி, திரு தா. .. .. | ஒரத்தநாடு |
| 222 | வேங்கடரமணன், திரு டி. ஆர். | தென்காசி |
| 223 | வெங்கடரெட்டி, திரு டி. .. | ஓசூர் |
| 224 | வெங்கடாசலம், திரு அ. .. | ஆலங்குடி |
| 225 | வெங்கடாசலம், திரு கி. .. | லால்குடி |
| 226 | வெங்கடாசலம், திரு டி. எம். .. | பரகூர் |
| 227 | வேணுகோபால், திரு எஸ். .. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 228 | வேணுகோபால், திரு கே. வி. .. | தள்ளி |
| 229 | ஜான் வின்சென்ட், திரு மு. .. | நாங்குநேரி |
| 230 | ஜகதீசன், திரு அனூர் பு. கோ... | செங்கல்பட்டு |
| 231 | ஜெகதீசன், திரு சு. .. .. | அரவக்குறிச்சி |
| 232 | ஜெயச்சந்திரன், திரு சா. .. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 233 | ஜெயராமன், திரு வே. இரா. .. | தேனி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு ஜே. .. | திருவட்டாறு |
| 235 | பிரான்சிஸ், திரு ஜி. கே. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் .. | அமைச்சர். |
| 2 | மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே .. | அமைச்சர் |
| 3 | மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் .. | அமைச்சர் |
| 4 | திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி .. .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூலை 11, வியாழக்கிழமை

ஆனி 27, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:
''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''.

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே. ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை.

### 1. வினாக்கள் விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 594 மற்றும் 595 இரண்டும் சேர்த்து எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

காற்று சக்தியிலிருந்து மின் உற்பத்தி.

*594*—(*வினா எண். 1601)*—திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அதிக காற்று வீச்சை (Velocity of wind) பயன்படுத்தி காற்றாடி மூலம் மின்சாரம் தயாரிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு சுமார் 0.5 மெகாவாட் மொத்த மின்திறன் கொண்ட காற்று விசையினால் இயங்கும் ஜெனரேட்டர்களை தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடி கடற்கரைப் பகுதியில் நிறுவ திட்டமிட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்திற்கு ஆகும் முதலீட்டுச் செலவு சுமார் 1 கோடி ரூபாய். இவற்றில் தமிழ்நாடு ஏற்கும் பங்குத் தொகை கிட்டத்தட்ட ரூபாய் 25 இலட்சம்.

595—(*வினா எண். 2065)—டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பாலக்காட்டுக் கணவாய் வழியாக வரும் காற்றின் வேகம் அதிகமாக இருக்கின்ற பகுதிகளான மதுக்கரை, பல்லடம், தாராபுரம் பகுதிகளில் (Wind Mills) 'விண்ட் மில்' களை நிறுவி காற்றின் சக்தியை, மின் சக்தியாக மாற்ற அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) மத்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க டேனிஷ் நாட்டிலிருந்து இரு நிபுணர்கள் பாலக்காட்டுக் கணவாய்ப் பகுதிகளிலிருந்து மிக அதிகமான காற்று வீசும் இடங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

(ஆ) இந்த இடங்கள் காற்று விசையினால் இயங்கும் மின்னாக்கிகள் (wind electric generators) அமைப்பதற்கு உகந்தனவா என்ற அறிக்கையினை மத்திய அரசுக்கு சமர்ப்பித்துள்ளதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக மத்திய அரசு எடுத்த முடிவு பற்றி இதுவரை ஒன்றும் தெரியவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தின் தேவை அதிகரித்து வருகிற இந்த நாளில் இது போன்ற முயற்சிகளில் நாம் அதிக அக்கறை செலுத்த வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது மத்திய, மாநில அரசுகளின் உதவியால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருப்பதாகச் சொன்னார்கள். தூத்துக்குடியிலே ஆரம்பிக்கப்படவிருக்கிற இந்தத் திட்டத்தை தமிழகத்தின் வேறு பகுதிகளிலும் ஆரம்பிக்க அரசு பரிசீலனையில் திட்டமெதுவும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஒரு சோதனை அடிப்படையில் இந்திய அரசின் துணை கொண்டு தூத்துக்குடி பகுதியில் துவங்கப்படவிருக்கிறது. அதேபோல மற்ற பகுதிகளில் இத்தகைய திட்டங்கள் வரவிருக்கின்றன. அடுத்த வினாவும் இதே தொடர்பாக இருப்பதால் இந்த வினாவோடு அதையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.



திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பாலக்காட்டுக் கணவாய் வழியாக வரும் காற்றின் வேகம் மிக அதிகமாக இருப்பதைப் போலவே, மதுரை மாவட்டத்தின் மேற்கு பகுதியில் கூட காற்றின் விசை அதிகமாக இருக்கிறது. எனவே இந்தக் காற்றின் சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் பணி எப்போதிலிருந்து துவங்குமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. கோவை மாவட்டத்தில் கோவை புதூர், செட்டிபாளையம், கொண்டன்பட்டி, சேனப்பட்டி, சுல்தான்பேட்டை (பல்லடம் தாலுகா) ஆகிய இடங்களும், திருச்சி மாவட்டத்தில் விடுதலன்பட்டி, வையம்பட்டி, சேவாப்பூர் ஆகிய இடங்களும் இதற்கு ஏற்றவையாக இருக்கிறதென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய ஆய்விலே இது உள்ளது. தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் உற்பத்தியைத் துவங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, அதிக அளவில் 0.5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிற திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதனை தனிப்பட்ட முறையில், ஒவ்வொரு விவசாயிக்கும் பயன்படுகிற அளவில் காற்றில் மின்சாரம் உற்பத்தி செய்கிற இயந்திரத்தைச் செய்து அவர்களுக்கு மானிய விலையில் கொடுப்பதற்கு அரசு திட்டமெதுவும் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. இதுபற்றி விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பாலக்காட்டு கணவாய் வழியாக பலமாக வீசும் காற்று அங்கே பல மாதங்களுக்கு தொடர்ந்து வீசுகிறது. அந்தப் பகுதி மிக முக்கியமான பகுதி. நமது தமிழக அரசு காற்றின் மூலமாக காற்றாடிகளை இயக்கி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை மத்திய அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். கோவை தாலுகாவும், பல்லடம் தாலுகாவும், உடுமலை தாலுகாவும் இந்தத் திட்டத்தினால் பயன்பெற இருப்பதாக அறிகிறேன். அந்தப் பகுதிகளில் எந்தெந்த இடங்களில் இந்த காற்றின் மூலம் மின்சாரம் தயாரிக்க இயந்திரங்களை நிறுவ இருக்கிறார்கள் ? எந்தெந்த இடங்களை லொகேட் செய்து நம்முடைய திட்டம் மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 11

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்திய அரசால் இது சம்பந்தமாக ஆராய்வதற்காக ஒரு துறை இருக்கிறது. இந்த டேனிஷ் நிபுணர்களோடு, மத்திய அரசு டி. என். இ. எஸ்., தமிழ்நாடு சக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றைச் சேர்ந்த பொறியியல் வல்லுநர்கள் இவர்கள் எல்லாம் சேர்ந்து அந்தப் பகுதியைப் பார்த்து, எந்த அளவிற்கு அங்கே காற்றைப் பயன்படுத்தி, மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற விவரங்களைத் தயார் செய்து, அந்தக் குழுவின் சார்பிலே இந்திய அரசுக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பித்து இருப்பதாக நமக்கு தகவல் வந்துள்ளது. அது என்ன அறிக்கை என்பது பற்றி நமக்கு விவரங்கள் இல்லை.

### மின்வாரியத்தில் ஜூனியர் இன்ஜினியர்கள் பதவி உயர்வு.

596—(*வினா எண் 2917)—திரு. கே. உச்சி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியத்தில் டிப்ளமா பெற்று ஜூனியர் இன்ஜினியர்களாகப் பணியாற்றுபவர்களில் பலர் கடந்த 1962 ஆம் ஆண்டு முதல் பதவி உயர்வு பெறவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டு டிப்ளமோ படித்த சிவில் சூப்பர்வைசர்கள் சுமார் 210 பேர்கள் தமிழ்நாடு மின் வாரியத்தில் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் 128 பேர்களுக்கு மட்டும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. மின் வாரியத்தில், மீதி உள்ள 82 சிவில் சூப்பர்வைசர்களுக்கு 24 வருடங்களாக எந்தவித பதவி உயர்வும் கொடுக்கப்படாமல், ஒரே பதவியில் இருந்து வருகிறார்கள். அதேபோல் 1964-ல் வேலைக்கு எடுத்த சில சூப்பர்வைசர்களுக்கு இதுநாள் வரையிலும் எந்தப் பதவி உயர்வும் இல்லாமல், அவர்கள் தேங்கியிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் இவர்கள் விஷயத்தில் மனிதாபிமான உணர்வோடு அனுதாபம் காட்ட முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



985 ஜூலை 11]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வாரியத்தின் கட்டுமானப் பணிகள் குறைந்ததன் காரணமாகவும், பொறியியல் பட்டதாரிகளுக்கும், பட்டயதாரர்களுக்கும் இடையே, உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி உயர்வு கொடுப்பதில் அமுலாக்கப்பட்ட 3 : 1 என்ற விகிதத்தின் காரணமாகவும் பட்டயதாரர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. வெற்றிடங்கள் ஏற்படுகின்றபோது, அவர்களுக்கு உரிய பதவி உயர்வு தரப்படும்.

### நெல்லிக்குப்பம் தொகுதியில் டிரான்ஸ்பார்மர்கள்.

597—(*வினா எண். 3764)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக் குப்பம் தொகுதியில் சாத்திப்பட்டு, கரும்பூர், ஒறையூர், எனதிர்மங்கலம், ரெட்டிக் குப்பம் ஆகிய ஊர்களிலுள்ள டிரான்ஸ்பார்மர்கள் ( transformers ) எரிந்து விட்டதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): பழுதடைந்த டிரான்ஸ்பார்மர் மாற்றப்பட்டு மின்விநியோகம் தரப்பட்டு வருகிறது.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்த டிரான்ஸ்பார்மர்கள் மாற்றப்பட்டு சீரமைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். நன்றி, அந்தத் தொகுதியில் இருக்கின்ற, கரும்பூர், ஒறையூர், எனதிர் மங்கலம், ரெட்டிக் குப்பம், சாத்திப்பட்டு ஆகிய பகுதிகளிலே இருக்கின்ற டிரான்ஸ்பார்மர்கள், எவ்வளவு சக்தி கொண்டவை? அந்த சக்தி கொண்டவைகளை அதிக சக்தி கொண்டவைகளாக மாற்றி அமைத்து, ஏறக்குறைய அந்த டிரான்ஸ்பார்மர்களில் ஏற்பட்ட கோளாறுகளின் காரணமாக ஒரு மாத காலம் அல்லது 2 மாத காலம் அங்கே உள்ள விளை நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகையினாலே அவைகள் நல்ல முறையில் இயங்குவதற்கு அதிக சக்தி கொண்ட டிரான்ஸ்பார்மர்களை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து சரியானது. 25–2–1985 அன்று 200 கே. வி. ஏ. அதாவது 22 K.V. திறன் உள்ள, மின் மாற்றி பழுதடைந்து இருக்கிறது. அது 27–3–1985

[1985 ஜூலை 11

அன்றுதான் ரிப்பேர் முடிந்து இருக்கிறது. இடையிலே அத்தகைய மின் மாற்றிகள் இல்லாத காரணத்தால், 100 கே.வி.ஏ. வைத்து பார்த்து இருக்கிறார்கள். அந்த 100 கே.வி.ஏ. சரியாக இயங்கவில்லை. ஆனாலும் இப்போது சரி செய்யப்பட்டு விட்டது. இதுபோன்ற சங்கடங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏற்ற வகையில் போதுமான அளவு மின் மாற்றிகளை, மின் வாரியம் பெற்று, தயாராக வைக்கும் என்ற உறுதியைத் தர விரும்புகிறேன்.

**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இயங்குகின்ற டிரான்ஸ்பார்மர்கள், பழுது அடைந்து விட்டால், அதே டிரான்ஸ்பார்மர்களை விழுப்புரத்தில் இருக்கின்ற தலைமை அலுவலகத்திற்குக் கொண்டு வந்து ரிப்பேர் செய்வதால், ஏறக்குறைய 1 மாதம், 1½ மாத காலம் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதோடு, அந்தப் பகுதிகளிலே குடிதண்ணீர் பிரச்சனையும் ஏற்பட்டு, அந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள் பாதிக்கப்பட்டதாக, விவசாயிகள் மூலம் செய்தி கிடைத்திருக்கிறது. ஆகவே மாற்று டிரான்ஸ்பார்மர்களைத் தயாராக வைத்திருந்து அப்படி பழுதடைந்த காலங்களில் உடனே, இரண்டொரு நாட்களில் அமைத்துத் தந்து அந்த விவசாயிகள் குறைகளைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, போதுமான அளவுக்கு ஸ்பேர் டிரான்ஸ்பார்மர்கள் ஸ்டாக் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

(முற்பகல் 9-10)

**இந்தியா போர்ஜ் கம்பெனி, அம்பத்தூர்.**

598—(*வினா எண் 2161)—**திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. ரு. சுப்பராயன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலாபத்தில் இயங்கி வந்த அம்பத்தூர், ' இந்தியா போர்ஜ்' கம்பெனி கடந்த 1984 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மூடப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை உடனடியாகத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1985 ஜூலை 11]

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே (அ) சென்னையிலுள்ள இந்தியா போர்ஜ் அன்ட் டிராப் ஸ்டாம்பிங்ஸ் லிமிடெட் நிறுவனம் 14—1—1984 முதல் மூடப்பட்டது அரசுக்குத் தெரியும்.

(ஆ) இந்நிறுவனம் மூடுதல் சம்பந்தமாக தொழிற் தகராறில் சென்னை 2-வது தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பலன் அளிக்காததால் அவருடைய சமரச முறிவறிக்கை மீது அரசு ஆணைகளைப் பிறப்பித்து இத் தொழில் தகராறை சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு அனுப்பியுள்ளது.

**திரு. வி. பி. சிந்தன் :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை ஆயிரம் பேர் வேலை செய்து வந்த இடம் ஆகும். ஆனால் அது 500-ஆகக் குறைக்கப்பட்டது. குறைக்கிற நேரத்தில் மறைமலை அடிகள் நகரிலும், ஒசூரிலும் இதே தொழிற்சாலையை அமைத்து, தமிழ்நாட்டுக்கு வெளியேயும், இந்தத் தொழிற்சாலையினுடைய இரண்டு யூனிட்டுகளை அமைத்து, இதே வேலை, இதே ஆர்டர் ; ஆனால் குறைந்த கூலிக்கு புதியதொழிலாளர்களை வைத்து வேலை செய்வதற்குத் தான் இது செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு பிறகு, கடைசியாக லேபர் கமிஷனர் எஞ்சியிருக்கிற 500 தொழிலாளிகளுக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டபோதும், கொடுக்கவில்லை. இப்போது கோர்ட்டுக்கு விடப்பட்டிருக்கிறது. ஆனால் கோர்ட்டிலும் அவர்கள் முறையாக கலந்து கொள்ளவில்லை. இப்படி தொழிற்சாலைகளினுடைய மூலதனத்தை எடுத்து, புதிய இடங்களில் ஆரம்பிக்கும்போது அரசினுடைய சில சலுகைகளும் அவர்கள் பெறுகிறார்கள். ஆனால் சலுகைகளையும் பெற்றுக்கொண்டு ஏற்கனவே வேலை செய்த தொழிலாளிகளுக்கு வேலை இல்லாமல் செய்வது நியாயம் அல்ல. அதைத் தடுப்பதற்கு, மாநில அரசு, மத்திய அரசினுடைய உதவியையும் அணுகி, அதைத் தடுக்கமுடியும். இந்தியா மீட்டர் தொழிற்சாலை இப்படி செய்தபோது, அன்றைய மாநில அரசு, மத்திய அரசை அணுகி, பி.எச்.இ.எல்.-னுடைய உதவியுடன், அதன் பராமரிப்பில் அந்தத் தொழிற்சாலையை நடத்தியது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். அதே முறையில், இந்த ஆலையை நடத்துவதற்குள்ள முயற்சியை எடுப்பார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக, நிர்வாகத்தையும், அந்தப் பகுதியில் அந்த தொழிற்சாலையில் இன்றைக்குத் தொழிற்சங்கம் அமைத்து நடத்திக் கொண்டிருக்கின்ற திரு. குசேலர் அவர்களையும் அழைத்து கடந்த

ஏப்ரல் மாதம் நான்கு நாட்கள் தொடர்ந்து, அந்த ஆலையை எப்படியாவது திறக்க வேண்டும் என்பதற்காக அரசு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது. நிர்வாகத்தினர் வெளிநாடு சென்றிருந்த காரணத்தினாலும், தொழிற்சங்கத் தலைவர் குசேலர் அவர்களும் வெளிநாடு சென்றிருந்த காரணத்தினாலும் அது சற்று தாமதம் ஆகியது. இரண்டு பேர்களும் இப்போது திரும்பி இருக்கிறார்கள். விரைவில் மீண்டும் ஒரு முறை நிர்வாகத்தையும், தொழிற்சங்கத் தலைவரையும் அழைத்து, அவர்களுடைய பிரச்சினையில் சுமுகமாக முடித்து அந்த 500 பேருக்கும் வேலை வாய்ப்பு உருவாக்கித் தருவதற்கு அரசு எல்லா சாத்தியக்கூறுகளான முயற்சிகளையும் எடுக்கும்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, தொழிற்சாலையில் நஷ்டம் ஏற்படுகிறது என்பதைத் தான் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். ஆனால் உண்மையிலான கணக்கை நான் இங்கே படிக்கவில்லை. ஆண்டுதோறும் அந்தத் தொழிற்சாலையினுடைய லாபம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. தலைவரோ அல்லது ஒரு டைரக்டரோ வெளிநாடுகளுக்கு சென்றதனால் மட்டும் ஒரு தொழிற்கோர்ட்டில் அந்த விசாரணையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. தலைவர் இல்லை....

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தீர்ப்பாயத்தில் இருப்பது பற்றிச் சொல்லவில்லை. அதற்கு முன்பாகவே 'அவுட் ஆப் கோர்ட்' அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு வருவதற்கு முன்பாகவே நேகோசியேடட் செட்டில்மெண்டு 2 பேரும் பேசி தீர்த்தால் அந்த 500 பேருக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்ற நல்ல எண்ணத்தில், நான் பொறுப்புக்கு வந்த பிறகு 2 பேரையும் அழைத்து ஒரு சுமுகமான ஒருமித்த கருத்தை இன்றைக்கு நீங்கள் சொல்லுவது போல், அவர்கள் சொல்லுவது ஒரு வாதம். தொழிற்சங்கம் சொல்லுவது பிறிதொரு வாதம். 2 நிலையிலும் சொல்கிறார்கள். ஒரு பரிசீலனையை இரண்டு தரப்பாரும் செய்து இந்த தொழிற்சாலையை திறப்பதற்கு சாத்தியக்கூறாக அரசு இன்றைக்கு ஊக்குவித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா போர்ஜ் -ஐ பொறுத்த வரையில் 1977 ஆம் ஆண்டிலிருந்து அந்த நிறுவனம் மூடப்படுகிற வரை எந்த விதமான தொழில் தகராறும் அங்கே கிளம்பவில்லை என்பதோடு எந்தவிதமான தொழிலாளர் பிரச்சினையும் எழவில்லை. கோரிக்கையையும் முன் வைக்கவில்லை. இந்த நிறுவனமும் லாபத்தில் இயங்கிக் கொண்டு இருந்தது. அப்படி இருந்தும் கூட அந்த, நிறுவனத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் உரிமையை



சட்டபூர்வமான உரிமையை பறிக்க வேண்டும் என்பதற்காகவே பரிதாபாத், பூனா, கந்தன்சாவடி, ஓசூர், மறைமலை அடிகள் நகர் போன்ற இடங்களில் பிரான்ஜ் கம்பெனிகளை வைத்துக் கொண்டு காண்டிராக்ட் ஓர்க்கர்ஸ் என்ற தினக் கூலிகளைப் பயன்படுத்திக் கொண்டு சட்டம் வழங்கியிருக்கின்ற உரிமைகளை பறிக்கின்ற வகையில் நுட்ப வழிகளை மேற் கொள்ளும் இந்த நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை மேற் கொள்ள அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போர்ஜ் தொழிற்சாலை என்பது ஒரு நல்ல டெக்னாலஜி பெற்ற தொழிற்சாலை என்று நாங்கள் கருதுவதாலும், தமிழ்நாட்டில் இரண்டே தொழிற் சாலைகள் இந்த டெக்னாலஜியை பயன்படுத்திக் கொண்டு இருக்கின்ற காரணத்தாலும் அதனை எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த தொழிற்சாலைகள் மூடப்படக் கூடாது என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு இருக்கின்ற காரணத்தாலும் இன்றைக்கு அவர்கள் சொல்லுவது போல இந்த தொழிற்சாலை யின் தகராறுகளுக்கு பல காரணங்கள் உண்டு. சில காரணங்களை 2 நிலைகளிலும் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்த வரை யில் 2 பேரும் இன்றைக்கு ஒரு மறு பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி செய்தால்தான் அவர்கள் மனதில் இருக்கின்ற சில சங் கடங்கள் சில மனத்தாங்கல்கள் தான் இந்த தொழில் தகராறுக்கு அடிப்படை என்று நான் யூகிக்கிறேன்—அந்த மனத்தாங்கல்களை போக்கி ஒரு ஒருமைப்பாடு உருவாக்க இன்றைக்கு நிர்வாகமும், தொழிற்சங்கமும் நாட்டு நலன், தொழிலாளர் நலன், தொழில் நலன் ஆகிய அனைத்து நலன்களையும் அவர்கள் மனதில் கொண்டு ஒரு சுமுகமான முடிவுக்கு வர அரசு எல்லா உதவிகளையும் ஆலோசனைகளையும் அவர்களுக்குச் சொல்லி விரைவில் ஒரு சுமுகமான நிலைமையை உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

## சருக்கை பால் உற்பத்தியாளர் சங்கம்

613—(*வினா எண். 724)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசம் ஒன்றியம் சருக்கை பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சரிவர இயங்காமல் இருப்பது குறித்து விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 12–3–1985 அன்று சருக்கை பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சரிவர இயங்காமை குறித்து மனு ஒன்று பெறப்பட்டது. அம்மனுவில் உள்ள புகார்மீது விசாரணை செய்ததில் அவை ஆதாரமற்றவை என்று தெரிய வந்துள்ளது.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தளநாயகர் அவர்களே, மூடப்படுகின்ற தொழிற்சாலைகளை எல்லாம் தமிழக அரசும், தமிழக தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் போராடி திறக்கிறார்கள். அப்படி திறந்தாலும் அங்கு இருக்கின்ற அந்த தொழிலாளர்களின் மீது அந்த மேனேஜ்மெண்டு அராஸ்மெண்டு செய்வதை தடுக்க அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பால் உற்பத்தியாளர்கள் சங்கம் பற்றியது.

### டாக்டர் அம்பேத்கார் சிலை, குமரி.

599—(*வினா எண் 1242)—**திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரியில் டாக்டர் அம்பேத்கார் சிலை வைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

### பழனி சுற்றுலா மையம்

600—(*வினா எண் 2136)—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்மிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் பழனியை சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, இல்லை.



### சென்னையில் நிரந்தரப் பொருட்காட்சி

613ஆ—(*வினா எண். 2167)—**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கும் திட்டத்தை துரிதப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, (அ) கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அரசின் பரிசீலனைக்குப் பின், முழு திட்டமும் செயல்படுத்தப்படும்.

(முற்பகல் 9–20)

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிரந்தரப் பொருட்காட்சியை அமைப்பதாகக் கடந்த நான்காண்டுகளாக அறிவித்து, பிறகு இடப் பிரச்னை இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, அந்த இடத்தைப் பெற்றாகிவிட்டதா ? அப்படி நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கப்படுமேயானால் அது நிரந்தரமாக இருப்பதால் அங்கே நிர்ணயிக்கப்படுகின்ற கலையரங்குகள், இன்னும் மற்றப் பணிகள் எல்லாம் எந்த அளவில், எந்த மாதிரி அமைப்பில் உருவாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவரவர்களே, நிரந்தரப் பொருட்காட்சி என்பது அங்கே இப்பொழுது ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற பொருட்காட்சிகளில் அவ்வப்பொழுது அரங்குகள் அமைத்து அது பிரிக்கப்படுகின்றன. அதற்காகப் பெரிய அளவிலே ஆண்டுதோறும் செலவழிக்கப்பட்டு வருகிறது. மேலும் 45 நாட்கள் அல்லது 60 நாட்கள் என்று மாத்திரமே, டிசம்பர் மாதத்தில் தொடங்கி ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் வரை அந்தப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. சென்னை போன்ற ஒரு மாநிலத்தின் தலைநகரத்தில் நாளொன்றுக்குப் பல்லாயிரக் கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் வெளியூர்களிலிருந்து வருகிறார்கள் ; வெளி மாநிலங்களிலேயிருந்து வருகிறார்கள் ; அதுமட்டுமல்லாமல், நகரத்திற்குள்ளேயே பல நேரங்களிலே அவர்கள் பொழுதை நல்ல பொழுதாகப் போக்கவும், பலனுள்ள வகையில் பொழுதைக் கழிக்கவும் இப்படிப்பட்ட நிரந்தரப் பொருட்காட்சி அவசியம் என்ற அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் உருவாக்கப்பெற்றிருக்கிறது. இதற்கு சில கோடிக்

கணக்கான ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருப்பதைப்போல இந்த அரங்குகளெல்லாம் நிரந்தரமாக அங்கே அமைக்கப்பட இருக்கின்றன. கீழ்க்கண்டவாறு அதிலே அமைப்புகள் இருக்கும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

சிறிய பூங்காக்களும், புல் வெளிகளும் இருக்கும். கூவம் ஆற்றின் குறுக்கே அழகிய, அலங்காரப் பாலங்கள் அமைக்கப்படும். டார்ப்பின்—மீன் விளையாட்டுக் கூடம் அமைக்கப்படும். சிறுவர் இரயில் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்கா அமைக்கப்படும். திறந்த வெளி கலையரங்கம் அமைக்கப்படும். பல்வேறு துறைகளுக்கான நிரந்தரக் காட்சி அரங்குகளும், கடைகளும் அமைக்கப்படும். மாதிரி வானமண்டலம்—பிளானடோரியம்—ஒன்று அமைக்கப்படும். படகு குழாம் அமைக்கப்படும். உணவகம் கட்டப்படும். சுற்றிலும் மதில் சுவர், தண்ணீர் மற்றும் கழிப்பிட வசதிகள், அடிப்படை வசதிகள் அமைக்கப்படும். மற்றும் பிற பொழுது போக்கு வசதிகள் நிறைந்த பகுதிகளும் அமைக்கப்படும். இவ்வளவு திட்டங்களும் அடங்கியதாக இந்த நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசினுடைய திட்டம். இதைப்பற்றிய நல்ல கருத்துருக்களும், திட்டங்களும் வேண்டுமென்று பல நிபுணர்களிடத்திலே கேட்டிருக்கிறோம். அவைகள் பெறப்பட்டதற்குப் பிறகு, நிதி வசதியை ஆதாரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய காரணத்தினால் இந்த நிதிவசதிக்கேற்றவாறு, இந்தத் தீவுத் திடலில் அதை அமைப்பதாக இருக்கிறது. அந்தத் தீவுத் திடலின் ஒரு பகுதி மத்திய அரசினுடைய இரா றுவத் துறைக்குச் சொந்தமாக இருந்தது, அந்த இடத்தை இப்பொழுது பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனாலும்கூட இப்பொழுது ஒரு சிக்கல் வந்திருக்கிறது. அந்த இடத்தைத் தந்ததற்குப் பிறகு, இராணுவத் துறையினர் மீண்டும் அந்த இடம் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னையும் பரிசீலனையில் இருக்கிறது. இவ்வளவு பிரச்னைகளையும் தாண்டியதற்குப் பிறகுதான் இந்த நிரந்தரப் பொருட்காட்சியை அமைப்பது முழுமையாக நிறைவுபெறும்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தீவுத் திடலில் அமைப்பதற்கு உத்தேசித்திருக்கின்ற இந்தத் திட்டங்களைப்பற்றிக் கேட்கின்றபொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால், ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற இந்தப் பொருட்காட்சியின்போது—டெல்லியில் பிரகதி மைதானத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கப்பட்டிருப்பதைப்போல—இரண்டு மூன்று கட்டிடங்களை நிரந்தரமாகச் செய்வதற்கு பேஸ்ட் ப்ரொகிராமாகச் செய்தால் நிரந்தரமாக அது சென்னை நகரத்தில் அமைவதற்கு வசதியாக இருக்குமே, அவ்வாறு செய்யப்படுமா ? மேலும், அப்படி அதைக் கட்டுகின்றபொழுது தமிழ்நாட்டினுடைய கலை, கலாச்சாரம், சிற்பம் ஆகியவைகள் பிரதிபலிக்கின்ற வகையில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மராண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவரவர்களே, டெல்லியிலே அமைக்கப் பெற்றிருக்கின்ற பிரகதி மைதான பொருட்காட்சியில் எல்லா மாநிலங்களும், சில நாடுகளும் பங்கு ஏற்கின்றன. ஆகவே, நிதி வசதியைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநிலங்கள் அவர்கள் பொறுப்பிலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த நிரந்தரப் பொருட்காட்சியைப் பொறுத்தவரையில் முழுச் செலவையும் மாநில அரசே ஏற்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான், இந்தச் செலவினத்தைப்பற்றி இரண்டு மூன்று பகுதிகளாகப் பிரித்துச் செயலாக்கலாமா என்ற ஆலோசனை இருக்கிறது. இந்த அடிப்படைத் திட்டங்களை எப்படி அமைப்பது என்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு, நிதி வசதியைப் பொறுத்தவரையில் எவ்வளவு பிரிவுகளாகப் பிரித்து அதைச் செய்யலாம் என்று முடிவெடுக்கப்படுகின்ற நேரத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெரிவித்ததைப்போன்று ஆண்டுதோறும் அமைக்கப்படுகின்ற அரங்குகளை நிரந்தரமாகச் சிறிது சிறிதாக அமைத்துக்கொண்டே வந்தால் ஐந்தாண்டுக் காலத்திலே நிறைவேறுகின்ற வகையிலே திட்டங்கள் நிறைவு பெறலாம். அப்படிப்பட்ட கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. தமிழ்நாட்டினுடைய கலாச்சாரத்தையும், நாகரீகத்தையும், தொன்மையையும் உறுதுணையாக எடுத்துக் கொண்டு அந்த பகுதியிலே அமைக்கப்படும்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இப்போது சுற்றுலா பொருட்காட்சி நடந்து கொண்டிருக்கின்ற இடத்தில் 'ஓட்டல் தமிழ்நாடு' என்ற ஓட்டலை சுற்றுலா வாரியத்தின் சார்பிலே திறக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஓட்டலுக்கு அதிகப்படியான விளம்பரம் இல்லாத காரணத்தாலோ என்னவோ, சரியான வியாபாரம் இல்லையென்று கருதுகிறேன். எனவே, அந்த தமிழ்நாடு ஓட்டலை சட்டமன்ற விடுதியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் உணவு அருந்துவதற்கு பயன்படுத்துவதற்கும், அந்த ஓட்டலுடைய விற்பனையை அதிகப்படுத்த விளம்பரப்படுத்துகின்ற வகையிலும், இந்த பிரதான சாலையிலே ஒரு பெட்ரோல் பங்கு இல்லாததால், சுற்றுலா வாரியமே அந்த ஓட்டலுக்குப் பக்கத்தில் ஒரு பெட்ரோல் பங்கை அமைத்தால் இன்னும் வசதியாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தப் பணியைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மராண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய சுற்றுலாப் பொருட்காட்சி நடைபெறுகின்ற தீவுத் திடலில் இன்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் முதலீட்டில் ஒரு உணவு விடுதி, டிரைவ்-இன்-ரெஸ்டாரெண்ட் என்ற அந்த விடுதி நடத்தப்பட்டு வருகிறது. அது மிகச் சிறந்த முறையில் நடைபெறுவதாகவும், அங்கே பரிமாறுகின்ற உணவு வகைகள் சிறந்த முறையில், ருசியாக இருப்பதாக சட்டமன்ற உறுப்பினர்கள் உள்பட பல பேர் பாராட்டுக்களை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான விளம்பரத்தை இன்றைக்கு இங்கே சட்டமன்றத்தில் உறுப்பினர்கள்.

[1985 ஜூலை 11

கேள்வி கேட்டிருப்பதாலே, நம்முடைய பத்திரிகை நண்பர்கள் நல்ல விளம்பரத்தைத் தர முடியும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே சந்திக்கின்றபோது, அந்த விடுதியைப் பற்றி பாராட்டுகள் வழங்கினால், அது இன்னும் விளம்பரமாக அமையும். ஆனால், தேவையான விளம்பரத்தை அளிக்கின்ற முயற்சியில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டிருக்கிறது. அங்கே பெட்ரோல் பங்கு நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தைப் பொறுத்த வரையில், அது ஒரு மிகப் பெரிய ஹைவேஸ் நெடுஞ்சாலை என்று சொல்ல முடியாது. சென்னை மாநகரத்திலே இருக்கின்ற பெட்ரோல் பங்குகளில் ஆங்காங்கே இருக்கின்றவர்கள், தங்கள் வாழ்க்கை வசதிக்கேற்ப பெட்ரோலைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கடற்கரைக்கு வருகின்றவர்களை மாத்திரம் நம்பி பெட்ரோல் பங்கு நடத்துவது என்பது இயலாத காரியம். காரணம், அது நெடுஞ்சாலையிலே அமைக்கப்படவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் எப்படி பொருட்காட்சிக்கு நல்ல வரவேற்பு இருக்கிறதோ, அதேமாதிரி தென்பகுதியான மதுரையில் பொருட்காட்சிக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. எனவே நிரந்தரமான பொருட்காட்சி ஒன்றை மதுரையிலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலிலே தலைநகரத்திலே நிரந்தரமான ஒரு பொருட் காட்சி அமைக்கப்பட்ட பிறகுதான், மற்ற மாவட்டத் தலைநகரங்களில் அமைக்கப்படுவது பற்றி அரசு பரிசீலிக்க இயலும்.

போளூரில் சர்க்கரை ஆலை.

601—(*வினா எண். 2029)—திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இல்லை.

ஒட்டப்பிடாரத்திற்கு குடிநீர்.

602—(*வினா எண். 2141)—திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1985 ஜூலை 11]

(அ) ஒட்டப்பிடாரம் வட்டம், கயத்தார் பொது மக்களிடமிருந்து குடிநீர் வேண்டி அரசுக்கு கோரிக்கை வந்ததா?

(ஆ) அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கயத்தாறு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ. 24 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு குடிநீர்த்திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எப்போது செய்து முடிக்கப்படும்? வெகு நாட்களாக உள்ள பிரச்சினையாக இருந்து வருகிறது. எனவே, எப்போது செய்து முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அதற்கான விரிவான ஆய்வு செய்து, மதிப்பீடு தயாரித்து அனுப்பிய பிறகு, அரசு அதற்கான அனுமதியை வழங்கும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்த வேலையை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, செய்யப்படும்.

பள்ளிப்பட்டு பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் திட்டம்.

603—(*வினா எண். 2222)—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சிக்கு உலக வங்கி நிதி உதவியுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். உலக வங்கி நிதி உதவியுடன் 5 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி ஒன்றை அமைத்து செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க ரூ. 26.95 லட்சம் மதிப்பீட்டிலான திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 604 முதல் 608 வரை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

[1985 ஜுலை 11

**ஆத்தூரில் நுகர்பொருள் வாணிபக் கிடங்கு கட்டிடங்கள்.**

609—(*வினா எண். 1407)—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூரில் நுகர்பொருள் வாணிபக் கிடங்கு கட்டிடம் கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிடங்குகட்ட உத்தேசமுள்ளது. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் தாண்டவராயபுரம் கிராமத்தில் அரசினுடைய தரிசு நிலம் 5 ஏக்கர் இடம் ஆய்வு செய்யப்பட்டு தேர்வு நிலையில் இருக்கிறது.

**பனியன் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம்.**

610—(*வினா எண். 1163)—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் பனியன் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, திருப்பூரில் பனியன் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் எதுவுமில்லை.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, திருப்பூரில் அதிகமாக விளங்குகிற பனியன் தொழிற்சாலை நுட்பத்தை அளிக்கிற முறையிலே உலக நாடுகளின் அரங்கிலேயும் உள்நாட்டு அரங்கிலேயும் மார்க்கட் வாய்ப்புக்களை நிரந்தரமாக்குகின்ற முறையில் நுட்ப ஆற்றலை வளர்ப்பதற்காக தொழில் நுட்ப ஆராய்ச்சி மையத்தினை உருவாக்குவதற்குத் தேவையை உணர்ந்து இனிமேலாவது அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கோவையிலே சித்ரா என்ற ஆராய்ச்சி நிலையத்தில் நிட்டிங் தொழில் சம்பந்தமான நுட்பப் பயிற்சி அங்கே இருக்கிறது.



1985 ஜுலை 11]

திரு. கு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, அந்த சித்ரா ஆராய்ச்சி மையம் என்பது பெரும்பகுதியும் டெக்ஸ்டைல் சம்பந்தப்பட்ட நுட்ப ஆராய்ச்சி மையமாக நடைமுறையில் விளங்குகிற காரணத்தினால் பனியன் தொழிலில் உள்ள முழு நிலைமைகளை அறிந்துகொள்ளுகின்ற முறையிலே அந்தப் பயிற்சியை அளிக்கின்ற வகையிலே சித்ரா நிறுவனத்தைப் போன்று திருப்பூரிலே ஒரு நுட்ப மையத்தை அமைக்க வேண்டுமென்று பல தரப்பார்களிடமிருந்தும் வேண்டுகோள் வந்து கொண்டிருப்பதால் அதன் அவசியத்தை உணர்ந்து அதைப் பரிசீலிக்க வேண்டும் என்ற உணர்வோடு அரசு அதைப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சித்ரா என்ற ஆராய்ச்சி நிலையத்தில் தொழில் நுட்பம் பற்றிய ஆராய்ச்சி இருந்துகொண்டிருக்கிறது. திருப்பூர் அருகாமையில்தான் இருக்கிறது. மகாராட்டிரத்திலே சஸ்மிரா ஆர்ட் சில்க் ரிசர்ச் ஸ்தாபனத்தின் துணை ஸ்தாபனம் ஒன்றைத் தமிழ்நாட்டிலே கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழ்நாட்டிலே உள்ள பல்கலைக் கழகங்களிலே டெக்ஸ்டைல் டெக்னாலஜி சம்பந்தப்பட்ட படிப்பு இருக்கிறது, பனியன் தொழில் சம்பந்தமான படிப்பு சொல்லிக்கொடுக்கப்படவில்லை. அதைச் சொல்லிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

**டி. வி., ரேடியோ உதிரி பாகங்கள் தயாரிப்பில் பயிற்சி.**

611—(*வினா எண் 1001)—திரு. செ. செம்மலை மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள படித்த பட்டதாரிகளுக்கு டி.வி, ரேடியோ ஆகியவற்றிற்கு வேண்டிய உதிரி பாகங்களைத் தயார் செய்ய பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அளிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): திருச்சி-தொழிற் பேட்டையில் சுமார் ரூ. 6.75 லட்சம் முதலீட்டில் மின்னணுப் பொருட்கள் உருவாக்கும் நிறுவனமும் மற்றும் பயிற்சி நிலையம் ஒன்றும் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 9.6 லட்சம் முதலீட்டில் ஒரு நடமாடும் மின்னணு பயிற்சி நிலையம் அமைப்பதும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1985 ஜூலை 11

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, ஆரம்பிக்கப்பட்ட உத்தேசிக்கப் பட்டிருக்கும் இந்த 2 பயிற்சி நிலையங்களிலேயும் எத்தனை பேர்களுக்கு பயிற்சி பெறுவதற்கு வாய்ப்புக்களை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் படித்த பட்டதாரிகளுக்கு டி.வி., ரேடியோ ஆகியவற்றிற்கு வேண்டிய உதிரி பாகங்களைத் தயார் செய்யப் பயிற்சி அளிக்கும் எந்தவித செயற்குறிப்பும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, என்னதான் படித்த பட்டதாரிகளுக்கு டி.வி., ரேடியோ ஆகியவைபற்றி தொழிற் பயிற்சி கொடுத்தாலும்கூட அவர்கள் பயிற்சி முடிந்த பின்பு தொழில் செய்ய முன்வர மறுக்கிறார்கள். ஆகவே ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் 20 ஆயிரம் ரூபாய் என்று வாங்கி அரசு கூட்டுறவு முறையில் தொழிற்சாலை அமைக்க ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போட்டு அதைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் — பயிற்சிபெற்ற பட்டதாரிகளுக்கு அவரவர்களின் சொந்த ஜாமீன் பேரிலே— 25 ஆயிரம் ரூபாய் வரை கடன் தருகிறார்கள். அப்படி 3, 4 பட்டதாரிகள் சேர்ந்து தொழில் செய்ய முன்வருவார்களானால் தொழில் இலாகா அவர்களுக்கு உதவத் தயாராக இருக்கிறது.

## தொழில் உரிமங்கள்.

613 இ—(* வினா எண் 1882)— திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திற்குத் தேவையான தொழில் உரிமங்களை விரைவாகப் பெற்றுத் தரும் வகையில் புதுடெல்லியில் தொடர்பு அதிகாரி ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இதுபற்றிய செயற்குறிப்பு, இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, மைய அரசிடமிருந்து இப்படிப்பட்ட உரிமங்களைப் பெறுவதற்குக் காலதாமதம் ஆவதற்குரிய முக்கியமான காரணம் என்ன என்பதையும் இதுவரை எத்தனைத் தொழில்களுக்கு மைய அரசிடமிருந்து உரிமம் பெறுவதில் நிலுவை இருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?



1985 ஜூலை 11]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசை அணுகி, உரிமங்களைப் பெறுவதிலே சில தாமதங்கள் இயற்கையாகவே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த காலத்திலேயிருந்து நீண்டகாலமாக அப்படிப்பட்ட ஒரு வரலாற்றை அது படைத்துக் கொண்டு இருக்கிறது. ஆகவேதான் அப்படிப்பட்ட தனிப்பட்ட ஒருவரை உருவாக்கி, அவரிடத்திலே ஒரு இலாகா பொறுப்பைக் கொடுத்து, அதன் மூலமாக உரிமங்களைப் பெறுகின்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்பது தமிழக அரசினுடைய எண்ணமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஆரம்பிக்க இருக்கிற சில பெரிய தொழில் களுக்கும் மைய அரசிடமிருந்து உரிமம் பெற வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட தனியார் தொழில்களுக்கும் இப்படிப்பட்ட தொடர்பு அதிகாரிகள் உரிமம் பெற்றுத் தருவதிலே உதவுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களும் நம்மிடத்திலே உரிமம் பெற்றுத்தான் மத்திய அரசை அணுகுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உதவி செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் உரிமம் பெறுவதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொள்வதற்கு ஒரு தனி அதிகாரியை நியமிக்க வேண்டுமென்கிற ஒரு செயற்குறிப்பு அரசிடம் இருப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்தின் சார்பாகச் சிறப்பு பிரதிநிதி என்ற ஒருவரை நாம் நியமித்திருக்கிறோம். அவர் மூலமாகத் தொடர்பு கொண்டு அங்கிருந்து இதைத் துரிதப்படுத்த முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு இரண்டு மூன்று கட்டத்திலே அதிகாரிகள் இருக்கிறார்கள். நம்முடைய தனிப்பிரதிநிதி அவர்கள் அமைச்சர் அந்தஸ்திலே இருக்கிறார்கள். ஆகவே, கீழ் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகளிடத்திலே போய் பழகுவது என்பது முடியாத காரியம். ஆகவே, அதற்கென்றுதான் இப்படிப்பட்ட ஒரு தனிப் பிரிவு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டிலான தொழிற்சாலைகளுக்கு மைய அரசு அனுமதி பெறவேண்டுமென்று விதி இருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்துவதற்கு மைய அரசிடம் மாநில அரசு கோரிக்கைகள் வைத்திருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் மைய அரசிடத்திலே வைக்கப்படவில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் உரிமங்களைப் பெறுவதற்கு டெல்லியிலே தொடர்பு அதிகாரியாக நியமிக்க, அந்த அந்தத் துறையிலே அனுபவம் பெற்ற தொழிற் நுட்ப வல்லுநர்களை ஆலோசகர்களாக நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்த அதிகாரி டெல்லியைத் தெரிந்திருக்க வேண்டும். டெல்லியிலே இருப்பவர்களுக்குப் பழகியவராக இருக்க வேண்டுமென்பது தான் இதனுடைய குறிக்கோள்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோ ன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் உரிமங்களை விரைவாகப் பெறுவதற்குத் தனியாக டெல்லியிலே ஒரு அதிகாரியை நியமிக்க செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தத் தொழில் உரிமங்களைப் பெறுவதற்கு மட்டும் அல்லாமல் நமது மாநில அரசு செயல்படுத்தும் பல திட்டங்களுக்கும் நாம் டெல்லியிலே அனுமதி வாங்க வேண்டும்; அதற்குச் சரியான ஃபாலோ அப் ஆக்ஷன் என்பது இப்போது இல்லாமல் இருக்கிறது. ஆகவே தனி அதிகாரி என்பதற்குப் பதிலாக, ஒரு தனி இலாகாவையே இந்த அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனி இலாகாவாகத்தான் அது உருவாகும். இப்பொழுது தனி அதிகாரியாக நியமித்தால் அதற்கப்புறம் படிப்படியாக ஆட்கள் வந்து, தனி இலாகாவாக உருவாகிவிடும். அதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகும். தற்போது நாம் ஆரம்பிக்க இருக்கிற எண்ணம் தனி அதிகாரியைக் கொண்டு.

## நிலக்கோட்டையில் செண்ட் தொழிற்சாலை.

612—(*வினா எண் 1714)—திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டைப் பகுதியில் அதிகமான மல்லிகைப்பூ, ரோஜாப்பூ கிடைப்பதால் நிலக்கோட்டையில் செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவிட அரசு அனுமதி வழங்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) தனியார் துறையில் செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை நிலக்கோட்டையில் நிறுவிட முயற்சி மேற்கொள்ளப்பட்டால் அதற்கு மாநில அரசு, அனுமதி வழங்குவது பற்றிப் பரிசீலிக்கும்.

(ஆ) இதுவரை தனியார் துறையில் செண்ட் தொழிற்சாலை நிறுவிடுவதற்கான எந்த முயற்சி பற்றியும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(முற்பகல் 9–40)

திரு. அ. பாலுசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிலக்கோட்டைப் பகுதியில் செண்ட் தொழிற்சாலை ஒன்றை தனியார் நிறுவ அரசு உதவி செய்ய அனுமதி வழங்காவிட்டாலும் வேளாண் தொழில் கழகத்தின் மூலம் இந்த செண்ட் தொழிற்சாலையை நிறுவ அரசு அனுமதி வழங்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. அ. பாலுசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். மேலும் இந்தப் பகுதி மல்லிகை, ரோஜா போன்ற மிகுந்த மணம் தரும் மலர்கள் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய பகுதியாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலனை இல்லாமல் இந்தத் தொழிற்சாலையை வேளாண்மைத் தொழில் கழகத்தின் சார்பாக ஆரம்பிக்க உத்திரவிடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, அரசு இதையும் பரிசீலிக்கும்.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவரவர்களே, மல்லிகைப் பூ, ரோஜாப்பூக்களிலிருந்து செண்ட் தயாரிக்கும் தொழில் நிறுவனத்தை தனியார் முன்வந்து மேற்கொண்டால் அதை அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மேற்குத் தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக தொழிற்சாலையையே கண்டறியாத தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த இந்த மல்லிகைப்பூ, ரோஜாப்பூக்களிலிருந்து செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ, மற்ற மாவட்டங்களில் சப்சிடி கொடுத்து தொடங்கப்படுகின்ற தொழில்களைப் போல், இந்தத் தொழிலைத் தொடங்க 15 சதவீதம் சலுகை அளித்து, அதன் மூலம் அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த வழிவகை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 11

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, தஞ்சையில் தொழில் தொடங்குகிற வாய்ப்பு, இந்த மல்லிகை ரோஜாப் பூக்களிலிருந்து சென்ட் தயாரிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மல்லிகை என்பது மணம் நிறைந்த மலர். அதிலும் மதுரை மல்லிகைக்கு மணம் அதிகம் என்பதை நாடறியும். மதுரை மாவட்டத்தில் விமான நிலையத்தை ஒட்டி இருக்கிற திருமங்கலம் சாலையில் வருடத்தில் 365 நாட்களும் மல்லிகை மலரைக் கொட்டி வைத்திருப்பதைக் காணலாம். எனவே, அங்கே மல்லிகை மலரிலிருந்து 'ஜாஸ்மின் கான்கிரீட்', 'ஜாஸ்மின் கான்சென்ட்ரேட்' அப்சலூட், தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பினால் பல இலட்சக் கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டக்கூடிய காமதேனுவாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பரிசீலிக்கும், பரிசீலிக்கும் என்று இரண்டு முறை சொன்னதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். நான் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த சென்ட் தயாரிக்கும் திட்டம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் நல்ல திட்டமாக இருப்பதால் அதை விரைவு படுத்தி ஏன் இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்ளக் கூடாது ? என்பதுதான்.

மாண்புமிகு டாக்ர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, விரைவு படுத்துவதுபற்றித்தான் அரசு பரிசீலிக்கும் என்று குறிப்பிட்டேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது தஞ்சை மாவட்டத்தில் இந்தத் தொழிலைத் தொடங்க வாய்ப்பு இல்லை என்று சுருக்கமாகவே பதில் சொல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் சுருக்கமாகவே சொன்னார்கள். குறிப்பாக மேற்குத் தஞ்சை மாவட்டத்தில் நிறைய மல்லிகைப்பூ பயிர் செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். வேண்டுமானால் மதுரையில் இருக்கிற மல்லிகைப் பூவிற்கு விமானத்தில் பறந்து செல்லும் வாய்ப்பு இருக்கலாம். அதே நேரத்தில் மேற்குத் தஞ்சையில் மல்லிகைப்பூ நிறைய சாகுபடி செய்யப்படுவதால் அங்கே அது சம்பந்தமான ஒரு தொழிற்சாலை அமைப்பதுபற்றி மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, மதுரை மல்லிகையை விட தஞ்சை மல்லிகை தரம் குறைந்தது என்று நான் சொல்லவில்லை. சென்ட் தயாரிக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னேன்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வேதாரணியத்தில் உற்பத்தியாகக் கூடிய மல்லிகைப்பூ சாகுபடி பெருமளவுக்குப் பரவி வருவதாக அங்குள்ள மக்கள் சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் தஞ்சை மாவட்



1985 ஜூலை 11]

டத்தில் நிறைய வசதி வாய்ப்பு இருப்பதால் இப்போது இருக்கிற மல்லிகைப்பூ உற்பத்தியை மேலும் அபிவிருத்தி செய்து, அதற்கு ஊக்கமளிக்க, சலுகை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? இந்த சென்ட் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலை ஒன்றை அமைத்து இரண்டையும் செய்துகொடுக்க இப்போது இல்லாவிட்டாலும் எதிர்காலத்திலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, முதல் காசுக்கு ரொட்டி, அடுத்த காசுக்கு மலர் என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். நமக்கு உணவுதான் முக்கியம்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, மல்லிகை, ரோஜாப்பூக்கள் எந்த எந்த மாவட்டத்தில் எவ்வளவு ஏக்கர் பயிரிடப்படுகின்றன? அதிகமாகப் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள். சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை விரைவாக ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, தர்மபுரியில் ஏற்கனவே வளம் அதிகமாக இருக்கிறது. எனவே மலர்த் தொழிற்சாலைக்கு ஆசைப்படக் கூடாது. தனிக் கேள்வி போட்டால் தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு உற்பத்தியாகிறது என்ற விவரத்தை மாவட்ட வாரியாகச் சொல்ல முடியும். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பதால் அவருக்கு பதில் சொல்ல வேண்டும். மதுரை மாவட்டத்தில் 679 ஹெக்டேரில் மல்லிகை மலர் பயிரிடப்படுகிறது.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலைப் பகுதியில் ஜிரேனியம் என்ற செடி வளர்க்கப்படுகிறது. அவை பெரும்பாலும் வட இந்தியர்களால் வாங்கப்படுகிறது. சிறுசிறு குடிசைகளில் கேரள மக்கள் அந்த ஜிரேனியத்தைத் தயார் செய்து பாம்பே போன்ற இடங்களுக்கு அனுப்பி வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். அதன் காரணத்தால் ஏகப்பட்ட பொருளாதாரம் இந்த நாட்டைவிட்டு வெளியே போகின்றது. ஆகவே ஜிரேனியம் போன்ற சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினைக் கொடைக்கானலில் அல்லது அதற்கு அருகில் அமைக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதுபற்றிய செயற்குறிப்பு ஏற்கனவே வேளாண் தொழில் கழகத்திடம் இருக்கின்றது.

[1985 ஜூலை 11

செண்ட் தயாரிப்புப் பிரிவு.

613 *—(*வினா எண். 1706)— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மல்லிகைப் பூவிலிருந்து 'செண்ட்' தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று தமிழகத்தில் நிறுவப்பெறும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு முதலீட்டில் எப்போது அது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தமிழ்நாட்டில் ரூ. 100 இலட்சம் முதலீட்டில் மல்லிகைப் பூவிலிருந்து செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை 1986 ஜூலையிலிருந்து தொடங்கும் பொருட்டு செயற்குறிப்பு ஒன்றை அனுப்பி உள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மல்லிகைப் பூவிலிருந்து செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலையில் எவ்வளவு செண்ட் தயாரிக்க முடியும். அந்த செண்ட் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் இருக்குமா? அதன்மூலம் எத்தனைபேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? அந்த வேலை எப்போது தொடங்கும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஜூலையில் உற்பத்தியைத் தொடங்குவதாக இருக்கின்றது. அந்தத் தொழிற்சாலையின் மூலம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு என்ற தகவல் இல்லை. ஆனால் 100 உழவர் பெருமக்கள் இதற்கான உற்பத்தியைச் செய்து வழங்கக் கூடிய வகையில் அவர்கள் மல்லிகைப்பூவைப் பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. 2 கோடி பெறுமானம் உள்ள செண்ட்டை ஏற்றுமதி செய்ய மதிப்பீடு செய்திருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இந்தியாவிலே இருப்பவர்கள் வெளிநாட்டு செண்ட்களான இன்டிமேட், சாரின், நைட்குவின், ஜேஸ்மின் போன்றவற்றைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். அந்த செண்ட்களுக்கு இணையாக இந்த மல்லிகையிலிருந்து தயாரிக்கப்படும் செண்ட் இருக்குமா என்பது தெரியவில்லை. எல்லா எம்.எல்.ஏக்களுக்கும் சாம்பிள் செண்ட் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?



1985 ஜூலை 11]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனிக்கு இருக்கின்ற அளவுக்கு அனுபவம் எனக்குக் கிடையாது. அவரைப் போன்றவர்கள் இந்த அன்னிய மோகத்தைப் புரிந்துகொண்டுதான் அன்னிய நாட்டு நிபுணர்களின் துணையோடு இந்த செண்டைத் தயாரிக்க இருக்கிறோம்; தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இருக்கிறோம்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சேலம் மாவட்டம், மதுரை மாவட்டம், தஞ்சை மாவட்டம் போன்ற பகுதிகளில் இந்த மல்லிகைச் செடி அதிகமாக வளர்கின்ற காரணத்தால் அந்த மல்லிகைப் பூ சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் அன்றாடம் மல்லிகைப் பூ விற்று விடியற்காலை 5 மணிக்குக் கொண்டு போய் விற்பனை செய்வதற்காகச் சேர்த்துவிடுகிறார்கள். அங்கிருந்து அவற்றை வாங்கி வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். எனவே இவ்வாறு உற்பத்தி ஆகக்கூடிய மல்லிகைப்பூவை ஏதாவது ஒரு மையமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே வைத்துப் பயன்படுத்தி வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்படுகின்ற வகையில் தொழிற்சாலை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா? இல்லை என்றால் அப்படி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள முயலுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ரக மல்லிகைப்பூவிலேயிருந்தும் செண்ட் தயாரிப்பதில்லை. அதற்கென்று சில தனிப்பட்ட ரகங்கள் இருக்கின்றன. அதைக் கவனத்தில் கொண்டுதான் அது பயிரிடப்படக்கூடிய வட்டாரத்தில் அதற்கு வேண்டிய தொழிற்சாலை அமைக்கின்ற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். தொடர்ந்து மற்ற பகுதிகளிலும் அத்தகைய வாய்ப்பு இருக்கின்றதா என்பதைக் கவனத்தில் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகை மலரைக் கசக்கிப் பிழிந்து சார் எடுக்கின்ற நிலைமைக்குப் பதிலாக மல்லிகைப்பூவை அப்படியே பாலிதீன் பைகளில் அடைத்து வெளி நாடுகளுக்கு அனுப்பினால் அன்னியச் செலாவணி அதிகமாகக் கிடைக்குமே, எனவே அந்தமாதிரி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதியிடம் அது பற்றிய திட்டம் இருந்தால் தரலாம்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அருகில் புதியம்புத்தூர், பேராவூரணி போன்ற பகுதிகளில் மல்லிகைப்பூ அதிகமாக விளைவதன் காரணத்தால் அந்தப் பகுதி விவசாயிகள் அதனைத்

தொழிலாகக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதி
களில் சென்று உற்பத்தியாகக் கூடிய மல்லிகையைப் பெற்று
பயன்படுத்துகின்ற வகையில் தொழிற்சாலை அமைக்க அரசு
முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்
களே, இப்போது வாய்ப்பு இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மல்லிகையிலிருந்து மணம் தரக் கூடிய
சென்ட் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை மட்டும் அல்லாமல்,
அரோமாடிக் பிளாண்ட்ஸ் என்று சொல்லக்கூடிய ரோசா,
மருக்கொழுந்து போன்ற மலர்களிலிருந்து—நான் தொழில்
துறை மானியத்தில் கூட இது பற்றி விளக்கமாகச் சொல்லி
யிருக்கிறேன்—அந்த மருக்கொழுந்திலிருந்து சென்ட் தயாரிக்கக்
கூடிய தொழிற்சாலையும் அத்தோடு சேர்த்து அமைக்கப்
படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்
களே, மணம் உள்ள கேள்விகளாகவே கேட்டுக் கொண்டிருக்
கிறார்கள். மருக்கொழுந்திலிருந்து சென்ட் தயாரிக்கிற வாய்ப்பு
இப்போது இல்லை.

### கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள்

613—(*வினா எண். 1337)—மாண்புமிகு திரு. வேடசந்தூர்
வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்):
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) தவணை தவறியும் கூட்டுறவுச் சங்கக் கடனைக் கட்டா
தவர்கள், கூட்டுறவுச் சங்க விதிகளுக்கு முரணாக, தமிழகம் முழு
வதும் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளாகப் பணியாற்றி வருவதை
அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விதிகளின்படி அவர்களை நீக்க அரசு
மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:
தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கடன் செலுத்தத் தவறிய சங்க நிர்வாகஸ்தர்கள்
மீது தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின்
சட்டப்பிரிவு 28, மற்றும் தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு கூட்டுறவுச்
சங்கங்களின் விதி 40-ன் கீழ், பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது.



மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இப்படிப்பட்ட ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களில்
கூட்டுறவுச் சங்கங்களை நடத்துபவர்கள் முறையாக கூட்டுறவுச்
சங்கத்தினுடைய கடனைக் கட்டாமல் கூட்டுறவு விதிகளுக்கு
முரணாக நிர்வாகஸ்தர்களாக இருக்கக்கூடிய உறுப்பினர்களின்
எண்ணிக்கை மாநில அளவில் எவ்வளவு என்ற விவரம் இருக்கிறதா?
மேலும் இப்படி கூட்டுறவுச் சங்க விதிகளுக்கு முரணாக பதவி
களிலே இருப்பவர்களை நீக்க வேண்டும் என்று நீண்டகாலமாகச்
சொல்லிவந்தாலுங்கூட, அவர்கள் இன்னும் மாநிலம் முழுவதும்
பல்வேறு இடங்களில் பதவிகளில் இருக்கிறார்கள். எனவே அரசு
உடனடியாக அவர்களுக்கு ஒரு கால வரையறை நிர்ணயித்து அந்த
வரையறைக்குள் அவர்களை நீக்குகின்ற நடவடிக்கை எடுக்கும்
வகையில் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனைத் திருப்பித்
தராமல் இருக்கக்கூடிய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை
கூட்டுறவு நிறுவனங்களில் நிர்வாகஸ்தர்களாக இருப்பவர்களைப்
பொறுத்த அளவில் 10, விவசாய சேவா கூட்டுறவு சங்கத்தின்
நிர்வாகஸ்தர்கள் எண்ணிக்கை 5,439; கூட்டுறவு விவசாய வங்கி
களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 228 ; கூட்டுறவு கிராம
வங்கிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2, ஊழியர் கூட்டுறவுச்
சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 213. இவர்கள்
அத்தனை பேரும் நிர்வாகஸ்தர்கள். வாங்கிய கடனை திருப்பித்
தராமல் ஓவர் டியூவில் இருக்கிறார்கள். இவர்கள் மீது நட
வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் சொன்ன யோசனையை மனத்தில் வைத்துக்
கொண்டு 3 மாத காலத்திற்குள் அரசு அவர்கள் மீது நடவடிக்கை
எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கடனை திருப்பிக் கொடுக்காமல் ஓவர் டியூ ஆன
தோடு மட்டுமல்லாமல், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற
வேண்டிய நிர்வாகத் தேர்தலை நடத்தாமல், வேண்டிய
கோரம் கூட இல்லாமல் கூட்டங்களை நடத்திக் கொண்டு,
தொடர்ந்து தலைவர்களாக இருந்து கொண்டிருக்கின்றனர்.
அப்படிப்பட்டவர்களை உடனடியாக நீக்க அரசு ஆவன
செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் சொன்னதை கவனத்திலே வைத்துக் கொண்டு
வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கடனைக் கட்டா
நிர்வாகிகள் மீது நடவடிக்கைகளை எடுத்து வருவதாக

சொன்னார்கள். இதுவரையில் அப்படி எத்தனை பேர்கள் மீது
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? யாராவது ஒன்றிரண்டு பேர்
களாவது பொறுப்பிலேயிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்களா?
அப்படி விடுவிக்கப்பட்டிருந்தால் எத்தனை பேர்கள் என்ற
விவரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமசந்திரன் :
மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்
பட்ட உறுப்பினர்களுடைய எண்ணிக்கை, விவசாய சேவா கூட்டு
றவுச் சங்கத்தினுடைய எண்ணிக்கையைப் பொறுத்த வரையில்
485, கூட்டுறவு விவசாய வங்கிகளில் இருக்கிற நிர்வாகஸ்தர்களில்
நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 29. ஊழியர்கள்
கூட்டுறவுக் கடன் வங்கிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்ட
நிர்வாகஸ்தர்களின் எண்ணிக்கை 8.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விவசாயக் கூட்டுறவுத் துறையில் கடன் வாங்கியவர்
கள் கடனைத் திருப்பிக் கட்டாததால் நிர்வாகத்திலே இருப்பவர்
கள் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். ஆனால் கடன் வாங்கிய அனைவரும் பெரும்
பாலும் 10 ஆண்டுக்காலம் தள்ளி வைத்ததினால் அல்லது இயற்
கையின் பாதிப்பினால் கடனைக் கட்டாமல் இருக்கக் கூடிய விவ
சாயிகளாக இருப்பார்கள். ஆகவே அவர்களை ஒரு பெரிய கிரிமினல்
றவுறவாளிகளைப் போலக் கருதாமல் நீண்டகாலமாகக் கூட்டு
மத்துறையிலே தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறதே அதையும்
அனத்தில், கொண்டு, உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு
திமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதோடு, அந்தக் கடனைத்
கருப்பிக் கட்டாத விவசாயிகளை பெரிய கிரிமினல் குற்றவாளி
ளாகக் கருதாமல், தகுந்த வகையில் கடனை வசூலிக்க அமைச்சர்
அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போல
தேர்தலை விரைவிலே நடத்த வேண்டும் என்றுதான் அதற்குரிய
முயற்சிகளை இந்த அரசு வேகமாக எடுத்து வருகிறது. இந்த
விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிர்வாகத்தினரே பணம்
கட்டவில்லை என்று சொன்னால் அந்தச் சங்கங்கள் இது வரை
யில் எப்படி நடந்திருக்கும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்
கள் நினைத்துப் பார்க்க வேண்டும். விவசாயிகள் கட்டவில்லை
என்று சொன்னால்கூட நியாயம் இருக்கிறது. ஆனால் அந்தச்
சங்கத்தின் பொறுப்பிலே இருப்பவர்களே 10 ஆண்டுகளுக்கு
மேலாகக் கட்டாமல் இருக்கிறார்கள் என்று சொன்னால்,
அவர்கள் மற்றவர்களுக்கு நல்ல வகையில் ஒரு முன்மாதிரியாக
இருக்காமல் போவதினால்தான், கடன்கள் வசூல் ஆகாமல் போய்
விடுகின்றன. அதற்கு இப்படிப்பட்ட நிர்வாகிகளும் ஒரு காரணம்
என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்
கிறேன்.



ஆகவே இதற்கும் தேர்தலுக்கும் சம்பந்தம் இல்லை. தேர்
தலைப் பொறுத்த வரையில் வேகமாக விரைவில் நடத்தவேண்டு
மென்று இந்த அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்
கிறது.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, நிர்வாக கூட்டு
றவுச் சங்கங்களில் கடனைக் கட்டத்தவறிய நிர்வாகிகள் மீது நட
வடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், இந்தக் கூட்டுறவுச்சங்கங்களில்
கடனை ஜப்தி செய்கிறவர்களுக்குச் சரியான முறையில் கணக்கை
எடுத்து அறிவிக்காத காரணத்தால் நிறைய இடங்களில் தாறு
மாறாக ஜப்திகள் நடைபெறுவது அரசுக்குத் தெரியுமா?
அவற்றை அரசு தடுத்து நிறுத்துமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:
தலைவர் அவர்களே, தாறுமாறாக எங்கெங்கு ஜப்திகள் நடை
பெறுகின்றன என்பது குறித்த தகவல்களை மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் தெரிவித்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நட
வடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே,
நிலுவையில் உள்ள கடன்களை வசூலிப்பதற்கு நடவடிக்கை
யெடுத்து, விவசாயிகள் எல்லாம் கூட அவர்கள் கடனைத் திருப்
பிக் கட்ட வேண்டுமென்று செய்து வருகிறோம். இந்தச் சங்கங்
களின் நிர்வாகிகள் கடனைத் திருப்பிச்செலுத்துவதற்கு அளிக்கப்
படவிருக்கிற மூன்று மாத அவகாசம் தேவையில்லை. அப்படி
கடனைத் திருப்பிக் கட்டத்தவறிய அந்த நிர்வாகிகள் வேலியே
பயிரை மேய்கிற நிலையில் இருக்கிறார்கள். அந்த நிர்வாகிகள்
ஏற்கெனவே பதவியை இழந்தவர்கள். அவர்கள் இப்போது
விரிவாக்கத்தில் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் பதவியை
ரத்து செய்து விட்டு, நாட்டு மக்கள் மீது நல்ல அக்கறை கொண்
டிருப்பவர்களைச் கொண்ட ஆலோசனைக் குழுக்களை அமைக்க
அரசிற்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.
ஆகவே மூன்றுமாதம் அவகாசம் அந்த நிர்வாகிகளுக்குக் கொடுக்கத்
தேவையில்லை. அப்படிக் கொடுப்பது நிச்சயமாக ஏற்றுக்
கொள்ளத்தக்கதல்ல. விவசாயிகள் இன்றைக்கு ஜப்தி செய்யப்படு
கிற நிலையில், கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்கின்ற 5,000-க்கு
மேற்பட்ட நிர்வாகிகள் இப்படி திருப்பிக் கட்டாமலிருப்பதை
இந்த நாடும், இந்த மன்றமும் ஏற்றுக் கொள்ளாது. ஆகவே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அவர்கள் மீது
நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நல்ல
எண்ணத்தை அரசு புரிந்திருக்கிறது. ஆனால் கூட்டுறவுச் சட்டத்
தில் பல சிக்கல்கள் இருப்பதால் புரசிஜர்படி போனால்தான்
சரியாக இருக்கும். இல்லையென்றால் நம் நடவடிக்கைகளுக்கு
எதிராக கோர்ட்டில் சென்று தடை வாங்கி விடுகிறார்கள். ஆகவே

தான் இந்த மூன்று மாத கால அவகாசத்தைக் கொடுக்கிறோம். அதிலும் அரசாங்கம் முனைப்பாகச் செயல்பட்டால்தான் இந்த 3 மாத காலத்தில் அதனை முடிக்க முடியுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆலோசனைக் குழுக்கள் அமைக்கிற உத்தேசம் அரசுக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குளுக்கோஸ் தொழிற்சாலை.

6132—(*வினா எண். 1985)—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்காச் சோளத்தைக் கொண்டு குளுக்கோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே; (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, மக்காச் சோளத்தைக் கொண்டு குளுக்கோஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை இந்த ஆண்டிலாவது அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சுமார் 16 ஆயிரம் எக்டேர் அளவிற்குதான் மக்காச்சோளம் பயிரிடப் படுகிறது. இது மிகக் குறைவான பரப்பளவாகும். அதிலும் குறிப்பாக புதுக்கோட்டை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களில்தான் மக்காச்சோளம் அதிகமாக பயிரிடப் படுகிறது. South India Maize and Allied Industries என்ற தனியார் நிறுவனம் நாளொன்றுக்கு 50 டன் அளவிற்கு மக்காச் சோளப் பொருட்களை தயாரிக்கும் திறன் படைத் திருந்தாலும் கூட அவர்களுக்கு தேவையான அளவிற்கு மக்காச்சோளம் கிடைக்காத காரணத்தால் ஆண்டிற்கு ஆறாயி ரம் மெட்ரிக் டன்தான் அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே இருக்கிற ஆலைக்கே உரிய அளவு மக்காச்சோளம் கிடைக்கவில்லை என்பதுதான் இருக்கிற நிலைமை. ஆகவே புதிதாக தொழிற்சாலை தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10—00).

## 2. பேரவை முன்னவருக்குப் பிறந்தநாள் வாழ்த்து.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்களுக்கு இன்று பிறந்த நாள். எனவே பேரவையின் சார்பாக, அவை முன்னவர் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இன்று 66-வது பிறந்தநாள் விழாவை கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அவையின் சார் பிலேயும், என் சார்பிலேயும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், எல்லா நலனும் பெற்று, பல்லாண்டு, பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. தகவல் கோரல்.

மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்படுகிற நாளில் சட்ட முன்வடிவுகளையும் எடுத்துக்கொள்வது

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் நாம் மூன்று மானியக் கோரிக்கைகளை விவாதிக்க இருக்கிறோம். அதேபோல மூன்று சட்டங்களையும் விவாதிக்க இருக்கிறோம். வழக்கமாக சட்டங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிற போது மானியக் கோரிக்கையை எடுத்துக் கொள் வதில்லை. ஏனென்றால் மானியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் எல் லோரும் பேசித்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம் தேவைப்படின் பேரவைக் கூட்டத்தை மாலையிலும் வைத்துக் கொள்ளலாம்.

[1985 ஜூலை 11

## 4. ஒழுங்குப் பிரச்சினை.

### பேரவைச் செயலகத்தின் இலச்சினையை வெளியார் பயன்படுத்துவது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் 5–7–1985 அன்று, பீர்க்கங்கரணையைச் சேர்ந்த குடும்பநல இளைஞர் மன்றத்தைச் சார்ந்தவர்கள், குடும்பநல இளைஞர் மன்றத் துவக்க விழா அழைப்பிதழில், பேரவைச் செயலகத்தின் கோபுரம் போட்ட சின்னத்தை உபயோகித்துள்ளதாக ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். இது குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அவர்கள் தங்களுக்கு அனுபவம் இல்லாத காரணத்தால், இந்தப் பிழை நேர்ந்துவிட்டது என்றும், தங்கள் செயலுக்கு வருந்துவதாகவும் தங்களை மன்னிக்கும்படியும் கேட்டுக் கடிதம் எழுதியுள்ளனர். எனவே இதில் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தக் கடிதம் யாரிடமிருந்து வந்து இருக்கிறது?.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கலெக்டரிடமிருந்து வந்திருக்கிறது. குடும்ப நல இளைஞர் மன்றம், தலைவர் ஆ. மு. லலிதாகுமாரி, பி.ஏ.பி.எல். செயலாளர், கோ. குணசேகரன், பொருளாளர், தமிழ் மணி. மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களைக் கேட்டு, அதற்குப் பிறகு நமக்குப் பதில் வந்திருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு இந்த முத்திரை எப்படிக் கிடைத்தது? அரசாங்கத்திலேயிருந்து கிடைத்ததா? அல்லது அவர்களே தயார் செய்தார்களா? அவர்களே தயார் செய்திருந்தால் மிகப் பெரிய தப்பு. இல்லையென்றால் நமக்குச் சொந்தமானது அவர்களுக்கு எப்படிப் போனது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்த கடிதத்தை நான் படித்தேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அது அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிப்புக் கேட்டதாலே நாம் விட்டுவிடலாம் என்று சொன்னேன். மேலும் விசாரிக்க வேண்டும் என்றால் விசாரிக்கலாம். (குறுக்கீடு). என்னுடைய செயலகத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தவறுக்கு உடந்தையாக இருந்திருந்தால் நானே கடுமையாக ந[ட]வடிக்கை எடுப்பேன்.



1985 ஜூலை 11]

திரு. ஆ. நடராசன் : அவர்களுக்கு அந்த எம்ப்ளம் எப்படிக் கிடைத்தது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா? இப்படி இந்த அவையில் அறிவிப்பதன் மூலமாக இந்தப் பிரச்சினை முடிந்துவிடுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படிச் செய்யலாம் என்பதை யோசித்துச் சொல்லுங்கள். ஐ லீவ் இட் டு யூ.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) மேட்டுப்பாளையம் காந்தி மைதானத்தில் சேரும் காய்கறிக் குப்பைகளை உடனுக்குடன் அகற்றல்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியிலுள்ள காந்தி மைதானத்தில் அழுகிய காய்கறிகள் கொட்டப்படுவதால், ஏற்படுகிற துர்நாற்றம், மற்றும் சுகாதாரக் கேடுகளால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மேட்டுப்பாளையம் நகராட்சியிலுள்ள காந்தி மைதானம்
ஊட்டி-கோயம்புத்தூர் மெயின் ரோட்டிற்கு மேற்குப் புறத்தில்
உள்ளது. இம் மைதானத்தைச் சுற்றிலும் நான்கு ரோடுகள்
உள்ளன. இம் மைதானத்தில் காய்கறி மொத்த வியாபாரக்
கடைகளும், கிடங்குகளும் அமைந்துள்ளன. காந்தி மைதானத்
திற்கு அருகாமையிலுள்ள சில பகுதிகளிலும் காய்கறி கிடங்கு
கள் உள்ளன. இப் பகுதிகளில் உள்ள கிடங்குகளுக்கு நாள்
முழுவதும் காய் கறிகள் நீலகிரியிலிருந்தும் மைசூரிலிருந்தும்
வருகின்றன. அவற்றில் முட்டைகோஸ் அதிகமாக உள்ளது.
அதுவே துர்நாற்றத்திற்குக் காரணமாக உள்ளது. ஏனெனில்
முட்டை கோஸ்களை லாரியிலிருந்து ஏற்றும் போதும் இறக்கும்
போதும் உண்டாகும் கழிவுத் தழைகள் மற்றும் கழிக்கப்படும் இதர
கழிவுகள் லாரிகளினாலும், மாட்டு வண்டிகளினாலும் நசுக்கப்
பட்டு சகதி போன்ற நிலை ஏற்படுவதால் இந்த துர்நாற்றம்
ஏற்படுகின்றது. இந்தச் செயல் பன்நெடுங்காலமாக நடந்து
கொண்டு வருகிறது.

2. இந்த மைதானத்தினைச் சுற்றி உள்ள சாலைகளும் கழிவு நீர் வாய்க்கால்களும் மிக அதிக அளவு லாரி போக்குவரத்தினால் சீர்கெட்டும் உடைந்தும் உள்ளன. அதனால் கழிவு நீர் தேக்கமும் ஏற்படுகின்றது.

3. இதற்கென நகராட்சியில் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டு மேற்படி கழிவுகளை மண்டிக்காரர்களே தங்களது செலவிலும் பொறுப்பிலும் சுகாதாரத்திற்கு இடையூறின்றி அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டுமென அறிவித்துள்ளது. தவறுகள் செய்பவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால் குற்றம் செய்தவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

4. காய்கறிகளில் பெரும்பாலும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலமாகவும் கூட்டுறவு பயிர் விளைவிப்போர் சங்கத்தின் மூலமாகவும் கொண்டு வரப்படுகின்றது. இதன் தலைவர் நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் ஆவர். இவரிடமும் இக்குறைபாடுகள் பற்றி கூறியதன் பேரில் மேற்படி இடத்தை அவர் பார்வையிட்டார்.

5. தற்போது நகராட்சி இதற்கென தனியாக ஒரு பெருந்திணை (Tractor) ஆட்களுடன் பணியில் அமர்த்தி கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தியுள்ளது. லாரிகள் மைதானத்தின் உள்ளும் ரோடுகளிலும் மிக அதிக அளவில் ஏற்றி இறக்கும் பணியில் நாள் முழுவதும் ஈடுபட்டிருப்பதால் கழிவுகள் அகற்றும் பணியில் இடையூறு ஏற்படுகின்றது. வாரத்தில் வெள்ளிக் கிழமை இப் பகுதிகளிலுள்ள கடைகளுக்கு விடுமுறை நாளாகும். ஆகவே இந்த விடுமுறை நாளில் இப்பகுதி முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு கிருமி நாசினிகள் தெளிக்கப்படுகின்றன.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்து இருக்கிற விவர அறிக்கையில் இந்த பெரும் சுகாதாரக் கேட்டுக்கு காரணம் அங்கு கொட்டப்படுகின்ற காய் கறிகளும், முட்டை கோசுத் தழையும் அது மாடுகளால் மிதிப்படுவதும் தான் காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது சாதாரணமான ஒரு பிரச்சினையாக அங்கு இல்லை. அதனால் ஏற்படுகின்ற துர்நாற்றம் ஊட்டி நெடுஞ்சாலையில் செல்லுகின்ற பயணிகளுக்குக் கூட அறுவறுக்கத்தக்க அளவுக்கு மிக மோசமாக வீசிக்கொண்டு இருப்பதால் அங்கு இருக்கின்ற பொது மக்களுக்கும் குடியிருந்து வருகின்ற நகர வாசிகளுக்கும் பெரும் சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்துவது மட்டும் அல்லாமல் அருகில் ஓடுகின்ற பவானி நதியின் தூய்மையைக் கெடுக்கவும் இது காரணமாக அமைந்து இருக்கிறது. அங்கு இருக்கின்ற காந்தி மைதானத்தில் இப்போது இருக்கின்ற பள்ளங்களை மேடு செய்து அந்தச் சகதி தேங்காமல் இந்த அழுகிய பொருட்கள் தேங்காமல் இருப்பதற்கு சுமார் 2 அடிக்கு அந்த மைதானத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது. அதற்கு நகராட்சிக்குப் போதிய வருமானம் இல்லை. அதற்காக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அரசு நிதி உதவியோடு அந்தப் பணியை மேற்கொண்டு அந்த இடத்தை உயர்த்தி அந்தச் சகதிகள் தேங்காமல் சுகாதாரக் கேட்டுக்கு வழியில்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அதற்கு டிராக்டர் ஒன்று வைத்து வெள்ளிக் கிழமை தோறும் அன்று விடுமுறை ஆனதால் அந்தப் பகுதி முழுவதும் சுத்தம் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது நியாயமானது ஆகும் என்று நான் ஒத்துக் கொள்கிறேன். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அழுகின காய்கறிகள் மட்டும் அல்லாமல் இந்த முட்டை கோசு தழையை சாப்பிட்டு நூற்றுக் கணக்கான கோயில் மாடுகள் சாணம் போட்டு ஏற்கெனவே ஏற்பட்டு இருக்கின்ற தூய்மைக் கேட்டுக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கிறது. அது எங்கும் இல்லாத அளவுக்கு மேட்டுப் பாளையத்தில் 300, 400 சாமி மாடுகள், கோயில் மாடுகள் அங்கே திரிகின்ற காரணத்தால் அது சுகாதார கேட்டுக்கு மேலும் கேடு விளைவிப்பதாக இருக்கிறது. ஆக அவைகளை ஏலம் விட்டு, அல்லது நகராட்சி மூலமாக அவைகளை அப்புறப் படுத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு தன்னிறைவுத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆக தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இந்த சுகாதாரக் கேடுகளை போக்குகின்ற பணியை நகராட்சி எடுத்துக் கொள்ள அரசு அனுமதிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுகாதாரக் கேட்டுக்குக் காரணமாக இருக்கின்ற மாடுகளை அப்புறப்படுத்துவது பற்றி நகராட்சி தக்க நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்டது போல் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சுகாதாரத்தை எப்படிச் சீர் செய்யலாம் என்பதைப் பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

## (ஆ) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களது உண்ணா நோன்பு போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் கி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். இராசாராமன், கு. ரமணி, கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் தங்களின் பல கோரிக்கைகளை முன் வைத்து

கடந்த 2-7-1985 முதல் பள்ளி கல்வி இயக்குநர் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருந்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

தமிழ்நாடு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், ஊக்க ஊதி யம் வழங்க வேண்டும், தற்காலிக ஆசிரியர்கள் பணியை வரன் முறைப்படுத்த வேண்டும், கூடுதல் உதவித் தலைமையாசிரியர் கள் நியமனம் குறித்த ஆணையை காலந் தாழ்த்தாமல் நடை முறைப் படுத்த வேண்டும். அரசு பள்ளி ஆசிரியர்கள் பெறும் சலுகைகளைத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு விரிவுப்படுத்த வேண்டும். பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்க வேண்டும். வேலைப் பளுவை குறைக்க வேண்டும். தேர்வுத் தாள் திருத்துவதற்கு ஊதியத்தை உயர்த்த வேண்டும். மாணவர் ஆசிரியர் விகிதத்தைக் குறைக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்றிட 1985 ஜூலை 2 முதல் 5 வரை பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது.

எம். எட்., எம். பில்., மற்றும் பி. எச்.டி. கல்வித் தகுதி பெற்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மட்டும் . ஊக்க ஊதியம் வழங்குவது நான்காவது ஊதியக் குழுவின் ஆய்வில் இருந்ததினால் இவர்களுக்கு வழங்கவில்லை. ஊதியக் குழுவின் பரிந்துரையை இனி ஆய்வு செய்து தகுந்த ஆணைகள் இடப்படும்.

மேல் நிலைக் கல்வி பணிக்கென சிறப்பு விதிகள் வழங்கிய அரசாணையின்படி. தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு, 28-4-1981 அன்று பணியில் உள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலை மொழி ஆசிரியர்கள் ஆகியோர்களின் பணியினை, அவர்கள் அப் பணிக்கு முழுத் தகுதி படைத்தவர் களாக இருப்பின், தமிழகத் தேர்வாணைக் குழுவின் இசைவினைப் பெற்று பணி வரன்முறைப் படுத்தப்படவுள்ளது. தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள முழுத் தகுதிகளையும் அப் பணி விதிகள் வெளியிடப்பட்ட நாளாகிய 28-4-1981 இல் பெறாத இந்த வகையைச் சார்ந்த ஆசிரியர்கள் தங்களைத் தகுதி படைத்தவர்களாக ஆக்கிக்கொள்ள தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி விதி 11-ன் படி அவர்களுக்கு 30 செப்டம்பர், 1985 வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள் ளது. எனவே, இவ்வகையான தகுதி பெறாத ஆசிரியர்கள் தகுதி பெற்ற பின் 30-9-1985-க்குப் பிறகு தேர்வாணைக் குழு வின் ஒப்புதலுடன் இவர்களது பணி வரன் முறை செய்யப்படும். 28-4-1981-க்குப் பிறகு 1984-85 வரை தற்காலிகமாக நியமிக் கப்பட்ட முதுகலை ஆசிரியர்களின் பணியை வரன் முறை செய்வது குறித்து தேர்வாணைக் குழுவுடன் கலந்து பரிசீலிக்கப்படும்.



அரசாணை எண் 1802, கல்வி, நாள் 17-11-1984 இல் 750-க்கு அதிகமான மாணவர்கள் எண்ணிக்கை உள்ள மேல் நிலைப் பள்ளிகளில் மாதம் ரூ. 25 தனி ஊதியத்துடன் பட்ட தாரி ஆசிரியர் ஊதிய விகிதத்தில் ஒரு உதவித் தலைமை ஆசிரி யரும், முதுகலை ஆசிரியர் ஊதிய விகிதத்தில் ஒரு கூடுதல் உதவித் தலைமையாசிரியரும் நியமித்துக் கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. இதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. சில ஆசிரியர்கள் முந்துரிமைப்படி தங்களுக்கே உதவித் தலைமையாசிரியர் பதவி அளிக்கப்பட வேண்டுமென்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். அந்தந்த நபர் களைப் பொறுத்தவரை இவ்வரசாணைக்கு நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்துள்ளது. சில பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் இவ்வாணையை அமுல்படுத்துவது பற்றி தெளிவுரைகள் கோரியுள்ளன. அவ்வாணை அமல் படுத் தாது இருப்பதையும் எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொட ரப்பட்டுள்ளது. ஆகவே நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணைக்கு இணங்க, ஆணைகள் வழங்கப்படும்.

அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப் படும் பெருவாரியான சலுகைகளை தனியார் பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது அரசு அளித்து வரு கிறது. மேல் நிலைக் கல்வி தொழில் பிரிவு பாட போதனைக்கு அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் பணி யாளர்களைப் பகுதி நேர ஆசிரியர்களாக பணி புரிய அரசு அனுமதித்துள்ளது. தொழிற் பிரிவு மாணவர்களை அந்தந்தத் துறையிலுள்ள நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று செய்முறை பயிற்சி அளித்து, இதனால் மாணவர்கள் நற்பயன் அடைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

மேல் நிலைப் பள்ளிகளில் ஒரு பாடத்திற்கு ஒரு முதுகலை ஆசிரியர் பணியிடம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு முதுகலை ஆசிரியர் வாரத்திற்கு 24 பாட வேளைகள் மட்டுமே நடத்துவார். பள்ளி வேலை நாட்கள் ஆண்டு ஒன்றுக்கு 220-லிருந்து 200 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. பொதுவாக முதுகலை ஆசிரியருக்குப் பாட வேளைகள் கூடுதலாக இல்லை. தேர்வுத் தாள் திருத்தும் ஊதியத்தினை உயர்த்துவது குறித்து திட்டவட்டமான கோரிக்கை எதுவும் இக்கழகம் அளிக்கவில்லை. இது குறித்து கோரிக்கை பெறப் பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் சார்பாக மாணவர் ஆசிரியர் விகிதம் ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

ஆசிரியர்களின் நலனில் அரசு இடைவிடாது நாட்டம் செலுத்தி வருகிறது. அவர்களுடைய கோரிக்கைகள் உடனுக் குடன் பரிசீலித்து தீர்க்கப்பட்டு வருகிறது. சில கோரிக்கைகள் மீது ஆய்ந்து பரிசீலிக்க வேண்டிய நிலையுள்ளது. அது குறித்து ஆலோசித்து அரசு தக்க முடிவெடுக்கும்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பேரவையில் வைக்கப்பட்டு இருக்கிற அறிக்
கையைப் படித்துப் பார்த்தேன். இது வெறும் கதையாக இருக்
கிறது. '' ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது '' என்று சொல்லு
வார்கள். அதைப் போல இந்த அறிக்கையில் ஒரு சரியான புள்ளி
விவரம் கொடுக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால்,
'' எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் '' என்று சொல்வார்
கள். உங்களுக்கு இறைவன் மீது நம்பிக்கை இருக்கிறதோ இல்
லையோ ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் நம்பிக்கை உள்ள
காரணத்தால் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் ஏறத்தாழ 5,000
பேர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை
நிரந்தரமாக ஆக்க வேண்டும். மருத்துவ விடுப்பு அவர்களுக்கு
அளிக்க வேண்டும். கடன் வசதி, இன்னும் முன் கடன் வசதி
பெறுவதற்கு சில சலுகைகளை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.
அதோடு மட்டும் அல்லாமல், 7 ஆண்டு காலமாக நிரந்தரம்
இல்லாமல் வேலை செய்து கொண்டிருக்கின்ற இந்த முது
கலை ஆசிரியர்களை உடனடியாக நிரந்தர வேலையில் அமர்த்து
வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, ஏட்டுச் சுரக்காய் கறிக்கு
உதவாது என்று அவர்கள் சொன்னார்கள். ஏட்டிலே வருவ
தைத்தான் சட்டங்களாக ஆக்கி நாம் அவைகளை நிறைவேற்றிக்
கொண்டிருக்கிறோம். முதுகலை பட்டதாரிகள் வைத்த
கோரிக்கைகளை எல்லாம் இந்த அரசு, குறிப்பாக புரட்சித் தலை
வர் அவர்களுடைய அரசு தாய் உணர்வோடு பரிசீலித்து இன்
றைக்கு அவர்களுக்கு பல்வேறு விதமான நல்லச் சலுகைகளை
வழங்கிக் கொண்டிருக்கிறது.

அதாவது, மேல்நிலைக் கல்விப் பணிக்கென சிறப்பு விதிகள்
வழங்கிய அரசாணையின்படி தற்காலிகமாக நியமனம் செய்யப்
பட்டு, 28-4-1981 அன்று பணியில் உள்ள முதுகலைப் பட்ட
தாரி ஆசிரியர்கள், முதுகலை மொழி ஆசிரியர்கள் ஆகியோரின்
பணிகளை, அவர்கள் அப்பணிக்கு முழுத் தகுதி படைத்தவர்
களாக இருப்பின், தமிழகத் தேர்வாணைக் குழுவின் இசைவினைப்
பெற்று, பணிவரன்முறைப்படுத்தப்படவுள்ளது.

அதே போல், அவர்கள் அந்தத் தகுதியைப் பெறாதவர்களாக
இருப்பின், அவர்களுக்கு 30 செப்டம்பர் 1985-வரை கால அவ
காசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் அவர்கள் தகுதி
பெற்றவர்களாக தங்களை ஆக்கிக் கொள்வார்களானால், தேர்
வாணைக் குழுவின் ஒப்புதல் பெற்று, அவர்கள் பணியும் வரன்
முறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே முதுநிலை பட்ட
தாரி ஆசிரியர்கள் கோரி இருக்கக்கூடிய கோரிக்கைகளுக்கு நிவா
ரணம் அளிக்கக்கூடிய விவரமாக இது அமையவில்லை. குறிப்பாக
அரசு, பா நகராட்சி, நகராட்சி, மேல்நிலைப் பள்ளிகளிலே கடந்த
7 ஆண்டு காலமாக பணியாற்றி வருபவர்களுடைய பணி இது
வரை வரன்முறை செய்யப்படாமல் இருக்கிறது. அதே போல,
28-4-1981-க்குப் பின் தற்காலிகமாக பணியில் 300 ரூபாய் சம்
பளத்தில் அமர்த்தப்பட்ட அந்த ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட
மாட்டார்கள். தேர்வாணைக் குழுவின் ஒப்புதலோடு தான் அந்
தப் பணியிலே அவர்கள் அமர்த்தப்படுவார்கள் என்று அரசு
அறிவித்து இருப்பது அவர்களுக்கு மிகப் பெரும் அச்சத்தை ஏற்
படுத்தி இருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், அனைத்து ஆசிரியர்களுக்கும் உயர்
கல்வித் தகுதிக்காக 4 ஊக்க ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது.
ஆனால், முதுநிலை ஆசிரியர்களுக்கு அது மறுக்கப்பட்டிருக்கிறது.
என்ன நியாயம் இது என்று தெரியவில்லை. அதே போல்
தனியார் பள்ளியிலே பணியாற்றக்கூடிய முதுநிலை ஆசிரியர்
களுக்கு—அரசுப் பள்ளியிலே பணியாற்றக்கூடிய முதுநிலை
ஆசிரியர்களுக்கு, கிடைக்கக்கூடிய வருமானமும் கொடுக்கப்பட
வில்லை, மறுக்கப்படுகின்றது. அவர்களுக்கும் இந்த விவர அறிக்
கையிலே தீர்வு காணக்கூடிய முறையில் எதுவும் குறிப்பிடப்பட
வில்லை.

அதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் ஆரம்பப் பள்ளி
யிலே நீண்ட காலமாக அவர்களை அரசு ஊழியர்களாக ஏற்க
வேண்டும் என்று கோரியதை இந்த அரசும், அதனுடைய நியா
யத்தை ஏற்று 1-7-1983 முதல் ஊராட்சி ஒன்றியங்களில் இருந்த
சுமார் 96 ஆயிரம் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்
களாக ஆக்கப்பட்டது. மீதித் துறைகளில் உள்ளவர்களையும் அரசு
ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை அவர்களுக்கு
முன்னால் இருக்கிறது. இந்த நேரத்தில் அரசு ஊழியர்களாக ஆக்
கப்பட்ட ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை—நிர்வாகப் பொறுப்பை
—மீண்டும் ஊராட்சி ஒன்றியத்திடமே திருப்பி ஒப்படைக்கப்
போவதாக கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்து இருப்பதாக
வந்திருக்கிறது. சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கக்கூடிய . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக்
கேளுங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, இது முதுகலை பட்டதாரி
ஆசிரியர்களைப் பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானம் ஆகும். அவர்
கள் ஊராட்சி ஒன்றியம், நகராட்சிகளிலே பணியாற்றக்கூடியவர்
களைப் பற்றிக் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சம்பந்தமானது
பற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. கோ. வீரய்யன் : முதலிலே பாயின்ட் ஆப் ஆர்ட
ரிலே கேட்டால் கவன ஈர்ப்பிலே பேசிக் கொள்ளலாம் என்று
சொல்கிறீர்கள். கவன ஈர்ப்பிலே கேட்டால், இதற்குச் சம்பந்
தம் இல்லாதது என்று சொல்கிறீர்கள். உங்களைப் புரிந்து
கொள்ள முடியவில்லை. ஆகவே, சட்டமன்றம் நடந்து கொண்
டிருக்கும்போது, அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டவர்களை மீண்
டும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேட்
பது இந்தக் கவன ஈர்ப்பிலே வராது.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆ ப் ஆர்டரிலே அவர்
கள் கேட்க எண்ணியதை, கவன ஈர்ப்பாக எழுதிக் கொடுக்கு
மாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்
கள் கோரிக்கையை அரசு ஏற்க வேண்டும். கல்வி அமைச்சர்
இந்த நேரத்தில் இங்கு இல்லாதது வருந்தத்தக்கது என்று கூறிக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம்.எட்., எம்.பில்
மற்றும் பி.எச்.டி., ஆகிய கல்வித் தகுதி பெற்ற முதுகலை
பட்டதாரி ஆசிரியர்களுக்கு மட்டும் ஊக்க ஊதியம் வழங்குவது,
நான்காவது ஊதியக் குழுவின் ஆய்வில் இருந்ததினால், அவர்
களுக்கு இப்போது வழங்கவில்லை. ஊதியக்குழுவின் பரிந்துரையை
ஆய்வு செய்து, அவர்களுக்கு அதற்கான தக்க ஆணைகள்
வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்
டிருக்கின்றேன். அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு
வழங்கப்படும் பெருவாரியான சலுகைகளைத் தனியார் பள்ளி
களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது அரசு அளித்து
வருகிறது. ஆகவே, இந்த அரசு எந்தவிதமான பார
பட்சத்தோடும் நடக்கவில்லை. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்
களைப்பற்றிக் கேட்டார்கள். அதுபற்றி தனி கவன ஈர்ப்பு
கொண்டு வந்தால் பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி மன்ற ஆசிரியர்
களைப் பற்றிக் கேட்டார்கள். இதே மன்றத்தில் ஊராட்சி மன்
றத்தினுடைய மானியக் கோரிக்கையின் மீது இதே பிரச்சினை
குறித்து நான் தெரிவித்திருக்கிறேன். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்
களைப் பொறுத்தவரையில் அரசாங்க ஆசிரியர்களாக மாற்றம்
கிடையாது ; ஆனால், ஊராட்சி ஒன்றியங்களிலே டெபுடேஷன்
சர்வீசாக எடுப்பதாக இருக்கிறோம் என்று தெரிவித்தேன். அட்
பொழுது அங்கத்தினரவர்கள் இல்லையோ என்னவோ தெரிய
வில்லை. அது வருந்தத்தக்கது.



திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவ
ரவர்களே, அரசு பள்ளி ஆசிரியர்களுக்குத் தருகின்ற சலுகை
களைத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டு
மென்ற கோரிக்கையை வைத்துக்கொண்டு, இன்றைக்கு முதுநிலை
பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமல்ல, தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி
ஆசிரியர்கள் கூட்டணி, கன்னியாகுமரி மாவட்டத்தில் செயலாற்
றும் பிரைவேட் ஸ்கூல் டீச்சர்ஸ் அசோசியேஷன் போன்ற பல்
வேறு ஆசிரியர்கள் சங்கங்கள் உண்ணாவிரதப் போராட்டம்,
மறியல் போராட்டம் என்று நடத்திக்கொண்டிருப்பதாகத் தக
வல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இப்படிப்பட்ட ஆசிரி
யர்களுடைய கோரிக்கைகளை அரசு பரிசீலித்து, அவர்களைப்
போராட்டத்திற்குத் தள்ளிவிடுவதற்குப்பதிலாக, அவர்களுடைய
பிரதிநிதிகளை அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவை எடுத்துக்
கொள்வதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்று எனக்குப்
புரியவில்லை. இப்படிப் போராட்டங்கள் நடந்துகொண்டிருப்ப
தால் அரசு உடனடியாக அவர்களுடைய பிரதிநிதிகளைக் கூட்டி
வைத்துப் பேசி, இந்தப் பிரச்சினைகளுக்கு நல்ல முடிவை ஏற்
படுத்தி போராட்டங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க
முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்த
வரையில், போராட்டம் நடத்துவது என்பதிலேயே கவனத்தைச்
செலுத்துவதில்லை. அவர்களை அழைத்துப் பேசி, நல்ல
முடிவைக் காண்பதிலேதான் இந்த அரசு மிகுந்த நம்பிக்கை
கொண்டிருக்கிறது. அந்த வழியிலேதான் இதுவரையிலேயும் இந்த
அரசு அந்தந்தக் கோரிக்கைகளை வைக்கின்றபொழுது ஆசிரியர்
களை அழைத்துப் பேசி அவர்களுக்கு நல்ல முடிவுகளை வழங்கிக்
கொண்டிருக்கிறது. அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்
களுக்கு வழங்கப்படும் பெருவாரியான சலுகைகளைத் தனியார்
பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது அரசு
அளித்து வருகிறது என்று நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.
ஆகவே, தற்போது நடக்கின்ற ஒவ்வொரு பிரச்சினை
யையும் அவ்வப்பொழுது தீர்த்து வருகிறது என்பதில் ஐயப்பாடு
இல்லை.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில்
சொல்கின்றபொழுது, ஆசிரியர்களைப் போராட்டத்திற்குத்
தள்ள வேண்டுமென்பது அரசினுடைய நோக்கம் அல்ல என்று
தெரிவித்தார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி அவர்களுடைய கோரிக்கை
களைப் பரிசீலித்து, உடனடியாக அவர்களை அழைத்து
பேசுவதற்கான ஒரு தேதியைக் குறிப்பிடுவதற்கு அரசு முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*[1985 ஜுலை 11*

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உடனடியாகத் தேதி குறிப்பிட வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினரவர்கள் கேட்கிறார்கள். பேசி முடித்ததற்குப் பிறகு, நாம் பல்வேறு சங்கங்களைச் சார்ந்தவர்களையும் கலந்து பேச வேண்டியதாக இருக்கிறது. எனவே, திடீரென்று தேதியை அறிவிக்க முடியாது. அழைத்துப் பேசுவதைப் பொறுத்தவரையில் எந்தவிதமான தயக்கமும் இந்த அரசுக்கு இதுவரையில் இல்லை. அப்படியெல்லாம் அழைத்துப் பேசியதால்தான் இன்றைக்கு சுமுகமான நிலைமை ஆசிரியர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

*'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுநிலை அளித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. வரவு-செலவுத் திட்டம், 1985—86, வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் 10—7—1985 ஆம் நாளன்று மொழியப் பெற்ற மானியக் கோரிக்கை எண். 31 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய தீர்மானத்தின் மீதும் இதற்கு மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்களின் மீதும் விவாதமும் பதிலுரையும்.



இந்த விவாதத்தில் பங்கு கொள்வதற்கு இன்னும் 11 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். விவாதமும், அமைச்சரவர்களுடைய பதிலுரையும் சரியாக 12 மணிக்கு முடிக்கப்பெற வேண்டும். ஆகவே, உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. வி. கே. இராசு :

'' அண்ணா, அழகு தமிழ் மன்னா,
உன்னை அறியாத நாடில்லையே,
உன்னை மறுப்பாரில்லை,
கண்டு வெறுப்பா ரில்லை,
என்னைக் கண்டாலும் பொறுப்பாரில்லை,
(அண்ணா )

பெருமைக்கும் மிகுந்த மரியாதைக்கும் உரிய பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை மானியத்தின் மீது பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு, எனது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றி கலந்த வணக்கத்தை முதலிலே தெரிவித்துக்கொண்டு........

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழைய நிலையிலேயே பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆதி திராவிடர் நலத் துறை என்று பேச ஆரம்பியுங்கள்.

திரு. வி. கே. இராசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் இன்றுதான் என்னைப் பார்க்கிறார். ஆகவே, அவரிடம் நன்றாக அறிமுகம் ஆகவேண்டுமென்ற அவசியத்திலே, அதை மாற்றி சொன்னதால், அவர் முழுவதுமாக என்னைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு கிடைத்து விட்டது.

இந்த ஆதி திராவிட நலத்துறை பற்றி தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் பேசாத பேச்சே இல்லையென்பதைச் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் மற்ற உறுப்பினர்களோ, இந்த அவையோ இல்லை. எத்தனையோ எழுத்துக்களும் எத்தனையோ பேச்சுக்களும் எழுதி, பேசி, அலுத்துப்போன பிறகு, பாம்பின் கால் பாம்பு அறியும் என்பது போல், இந்த இனத்தில் பிறந்த காரணத்தால், எனக்குத் தெரிந்த சில வரிகளை, சில வாக்கியங்களை, அன்றாடம் ஜனங்களைச் சந்திக்கிறேன் என்ற முறையில் இந்த அவையிலே இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல முன் வருகின்றேன்.

நான் அன்றாடம் ஊர்களிலே சுற்றி வருகின்றபொழுது, குடிசையில்லாமல் தவிக்கிற ஜனங்கள் எத்தனையோ பேர்களைப் பார்க்கிறேன். குடிசை இருந்தாலும் சுடுகாட்டிற்கு

வழியில்லாமல் தவிக்கிற ஜனங்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நான் எத்தனையோ கிராமங்களைச் சுற்றி வருகின்ற பொழுது, கிராமங்களிலே பெரிய, பெரிய மகஜர் கொடுத்து, குடிசை இருப்பது இருக்கட்டும், சுடுகாட்டுக்குக் கூட பாதை இல்லை ; சுதந்திரம் வந்து 38 ஆண்டுகள் ஆகியும் இன்னும் சுடுகாட்டுக்குக் கூட பாதை இல்லை என்று சொல்கிறார்கள். நீயே கூட ஒரு தடவைக்கு இரண்டு தடவை சட்டமன்றத்திற்குப் போய்விட்டாய், அதைப்பற்றி அணுக வேண்டியவர்களை அணுகி, கேட்க மாட்டாயா என்று பல ஜனங்கள் கேட்கிறார்கள். நான் எத்தனையோ தடவை அவற்றைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே கொடுத்திருக்கிறேன். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை.

அமைச்சர் சின்ன வயதுடையவர், நன்கு படித்தவர் ; கிராமங்களுக்குச் சென்று பார்த்து, முதலிலே வீடில்லை என்று சொன்னாலும், கடைசியாகப் போகிற வீட்டுக்கு, அவர் வழி அமைத்துக் கொடுப்பார் என்ற எண்ணத்திலே, இந்தச் சபையிலே அந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

இப்பொழுது அரசின் சார்பில் ரூ. 6,000-க்கு ஸ்கீம்போட்டு வீடு கட்டித் தருகிறார்கள். அந்த வீடு 17½ அடி நீளம், 11½ அடி அகலம் இருக்கிறது. குறுக்கே சுவர் இருக்கிறது. இரண்டு பேர், மூன்று பேர், அண்ணன் தம்பிகள் இருந்தால், அந்த வீடு போதாத நிலைமை இருக்கிறது. அதே நேரத்திலே மண் சுவர் வைத்து, மேலே பனம் கழி வைத்து, சீமை ஓடு போட வேண்டிய நிலைமை இருக்கிறது. இரண்டு வருஷம் கழிந்தால் அந்த வீடு, வீடாக இருக்காது.

கலைஞர் ஆட்சிக்காலத்தில், 40,000 வீடுகளை இரண்டு ஆண்டு காலத்திலே கட்டிக் கொடுத்தார்கள். எங்கள் ஊரில் 65 [illegible] கட்டினார்கள். சிமென்டில் கட்டினார்கள், விலையும் ரூ. [illegible]00 ஆக இருந்தது. சிமென்டில் கட்டி, நல்ல கழிகளைப் போட்டு, சீமை ஓடைப் போட்டு, வீடுகள் கட்டி, சொட்டை, சொத்தை இல்லாமல் இருக்கிறது. இப்பொழுது மண்ணிலே கட்டிய வீடுகள். ஆகவே, ரூ. 10,000 ஆக உயர்த்தித் தர வேண்டும். வீட்டையும் 20 அடி நீளமும் 16 அடி அகலம் உள்ளதாகக் கட்டிக் கொடுத்தால் அந்தச் சமுதாயம் நன்றியோடு இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றக் கூட்டம் தொடங்கி இன்றோடு 53நாள் ஆகிறது. முதன் முதலாக இன்றைக்குத்தான் துணைத் தலைவர் அவர்கள் எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ஏகப்பட்ட பிரச்னைகள் இருக்கின்றன. ஒரு சில பிரச்னைகளை மட்டும் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அரக்கோணம் இரயில்வே நிலையத்திற்குப் பக்கத்தில், கிழக்குப் பக்கத்தில், மெட்ராஸ்-அரக்கோணம் சாலை வருகிற இடத்தில் ஒரு குறுகிய பாதை இருக்கிறது. அது ஒரு சந்து வழிப்பாதை. இந்த மாமன்றத்தில் இருக்கிற அமைச்சர்கள்



எல்லாம் அதைப்பற்றி நன்றாக அறிந்திருக்கிறார்கள். அது இருவழிப்பாதை. 250 அடி நீளம், 11 அடி அகலம், 11 அடி உயரம். இந்த அளவிலானது அந்தப் பாதை. பஸ், லாரி, கார் எல்லாம் அந்த வழியாகத்தான் காஞ்சீபுரத்திற்கும், திருப்பதிக்கும் போகின்றன. அந்தப் பாதை மிகவும் குறுகிய பாதையாக இருப்பதால் லாரி, பஸ் எல்லாம் சரியாகப் போக முடியாமல் கஷ்டமாக இருக்கிறது. அடிக்கடி ஆக்சிடண்டும் நடக்கிறது. விபத்துக்களினால் சில நேரங்களில் மரணங்களும் ஏற்படுகின்றன. நானே ஏறத்தாழ 10 அமைச்சர்களுக்கு மேல் அந்தப் பாதையைக் காட்டியிருக்கிறேன். அவர்கள் அந்தப் பகுதிக்கு வரும்போதெல்லாம் சொல்லியிருக்கிறேன். சுமார் இரண்டரை ஆண்டுகளாக அந்தப் பாதையைக் காட்டிக்கொண்டிருக்கிறேன். அங்கே இருக்கிற பிரிட்ஜிலிருந்து இறங்கி பார்த்திருக்கிறார்கள். எத்தனையோ தடவை அமைச்சர்களிடம் இது பற்றிச் சொல்லியிருக்கிறேன், இந்த மன்றத்திலும் குறிப்பிட்டிருக்கிறேன். இன்றுவரையில் எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை.

அந்தப் பாதையை சீர்செய்ய ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஆகும். மத்திய அரசு எஸ்டிமேட் போட்டு வைத்திருக்கிறது. அதிலே பாதியை மாநில சர்க்கார் கொடுத்தால் அதை நல்ல பாலமாக அமைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைக் குறிப்பாக எடுத்துக்காட்டி, அந்தப் பாலத்தை நல்லமுறையில் கட்டி, பாதையைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நிறைய ஏரி. குளம், வாய்க்கால்கள் தூர் வாராமல், சீர் செய்யப்படாமல் இருக்கின்றன. 10 ஏரிகளுக்கு மேல் அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்திருக்கிறேன், சீர்செய்ய வேண்டுமென்று. அதைக் கவனிக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் போடப்பட்டிருக்கிற தண்ணீர் குழாய்கள் சரியாக அமையவில்லை, சீராக இல்லை. இருக்கிற குழாய்கள் எல்லாம் ஏதோ ஒரு மூலையிலே வீணாக நின்று கொண்டிருக்கின்றன. தண்ணீர் கிடைக்காமல் மற்ற வசதிகளும் குறைந்திருக்கின்றன. அதையும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் இங்கே இருந்தாலும் கூட நடக்கிற வேலை நடந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கரண்டு இப்போது கிராமங்களுக்கு சரியாக ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வருகிறது. ஆனால் அது இரவு 10 மணிக்குமேல் வருகிறது. அதனால் தண்ணீர் எடுக்கிற தாய்மார்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நாங்கள் எல்லாம் வயல்வெளிகளில் வேலை செய்பவர்கள். ஏழைகள். இரவு நேரத்தில் சென்று தண்ணீர் எடுப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் இரவு நேரத்தில் கரண்டு விடுவதற்குப் பதிலாக பகல் நேரத்தில் கரண்டு விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரோடு பராமரிப்பைப் பொறுத்த வரையில், என்னுடைய கிராமம் ஒரு சிறிய குக்கிராமம். அங்கே செல்வதற்கு ஒரு சிறிய குறுகிய ரோடுதான் இருக்கிறது. அந்த ஊர் மக்களே என்னைக் கேட்கிறார்கள். நீங்கள் ஒரு எம்.எல்.ஏ-வாக இருக்கிறீர்கள். இரண்டு தடவை எம்.எல்.ஏ.வாக இருக்கிறீர்கள். உங்கள் வீட்டுக்குப் போகிற ரோடே சரியாக இல்லையே, நீங்கள் என்ன செய்கிறீர்கள், அதை சீர் செய்ய ஏற்பாடு செய்யக்கூடாதா என்று கேட்கிறார்கள். குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர் இருக்கிற ஊருக்கு ரோடு அமைத்து, பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சில சிறிய அணைகளைக் கட்ட வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக தக்கோலம்-திருவாலங்காடு போகிற பாதையில் கல்லாறு இருக்கிறது. அங்கே ஒரு அணை கட்டலாம். அந்தப் பாதையில் ஒரு பாலம் கட்டினால் போக்குவரத்திற்கும் வசதியாக இருக்கும். அனந்தபுரம்-தக்கோலம் பாதை ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு சின்ன ஆறு ஓடுகிறது. உரியூர்-கனகாபுரம் பாதையில் ஒரு சிறிய ஆறு இருக்கிறது. அங்கெல்லாம் பாலங்கள் கட்ட வேண்டும். அதைப்போன்று வளர்புரம்-கிருஷ்ணாபுரம் வழியாக ஒரு சின்ன ஆறு செல்கிறது. அங்கும் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று பலமுறை அமைச்சர்களிடம் சொல்லியிருக்கிறேன். இந்தப் பணிகளை எல்லாம் விரைவிலே செய்ய வேண்டும், இருக்கிற பாலங்களை செப்பனிட்டு சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரிசன நலத்துறை மானியத்தில், ஆதிதிராவிட நலத்துறை மானியத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் அளிக்கிறோம், சலுகைகள் அளிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லி, சொல்லி, மறந்துபோகிறமாதிரி பலசந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களை எல்லாம் நாங்கள் தினம் தினம் நடந்துபோய் சந்திக்கிறோம். அவர்கள் படக்கூடிய கஷ்டங்கள் எங்களுக்கு நன்றாகத் தெரிகின்றன. ஒரு சில ஜனங்கள் கட்ட கந்தை இல்லாமல், குடிக்க கஞ்சிஇல்லாமல், இருக்க இடம் இல்லாமல் கஷ்டப்படுவதைப் பார்க்கிறோம். ஒரே கந்தையை உடுத்துக்கொண்டிருக்கிற ஒரு தாய் ஒரு பக்கத்தை உடுத்திக்கொண்டு ஒரு பக்கத்தைத் துவைத்து உலர்த்திவிட்டு, பின்னால் அந்தப் பக்கத்தை உடுத்திக் கொண்டு, மறு பக்கத்தைத் துவைக்கும் சூழ்நிலைகளை நாங்கள் பார்த்திருக்கிறோம்.

(முற்பகல் 10–30)

அதேமாதிரி வீடுகளில் இருக்கின்ற ஓலையையும் கூட மாற்றி புதுப்பிக்கின்ற நிலைமையில் அவர்கள் இல்லை. அவற்றைப்பாதுகாக்கவேண்டும் என்றால் அதற்காக மிகவும் சிரமப்படுகின்ற அள



வுக்குத்தான் அந்த ஜனங்கள் இருக்கிறார்கள். மேலும் அப்படிப்பட்ட ஜனங்கள் ஊருக்குக் கடைக்கோடியில் ஏதோ கால் காணி, அரைக் காணி நிலத்தை வைத்துக்கொண்டிருப்பார்கள். அதன் காரணத்தால் அவர்களுக்கு தண்ணீர் கூட வந்து சேர்வதில்லை. எனவே ஏரிகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். தண்ணீர் வருகின்ற வழியில் வசதியுள்ளவர்களுக்கு நிலம் இருக்கும். கடைக்கோடியில் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கின்ற இந்த மிகச் சிறு விவசாயிகள் தாங்கள் கொண்டுபோகின்ற அதே அளவுக்கான விதையைத்தான் திருப்பி எடுத்துக்கொண்டு வருகின்ற அளவுக்கு அவர்களுக்கு சக்தி இருக்கின்றது. எனவே ஏரி ஒழுங்காக இருக்கவேண்டும். திரு. பட்டாபிராமன், திரு. பாலாஜி போன்றவர்கள் ஓட்டுக் கேட்கச் செல்கின்ற நேரத்தில் பரச்சேரி ஜனங்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அதனால் வெற்றிவாய்ப்பு கிடைக்கும் என்று எண்ணுகின்ற வகையில் அதாவது அந்த காலனிகளில் அதிகமான ஓட்டு கிடைக்கும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று எண்ணுகின்ற அளவுக்கு நிலைமை இருக்கின்றது. ஆனால் ஓட்டு பெற்றதற்குப் பிறகாவது தக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்று பார்த்தால், எந்தவிதமான காரியங்களும் நடைபெறாமல் அந்த ஜனங்கள் தனியாய்த் தவிக்கின்ற நிலைமைதான் இருப்பதைப் பார்க்கிறோம்.

காலனி ஜனங்களை யார் பக்கம் திசை திருப்புகிறார்களோ, அவர்கள்தான் ஜெயித்து வந்து இங்கே ஆட்சியினை அமைக்க முடியும். தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் வாக்களித்தால்தான் அரசை அமைக்க முடியும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. அந்த மக்களின் கவனம் உங்கள் பக்கத்திலே திசை திருப்பி, எப்படியாவது நல்லபல காரியங்கள் நடைபெறுமா என்று நம்பிக்கையோடு அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் என்று சொன்னால் நேரிலே பார்க்கவேண்டும் என்றாலும், பார்க்க முடியாவிட்டாலும் அவர் நல்லதைச் செய்வார், நல்லதைச் செய்வார் என்று சொல்லப்படுவதன் காரணத்தால் அந்த நம்பிக்கையிலே மக்கள் திசை திரும்பியிருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவுபேரும் உங்கள் பக்கம் திரும்பிவிட்டார்கள் என்றோ, எங்கள் பக்கம் அவர்களே இல்லை என்றோ நான் சொல்ல வரவில்லை. ஏதோ ஒரு பழக்க வழக்கங்களை வைத்து திசை திருப்பிக்கொள்கின்ற ஆற்றல் இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் எங்கள் பக்கம் இல்லை என்றோ, அவர்களுக்குப் படிக்கத் தெரியவில்லை என்றோ சொல்ல நான் வரவில்லே. அவர்கள் இப்போது உங்களை நம்பக்கூடிய ஒரு அவலமான ஒரு லேசான நிலைமைக்குச் சொந்தக்காரர்களாக இருப்பதன் காரணத்தால் அவர்களைத் திசை திருப்பியது மாதிரி அவர்கள் பக்கம் திரும்பி அந்த ஜனங்களுக்கான காரியங்களை ஒழுங்காகச் செய்யவேண்டும்.

எங்கோ ஒரு குக்கிராமத்திலே தீப்பிடித்துக்கொண்டது என்றால் ஃபையர் சர்வீஸ் வந்து அதனை அணைக்கக்கூடிய வழிவகை இல்லாமல் இருக்கின்றது. அவ்வாறு வந்து அணைத்ததற்குப் பிறகும் அங்கே போய் அந்த அமைச்சர்கள் பார்த்து அந்த

மக்களுக்கு வேண்டிய காரியங்கள் செய்யப்படாத நிலைமையில் வேதனையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட பாக்கியம்தான் பல கிராமங்களுக்கு கிடைத்திருக்கின்றது. அதை நிவர்த்தி செய்ய இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவுக்குப் பேச வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களின் நலனிலே அக்கறை கொண்டுள்ள அரசு புரட்சித் தலைவரின் அரசு. அந்த அரசு செய்துள்ள நன்மைகளைப் பற்றி ஆதிதிராவிட மக்களின் சார்பில் சொல்லி என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

தமிழகத்தில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏற்பட்டதற்குப் பின்புதான் இந்த மாநிலத்திலுள்ள ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளி ஏற்பட்டுள்ளது. ஆதிதிராவிட மக்களை மேட்டுக் குடியைச் சேர்ந்த மக்கள், கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் கொத்தடிமைகளாக, மிருகங்களை விடக் கேவலமாக அவர்களுடைய உரிமைகளைப் பறித்து அடித்துத் துன்புறுத்தி வந்தார்கள். இவ்வாறு ஆதிதிராவிட மக்களை துன்புறுத்துவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க சட்டங்கள் இருந்தபோதிலும், அவை இன்றுதான் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆதிதிராவிட மக்களுக்குத் தக்க பாதுகாப்பும் அரணும் இப்போதுதான் கிடைத்துக் கொண்டு வருகின்றன. இதற்காக நான் ஆதிதிராவிட மக்களின் சார்பில் எனது நன்றியை டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக குடியிருப்புக்கள் கட்டவும், அவர்களுக்காகத் தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்து வீட்டு மனைகள் வழங்கவும், ஆண்டுக்கு 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வந்ததை ஆண்டுக்கு 3 கோடியாக உயர்த்தியதோடு ஆதிதிராவிட மக்களின் நல வாரியத்தை அமைத்து, மூன்று ஆண்டுகளில் இந்தச் சமுதாயமக்களில் சொந்த வீடுகள் இல்லாதவர்களே இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு ஒரு நிலையை உருவாக்கத் திட்டமிட்டு பணியாற்றுவதைக்கண்டு பாராட்டாதவர்களே இல்லை. அப்படி பாராட்டாதவர்களே இல்லை என்று சொல்லும் அளவிற்கு புரட்சித் தலைவர் அவர்களின் புகழ் இன்று போற்றப்பட்டு வருகிறது. இத்தகைய நிலைமைகள் இருந்தாலும், நான் ஆதிதிராவிட மக்களின் சார்பில் சில கோரிக்கைகளை, சில கருத்துக்களை வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.



தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ராணுவ நடவடிக்கையைப் போல ஆதி திராவிட மக்களின் நலனுக்காக பாடுபட்டு வந்தாலும் அந்தத் துறையில் உள்ள அரசு அதிகாரிகள், தங்கள் பணிகளை மிக மெத்தனமான போக்கில் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லாமல் இருக்க என்னால் முடியவில்லை.

அரசு ஆதி திராவிட மக்களுக்காக, வீட்டு மனைகளை கொடுக்க, தனியார்களிடமிருந்து நிலங்களை ஆர்ஜிதம் செய்து எடுக்க உத்திரவிட்டிருக்கும் போது, சில அதிகாரிகள் நிலச் சுவான்தார்களிடம் பணம் பெற்றுக்கொண்டு, அவர்களின் நிலத்தை அரசு எடுக்காமல் இருக்க, அதிகாரிகளே அவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளைச் சொல்லித்தந்து, நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்குகளைப் போடச் செய்கின்ற ஒரு ஆபத்தான நிலை உள்ளது. ஆகவே நிலச் சுவான்தார்கள் நீதிமன்றம் செல்லாதவகையில், சட்டத்திருத்தத்தைக்கொண்டு வர வேண்டும் என்று வேண்டுகிறேன்.

மேலும் ஆதி திராவிட மக்கள் பட்டாக்களைப் பெற விண்ணப்பிக்கும்போது, கிராம நிர்வாக அதிகாரிகள் அப்பட்டாக்களைக்கொடுக்க பணம் கேட்கின்றனர். ஏழைகள் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருப்பதால் வேண்டுமென்றே பட்டாக்களைக் கொடுக்க காலதாமதம் செய்து வருகின்ற நிலை உள்ளது. இப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, ஒவ்வொரு கிராம நிர்வாக அதிகாரியும் மாதாமாதம் இவ்வளவு பட்டாக்களை கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்கிற வகையில் ஒரு குறியீட்டை நிர்ணயம் செய்து உத்தரவிட வேண்டும். அப்போதுதான் பட்டாக்கள் வழங்குகின்ற முறையில் ஒரு சிறப்பான முன்னேற்றத்தைக் காண முடியும். அந்த வகையில் அவர்களுக்கு உத்திரவு கொடுக்கும்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆதி திராவிடர்களுக்கு பட்டாக்களை வழங்கும் போது, இருக்கின்ற நிலங்களை—அது குறுகிய பகுதியாக இருந்தாலும்கூட— அதை சமமாகப் பகிர்ந்துக் கொடுக்கும் ஒரு முறை இருந்து வருகிறது. ஆனால், அதில் வீடு கட்ட வேண்டும் என்று அவர்கள் விண்ணப்பிக்கிறபோது குறைந்தபட்சம் 1–1/2 சென்ட் நிலமிருந்தால்தான் வீடு கட்ட முடியும் என்று, அனுமதி கொடுக்கப்படுகிறது. இதனால் ஒரு சென்ட், 3/4 சென்ட் என்று பட்டா வைத்திருப்பவர்கள் வீடு கட்டிக் கொள்ள இயலாத நிலைமை ஏற்படுகிறது. எனவே பட்டாக்களை வழங்கும்போது, வீடுகட்டுகின்ற முறைப்படி எவ்வளவு நிலம் தேவையோ அந்த அளவுக்கு அவர்களுக்கு பட்டாக்களை வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிட குடியிருப்புகள் சம்பந்தமாக, பட்டா பெற்றவர்கள் சிலர் சொந்தமாக வீடு கட்டிக் கொள்கிறார்கள். வசதி இல்லாதவர்கள் அரசின் உதவியை நாடி விண்ணப்பிக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்ட அரசின் மூலம் அனுமதி கொடுக்கும்போது, அந்தப்பகுதியில் ஒரு சிலர் கட்டியிருக்கின்ற பழையவீடுகளை இடித்தால்தான் இந்தக் குடியிருப்புகளைக் கட்ட வசதி ஏற்படும் என்ற நிலைமை வருகிறபோது, யாராவது ஒரு நபர் தன்னுடைய வீட்டை இடிக்க மறுத்தால்கூட பல ஆதி திராவிட குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்ட முடியாத இடையூறுகள் ஏற்படுகின்றன. ஆகவே அப்படிப்பட்ட நேரங்களில் மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கும் அந்தத் தனி நபர்களின் வீடுகளை இடித்து அப்புறப்படுத்தி புதிய குடியிருப்புகளை அமைப்பதற்கான முறையிலே அரசு உத்திரவைப் போட்டு, அதனால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிட மக்களுக்குக் கறவை மாடுகள் வாங்க ஆடுகள் வளர்க்க, தொழில் செய்ய என்று அரசு ஏராளமான பணத்தை மானியமாகக் கொடுத்து வர ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் சில வசதி படைத்த நிலச்சுவான்தார்கள், மானியத்தோடு வரும் இத்தகைய அரசு உதவிகளைப் பெற்றுக் கொண்டு, அந்த ஏழை எளிய மக்களை ஏமாற்றி அவர்களின் கையொப்பத்தைப் பெற்றுக் கொண்டு, அவர்களுக்குக் குறைந்த அளவில் ஒரு தொகையைக் கொடுத்து விட்டு, அரசு அளிக்கும் மானிய உதவியோடு, கால்நடைச் செல்வங்களையும் அவர்கள் பெற்று அந்த வசதிகளை அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கிராம நல அலுவலர்களும், அதிகாரிகளும் செயல்படுவதால், அரசு நலிந்த பிரிவினர்களுக்கு என்று கொண்டு வரும் நல்ல திட்டங்களின் பயன்களைப் பாழ்படுத்தி வருகிறார்கள்.

இப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் நடைபெறாமல் இருக்க கடுமையாக கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்வதோடு, அவற்றைச் செய்யும் நபர்கள் மீதும், அரசு அலுவலர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சில ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு, மேட்டுக்குடியினர் வாழும் பகுதிகளிலிருந்து அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தொட்டிகளிலிருந்து குடிதண்ணீர்க் குழாய்கள் போட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களில் சில பெரிய மனிதர்கள், அரிசன குடியிருப்புகளுக்குச் செல்லும் குழாய்களை அடைத்து விடுகிறார்கள். அதனால் அரிசன மக்கள் தண்ணீர் தட்டுப்பாட்டிற்குப் பெரிதும் ஆளாக்கப்படுகிறார்கள். அதைத் தவிர்க்க, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அந்த ஆதி திராவிட குடியிருப்புகளுக்குத் தனியாகவே குடிதண்ணீர்த் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றித் தர வேண்டும் என்று வேண்டுகிறேன்.





(முற்பகல் 10-40)

சமீபத்திலே வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் அரிசனங்களுக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீட்டைச் செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சட்டமாகக் கொண்டு வந்தார்கள். அது தற்போது உச்ச நீதி மன்றத்தின் தடையாணை காரணமாக மறு பரிசீலனை செய்யப்பட்டது. அப்படி இட ஒதுக்கீட்டின் மூலமாகத் தேர்தலை நடத்த முடியாத பட்சத்தில் நியமனம் மூலமாக 18 சதவீதம் இடங்களை ஒதுக்கி அதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, ஆதிதிராவிட மக்களின் கனவை நனவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத்துறை மூலமாக மாணவிகள் தங்கிப் படிக்க விடுதி கட்டும்போது என்னுடைய அவிநாசித் தொகுதியில் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த பலர் செருப்பு தைக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் சாலை ஓரங்களிலும், நடைபாதைகளிலும் அமர்ந்து தரமான செருப்புகளைத் தயாரித்து வருகிறார்கள். ஆனால் சமுதாயத்தில் இந்தத் தொழில் மதிக்கப்படுவதில்லை. ஆகவே இப்படிப்பட்ட தொழிலில் ஈடுபடுகிறவர்களை ஒருங்கிணைத்து ஆதி திராவிடர் நலத்துறை மூலமாக செருப்பு தைக்கும் மையங்களை அமைத்து, அங்கே உற்பத்தி செய்யப்படுகிற காலணிகளை அரசே கொள்முதல் செய்து விநியோகிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

* திரு. எம். **செல்லமுத்து** : துணைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் ஆதிதிராவிடர் நலன் குறித்த மானியக் கோரிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன் குறித்த கொள்கைக் குறிப்பில், 'இவ்வரசு ஆதி திராவிடர்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்தும் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அவர்களுடைய நலிவுற்ற பொருளாதார நிலையின் காரணமாக, சமூக நிலையில் தாழ்வுற்று இருக்கிறார்கள். அதனால் அவர்கள் சமூக நிலையில் கொடும் செயல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுடைய மேம்பாட்டுக்கு திட்டமிடப்பட்ட ஒரு சீரிய பொருளாதார அடிப்படையில் ஒரு நிரந்தர தீர்வு காண இந்த அரசு விழைகிறது' என்று சொல்லி இருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். இருந்தாலும் இன்றைக்கு அரசு கூறியிருக்கிற திட்டங்களை, தமிழக கிராமப்புறங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இருக்கிற நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள் யானைப் பசிக்கு சோளப் பொறியாகத் தான் இருக்கின்றன.

[திரு. எம். செல்லமுத்து] [1985 ஜூலை 11

சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆனாலும், பல்வேறு திட்டங்கள் இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகத் தீட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னாலும், இன்றைக்கும் அவர்கள் கிராமப்புறங்களில் மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு சொந்தமாக குடிமனை கிடையாது; வீடு கிடையாது; குடிக்கத் தண்ணீர் வசதி கிடையாது; சாலைவசதி கிடையாது; மயான வசதி கிடையாது. இப்படிப் பல சமூகக் கொடுமைகள் தலைவிரித்து ஆடக்கூடிய சூழ்நிலையில், அவர்கள் ஜாதிக் கொடுமையால், பல அடக்கு முறைகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மேம்பாட்டுக்காக அரசு அறிவித்திருக்கிற இந்தத் தொகை என்பது யானைப் பசிக்கு சோளப் பொறி போன்றதாகும். ஆகவே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக இன்னும் அதிகமான நிதியை ஒதுக்கி அவர்களுடைய மேம்பாட்டுக்கான திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசைப் பொறுத்தவரையில் திட்டங்களைத் தீட்டி விட்டால் மட்டும் போதாது. அந்தத் திட்டங்கள் சரியான முறையில் நிறைவேற்றப்படுகிறதா என்பதையும் அரசு கண்காணிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்றை கொள்கைக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். இந்தச் சமுதாயத்தினரின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படுகிற நிதியில் கல்விக்காக 50 சதவீதம் செலவிடப்படுகிறது என்று சொல்கிறார்கள். இது வரவேற்கத்தக்க அம்சம்தான். இருந்தாலும், அரசு நடத்தும் பள்ளிகளையும், மாணவர் இல்லங்களையும் போய்ப் பார்த்தால் அங்கே நிச்சயமாக மிகப் பெரிய சீர்கேடுகள் இருப்பதை அறியலாம். பள்ளிகள் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கின்றன. விடுதிகளில் போதுமான அளவிற்கு மாணவர்களுக்கு வசதிகள் செய்யப்படவில்லை. அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் இன்றைக்கு விடுதிகள் இருக்கின்றன. அவர்களுக்கு உள்ளபடியே அந்தக் கல்வி வசதியை உருவாக்குகிற முறையில் நல்ல சூழ்நிலை இல்லை.

அதேபோல ஆதி திராவிடர் பெண் மாணவிகள் தங்கிப் படிக்கிற அளவிற்குப் பெரிய அளவில் விடுதிகளை அமைத்துத் தரவேண்டும். இன்றைக்கு அந்த விடுதிகள் மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் இருக்கின்றன. எனவே அந்த விடுதிகளை இன்னும் அதிகப்படுத்தி, அவைகள் சிறப்பாக நடப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூலை 11] [திரு. எம். செல்லமுத்து]

அடுத்து மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், ஹாஸ்டலுக்கு உதவித் தொகை போன்றவற்றை வழங்குகிறபோது 90 சதவீதம், 75 சதவீதம் வருகை தரவேண்டுமென்று இன்றைக்கு இருக்கிறது. ஒரு மாணவன் முதல் ஆண்டிலே பாஸ் செய்து விட்டால், அடுத்த ஆண்டிலே வருகையை எதிர்பார்ப்பது சரியாக இல்லை. அவர்கள் பாஸ் செய்திருக்கக்கூடிய அந்த பாஸை அடிப்படையாக வைத்து, அவர்களுக்கு உதவித் தொகைகளை எல்லாம் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் இந்த உதவித் தொகை என்பது தற்போது ஏறிவரும் விலைவாசிக்கு ஏற்ப போதுமானதாக இல்லை. தற்போது பொருட்களின் விலைகள் அதிகமான அளவில் உயர்ந்திருக்கும்போது, மாணவர்களுக்கு வழங்கக்கூடிய, அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அந்த உதவித் தொகை என்பது போதுமானதாக இல்லை. எனவே அந்த உதவித் தொகையை அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் மாணவர்கள் விடுதிகளில் தங்க மனுச் செய்தால், பள்ளிக்கூடங்களிலோ, அல்லது கல்லூரிகளிலோ அவர்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். இதிலே பல பேர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. எனவே தங்கும் விடுதிகளின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக திருவாரூரில் உள்ள திரு வி.க. கலைக் கல்லூரியில் 150 மாணவர்கள் நல்லமுறையில் தங்குவதற்கு வேண்டியஇடவசதிகள் தி.மு.க. அரசு காலத்தில் கட்டப்பட்டு இருந்தாலும், இன்றைக்கு அந்தக்கலைக் கல்லூரியில் [illegible]0 பேர்களுக்குத்தான் இடம் தருகிறார்கள். இதனால் நிறைய பேர்கள் படிக்க முடியாதஒரு நிலைமையிருக்கிறது. எனவே அந்த விடுதிகளிலே மாணவர்கள் தங்கும் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் இந்த 18 சதவீதம் அவர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்பது அரசாங்கத்தில் உள்ள எல்லா இலாக்காக்களிலேயும் நிரப்பப்படுகின்றனவா என்பதைப் பார்க்கும்போது இங்கேயே 12 சதவீதம் தான் நிரப்பப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தனியார்கள் தொழில் நடத்தினாலும், மற்ற துறைகளாக இருந்தாலும், அரசுப் பொறுப்பில் உள்ள இலாக்காக்களிலும் 18 சதவீதம் இடம் ஒதுக்கப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அப்படி அவர்களுக்கு என்று ஒதுக்கிய அந்த 18 சதவீதம் இடங்களை நாம் நிரப்பவில்லை என்றால், நிச்சயமாக நாம் அவர்களுக்குத் துரோகம் செய்ததாகத்தான் அது முடியும். எனவே இந்த 18 சதவீத இடங்களில் அவர்களை நிரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் மாநில ஆலோசனைக் குழு, மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் இப்போது இல்லாததால், இங்கே நாம் சட்டசபையிலே பேசுவதோடு நின்றுவிடுகிறது. எடுத்துச் சொல்லுகின்ற பிரச்சனைகள், போடப்படுகின்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மாநில அளவிலேயும், மாவட்ட அளவிலேயும் ஆலோசனைக் குழுக்களை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் தற்போது வீடுகள் கட்டுவதற்குப் பணம் கொடுக்கிறார்கள். இப்போது கட்டப்படுகின்ற வீடுகள் எல்லாம் மிகக் குறுகிய அளவிலே கட்டுப்படுகின்றன. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் அவர்கள் பேசும் போது கூட சொன்னார்கள். இப்போது கட்டப்படுகின்ற வீடுகள் மிகக் குறுகிய அளவிலே கட்டப்படுகிறது. அப்படிப் பட்ட வீடுகள் தரமானதாகவும் இல்லாத காரணத்தால், கட்டி முடித்த 2 மாதம் அல்லது 1 மாதம் அல்லது 6 மாதத்திற்குள்ளாக இடிந்து விழக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே இனி மேல் கட்டுகின்ற அந்த வீடுகளை மிகவும் விஸ்தீரணம் உள்ளதாகவும், தரமானதாகவும் கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த வீடுகள் கட்டுவதற்கு என்று கொடுக்கின்ற 6 ஆயிரம் ரூபாய் போதுமானதாக இல்லை. இன்றைக்கு ஏறி இருக்கின்ற விலைவாசிகளைக் கணக்கில் கொண்டு, அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கித் தந்து, அந்த வீடுகளை நல்ல முறையில் கட்ட அதிகமான தொகையைக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் விவசாயிகளுக்கு நிவாரணங்கள் என்று சொல்லும்போது, தமிழ்நாட்டிலே 7.40 லட்சம் அரிசன விவசாயிகள் இருப்பதாகவும் அவர்களுக்குப் பல்வேறு உதவிகள் எல்லாம் செய்வதாகவும் இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அவைகள் எல்லாம் அரசினுடைய மானியத்தைப் பெறுவதற்காக. அது ஊர் நல அலுவலர்களாக இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளாயிருந்தாலும் சரி, நடவடிக்கை எடுக்கிறார்களே தவிர அந்த மானியத்திலே அவர்களுக்குப் பங்கு கொடுக்கவில்லை என்றால், அவர்களுக்குச் சன்மானம் கொடுக்கவில்லை என்றால் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்கவில்லை, என்றால் இந்த மானியங்களைப் பெற முடியாத அளவிற்கு, அது வங்கியாக இருந்தாலும் சரி, அதிலே இருக்கிற அதிகாரிகளாக இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுக்கிறார்களே தவிர, இந்த மானியங்கள் எல்லாம் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை.



அதைப்போலத்தான் அரசு சிறுதொழில் தொடங்குவதற்காகக் கொடுக்கப்படும் கடன்கள் கூட இந்த முயற்சிகளுக்குத்தான் பயன்படுகிறதே தவிர, அதற்காக ஒதுக்கக்கூடிய பணம் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்று குறைபாடு இருக்கிறது. குறிப்பாக கறவை மாட்டை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களை மேலே கொண்டு வருவதற்காக எடுக்கப்படுகின்றமுயற்சி என்றுசொல்லப்படுகிறது. ஒரு கறவை மாட்டைக் கொடுத்துவிட்டால் அவர்கள் வறுமைக் கோட்டுக்கு மேலே வந்துவிடுவார்கள் என்று நம்புகிறீர்கள். நிச்சயமாக கறவை மாடுகளைக் கொடுப்பதன் மூலம் அல்லது ஆடு வாங்கிக் கொடுப்பதன் மூலம் விவசாயத் தொழிலாளர்களைப் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்ய முடியும் என்று நம்புவது நிச்சயமாக சரியாக இருக்காது. உள்ளபடியே அவர்கள் முன்னேறவேண்டும் என்று விரும்பினால் அவர்களே உழைத்து, அவர்களே உற்பத்தி செய்யக் கூடிய வகையில் அவர்களுக்கு நிலத்தை இனாமாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனவே அந்த வகையில், இதற்கு உண்டான சட்டங்களுக்குத் திருத்தங்கள் கொண்டு வந்து, உழுபவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குகின்ற வகையில் குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு நிலத்தை வழங்க நிலச் சீர் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிமனைப்பட்டா பற்றி இந்தக் கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த 1985–86 ஆம் ஆண்டு 20 ஆயிரம் குடிமனைப் பட்டாக்கள் வழங்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது, 17 ஆயிரத்திற்கும் அதிகமான ரெவின்யூ கிராமங்கள் தற்போது தமிழ்நாட்டில் இருக்கின்றன. இப்போது 20 ஆயிரம் என்று சொன்னால், ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு 2 பட்டாக் கூட வராது. ஆனால் நீங்கள் மேடையில் பேசுகின்றபோது, அமைச்சர்கள் பேசினாலும் சரி அல்லது அதிகாரிகள் பேசினாலும் சரி, இந்த ஆண்டு 20 ஆயிரம் பட்டா வழங்கப்படும் என்று பேசுகின்றபோது, சாதாரண மக்கள் எல்லாம், 20 ஆயிரம் பட்டா தருகிறார்கள், ஆனால் எங்களுக்குத் தரவில்லை என்று சொல்கிற ஆதங்கம் அவர்களுக்கு இருக்கிறது. எனவே தமிழகத்தில் உள்ள லட்சக்கணக்கான ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கவேண்டும் என்று சொல்லும் போது இந்த 20 ஆயிரம் என்பது, யானைப் பசிக்கு சோளப்பொறி போடுவது போல் இருக்கிறது.

(முற்பகல் 10–50)

இப்போது அவர்களுக்கு 3 சென்ட் நிலம் கொடுப்பது போதாது. அவர்களுக்கு அவர்கள் இருக்கக்கூடிய இடத்தையே பட்டா செய்து கொடுப்பதற்கு ஒரு கால கட்டத்தை நிர்ணயித்து உடனடியாக அந்த நிலங்களை எல்லாம் அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று

கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்யவில்லை என்றால் அது வெறும் வாய்ப்பட்டாவாகத்தான் இருக்குமே தவிர அவர்களுக்குப் பட்டா வழங்குவதில் அர்த்தம் இல்லை. எனவே அவர்களுக்கு அந்த நிலங்களை ஜாரி செய்து கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிலே பட்டா வழங்குவதிலும் சிரமங்கள் இருக்கின்றன. நஞ்சை நிலங்கள் என்றால் அரசாங்கம் பட்டா கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆகவே நீங்கள் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து தாசில்தாருக்கே அந்த உரிமையைக் கொடுத்து விடுங்கள். வேண்டும் என்றால் அப்பீலுக்கு வந்தால் அதைக் கலெக்டர் பார்க்க வேண்டும் என்று சொல்லிவிடுங்கள். அது அரசுக்கு வந்து அது அரசு நிலமா அல்லது மற்றவர்கள் நிலமா என்று பார்த்து பட்டா கொடுப்பதற்கு நீண்டகாலம் ஆகிறது. எனவே தாசில்தார், கலெக்டர் அளவில் பட்டா கொடுக்கும் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

அதுவும் தனியார் நிலத்தை எடுக்கக்கூடாது, நஞ்சை நிலத்தை எடுக்கக்கூடாது, வேப்ப மரமோ, தென்னை மரமோ இருந்தால் எடுக்கக்கூடாது என்ற கட்டுப்பாடுகள் எல்லாம் இருப்பதால் அவர்கள் நிலங்கள் எடுக்க முடியவில்லை. எனவே அந்தக் குடிமனை வழங்குவதிலே நீங்கள் விரைவான நடவடிக்கை எடுத்து அனைவருக்கும் குடிமனை கிடைக்கக் கூடிய நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மயான சாலையைப் பற்றிச்சொல்லியிருக்கிறீர்கள். சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகளுக்குப் பிறகும் செத்த பிறகு கூட சுடுகாட்டுக்குப் போக முடியாத அளவுக்கு சுடுகாட்டுக்குப் போனாலும் கூட அதைத் தடுக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. அதையும் விரைவாக செய்து கொடுப்பதற்கு, சாலை இணைப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, சுடுகாட்டு சாலைகளை நல்ல முறையில் அமைத்துத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு பற்றி இங்கே குறிப்பில் பலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தீண்டாமை என்பது இன்றைக்குக் கிராமப்புறங்களில் நவீன முறையில் மிக சிக்கல் நிறைந்ததாக இருக்கிறது. எனவே அவைகளைச் சரியாக கண்காணித்து அந்தத் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை விரைவாக அமல் செய்வதற்கு, அதில் தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுப்பதற்கு உண்டான சூழ்நிலையை உருவாக்கி இந்தத் தீண்டாமை ஒழிப்பு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். **(மணியடிக்கப்பெற்றது)**





**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தானைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் கட்சியின் சார்பாக ஆதிதிராவிடர்கள் நலன் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு ஆதி திராவிடர்களின் சமூக, பொருளாதார நிலை உயர வேண்டும் என்பதற்காக மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கின்ற 50 சதவீத ஆதி திராவிட குடும்பங்களை வறுமையில் இருந்து விடுவித்து நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்கும் மற்றும் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் காலனிகளில் அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க இந்த ஆண்டு ரூபாய் 125.34 கோடி செலவு செய்யப்பட்டு இருப்பதும் பாராட்டத்தக்கது. இந்த அரசு ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்களின் சமூக, பொருளாதாரத்தை மேம்பாட்டுக்கு உயர்த்தப் பாடுபடுவது மிகவும் பாராட்டத்தக்கது.

மேலும் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்த 500 உயர்நிலைப் பள்ளிகளிலும், 300 மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி நேரம் முடிந்த பிறகு $1\frac{1}{2}$ மணி நேரம் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒரு நல்ல திட்டமாக இருக்கிறது.

மேலும் கடந்த ஆண்டுகளில் ஆதி திராவிடர்களின் பொருளாதார நிலையை உயர்த்த அவர்களுக்குக் கறவை மாடுகள் அதிகமாகக் கொடுத்தது. குறிப்பாக அவர்கள் முன்னேறுவதற்கு பல திட்டங்களை நிறுவி அதன் மூலம் முன்னேறி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியான அம்பாசமுத்திரம் பற்றிய சில பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில் பல பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய இரண்டு பேரூராட்சிகளுக்கு அதிகமான பணத்தை ஒதுக்கி அதன் மூலம் இந்த இரண்டு பேரூராட்சிகளிலும் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்ட எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள். ஆனால் இப்போது திடீர் என்று கடந்த சில தினங்களுக்கு முன்னால் அந்த இரண்டு பேரூராட்சிகளும் அர்பன் ஆகவே இந்தத் திட்டம் இங்கே கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இது சம்பந்தமாக அரசு மீண்டும் பரிசீலனை செய்து 2 பேரூராட்சிகளையும் அந்தத் திட்டத்தில் சேர்த்து ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி. தீண்டாமை யைப் போக்குவதற்கு ராமானுஜர் காலத்திலிருந்தே முயற்சி செய்யப்பட்டு, நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு தான் அது ஓரளவுக்குக் குறைந்து இருக்கிறது. அதுவும், முழு அளவுக்கு கஷ்டங்களும் பாகுபாடுகளும் குறைந்ததாகத் தெரியவில்லை.

(முற்பகல் 11-00)

தாழ்த்தப்பட்டவனுக்கு வாடகை வீடு இன்னும் கிடைக்கிறதா? சமத்துவம் சிலஇடங்களில் மறுக்கப்படுகிறது. 1967-க்கு முன்னால் இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக டெபுடி சேவக்குகள் நியமிக்கப்பட்டு இருந்தார்கள். அவர்கள் இது குறித்து நடவடிக்கைகளை எடுத்தார்கள். இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்கள்தான் புகார் கொடுக்க வேண்டும். அதனால் கிராமங்களில் தகராறுகளும் சாதிச் சண்டைகளும் ஏற்படுகின்றன. இனச்சச்சரவுகளுக்கு இதுவும் ஒரு காரணமாக அமைகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, முன்புபோல டெபுடி சேவக்குகளை ஒவ்வொரு தாலுக்காவிலேயும் நியமித்தால் இந்தச் சண்டை சச்சரவுகள், ஜாதிச் சண்டைகள் ஓரளவு குறையும் என்பதை அனுபவ ரீதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் மன மாற்றமும் ஏற்பட வேண்டும். முன்பெல் லாம் பெரியவர்கள் எங்கு சென்றாலும் தீண்டாமையின் கொடு மையைப் பற்றிப் பேசினார்கள். இப்பொழுது அப்படி பேசுவது கிடையாது. மன மாற்றம் ஏற்படச் செய்ய வேண்டும். இந்து மதத்தைப் பற்றி சிலர் அதிகமாகக் குறை சொன்னார்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதியிலிருந்து சாதாரண இந்து மதத் தலைவர்கள் வரையில் தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள் வாழுகின்ற இடங்களுக்கு இப்பொழுது வர ஆரம்பித்து விட்டார் கள். இதன்மூலம் இந்து மதத்திற்கு இருந்த களங்கத்தை அவர்கள் துடைத்து விட்டார்கள். பொற்காலம். என் போன்ற தெய்வ நம்பிக்கை உள்ளவர்களுக்கு தெய்வீக உணர்வில் ஒரு நற் காலம் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மற்றவர்களுக்கும் தகராறுகளை சமரசம் செய்வதில் வெற்றிகள் பல கண்டிருக்கிறோம். சமரச முயற்சி தோல்வி கண்டால் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி விஷயமாக தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு, மேல் நிலைப் பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் இடம் கிடைப்ப தில்லை. கேட்ட குரூப்பைக் கொடுப்பதில்லை. தமிழ் மீடியத் திற்குப் போகிறாயா என்று கேட்கிறார்கள். தனிப்பட்ட பள்ளி களிலேயும், கல்லூரிகளிலேயும் தாழ்த்தப்பட்டவர்களை புறக் கணிக்கிறார்கள். 18 சதவீதம் எல்லா குரூப்புகளிலேயும் எடுப் பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



விடுதிகளில் சாப்பாட்டிற்காக 60 ரூபாய் அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் போதுமா? எந்த ஓட்டலிலேயும் மூன்று ரூபாய்க்குக் குறைந்து சாப்பிட முடியுமா? அந்தக் காலத்திலே கொடுத்த ரூபாயை இன்றைக்கும் கொடுக்கிறார்கள். அதை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எப்பொழுதோ தீர்மானித்த 6,000 ரூபாய் பெற்றோர்கள் வருஷ வருமான வரம்பை இன்னும் வைத்திருக்கிறார்கள். பெற் றோர்களுக்கு 6,000 ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்தால் பிள்ளைகளுக்குச் சலுகை கிடையாது. மற்ற காரியங்களுக்கு மத்திய அரசாங்கத்தைக் காட்டுகிறோமே, மத்திய அரசு 12,000 ரூபாய் பெற்றோர் வருமானம் வைத்திருக்கிறார்களே, அதையே தமிழக அரசும் வைக்கலாமே. அப்படி ஏன் வைக்கக் கூடாது என்பதை தலைவரவர்களின் மூலமாக அரசுககு சமர்ப் பிக்கிறேன். இதையும் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாதிச் சான்றிதழ் வாங்க ஒவ்வொரு தடவையும் தாசில் தாரிடத்தில் செல்ல வேண்டியிருக்கிறது. சாதிச் சான்றிதழ் வாங்குவது என்பது இலேசான காரியமா? ஒரு தடவை வாங்கி னால் மட்டும் போதாதா? அதற்கு அட்டெஸ்டட் காப்பி வாங்கி கடைசி வரையில் வைத்துக் கொள்ளக் கூடாதா? இதற்கு ஆணை பிறப்பிக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வ ரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ரிசர்வேஷன் ஒழுங்காக ஒதுக்கப்படுகிறதா? உத்தியோ கங்களுக்கு தொழிற்சாலைகளில் ஒதுக்கப்படுகிறதா? 18 சதவீதம் என்று தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக் கப்பட வேண்டுமே, அப்படிச் செய்யப்படவில்லை. தனியார் தொழிற்சாலைகளிலே ஒதுக்கப்படுவதில்லை, உத்தியோக உயர் விலே 18 சதவீதம் கொடுக்கப்படவில்லை. உயர்நீதி மன்றங்களிலே உயர் நீதிபதிகள் பதவிகளுக்கு அந்த 18 சதவீதம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் தமிழக முதல்வராக இருந்த காலத்திலே நாங்கள் அவரிடம் கேட்டோம். காவல்துறைக் குரிய வாட்ட சாட்டமாக தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள், அதற்கு போதுமான படிப்பும் இருக்கிறது, 25 சதவீதம் தேர்ந்து எடுங்கள் என்று கேட்டோம். அவர்களும் வாக்களித்தார்கள். 1967 இல், மாநிலத்தில் நாங்கள் தோற்று போய்விட்டோம். போலீஸ் வேலைக்கு சகல தகுதிகளும் இருக்கின்றன. எனவே, 25 சதவீதம் போலீஸ் வேலைக்கு தாழ்த்தப்பட்ட மக்களை தேர்வு செய்து ஆதரிக்கும்படி மாண்புமிகு தமிழக முதல்வரை கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ரிசர்வேஷனை எல்லாம் கண்காணிப்பதற்காக உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக புத்தகத்திலே பார்த்தேன். அது ஒழுங்காகக் கண்காணித்து வருகிறதா? அதன் அறிக்கைகளை சபைக்கு வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். பாலசுப்பிரமணியன்]

விக்கிரமசிங்கபுரம் ஆதி திராவிட மக்களுக்கு இதுவரை கழிப்பிட வசதி செய்து தரப்படவில்லை. அதை உடனடியாகச் செய்து கொடுக்குமாறு நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் ரொம்ப காலமாக ஆதிதிராவிட மக்கள் குடி இருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்கவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டுகிறேன்.

ஆதி திராவிடர் வசிக்கும் பகுதியிலுள்ள மகளிர் மன்றங்களை ஊக்குவித்தால், அதன் மூலம் அவர்களுடைய அறியாமையை அகற்றிட முடியும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். அம்பாசமுத்திரத்தில் கோயில்குளம் கிராமத்தில் அரிசனங்களுக்கு பிரம்பு சொசைட்டி ஆரம்பித்து, அதன்மூலம் கூடை, நாற்காலி போன்ற சில சிறு தொழில்கள் செய்ய அந்த சொசைட்டிக்கு அரசு ஊக்கம் கொடுப்பதன் மூலமாக அப்பகுதியிலுள்ள அரிசன மக்கள், ஆதி திராவிட மக்கள் பயன் பெறக் கூடிய அளவிலே அரசு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடையம் வட்டாரத்திலே நிறைய ஆதி திராவிட மக்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் விவசாயத்தை நம்பி இருக்கின்றார்கள். அதனால், அவர்கள் பாதி நாட்கள் வீட்டிலே ஓய்வு ஆக இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதனால் ஆதி திராவிட மக்களுக்கு அந்தப் பகுதியில் தீப்பெட்டி தயாரித்தல், கயிறு முடுக்குதல் மற்றும் பல சிறு தொழில்களை அமைத்துக் கொடுத்தால்—மீதி நேரத்தினை அங்கே கழிப்பதற்கு வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம்—மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், பாபநாசம் மலையில் வசிக்கும் பழங்குடியினர் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிட அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் அந்த மலை ஜாதியினர் படிக்க ஒரு பள்ளிக்கூடம் உள்ளது. அந்தப் பள்ளி ஒழுங்காகச் செயல்படவில்லை. அதை ஒழுங்காகச் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காரையாறில் பழங்குடியினருக்கென்று சொசைட்டி ஒன்று உள்ளது. அந்த சொசைட்டியில் பழங்குடியினர் பெயரில் வேறு பலர் நிர்வாகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் நிர்வாகத்தில் இருந்து பல தவறுகள் அந்த சொசைட்டியில் நடந்துள்ளது. அதை எல்லாம் அரசின் பரிசீலனையில் கொண்டுவந்து, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இதுவரை உள்ளதை



[திரு. எஸ். பாலசுப்பிரமணியன்]

மாற்றி, நடவடிக்கை எடுத்து உடனடியாக அந்த சொசைட்டியை பழங்குடியினர் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது அரசு ஒரு தனி அதிகாரியை நியமித்து, அந்தப் பழங்குடி மக்களுக்கு உதவக் கூடிய முறையில் அந்த சொசைட்டி செயல்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், அம்பாசமுத்திரம் தொகுதியில், ஆதிதிராவிட மக்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட கறவை மாடுகள் லோன்களில் மானியம் பாதி என்று இருந்தாலும், அது முழுமையாக அவர்களுக்குச் செல்லவில்லை. ஆதி திராவிட மக்கள் பெறக்கூடிய மானியத் தொகைகளையும் முழுமையாக அவர்கள் பெற முடியவில்லை. அதற்குப் பல அதிகாரிகள், பல காரணங்களால், அரிசனங்கள் பெயரிலேயே லோன் போட்டு பெறக் கூடியவர்கள் வேறு சில நபர்களாக இருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக அரசு தலையிட்டு, தவறு செய்யும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல் அரிசனங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட மானியத் தொகை முழுவதும் அவர்களுக்குக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போல் மாஞ்சோலை எஸ்டேட்டில் வசிக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அந்த எஸ்டேட் நிர்வாகம், ஏறத்தாழ 5 ஆயிரம் அரிஜன மக்கள் வசிக்கும் அந்தப் பகுதிக்கு வசதிகளைச் செய்து தரவேண்டும். இன்னும் செய்து தரப்படவில்லை என்று அடிக்கடி புகார் மனுக்கள் வருகின்றன. ஆகவே, அந்த நிர்வாகத்தின் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு வேண்டிய சாலை வசதிகள், குடிநீர் வசதிகள் முதலியவை செய்ய வேண்டும்.

விக்கிரமசிங்கபுரம் பகுதியிலுள்ள அரிஜன மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் சாலைகள், குடிநீர் மற்றும் விளக்கு வசதிகள் இவைகளை எல்லாம் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கீழச்சின்னம்பட்டி, மேலச்சின்னம்பட்டி ஆகிய பகுதிகளிலே அரிஜனங்கள் மிகுதியாக இருக்கிறார்கள். அவர்கள் ஊருக்குச் செல்லக்கூடிய பாதைகள் மிகவும் பழுதடைந்து உள்ளன. அவைகள் எல்லாம் சீர் செய்யப்படவேண்டும்.

அவர்களுக்கு மயான பாதைகளுக்கு நல்ல ரோடுகள் அமைத்துத் தரவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு, மேலும், இந்த அரசு அரிஜன மக்களுக்குப் பல நன்மைகள் செய்கின்றது; ஆகவே, இந்தத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

இந்த 125 கோடி ரூபாயில்கூட பாதிப்பணத்தை கல்விக்காக ஒதுக்கி விடுகிறார்கள். 60 கோடி ரூபாய்க்குமேல் கல்விக்காகப் போய்விடுகிறது. மீதி இருக்கிற சுமார் 60 கோடி ரூபாய்தான் தாழ்த்தப்பட்ட மக்களுடைய உண்மையான வளர்ச்சிக்கு ஒதுக்கப் படுகிறது. நம்முடைய அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டும். கல்விக்கு என்று ஒரு துறை இருக்கிறது. அதற்குத் தனியாக மானியம் இருக்கிறது, நிதி ஒதுக்கப்படுகிறது. எனவே இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் நலத் துறையிலிருந்து ஒதுக்கப்படுகிற பணத்தை கல்விக்கு என்று செலவிடக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

இன்றைக்கு இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பள்ளிகளிலே செலவிடுகிறோம். கல்லூரிகளிலே செலவிடுகிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 6,000 ரூபாய் வருமானத்திற்கு உட்பட்டிருந்தால்தான் அந்தச் சலுகைகள் என்று இருக்கிறது. 6,000 ரூபாய் என்பது இன்றைக்கு இருக்கிற விலைவாசி உயர்வில் மிகச் சாதாரணமான வருமானம். எனவே, இந்த வருமான வரம்பை வைத்திருந்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் உதவித்தொகை பெற முடியாது ; கல்விக் கட்டணச் சலுகை பெற முடியாது ; எனவே இதை மாற்றி, எப்படி பிற்பட்ட மக்களுக்கு 12,000 ரூபாய் என்று வருமான வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போன்று 12,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்.

அது மட்டுமல்ல, பல விடுதிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய பட்டியலை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். விடுதிகள் திறக்கப்பட்டிருந்தாலும் அவை சொந்தக் கட்டிடம் இல்லாமல் சத்திரத்தில் இருப்பதுபோல் இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளுக்கு நல்ல முறையில் சொந்தக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு மாணவனுக்கு 60 ரூபாய் முதல் 90 ரூபாய் வரையில் மாதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த 60 ரூபாயிலும் 90 ரூபாயிலும் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை எப்படி சோறு போட முடியும் ? இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி உயர்வில் 60 ரூபாய், 70 ரூபாய், 80 ரூபாய், 90 ரூபாயில் ஒரு மாணவனுக்கு எவ்வளவு வசதிகளைச் செய்து கொடுத்துவிட முடியும் ? எந்த அளவுக்கு அது பயன்படும் ? ஏதோ உதவி செய்கிறோம் என்று சொல்லத்தான் இது பயன்படுமே தவிர, அந்த மாணவர்களுக்கு உண்மையான வசதிகளை, தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க முடியாது. ஆகையால் தயவு செய்து இந்த உதவித் தொகையை 200 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த பாசன கிணறுகளுக்கு 5,000 ரூபாய் மானியமும், கறவை மாடுகள்



வாங்க 2,500 ரூபாய் மானியமும் தருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டமக்கள் ஆண்டாண்டு காலமாக, பல்லாண்டுக் காலமாக இந்த நாட்டு மக்களுக்கு உழைத்து, உழைத்து உருக்குலைந்திருக்கிறார்கள், அவர்களுக்கு கறவை மாடுகள் வாங்க 2,500 ரூபாயும் பாசனக் கிணறு வெட்ட 5,000 ரூபாயும் கொடுத்தால் இந்த மக்களின் பொருளாதாரம் எப்படி மேம்பாடு அடையும் ? ஒருநாளும் மேம்பாடு அடைய முடியாது. இந்தச் சமுதாய மக்கள் உண்மையான வளர்ச்சி பெற வேண்டுமென்றால் நல்ல சமூக அந்தஸ்து பெற வேண்டுமென்றால் பொருளாதார வளர்ச்சியால்தான் முடியும். பொருளாதார வளர்ச்சிதான் அவர்களுக்கு உண்மையான வளர்ச்சியாகும். ஆகவே, நான் அரசைக் கேட்டுக் கொள்வது ஆதி திராவிட மக்களுக்கு என்று தனியாகத் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும்

தொழில் துறையில் அவர்களை வளர்ப்பதற்காக அவர்கள் முன்வந்து பல தொழில்களைத் தொடங்குகின்ற வகையிலே அவர்களுக்கு அரசாங்கம் உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். 2,500 ரூபாய் கறவை மாடு வாங்குவதற்காகக் கொடுக்கிறோம் என்றால் ஒன்றுமே தெரியாத படிப்பறிவு இல்லாத அந்த மக்கள் அதிகாரிகளின் பின்னால் சுற்றிக்கொண்டு அவர்களுக்கெல்லாம் கையூட்டு தரவேண்டியிருக்கின்றது. எழுதுகின்றவர்களுக்கு 500, இன்னொருவருக்கு 500, இன்னொருவருக்கு 1,000 என்று இப்படி பலருக்கும் தரவேண்டியிருக்கின்றது. இப்படி பலருக்கும் கொடுத்தது போக அவர்கள் கையிலே ஆயிரம் ரூபாய் கூட கிடைக்காது. அதை வைத்து அவர்களால் எப்படி மாடு வாங்க முடியும் ? என்ன உழவு செய்ய முடியும் ? என்ன வளர்ச்சியை அவர்கள் அடைந்துவிட முடியும்? எனவே கறவை மாடோ, உழவு மாடோ அவர்களுக்குத் தருவதன் மூலம் அந்த மக்கள் வளர்ந்துவிட மாட்டார்கள்.

ஆதி திராவிடர்களுக்கு என்று தனித் தொழில் வளர்ச்சி நிலையத்தை உருவாக்கி ஒவ்வொரு ஆண்டிலும் குறிப்பாக அந்தச் சமுதாயத்தில் இத்தனை தொழில் அதிபர்களை உருவாக்கினோம் என்ற வகையில் நல்ல திட்டங்களை இந்த அரசு கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிப்பிற்கான பயிற்சி தருவதற்காக விடுதி சென்னை, சைதாப்பேட்டையிலே இருக்கின்றது. அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் போய்ப் பார்த்தால் உள்ள நிலைமை தெரியும். அந்தக் கட்டிடம் எந்த நேரத்தில் இடிந்து விழுமோ என்ற நிலைமையில் இருக்கின்றது. அது பழைய கட்டிடமாக ஹைதர் அலி காலத்திலே கட்டப்பட்ட கட்டிடமாக இருக்கின்றது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயிற்சி பெறுகின்றவர்களுக்கே இப்படிப்பட்ட நிலைமை என்றால் பல விடுதிகளைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. அங்கே மேஜை இல்லை ; நாற்காலி இல்லை ; மின் விளக்குகளும் இல்லை ; எல்லாவற்றுக்கும் மேலாக 1984, 1985, 1986

மாநில ஆதி திராவிடர் நலக் குழு 1954-லே பெருந்தலைவர் காமராஜர் முதல்வராக இருந்த காலத்திலே அமைக்கப்பட்டது. இப்பொழுதும் அது இருக்கும் என எண்ணினேன். நான் பல ஆண்டுகள் அதில் அங்கத்தினராக இருந்திருக்கிறேன். அது பல சேவைகளைச் செய்யும். தற்சமயம் அது இல்லை என்று தெரிகிறது. அது மிக முக்கியமான குழு; அதை உடனடியாக அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வீடு கட்டுகின்ற திட்டம். நாம் இன்னும் கால் வாசிப் பேர்களுக்குக்கூட வீடு கட்டிக்கொடுத்திருக்க மாட்டோம். வீடுகள் கட்டுவதை துரிதப்படுத்த வேண்டும்; ரூ. 6,000 போதாது; அதையும் அதிகப்படுத்துங்கள். இலட்சக்கணக்கான ரூபாயில் பங்களா கட்டுகிறார்கள். ஆனால் இந்த வீடுகளுக்கு அதிகம் செலவாகாது. ஆகவே, ஆண்டு ஒன்றுக்கு 1 இலட்சம் வீடுகளாவது கட்டுகின்ற முறையிலே திட்டம் தீட்டி, காரியங்கள் ஆற்றுங்கள் என்று கேட்கிறேன்.

கல்யாண மண்டபம், ஒரு கிராமத்திற்கு ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டும். ஒரு கிராமத்திலே கல்யாணம் நடக்கிறது என்றால், சமையல் செய்து சாப்பாடு பந்தி வைப்பார்கள். சாப்பிடும் பொழுது சிலசமயம் திடீரென மழை பெய்யும், சாப்பாட்டைத் தூக்கிக் கொண்டு ஓடுவார்கள். மழைத்தண்ணீர் உப்பில்லாத ரசம்போல் இருக்கும்; மழை பெய்யும்போது எல்லா மக்களும் ஓடுவார்கள். இன்றைக்கு ஒரு கிராமத்திலும் கல்யாண மண்டபம் கிடையாது.அதற்கு அதிகம் செலவழிக்க வேண்டாம். மத்திய அரசிடமிருந்து உதவி பெற முடியுமா என்று பார்க்க வேண்டும். வேலை வாய்ப்புத் திட்டத்திலோ, வேறு திட்டத்திலோ, எதிலாவது இதனைக் கட்ட முடியுமா என்று பார்க்க வேண்டும். அவர்கள் நிதி உதவி செய்ய முன்வராவிட்டால், நமது தமிழக அரசு நிதியிலிருந்தாவது ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கல்யாண மண்டபம் கட்டி, அவர்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக தொழில். முதலில் படிப்பு, அடுத்து தொழில் வேண்டும். பணம் இல்லாவிட்டால் மதிப்பு, மரியாதை கிடையாது. தாம்பரத்திலேயிருந்து புரசைவாக்கம் வரைக்கும் போனால், எத்தனை தொழில்களை இந்தப் பிரிவினர் நடத்துகிறார்கள். டெலிபோன் எத்தனை பேர்கள் வைத்திருக்கிறார்கள்?. எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களைத் தவிர, டெலிபோனை வைத்திருக்கக்கூடியவர்கள் எத்தனை பேர்கள்? தொழிலில் அவர்கள் முன்னுக்கு வரவேண்டும். லைசன்ஸ் பெர்மிட் வழங்கினால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய பாராளுமன்றத்தில் ஒரு சட்டதிருத்தம் கொண்டு வந்தார்கள். பர்மிட் கொடுக்கும்போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று மோட்டார் வெகிகிள்ஸ் ஆக்டைத் திருத்தினார்கள். அது இங்கே விஸ்தரிக்கப்பட்டதா



என்பதுகூட எனக்குத் தெரியவில்லை. எது எப்படி இருந்தாலும், எந்த பர்மிட் கொடுத்தாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்களை கல்வி, தொழில் ஆகியவற்றிலே முன்னேற்றம் அடையச் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-10.)

திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட நல மானியத்தின்மீது இந்திய குடியரசுக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். கிராமப்புறங்களில் இருக்கிற இந்தச் சமுதாயத்திற்கு இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்ல தாராளமாக நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. அதனால் சீக்கிரமாக, சுருக்கமாகச் சொல்லி முடிக்க வேண்டும்.

திரு. கு. தமிழரசன்: இந்த நாடு சுதந்திரம் அடைந்து 38 ஆண்டுகள் ஆகியும் எட்டாவது சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கிற போதும், சுமார் ஒரு கோடி தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்ட இந்தச் சமுதாயத்திற்கு எவ்வளவோ சலுகைகள், என்று நாம் எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும் போதும், இன்னும் சேரிகளிலே இருக்கிற இந்த மக்கள், குக்கிராமங்களிலே இருக்கிற இந்த மக்கள் இருக்க இடம் இல்லாமல், படுக்க பாய் இல்லாமல், குடிக்க கஞ்சி இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

பிரச்சனைகள் நிறைந்த சமுதாயம் இது. அவர்களுடைய பிரச்சனைகளை எடுத்துச் சொல்வதற்கு அதிக நேரம் வேண்டும். இங்கே 125 கோடி ரூபாய் ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது, பாராட்டுகிறேன். ஆனாலும் இது போதுமானதாக இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்றைக்கு 20 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். மொத்தமாக 2,400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மொத்த மக்கள் தொகையில் 20 சதவீதத்திற்கு மேல் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது ஐந்தில் ஒரு பங்கு பணம் இந்த மக்களுக்காக ஒதுக்க வேண்டும். 20 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள், ஒரு கோடி மக்கள், நலிந்த மக்கள், அடித்தளத்திலே இருக்கிற மக்கள், இந்த ஆதி திராவிட மக்கள். அவர்களுக்கு 125 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது போதாது என்பது என்னுடைய கருத்து.

ஆகிய மூன்று ஆண்டுகளில் அதிலே இருந்து ஒருவர்கூட ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரியாக வர முடியவில்லை. எனவே, பயிற்சி கூட அந்த அளவுக்குத்தான் இருக்கின்றது. நல்ல முறையிலே அங்கே பயிற்சி தருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்தக் கட்டிடத்தை நல்ல கட்டிடமாக மாற்றித்தர வேண்டும்.

ஆதி திராவிடர்கள் ஐ.ஏ.எஸ்., அதிகாரியாக வரலாம்; ஐ.பி.எஸ். அதிகாரியாக வரலாம்; ஆனால் என்ன துரதிஷ்டமோ தெரியவில்லை அவர்களில் ஒருவர் கூட சி.ஏ. பட்டம் பெற வில்லை. எனவே சி.ஏ. பட்டம் பெறுவதற்கான வகையில் தனிப் பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்க தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு பொறுத்தவரையில் குடியுரிமைப் பாது காப்புச் சட்டம் இருக்கின்றது. அதற்கென்று நம்முடைய தமிழகத்தில் தனி காவல் துறை இருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தத் துறையில் ஒரு இன்ஸ்பெக்டர் இருக் கிறார்; ஒரு சப் இன்ஸ்பெக்டர் இருக்கிறார்; இரண்டு கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். ஒரு ஜீப் இருக்கின்றது; 20க்கு மேற்பட்ட போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அப்படி குடி யுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்ற தனிச் சட்டம் இருக்கின்றது. தனி நிலையம் இருக்கின்றது. அப்படி தனி காவல் நிலையம் இருந்தும் இதுவரையில் எவ்வளவு வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. எவ்வளவு வழக்குகளில் தண்டனை வழங்கப் பட்டிருக்கின்றன என்று ஆராய்ந்தால் ஏமாற்றமாகத்தான் இருக் கின்றது. பல வழக்குகள் வெறுமனே பைசல் ஆகி இருக்கின்றன. இங்கே காவல் துறையிலிருந்து ஒரு குறிப்பினைத் தந்திருக்கி றார்கள்; ஆதி திராவிடர் நலத்துறையிலிருந்து இன்னொரு குறிப்பினைத் தந்திருக்கிறார்கள். இந்த இரண்டிற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. காவல் துறையினைப் பொறுத்தவரையில் 1982-ஆம் ஆண்டில் 1,036 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில் 35 வழக்குகளில்தான் தண்டனை அளிக்கப் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 1983-ல் பதிவு செய்யப் பட்ட 1,128 வழக்குகளில் 63 வழக்குகளில்தான் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1984-ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்ட 923 வழக்குகளில் 76 வழக்குகளில்தான் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது காவல் துறை கொடுத்த குறிப்பு. ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் கொடுக்கப்பட்ட குறிப்பிலே 10,866 வழக்குகள் 1984-லே பதிவு செய்யப்பட்டன என்றும் அவற்றில் 4,112 வழக்குகளில் தண்டனை கொடுக்கப் பட்டிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தக் குறிப்புக்களில் ஆதி திராவிடர் நலத்துறை கொடுத்த குறிப்பு சரியா? அல்லது காவல் துறை கொடுத்த குறிப்பு சரியா என்பது புரியவில்லை. ஏன் இப்படி இருக்கின்றது என்பதும் விளங்க வில்லை.





எது எப்படி இருந்தாலும் தீண்டாமை ஒழிப்புச்சட்டத்தின் கீழே இதுவரையில் யாராவது தண்டிக்கப்பட்டிருக்கின்றார்களா என்று சொன்னால், இல்லை. அப்படி கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டிருந்தால் விழுப்புரம் வந்திருக்குமா? வெண்மணி வந்திருக்குமா? சிக்கனாங்குப்பம் வந்திருக்குமா? கோலடி வந்திருக்குமா? தோலா வந்திருக்குமா? கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டிருந்தால் தமிழகத்தில் படுகொலை நடந்திருக் குமா? விழுப்புரத்திலே 12 பேர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள் அவர்களுக்கு மரண தண்டனையா கொடுக்கப்பட்டிருக்கின்றது? இப்படி தண்டனை வழங்கப்படாத நிலைமைதான் இருக்கின்றது. இன்னொரு இடத்திலே குற்றம் செய்தவர்கள் எல்லோரும் உலவிக் கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான தண்டனையும் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

முதுகுளத்தூரிலே சிக்கல் என்ற கிராமத்தில் செல்லத்துரை என்ற ஆசிரியர் பட்டப் பகலில் வெட்டிக் கொலை செய்யப் பட்டார். இது கடந்த வார நிகழ்ச்சி. பட்டப்பகலில் ஒரு ஆசிரியர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இன்றைக்கு அங்கே யுள்ள நிலைமை என்னவென்றால் அந்தப் பகுதியிலேயுள்ள 40 குடும்பங்கள் அங்கே இருக்க முடியாத நிலைமையில் அச்சம் ஏற்பட்டு பரமக்குடிக்குப் பக்கத்திலே உள்ள எஸ். ஆண்டிக்குடி என்ற ஊரில் வந்து இருக்கிறார்கள். அவர்களது உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கின்றது. இலங்கை அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்களே அதுபோன்று இவர்கள் தங்களது சொந்த மண்ணில் வாழ முடியாமல் அகதிகளாக அடுத்த கிராமங் களுக்குச் சென்று இருக்கிறார்கள், தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கடுமையான முறையில் அமுலாக்கப்பட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேர வைத் துணைத் தலைவர் மூலம் கேட்டுக் கொள்கிறேன். இட ஒதுக்கீட்டினை எதிர்ப்பவர்களைக் கூட இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்.

(முற்பகல் 11-20)

தீண்டாமையைப் பற்றி சொல்ல வருகிறபோது டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொன்னதை குறிப்பிட விரும்புகி றேன். தீண்டாமை ஒழிப்பு என்பது நேரிடையாகவோ, மறை முகமாகவோ எந்த வழியில் செயல்பட்டாலும் அது குற்றமே என்று சொன்னார்கள். ஆகவே இட ஒதுக்கீடு செய்பவர்களை எதிர்ப்பவர்களைக் கூட, இந்தத் தீண்டாமை ஒழிப்பு குற்றசாட் டின் கீழ் கைது செய்யப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அப்படி ஒரு நிலைமை வந்தால்தான் ஆதித்திராவிட மக்களுக்கு போதிய பாதுகாப்பு இருக்க முடியும். காரணம் இன்றைக்கு உயரிய பதவியில் இருக்கும் அதிகாரிகள் கூட ஜாதி

யின் காரணமாக பழி வாங்கப்படுகிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஐ.பி.எஸ். அதிகாரிகளாக இருந்தாலும் சரி, திறமை வாய்ந்த பல ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மூலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால், அந்த அளவில் மேல் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் ஜாதி உணர்வோடு இருக்கிறார்கள். எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டும் என்றால், நேற்று வரையில் தலைமைச் செயலாளராக இருந்த ஒருவர் ஜாதி சங்கம் வைத்துக் கொண்டிருக்கிறார். இன்னொரு தலைமைச் செயலாளரும் அப்படித்தான் ஜாதிச் சங்கம் வைத்து நடத்துகிறார்கள். ஐ.ஜி.யாக இருந்தவர்கள் ஜாதிச் சங்கம் வைத்து நடத்துகிறார்கள். நான் தயவு செய்து இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படி உயர் அதிகாரிகளாக இருந்த சில அதிகாரிகள், ஜாதிச் சங்கங்களை வைத்து இன்றைக்கும் நடத்துகிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் அதிகாரிகளாக இருந்தபோது எந்த அளவுக்கு ஜாதி உணர்வோடு இருந்திருப்பார்கள் என்பதற்கு இது ஒன்றே உங்களுக்கு உதாரணத்திற்கு போதும் என்று நினைக்கிறேன்.

அதேபோல இன்றைக்கும் அதிகாரிகளாக இருந்துக் கொண்டிருக்கிற சில பேர்கள் ஜாதிச் சங்கம் வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். என்றால் அவர்களிடமிருந்து எங்களுக்கு எப்படி நீதி கிடைக்க முடியும் என்பதையும் தயவு செய்து நினைத்துப் பாருங்கள்.

அதுபோல நாட்டிலே எத்தனையோ கலவரங்கள் கோட்டாகுறிச்சியிலே கலவரம் தோட்டக்குப்பத்திலே கலவரம் இது சம்பந்தமாக நடந்திருக்கின்றன. அந்தக் கலவரங்கள் அங்கே நடக்கிறபோது என்ன நிலைமை இருக்கிறது என்றால், ஜாதி இந்துக்களோ அல்லது மேல் சாதிக்காரர்களோ, தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்குகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள, அந்த நிலைமைகளைப் பார்த்துக் கொண்டு, கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியாத நிலையில், திருப்பித் தாக்குகிறார்கள். ஆனால் கடைசியில் என்ன நடக்கிறது? அவர்கள் மேலும் வழக்கு, இவர்கள் மேலும் வழக்கு. அடிக்க வருகிறவர்கள் மேலும் வழக்கு, அடி வாங்கியவர்கள் மேலும் வழக்கு ? ஏன் இப்படி இரண்டு பக்கமும் வழக்குப் போடுகிறீர்கள் ? நான் கேட்டுக் கொள்வது எல்லாம் அந்த ஆதிதிராவிட மக்கள் மீது வழக்குப் போடக்கூடாது. அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளையும் வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



ஏனென்றால் ஏதோ பயந்துக் கொண்டிருக்கிற ஒரு சமூகம் அது. எல்லாவற்றிற்கும் அடக்கி ஆளப்படுகிற ஒரு சமூகம் அது. அந்தச் சமூகம் தானே போராடுகின்ற நிலைமையிலே அந்த வழக்குகள் எல்லாம் போட்டால் எப்படி அவர்கள் அந்த வழக்குகளை நடத்த முடியும். தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த பெண்களின் கற்புக்கு பாதுகாப்பு கிடையாது. அவர்களின் கற்பு ஏளனமாக்கப்படுகிறது. சூறையாடப்படுகிறது. எந்த வகையிலும் பாதுகாப்பு இல்லாமல் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்களின் கற்பு பறிபோகின்றன. கலா என்ற ஒரு பெண் போலீஸ் நீங்கள் அறிந்திருக்கலாம். ஒரு பெண் போலீசே, அவர் ஆதிதிராவிட சமூகத்தைச் சார்ந்தவர் என்பதால் தன்னுடைய கற்பை பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. கடைசியில் அது மரணத்தில் முடிந்தது. அதற்குக் காரணமான அந்த அதிகாரிக்கு எந்தவித தண்டனையும் இல்லை. அந்த அதிகாரிக்கு தூக்குத் தண்டனை கொடுத்து இருந்தால் இந்த நிலைமைகள் தொடர்ந்து நடைபெறுவதை தடுத்திருக்கலாம். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண் என்பதால் ஒரு பெண் போலீசுக்கே பாதுகாப்பு இல்லையென்றால், ஒரு சாதாரண தொழிலாளி பெண், கிராமத்தில் வயல் காட்டில் வேலை செய்து வாழ்ந்துக் கொண்டிருக்கிற பெண்ணுக்கு எப்படி பாதுகாப்பு கிடைக்க முடியும். இப்படிப்பட்ட நிலைமைகள் கிராமப்புறங்களில் இருந்து கொண்டிருக்கின்றன.

நாம் கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கலப்பு திருமணம் செய்துக் கொண்டவர்களுக்கு பல சலுகைகள் அளிக்கப்படுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் கலப்பு திருமணச் செய்துக் கொண்டவர்களுக்கு சலுகைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. நான் கேட்டுக் கொள்வது எல்லாம் கப்பு திருமணம் செய்துக் கொண்டவர்களுக்கு கொஞ்சம் சதவீதம் வேலை வாய்ப்பில் இடம் ஒதுக்கித் தர வேண்டும் என்ற முறையில் ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான். அப்போதுதான் இந்த ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும்.

அடுத்து, தனியார் கல்லூரிகளில் அல்லது கல்வி நிறுவனங்களில் 18 விழுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தருகிறார்களா என்று கேட்டால் நிச்சயமாக எந்தத் தனியார் நிறுவனங்களிலும் கல்லூரிகளிலும் தரப்படுவது கிடையாது. பி.காம் கேட்டால் தர மாட்டார்கள், பி.ஏ. எக்கனாமிக்ஸ் தருகிறோம் என்பார்கள். தமிழ் மீடியம் தருகிறோம் என்பார்கள். பி.எஸ்ஸி. கெமிஸ்ட்டிரீ கேட்டால் தர மாட்டார்கள். பீ.ஏ. இலக்கியம் தருவதாகச் சொல்லுவார்கள். அதிலும் கூட 18 சதவீத ஒதுக்கீடு முழுமையாகத் தருவதில்லை. ஆகவே, எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் கல்லூரிகளிலும் இந்த 18 சதவீத விழுக்காடு நிச்சயமாக தரப்

படுவதற்கு தக்க நடவடிக்கை எடுப்பதற்கு, அதைப் பரிசீலிப்பதற்கு அரசு முன் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இன்றைக்கு என்ஜினீயரிங் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும்........(மணியடிக்கப் பெற்றது).

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகளைச் சொல்ல விழைகிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறைக்கு என்று மானியக் கோரிக்கை வருகிறபோது, அதற்கென்று ஒரு நாள் ஒதுக்கி வைத்து விவாதிப்பதுதான் நல்லதாக அமைந்திருக்கும். நேற்று ஒரு குறிப்பிட்ட நேரமும், இன்று ஒரு குறிப்பிட்ட நேரமும் இதற்கு என்று வைத்து இருப்பது எந்த அளவுக்கு பொருத்தமாக இருக்கும் என்பதைப் பற்றி தாங்கள் சிந்திக்க வேண்டும்.

இந்தக் குறிப்பேட்டில் தீண்டாமை ஒழிப்பைப் பற்றி ஆழமாக விவரத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது. 1984-டிசம்பரில் 10,866 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 4,112 வழக்குகளில் நீதிமன்றங்கள் மூலம் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அது இந்த சமுதாயத்தில் கொஞ்சம் துணிச்சலாக வழக்குப் போட்டவர்களின் எண்ணிக்கைதானே தவிர இன்னும் 100-க்கணக்கான கிராமங்களில் ஆதி திராவிடர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல், இன்னமும் பயந்து கொண்டு வாழக்கூடியவர்களாக, அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு வாழக்கூடியவர்களாக அஞ்சிக் கொண்டு வழக்குகளைப் போடமுடியாமல் இந்த மாநிலத்தில் பெரும் பகுதிகளில் வாழ்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இன்றைக்குத் தமிழகத்திலே சமபோஜனங்கள் நடத்தப் படுகின்றன. ஆதி திராவிடர்கள் சமமாக உட்கார்ந்து கோவில்களிலும், பொது இடங்களிலும் சாப்பிடக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கக் கூடிய இந்த ஆட்சியிலே நான் கேட்டுக்கொள்வது, இன்றைக்கு ஜாதிக் கொடுமைகளை, ஒழிக்க வேண்டுமென்றால், அது முடியாத நிலையில், இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் ஜாதிச் சங்கங்கள் கொடி கட்டிப் பறக்கின்றன. அதேபோல ஜாதி மாநாடுகள் வருகிற போது உண்மையிலே அவற்றை ஊக்குவிக்கிற அளவில் அமைச்சர் களும் அவைகளில் பங்கு கொள்ளக்கூடிய நிலைமை இருக் கிறது. தமிழகத்தில் ஜாதிச் சங்கங்கள், ஜாதி மனோபாவங்கள் வளராமல் தடுக்க வேண்டுமென்றால் இப்படிப்பட்ட மாநாடு கள். நிகழ்ச்சிகள் வருகிறபோது அமைச்சர்கள் அவற்றை ஒதுக்கித்தள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதேபோல இன்றைக்கு ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிறபோது, இன்றைக்கு கிராமப்புறங்களில் ஜாதிக்கொடுமைகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த நாட்டில் இன்றைக்கு காந்தீயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். இந்த நாட்டிலே சோஷலிசம் வளரவேண்டுமென்று பாடுபடுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படிச் சொல்கிற நிலையில், இன்றைக்கு கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் வேலை செய்த பிறகு கொல்லைப்புறமாக நின்று கூலியை வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையைப் போக்காமல் மேடையில் பேசிவிட்டு வந்தவுடன், ஆதிதிராவிட மக்கள் கொல்லைப்புறங்களில் நிறுத்தப்படுகிற சூழ்நிலை இருக்குமானால் அது சரியாக இருக்காது. எவ்வளவுதான் திட்டங்களைப் போட்டாலும் அந்தச் சமுதாய மக்களுக்கு சலுகைகள் கிடைப்பது என்பது மிகவும் அரிதாக இருக்கிறது. இது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

அடுத்து, இன்றைக்கு ஆதி திராவிட மக்களுக்கு 18 சதவீதம் வேலைவாய்ப்பில் உரிமை அளிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அரசாங்க அலுவலகங்களாக இருந்தாலும், மற்ற தனியார் நிறுவனங்களாக இருந்தாலும் இந்த 18 சதவீத இட ஒதுக்கீடு என்பது இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு வேலை வாய்ப்பில் 18 சதவீத வாய்ப்பினைக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் உரிய சட்டத்தை இயற்றினால்தான் அந்தப் பலன் அவர்களுக்கு கிடைக்கும். இல்லையென்றால் படித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்கு தேவையான அளவிற்கு வேலைவாய்ப்பு கிடைக்காது.

அதேபோல பள்ளிக்கூடங்களில் படிக்கிற மாணவர்களிடம் இன்றைக்கு பள்ளிகளில் சேரும்போது ஒவ்வொருவரின் ஜாதி பற்றியும் ஆசிரியர்கள் முதல் வகுப்பிலேயே பதிவு செய்து விடுகிறார்கள். 5-வது வகுப்பு முடித்து 6-வது வகுப்பு போகிறபோது அங்கேயும் ஜாதிச் சான்றிதழ் கேட்கிறார்கள். அடுத்து 6-வதிலிருந்து 10-வது வரை படித்து முடித்து, பிளஸ் ஒன்று போகிறபோதும் ஜாதிச் சான்றிதழைக் கேட்கிறார்கள். அதேபோல அவர்கள் படித்து முடித்து வேலைக்குப் போகிறபோதும் ஜாதிச் சான்றிதழைக் கேட்கிறார்கள். அந்த நிலையில் மாணவர்களுக்கு இந்த ஜாதிச் சான்றிதழ்களைப் பெறுவதில் மிகுந்த தொல்லைகள் ஏற்படுகின்றன. அவர்கள் இந்தச் சான்றிதழ்களை தாசில்தார் அலுவலகத்தில்தான் வாங்க வேண்டியிருக்கிறது. பணம் கொடுக்காமல் ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரோ சான்றிதழ் வழங்குவது என்பது சரித்திரத்திலேயே இல்லை. ஆகவே என்ன ஜாதியென்று இருந்தாலும், ஆரம்பத்திலே அந்த ஜாதியைப் பதிவு செய்து 5-வது வகுப்பு முடித்து வெளியே வருகிற

போது, அந்த ஆசிரியர்கள் இவர்களை பள்ளர் என்றும், பறையன் என்றும், அம்பலவாணன் என்றும் ஜாதியைக் குறிப்பிட்டுதான் சான்றிதழ் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படுகிற சான்றிதழ்களே கடைசி வரைக்கும் போதுமென்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30).

அதேபோலத்தான் ஆதி திராவிடர் தாலூகா அலுவலகம் கிராமங்களில் ஒருகாலத்தில் ஆதிதிராவிடர்களை நிலப் பிரபுக்கள் அடிமைப்படுத்தி வைப்பதற்கும், அவர்களை பள்ளத்தில் தள்ளுவதற்கும் அவர்களை ஒதுக்கி வைத்தார்கள். அந்தப் பகுதி மக்களை மேட்டுக்குடிக்குக் கொண்டு வரவேண்டும் என்று சட்டம் போடுகிறார்கள். ஆனால் இதைச் சார்ந்த அலுவலகம் எப்படி இருக்கிறது என்றால் அந்த அலுவலகமும் ஒதுக்குப் புறமாக இருக்கிறது. அங்கே ஒரு நாற்காலி உண்டா ? ஒரு போன் உண்டா ? இன்னும் சொல்லப்போனால் டைப் அடிப்பதற்கு ஒரு இயந்திரம் உண்டா ? ஒரு தாலுக்கா தாசில் தார் அந்தத் தாலுக்கா முழுவதும் போக வேண்டும் என்றால் சைக்கிளில்தான் செல்ல வேண்டி இருக்கிறது. எனவே அவர் எப்படி இந்தப் பணிகளை நிறைவேற்ற முடியும்? எனவே நான் கேட்டுக் கொள்வது, சாதாரண ஒரு ரெவின்யூ தாசில் தாருக்கு, அல்லது ஆர்.ஐ.க்கு இருக்கக் கூடிய அதிகாரம் அல்லது சலுகை கூட ஒரு தாலுக்கா ஆதி திராவிட தாசில்தாருக்கு இல்லை. எந்த அதிகாரமும் கிடையாது. எந்தச் சலுகைகளும் கிடையாது. எந்தச் சலுகைகளும் இல்லாமல், ஒரு தாசில்தார் எல்லாக் கிராமங்களுக்கும் சென்று, ஜனங்கள் கொடுக்கக் கூடிய கோரிக்கைகளை பரிசீலனை செய்து, முடிந்த அளவிற்கு நிறைவேற்றுவதற்கு இன்றைக்கு வாய்ப்பு வசதி இல்லாமல் அந்த அலுவலகம் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. எனவே அவர்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகளை அளித்து, எதிர்காலத் திலே அவர்கள் வேகமாகப் பணியாற்றுவதற்கு அமைச்சர் அவர் கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல் ஆதி திராவிட நலத்துறையின் மூலமாக ஒவ் வொரு மாவட்டத்திலேயும் ரோடுகள் போடுவதற்கு பணம் ஒதுக்கப்படுகிறது. அந்த ரோடுகளை சர்வே செய்கிறார்கள். ஆனால் ரோடு எப்படிப் போடுகிறார்கள் என்றால், அதுவும் இங் கொன்றும் அங்கொன்றுமாகப்போடுகிறார்கள். சிவப்பு மண்ணால் கப்பி ரோடுகளைப் போடுகிறார்கள். இந்த சிவப்பு மண் எங்கள் பகுதியில் உள்ள வள்ளத்திலே அதிகமாக கிடைக்கிறது. அப்படிப்



போட்டவுடன் ஒரு மழை வந்தால், போதும், அந்த மண்ணெல் லாம் பொல பொலவென்று கரைந்து போய் விடுகிறது. எனவே இந்த மண்ணால் ரோடுகளைப் போடாமல், ஆதி திராவிட மக்கள் உள்ள அந்தத் தெருக்களில் நல்ல ஜல்லி போட்டு ரோடு களைப் போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஒவ்வொரு ஆண்டும் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் திரும்ப வருவதாகச் சொல்லப்படுகிறது. எனவே நான் கேட்டுக் கொள்வது அந்தப் பள்ளத்தில் வாழக் கூடிய மக்கள் இருக்கும் இடங்களில் கருங்கல் ஜல்லி போட்டு ரோடு களைப் போட்டால், அவர்கள் நடந்து செல்வதற்கும், பக்கத் தில் உள்ள நகரங்களுக்குச் செல்வதற்கும் வசதியாக இருக்கும். அப்படி பணம் ஒதுக்குகிறபோது திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகிய இரண்டுக்கும் சேர்த்து பணம் ஒதுக்கப்படு கிறது. திருச்சியிலேயிருந்து தான் கப்பி வரவேண்டி இருக் கிறது. அப்படித் தொலைவில் இருந்து வரக் கூடிய அளவிற்கு இருப்பதால், அதிகமான தொகையை ஒதுக்கிக் கொடுக்க வேண் டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இலவச புத்தகம். இப்போது ஜுன் மாதம் குழந்தைகள் பள்ளியில் சேருகிறார்கள். எப்போது கொடுக்க வேண்டும் ? குறைந்த பட்சம் ஜுன் மாதம் 15 தேதிக்குள்ளாக கொடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள் கிராமங்களிலே படிப்பது மிகக் குறைவு. அப்படியே படித்தாலும், முழுமையாகப் படிப்பதற்கு அவர்களுக்கு பொரு ளாதார வசதி கிடையாது. அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு புத்தகம் ஜுன் மாதம் 15ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டும். இப்போது ஆகஸ்டு மாதம் வந்தாலும் கூட அவர்களுக்குக், கொடுக்கவில்லை. எனவே இந்த நிலையைப் போக்க வேண் டும்.

அதேபோல் இப்போது இலவச உடை கொடுக்கிறார்கள். ஆண் பிள்ளைகளுக்கு டிரவுசரும், பெண் குழந்தைகளுக்கு பாவாடை, ஜாக்கெட்டும் கொடுக்கிறார்கள். இப்படிக் கொடுக் கிறார்கள் என்றால், அவைகளை தைத்துக் கொடுக்கிறார்கள். அப்படி தைத்துக் கொடுக்கிறபோது, அந்தக் குழந்தைகளுடைய வயதுக்குத் தகுந்தபடி தைத்துக் கொடுப்பதில்லை. அத னுடைய அளவும் சரியாக இருப்பதில்லை. எனவே நான் கேட்டுக் கொள்வது, குழந்தைகளுக்கு, மாணவர்களுக்கு துணி யையும், தையல் கூலியையும் கொடுத்தால், அவர்கள் இன் றைக்கு இருக்கக் கூடிய புதிய மாடல்களுக்குத் தகுந்தபடி தைத் துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

அடுத்து, இப்போது வீடு கட்டுவதற்கு 6 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். இந்தப் பணம் எப்படிப் போதும் ? யூனியன் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள், அப்படிச் செய்யும் போது, 1,500 ரூபாய் அளவிற்கு, அவர்கள் யாருக்கு வீடு கட்டிக்

கொடுக்கிறார்களோ அவர்கள் மண், கல் எல்லாம் கொண்டு வந்து வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதையெல் லாம் பார்க்கும்போது, சின்னக் கூடு மாதிரிதான் அவைகள் தெரிகிறது. திண்ணை கிடையாது. பின்னாலே, இடம் யில்லை. இந்தப் பக்கம் சீமை ஓட்டைப் போடுகிறார்கள். பின்னாலே சமையல் செய்வதற்கு போதிய இடம் இல்லை. யாரா வது வந்தால் படுப்பதற்கு திண்ணை இல்லை. எனவே இந்த 6 ஆயிரம் ரூபாயிலே அவர்கள் வீட்டைக் கட்ட முடியாது. இப்போது சிமெண்ட் 90 ரூபாய், 100 ரூபாய் விற்கிறது. கல் 350, 400 ரூபாய் விற்கிறது. எல்லாப் பொருட்களின் விலை யும் ஏறிவிட்டது. எனவே குறைந்த பட்சம் 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தான் அவர்கள் ஒரு நல்ல வீட்டைக் கட்ட முடியும். அதுவும் இந்த வீடு கட்டுவது என்பதை காண்ட்ராக்டர்களிடத் திலே விட்டு விட்டார்கள். அவர்கள் கட்டினால் எப்படி யிருக்கும் ? அவர்கள் பாதி எடுத்துக் கொண்டு போய் விடுகிறார் கள், இடைத் தரகர்கள் பாதி. மிச்சம் எவ்வளவு ? கட்டிய ஒரு வருஷத்தில் மழை பெய்தால், மண் எல்லாம் கரைந்து விடுகிறது. அப்படி வெடித்து விடுகிறது. திரும்பியும் ரிப்பே ரானால், அதைச் செய்ய முடியாது. எனவே இவைகளை எல்லாம் பரிசீலிக்க வேண்டும்.

இப்போது காலனி கட்டிக் கொடுத்து, அதிலே பல பேர்கள் குடியிருக்கிறார்கள். இயற்கையினால் பாதிப்பு வருகிறபோது, மற்றவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு எந்த விதமான வசதியும் கிடையாது. எனவே அவர்களுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்க வேண்டும்.

அதே போல் ஆதி திராவிட மாணவர்களுக்கு 60 ரூபாய் கொடுக்கிறார்கள். 95ரூபாய் என்று ஸ்டைபன்ட்கொடுக்கிறார்கள். இது எப்படி கட்டுபடியாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். இப்போது எவ்வளவு விலைவாசிஏறி யிருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். எனவே ஒரு பிள்ளைக்கு 2 ரூபாய் என்பது போதாது. குறைந்த பட்சம் ஒரு மாணவனுக்கு 5 ரூபாய் வீதம் 150 ரூபாய் கொடுக்க வேண்டும்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் திருத்துறைப் பூண்டி, கோட்டூர், வடிவூர் ஆகிய இடங்களில் 3 ஆதி திராவிட விடுதிகள் இருக்கின்றன. இப்போது ஒன்று கட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

இப்போது அந்த விடுதிகள் எப்படி இருக்கிறது என்றால் எப்போது கட்டினார்களோ அப்படியே இருக்கிறது. வெள்ளை அடிக்கவில்லை. ரிப்பேர் செய்யப்படவில்லை. குறிப்பாக திருத்துறைப்பூண்டியில் அப்படி ஒரு விடுதி இருக்கிறது. சமை யல் பாத்திரம் எப்போது வாங்கிக் கொடுத்தார்களோ அந்த



நிலையிலேயே இருக்கிறது. 10 வருடம், 20 வருடம் ஆன பிறகும் அந்த பழைய பாத்திரங்களே நெளிந்து சுளிந்து கெட்டுப் போய் இருக்கிறது. அதை உடனடியாக ரிப்பேர் செய்து புதிய மாடலுக்கு தகுந்தபடி இதை எல்லாம் சீர் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது போல கறவை மாடு வாங்க 2,500 ரூபாய் தரப்படு கிறது. அதில் 1,250 ரூபாய் மானியம். இது ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. 1,250 ரூபாய் மானியம் அதில் இடைத்தரகர்கள், டாக்டர்கள் அந்த விலவள வங்கி பணம் தருகின்ற மேனேஜர்கள் இவர்களுக்கு போய் மீதி என்ன என்று சொன்னால், மாடு எங்கே போய் வாங்க வேண்டும் என்றால் திருவொற்றியூரில் போய் வாங்க வேண்டும். அல்லது திருச்சி மாவட்டத்தில் போய் வாங்க வேண்டும். மாடு வாங்குகிற வர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அந்த மாட்டின் மார் பில் என்னமோ ஒரு தழையை வைத்து அடைத்து அது நன்றாக வீங்கியிருக்கிறது. அங்கே பார்க்கிறபோது மடியும் பெரிய தாக இருக்கிறது, பாலும் நிறைய வருகிறது. ஆனால் வாங்கிப் போய் வீட்டில் கட்டினால் மடியும் ஒட்டிப் போகுது, பாலும் சரியாக வரவில்லை என்று சொல்கிறார்கள். இப்படி மோசம் நடக்கிறது. இதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்குக் கட்டளை இட்டு இப்படி மோசடி இல்லாமல் எந்த சலுகையை அளிக்கிறோமோ விவசாயிகளுக்கு அது கிடைக்கவில்லை, கிடைக்க வழி செய்ய வேண்டும்.

அதேபோல் 3 செண்ட் மனை எப்படிப் போதும்? 3 செண்ட் நிலம் எவ்வளவு அகலம் இருக்கும். 5 செண்ட்டாவது குறைந்த பட்சம் கொடுக்க வேண்டும். கொடுக்கிற மனையையும் எப்படி எடுத்துக் கொடுக்கிறோம்? தனியார் இடத்தில் எடுக்கவில்லை. சட்டத்தில் ஓட்டை இருக்கிறது. ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். இதில் கணக்கு நிறைய கொடுத்து இருக்கிறார்கள். 20 ஆயிரம் பேருக்கு வீட்டுமனை கொடுக்கப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். கொடுக்க முடியாது. தமிழகத்தில் அதுவும் தஞ்சை மாவட்டத்தில் புறம்போக்கு என்பது மிகவும் குறைவு : கோயில் மனைக்கட்டுகள், இல்லை என்றால் தனியார் நிலங் கள் அங்கே இருக்கின்றன. இவைகளை எடுத்தால் கோர்ட்டில் தடை வாங்கிவிடுவார்கள்.

எனது தொகுதியில் 1967 ஆம் ஆண்டு கோட்டூரில் கோயில் நிலத்தை ஆதி திராவிடர்களுக்கு எடுத்தார்கள். இன்னும் பிரச்சினை தீரவில்லை. அந்த ஆதி திராவிடர்களுக்கு இன்னும் மனைக்கட்டு இடைக்கவில்லை. இதை எல்லாம் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[திரு.எஸ்.என்.இராமசாமி] [1985 ஜுலை 11

ஏழை ஆதி திராவிட மாணவர்கள் தங்கிப் பயில வசதியாக நாசரேத்தில் மாணவர் விடுதி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆதி திராவிட மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் சில் இடங்களில் அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுக்கவேண்டிய நிலை உள்ளது. அப்படிப்பட்ட இடங்களுக்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்து தரப் படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாசரத் பகுதியில் பிள்ளையன்மனை என்ற ஊரிலே ஆதி திராவிட மக்கள் வசிக்கக்கூடிய இடங்களுக்குச் செல்லவேண்டுமானால் பாதை வசதி இல்லாமலும், பாலங்கள் இல்லாமலும் மழைக் காலங்களில் தண்ணீருக்குள்ளே நடந்து சென்று அவர்களுடைய இல்லத்தை அடைய வேண்டிய சூழ்நிலை உள்ளது. அந்த நிலையை மாற்றுவதற்கு, பாலமும், ரோடும் அங்கே போட்டுத் தரும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

அம்பலசேரி என்ற ஆதி திராவிட காலனியில் மிகவும் அதிகமாக ஏழை ஆதி திராவிட மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் நிலம் சொந்தமானது அல்ல. எனவே, அவர்கள் வசிக்கும் இடங்களை அவர்களுக்கே பட்டாசெய்து கொடுக்க வேண்டும். அந்த இடம் புறம்போக்கு ஆகும். ஆனால் வசதியுள்ள பக்கத்து நிலத்துக்காரர்கள் அதை ஆக்கிரமித்து, பாதைகளை அடைத்துள்ளார்கள். அத்தகைய ஆக்கிரமிப்புக்களை அரசு அகற்றித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அதேபோல் நாசரத் பகுதியில் வெள்ளரிக்காய் ஊரணி கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு பாதைகளும், ரோடுகளும் அவர்கள் வசிக்கும் இடங்களில் குண்டும் குழியுமாக இருந்து அவர்கள் அங்கே செல்லமுடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. பக்கத்திலே குளங்கள் இருப்பதன் காரணமாக, மழைக் காலங்களில் குளங்களிலே தண்ணீர் வந்து, அந்தக் கிராமத்திற்கே செல்லமுடியாத நிலை ஏற்பட்டு, அவர்கள் நாசரத் பகுதியிலேயே தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

ஆகவே அரசு உடனடியாக அந்த வெள்ளரிக்காய் ஊரணி கிராமத்திற்கு பாதைகள் அமைத்துத் தரவேண்டும். பாலங்களும் போட்டுத் தரவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலம்காக்க



1985 ஜுலை 11] [திரு. சீ.சிவப்பிரகாசம்]

புதியதாகப் பொறுப்பேற்றுள்ள ஆதிதிராவிட நலஅமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள மானியக் கோரிக்கையினை வரவேற்று, அந்தத் துறையின் சார்பாகச் செய்த, செய்ய இருக்கின்ற, செய்ய வேண்டிய பணிகள் பற்றி என்னுடைய பேச்சினைத் துவக்குகிறேன்.

முதற்கட்டமாக, ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கைமுறை பற்றி ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

ஆதிதிராவிட இன மக்களுக்கு, நடைபெற்று முடிந்த ஆட்சிகளான காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்த சலுகைகளைவிட, மிகமிக அதிகமாக நல்ல பல திட்டங்களை அவர்களுக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு உருவாக்கி செயல்படுத்தி வருகின்றது. அதில் பல்வேறு சலுகைகளை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தி அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்கப்படுத்தியுள்ளது. பெரும் அளவிற்கு அவர்களுடைய வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டு அவர்களும் மனிதர்கள்தான் என்று மதிக்கப்படுகின்ற நிலையை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அவர்களுடைய வாழ்க்கையில் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆதிதிராவிட மக்களின் கல்வி அறிவைப் பெருக்குவதற்கு, தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-ன் சத்துணவுத் திட்டம் பெரும் பலனை இந்தச் சமுதாயத்தில் ஏற்படுத்தி உள்ளது. சத்துணவுத் திட்டம் பற்றிய முழுமையான நன்மையைத் தெரிந்துகொள்ள இந்தச் சமூகத்தினர் அதிகமுள்ள சத்துணவு மையங்களுக்குச் சென்றால் இதன் பலனை நன்றாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் இன்று 100-க்கு 100 குழந்தைகள் கல்வி அறிவு பெற பெரும் வாய்ப்பாக உள்ளது.

ஆதி திராவிடர் துறைக்கு நிதி ஒதுக்கத்தில் கல்விக்காக பாதித் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆதி திராவிட மாணவ மாணவிகள் தங்கும் விடுதி, இலவசப் புத்தகம், இலவசச் சீருடை, சிறப்புப் பயிற்சி போன்ற நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகளுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுக்கவும், சிறப்பாகக் கண்காணிக்கவும் விடுதிகள் உள்ள இடங்களில் பொதுமக்களைக் கொண்ட குழுக்கள் அமைத்து அரசால் வழங்கப்படும் சலுகைகள் முழுமையாகக் கிடைக்கின்றதா என்பதைத் தெரிந்து கண்காணித்துக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டுகிறேன்.

இந்த ஆண்டு புதியதாக 15 விடுதிகள் திறப்பதை வரவேற்றும், விடுதியில் பயிலும் மாணவ மாணவிகளுக்குக் கொடுக்கப்படும் உணவுக் கட்டணத்தைக் கூட்டிக்கொடுக்கவும் அரசு உத்தரவு வழங்க வேண்டுகிறேன்.

அதேபோல் ஆதி திராவிடர்கள் காலனியில் உள்ள வீடுகள் எல்லாம் 15 வருடங்கள், 20 வருடங்களுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதும், காங்கிரஸ் கட்சியின் ஆட்சியின் போதும் கட்டப்பட்டவை. இவைகளுக்கு எல்லாம் இன்றைக்கு மிகவும் சேதாரம் ஏற்பட்டுஇருக்கிறது. குறிப் பாக அதில் குடியிருப்பவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் அவர் களுக்கு வருடத்தில் 140 நாட்கள் தான் வேலை கிடைக்கிறது. மற்ற நாட்களில் பட்டினி இருக்கிறார்கள். ஆகவே சேதாரம் ஆகியவற்றிற்கு அரசே சலுகை அளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக மாநில ஆதிதிராவிடர் நலக் குழு பல ஆண்டுக் காலமாக செயல்படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட குழுக்களை எல்லாம் செயல்படுத்தி ஆதி திராவிட மக்களுக்கு தமிழகத்தில் மேலும் மேலும் ஒரு நல்ல வாழ்வு அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு கிடைக்கக் கூடிய சலுகைகள் நிரந்தரமாகக்கிடைப்பதற்கு அமைச் சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, இந்த தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்கள் எதிர் காலத்தில் சமுதாயத்தோடு சமமாக வாழ வேண்டும் என்றால் சாதி மாநாடுகளுக்கு அமைச்சர்கள் கண்டிப் பாக போகக்கூடியதை மறுத்தால் இந்த நாட்டை ஜாதி என்ற கொடுமையில் இருந்து நீக்க முடியும். ஆகவே, இதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள் நலன் பற்றிய மானியக்கோரிக்கையின் மீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆதி திராவிட மக்கள் நல்லமுறை யில் வாழ்வதற்கு அரசு நல்ல பல திட்டங்களை அறிவித் துள்ளது, அதை நான் வரவேற்கிறேன். இந்தத் திட்டங்களின் பலனாக ஆதி திராவிட மக்களின் கல்வி, பொருளாதாரம் உயர்ந்துள்ளது. அவர்களுக்கு பொருளாதார உயர்வு ஏற்படு மானால் தீண்டாமை ஒழிந்து விடும்.

(முற்பகல் 11–40)

ஆகவே, ஆதி திராவிட மக்களின் பொருளாதார உயர்வுக் காக அரசு தீவிரமாகச் செயல்படவேண்டும். மகாத்மா காந்தி தன் வாழ்நாளையே அவர்களது முன்னேற்றத்திற்காகவும், நலிவு நீங்கவும் அர்ப்பணித்தார். பெருந்தலைவர் காமராஜர்



அவர்கள் ஆதி திராவிட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கல்வியில் அவர்கள் முன்னேறவேண்டும் என்ற எண் ணத்தோடு பின் தங்கிய நிலையை மாற்றவும், தன் ஆட்சிக் காலத்தில் மிகவும் பெரும் நடவடிக்கைகளை எடுத்தார்.

500 பேலர மக்கள் தொகையாகக் கொண்ட கிராமங் களுக்கு பள்ளி என்பதையும் ஆதி திராவிடர்களின் வளர்ச்சிக் காக அவர் ஆக்கினார். தங்கள் உணவுக்காக மாடு மேய்த்த இளம் சிறுவர்களைப் பார்த்து, மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதே போன்று அதன் பயன்கள் பெரும் பகுதி ஆதி திராவிட மக்களுக்கே போய்ச் சேர்ந்தது.

பெரும் தலைவர் அவர்களின் எண்ணம் போல், அதைப் பின் பற்றி, இன்று ஆதி திராவிட மக்களின்பால் அன்பு கொண்டு பல நல்ல திட்டங்களை நிறைவேற்றியும் அறிவித்தும் உள்ள புரட்சித் தலைவர் அவர்களை இந்த நேரத்தில் நான் பாராட்டு கிறேன். என்னுடைய தொகுதி மிகவும் பின் தங்கிய ஏழை மக்கள் அதிகமாக வாழும் பகுதியாகும். என் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்கள் வாழ்கிற கிராமங்கள் தீவுகளைப் போல உள்ள இடங்களாக இருக்கின்றன. எனவே, அவர்களுக்கு பாதை வசதி செய்து கொடுக்கவேண்டும்.

குறிப்பாக, ஆழ்வார் திருநகரி சமீபத்திலுள்ள பத்த வயல் வாசல், பிள்ளைமடை கிராமங்களிலுள்ளவர்கள் நடந்தே சென்று வருகிறார்கள். நாடு சுதந் திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆனபோதும், அந்த மக்களுக்கு இன்னும் ரோடு வசதி கிடைக்கவில்லை. ரோடு போட அந்த மக்கள் நிலம் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுவரை அங்கே ரோடுகள் போட்டுக் கொடுக்கப்படவில்லை.

மேலும் என்னுடைய தொகுதி அனுவரதநல்லூர், புளியங் குளம் கால்வாய், அரியநாயகிபுரம், கருவேலம்பாடு, குருக்கன் குளம், எளுவரமுத்து, வைரவம் ஆகிய கிராமங்களில் ஏழை ஆதி திராவிட மக்கள் மிகுதியாக வசிக்கின்றனர். அவர்களுக்கு தாட்கோ மூலம் வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

அவர்களுக்கு அரசாங்கத்தால் முன்னால் கட்டிக் கொடுக் கப்பட்ட வீடுகள் சரியான முறையில் அமையவில்லை. ஆக வே, அரசாங்கத்தின் சார்பில் புதிதாக அமைத்துக் கொடுக் கின்ற வீடுகள், நல்லமுறையில் சுகாதார வசதியுடனும், அகல மாகவும் அமைத்து 6 ஆயிரம் ரூபாய் என்று இருப்பதை அதி கரித்துக் கொடுக்கவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

[திரு.சீ.சிவப்பிரகாசம்] [1985 ஜூலை 11

விடுதிகளை நன்றாகப் பராமரிக்க, குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை பாத்திரங்கள், வழங்க மாணவ மாணவிகளுக்குக் கொடுக்கப்படும் பாத்திரங்கள், விடுதி பராமரிப்பு போன்றவைகளைச்செய்து கொடுக்கவும், முதற்கண் தீவிரமாகச் செயல்பட்டு, குடிநீர் வசதியில்லாத விடுதிகள் அனைத்துக்கும் நல்ல குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

ஒவ்வொரு மாணவ மாணவியருக்கு, ஒவ்வொரு நேரத்திற்கு சமைப்பதற்காக எடுக்கப்படும் சமையல் பொருட்களை, தங்கும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர், மாணவிகளின் குழுக்களை வைத்து தவறு நேரா வண்ணம் செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்கள் சிறுதொழில்கள் தொடங்க, அரசு மானியம் 25 சதவீதம், தொடக்கச் செலவு 25, வங்கிக் கடன் 50 வழங்கப்படுவதைத் தவறாகப் பயன்படுத்தி மற்ற சமூகத்தினர் பெற்றுக்கொள்வதைத் தடுக்கஅரசு தீவிர கண்காணிப்புக் குழுவை அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு பட்ட மேற்படிப்பு, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., போன்ற தேர்வுகளுக்கு அரசின் சார்பில் பயிற்சி அளிக்கப்படுவதை வரவேற்கின்றேன்.

வேலைவாய்ப்பினைப் பொறுத்தவரையில் இன்று ஆதிதிராவிட பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவீதத்தில் மற்ற சமூகத்தினர் தங்களுடைய இனத்தின் பெயரை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் இனத்துக்கு மாற்றி பல சதவீதப் பணிகளைப் பெற்றுள்ளனர். இதுபற்றி இனிமேலாவது அரசு தீவிர கவனம் செலுத்தி, உண்மையான ஆதிதிராவிட பழங்குடியினத்தவர்கள் பாதிக்கப்படாத அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுத்தவும், இதுசம்பந்தமாக வரும் புகார்களை உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்க தனிக் குழுவை ஏற்படுத்தவும், பல்வேறு அரசு அலுவலகங்களில், பொய்ச் சான்றிதழ் பெற்று கொடுத்துள்ளவர்கள் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கவு ம்எம்.பி.பி.எஸ்., பி.வி.எஸ்.சி., பி.ஈ., பி.எஸ்சி. (அக்ரி) போன்ற படிப்புகளில் பொய்ச் சான்றிதழ் கொடுத்து சேர்ந்து படித்து, அரசின் சலுகைகளை உண்மையானவர்கள் பெற முடியாமல் தடுத்தவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் நடத்தும் கம்பெனிகளில் 18 சதவீதம் வேலைவாய்ப்பு அளிக்கும்படி புதியதாக அரசு கண்டிப்பான உத்திரவு பிறப்பித்து, படித்து வேலை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கும் ஆதிதிராவிட பழங்குடியின் மக்களின் குழந்தைகளுக்கு வாழ்வளிக்க வேண்டுகிறேன்.



1985 ஜூலை 11] [திரு.சீ.சிவப்பிரகாசம்]

தாட்கோ நிறுவனத்தில் வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரை, அரசால் இதுவரை சுமார் 56,000 வீடுகளை இந்த இன மக்களுக்காக கட்டி முடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 10,000 வீடுகளை இந்த ஆண்டு கட்டுவதற்கு அரசு முயற்சியினை மேற்கொள்ள வேண்டுகிறேன். ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி., திட்டங்களின் மூலம் மேலும் பல ஆயிரக்கணக்கான வீடுகளைப் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய மக்களுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்குச் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் செயல்படுவதை அரசு செயல்படுத்தினாலும் இதற்கு அதிகமான அலுவலர்கள் பற்றாக் குறையினால் இந்தத் திட்டம் இன்னும் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பில்லாமல் தடைப்பட்டு வருகின்றது. இதைச் சிறப்பாகச் செயல்படுத்த அரசு சிரத்தையும், நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டுகிறேன். உண்மையான ஆதிதிராவிடர்கள் பயனடையாமல் வசதியுள்ளவர்கள் புரோக்கர் கையில் அகப்பட்டவர்கள் பயனடைகின்ற நிலைமை உள்ளது. இத்திட்டத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்த நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(முற்பகல் 11–50)

ஆதிதிராவிடர் பழங்குடியினர் இனத்தவர்களுக்கு வீட்டு மனை பிரச்னை பல்லாண்டுக் காலமாக காலதாமதப்பட்டுக் கொண்டே வருகின்றது. இதில், குறிப்பாக, ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் பிடிவாதத்தாலும், அந்தத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் செய்கின்ற தவறுகளாலுமே இதில் இந்த இன மக்கள் தங்களுடைய வருவாயை இழந்து தவிக்கின்ற நிலைமையில் உள்ளனர். இதற்கு முன்பு உள்ளது போல் மாவட்ட ஆட்சியர் இடத்தில் நில ஆர்ஜிதப் பணியினைக் கொடுத்துச் செயல்படுத்த வேண்டியும், இதற்கு மத்திய அரசு முக்கியத்துவம் கொடுத்தாலொழிய இந்தப் பிரச்னை தீராத பிரச்னையாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றது. இதற்கு எப்படியேனும் மாற்று வழியினைக் கண்டு பிடித்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தெய்வமாக வணங்கிக் கொண்டிருக்கின்ற ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு வீட்டுமனை நிலம் வழங்க தகுந்த நடவடிக்கையினை அமைச்சர் எடுக்க வேண்டுகிறேன். நிலுவையிலுள்ள வழக்குகளை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர சிறப்பான முயற்சியை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

பழங்குடியினர் இனம் தமிழகத்தில் பரவலாக 5 இலட்சம் பேர்கள் கணக்குப்படி இருக்கிறார்கள். உண்மையான பழங்குடியினர் கணக்கு இல்லை. வாழ்க்கைக்காக ஒருசில இனத்தவர்களில் ஒருசிலர் தவறாக ஜாதியைச் சொல்லி, 5 இலட்சத்துக்கு 1971-ல் வந்துள்ளது. 1981-ல் மக்கட் தொகைக்

கணக்குப்படியும் புதிதாகப் பழங்குடியினைச் சேர்ந்தவர்கள் என்று சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். அந்தக் கணக்கைச் சரியாக எடுத்து, அவர்களுக்கு அரசு உதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவர்கள் வாழ்க்கை, முந்தைய ஆட்சிகளில் இல்லாத வகையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் சிறந்து விளங்குகின்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. இவர்களின் நல்வாழ்விற்காக மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தை சிறப்பாகப் புரட்சித் தலைவர் உருவாக்கிச் செயல்படுத்துவதன்—மூலம் வாழ்க்கை ஓரளவுக்கு முன்னேற்றமடைந்துள்ளது.

கல்வியைப் பொறுத்தவரை உண்டுறைவிடப்பள்ளி என்று பெயர் வைத்து, இதில் உண்டு உறைவிடம் செய்வதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெயரை மாற்றி வைத்து விடுதியை தனியாக வைத்தால் நன்றாக இருக்கும். அதில் மற்றவர்களும் கல்வியைப் பயில்வதற்குச் சிறந்த கவனம் செலுத்த முடியும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும் ஒருசில கோரிக்கைகளை வைக்கிறேன். கலங்காணி ஆதிதிராவிட உயர் நிலைப்பள்ளி 5 ஆண்டுக்காலமாக எஸ்.எஸ்.எல்.சியில் 100 சதவீதம் பெறுகின்றது. இதை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுகிறேன். ஆசிரியர்களைப் போதுமான அளவுக்கு நியமிக்க வேண்டுகிறேன்.

முள்ளுக்குறிச்சிப் பள்ளிக்கு வகுப்பறை இதுவரை கட்டிக் கொடுக்கப்படவில்லை. புதியதாக வகுப்பறை கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன். முள்ளுக்குறிச்சி, வாழவந்திநாடு தங்கும் விடுதி மாணவ மாணவிகள் எண்ணிக்கையை 50 ஆக அதிகப்படுத்த வேண்டுகிறேன். ஆதி திராவிடர்களுக்கு 750 ஆக்கப்படும் என்பதில் இதை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுகிறேன்.

முள்ளுக்குறிச்சி, வாழவந்திநாடு மேல்நிலைப் பள்ளிக்கு இதுவரைக் அறிவியல் ஆய்வகம், கட்டிக் கொடுக்கவில்லை. அதனை விரைவாகக் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தில் புதுச்சத்திரம் ஒன்றியத்தினை 1985-86 தேர்ந்தெடுக்க வேண்டுகிறேன்.

முள்ளுக்குறிச்சி முதல் பங்காப்பட்டி சாலை, சேந்தமங்கலம் முதல் வாசலூர்பட்டி சாலை புதிதாக அமைக்க நிதி உதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலையில் செங்கரை பகுதியில் ஒரு லேம்ப் சங்கம் ஏற்படுத்த வேண்டுகிறேன். பழைய லேம்ப் சங்கத்துக்குப் புதியதாக ஜீப், வாங்கவும் லாரி வாங்கவும் மான்யம் கொடுக்க வேண்டுகிறேன். கழுகுமலையில் ஒரு லேம்ப் சங்கம் புதியதாக அமைக்க வேண்டுகிறேன்.



மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேந்தமங்கலம், முள்ளுக்குறிச்சி, பெரப்பஞ் சோலை, உரைத்தங்கல், கார் கடல்பாடி ஆகிய கிராமங்களையும் சேர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஆர். திருஞானம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலை இன்னும் உயர்ந்த பாடில்லை. காரணம், மத்திய மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தனிப்பட்ட முறையில் கண்காணிப்பு அதிகம் தேவைப்படுகிறது. முழு பலனையும் அனுபவிக்க முடியாமல் பரிதாபமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வருகின்ற பள்ளிகளில், குறிப்பாக, பழங்குடி மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் உள்ள பள்ளிகளில் கல்வித்தரம் மோசமாக உள்ளது. காரணம், அங்கே உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதில்லை. உதாரணமாக, எனது ஏற்காடு தொகுதியைச் சேர்ந்த அரனூத்து மலை நடுநிலைப் பள்ளியில் எட்டு ஆசிரியர்களுக்கு நான்கு ஆசிரியர்கள் மட்டுமே இருக்கிறார்கள். எட்டாம் வகுப்பு வரை நான்கு ஆசிரியர்கள் எவ்வாறு சிறந்த முறையில் பாடபோதனையைக் கற்றுத் தர முடியும். மேலும் பல ஆசிரியர்களை நியமிக்குமாறு நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு, தற்பொழுதுள்ள விலைவாசியைக் கருத்தில் கொண்டு உணவுச் செலவை அதிகரிக்க வேண்டும்.

பழங்குடியினர் வாழும் கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகளை, ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் கொண்டு வந்து உறைவிடப் பள்ளிகளாக மாற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்வராயன் மலையில் உள்ள உறைவிடப் பள்ளியில் முறைகேடுகள் அதிகமாக நடப்பதால், ஆசிரியர்கள் அனைவரையும் மாற்றி அமைக்க வேண்டுகிறேன். கல்வராயன் மலை வாழ் மக்களுக்கு அவர்கள் நிலங்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். ஒவ்வொரு நடுநிலைப் பள்ளிக்கும் ஒரு தமிழ் ஆசிரியரும், உடற்பயிற்சி ஆசிரியரும் நியமனம் செய்ய வேண்டும். மலைப் பகுதிகளில் உள்ள துவக்க, நடுநிலைப் பள்ளிகள் சரியாக இயங்கவில்லை என்றும் ஆசிரியர்கள் சரியாகப் பள்ளிக்குச் செல்வதில்லை என்றும் பலவிதமான புகார்கள் வருகின்றன. அரசு அதிகாரிகள் அடிக்கடி அப்படிப்பட்ட பள்ளிகளைப் பார்வையிடாத காரணத்தால்தான் கல்வியின் தரம் தாழ்ந்து கொண்டே வருகிறது. ஆகவே, அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரனூத்துமலையில் இயங்கி வரும் நடுநிலைப் பள்ளியில் சுமார் 300-க்கும் அதிகமான மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். அதனை ஒரு உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளுக்குக் கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டும்.

தொழில் வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் மேலும் கைத்தறித் தொழிற்சாலை அல்லது வேறு பெரிய தொழிற்சாலைகளை அமைத்து, பயிற்சி கொடுத்து அவர்களை வேலைக்கு அமர்த்தினால் ஓரளவு பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வழிவகை கிடைக்கும். இதையும் அரசு கவனித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க வேலைவாய்ப்பைப் பொறுத்தமட்டில், மத்திய அரசு வேலை வாய்ப்பில் ஆதிதிராவிடர்களுக்கு 15 சதவீதமும் பழங்குடியினருக்கு 3 சதவீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் இரண்டு இன மக்களுக்கும் ஒட்டுமொத்தமாக 18 சதவீதம் என உள்ளது. ஆகவே மாநில அரசும் ஆதிதிராவிடர்களுக்கு 15 சதவீதமும், பழங்குடி மக்களுக்கு 3 சதவீதமும் இட ஒதுக்கீடு செய்து வேலை வாய்ப்பு அளிக்க ஆணை வழங்க வேண்டும். இப்போதைய நிலையில் பழங்குடி மக்களுக்கு அதாவது மலைவாழ் மக்களுக்கு இட ஒதுக்கீடு சரியாகக் கிடைக்கவில்லை ; தாழ்த்தப்பட்டவர்களே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்கிறார்கள். அதனால் மலைவாழ் மக்களுக்கு தனியாக 3 சதவீதம் அல்லது 5 சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுவசதியைப் பொறுத்தமட்டில், மாநில அரசு தாட்கோவின் மூலம் 100 கோடி ரூபாயில் இலவச வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இந்தத் தொகை எந்த எந்த மாவட்டங்களில் செலவிடப்பட இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பழங்குடி மக்களுக்கு மிக மிகக் குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப் படுவதால் சொற்ப அளவிலான வீடுகள்தான் ஒதுக்கப்படுகின்றன. ஒரு வருடத்திற்கு



இதற்கான ஒதுக்கீட்டில் ஐந்தில் ஒரு பகுதி பழங்குடி மக்களுக்கு என இலவச வீடுகள் கட்டிக்கொடுக்க தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலைவாழ் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கு தனியாக அதிகத் தொகை ஒதுக்கி இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களில் ஒருவர் இறந்துவிட்டால் ஈமச்சடங்கு செய்வதற்கு 50 ரூபாய் என்று இருப்பதை குறைந்தது 200 ரூபாய் என்ற அளவுக்காவது உயர்த்தி வழங்க வேண்டும். அதற்கான ஆணையை அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை வசதிகளைப் பொறுத்தமட்டில், என்னுடைய ஏற்காடு தொகுதியில் உள்ள அரனூத்து மலைக்கு தற்போது புதிய சாலை அமைக்கப்பட்டுள்ளது. அரனூத்து மலையில் இருந்து அலுவலகம் செல்லவும் தினசரி மார்க்கெட்டுக்குச் செல்லவும் மற்ற காரியங்களுக்காகச் செல்லவும் வேண்டுமென்றால் சுமார் 70 கிலோமீட்டர் தூரம் சென்றால்தான் சேலத்தை அடைய முடியும். அதனால் வீண் செலவும், காலதாமதமும் ஏற்படுகிறது. ஆகவே சிறுமலை என்னும் கிராமத்தில் இருந்து தர்மபுரி மாவட்டம் பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதியில் உள்ள கிராமமான கோம்பூர் என்னும் கிராமம் வரை சுமார் 8 கிலோ மீட்டர் மலைப் பகுதிகளில் சாலை ஏற்படுத்திக் கொடுத்தால் 30 கிலோமீட்டர் தூரம் சென்றால் சேலத்தை அடைய முடியும். அது மட்டுமல்லாமல் என்னுடைய தொகுதி முழுவதையும் இணைத்து அங்குள்ள மலைவாழ் மக்கள் அத்தனை பேர்களும் பயனடைவார்கள். எனவே, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த பாதை வசதி ஏற்படுத்தப்பட்டால் பழங்குடி மக்களுக்கு நல்ல பயன் கிடைக்கும். அதோடு குடிநீர் வசதி போன்றவற்றையும் விரைவிலே செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்லமுறையில் பாதை வசதிகளைச் செய்துகொடுத்தால் அவர்கள் சிரமம் இல்லாமல் தங்களுடைய பணிகளுக்குச் சென்றுவர முடியும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

பழங்குடி மக்களில் இதுவரை யாரும் வாரியங்கள் அல்லது கார்ப்பரேஷன்களின் தலைவராக நியமனம் செய்யப்படவில்லை. ஆகையால் வாரியம் அல்லது கார்ப்பரேஷன் தலைவர் பதவியில் குறைந்தபட்சம் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த ஒருவரையாவது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நியமனம் செய்ய வேண்டும் என்று தமிழக பழங்குடி மக்கள் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்'

அது மட்டுமல்லாமல் பழங்குடி மக்களுக்கு இப்போது மேலவையில் பிரதிநிதித்துவம் இல்லை என்பதால் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு எம்.எல்.சி. பதவி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழக அமைச்சரவையில் பழங்குடியினர் ஒருவருக்கு அமைச்சர் பதவி இதுவரையில் கொடுக்கப்படவில்லை. பழங்குடி மக்களில் ஒருவருக்கு அமைச்சர் பதவி கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை தமிழக பழங்குடி மக்கள் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய கருத்துக்களையும், வேண்டுகோள்களையும் இந்த மாமன்றமும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி, ஆணை வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

(நண்பகல் 12—00)

**மாண்புமிகு திரு. எ. அணாசலம்:** மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பதில் அளிப்பதற்கு முன்னால் என்னைத் தேர்ந்தெடுத்த வரகூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன். ஆதி திராவிட பழங்குடி மக்களுடைய நல்வாழ்வுக்காக தமிழக அரசு துரிதமான பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகின்றது. குறிப்பாக கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு வீட்டுவசதி, அடிப்படை தேவைகள் போன்றவற்றைச் செயல்படுத்தி வருகின்றது. படிப்புக்கு முன்னுரிமை கொடுத்து இந்த அரசு ஒன்றாம் வகுப்பிலேயே இருந்து 12-ம் வகுப்பு வரை இலவசமாகக் கல்வி தருகின்ற ஒரு சூழ்நிலையல ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. அதேபோல் ஆதி திராவிட மக்கள் ஆங்கிலக் கல்லூரியில் படிக்கின்ற போது அவர்களுக்கு மெட்ரிகுலேஷன் என்ற படிப்புக்கு 4-ஆம் வகுப்பிலிருந்து 10-ஆம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் இலவசமாகவே அளிக்கப்படுகின்றன.

அதேபோல் மெட்ரிகுலேஷன்லே மத்திய அரசின் மூலமாகவும் மாநில அரசின் மூலமாகவும் இரண்டு திட்டமாகச் செயல்படுத்தி 12,000 ரூபாய் வருமானம் உள்ள ஆதிதிராவிடர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு கொடுக்கின்ற சலுகைக்காக அதாவது டே—ஸ்காலர் என்று சொல்லப்படக்கூடிய அந்தக் குழந்தைகளுக்கு மாதத்திற்கு 50 ரூபாயிலிருந்து 120 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தமிழக அரசைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் மூலமாகச் சலுகை பெறா





தவர்களுக்கும் மாநில அரசின் மூலமாக இந்த மெட்ரிக்குலேஷன் என்ற ஆங்கிலக் கல்வி படிப்பதற்கு 600 மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன. 75 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரையில் செலவிடப்பட இருக்கின்றது. இதற்காக 26,000 ரூபாய் மிகைப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இதன் மூலமாக பயன் அடைகின்ற ஆதிதிராவிட மக்களின் குழந்தைகள் 59,000 என்பதையும் அதிலே 300 பேர் பழங்குடியின மாணவர்கள் என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தைத் தவிர திறமை வாய்ந்தவர்களை ஊக்குவிக்கின்ற திட்டம் என்றும், காந்தியடிகள் நினைவு படிப்புத் திட்டம் என்றும் பல திட்டங்களை தீட்டி இந்த அரசு 4,000 பேர்களிலிருந்து கிட்டத்தட்ட 8,000 பேர்கள் பயனடைகின்ற வகையில் 53 லட்சத்திலிருந்து 57 இலட்சம் வரையில் இந்த மக்களுக்காகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட மக்கள் இனத்திலிருந்து கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்களைப் பொறுத்தவரையில் 2,35,000 ரூபாய் செலவில் அவர்களுக்கும் இந்த திட்டம் பயன் அளிக்கின்றது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் துப்புரவுப் பணி புரிகின்ற மக்களுக்கு—கிட்டத்தட்ட 600 மாணவர்களுக்கு ஆண்டுக்கு 6,84,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்துடன் ஆதி திராவிட மக்களின் படிப்பு வசதியைப் பொறுத்த வரையில் அந்தப் பள்ளிகள் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாக கொண்டு தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆதி திராவிடர் மூலமாக நடத்தப்படுகின்ற பள்ளிகள் 952 ஆகும், அதிலே பயனடைகின்ற மாணவர்கள் 2.09 இலட்சம் பேர்கள், அதிலே பழங்குடியினருக்காக நடத்தப்படுகின்ற பள்ளிகள் 160 ஆகும். அதன் மூலம் பயனடைகின்ற மாணவர்கள் மொத்தம் 9,800 பேர்கள்.

அடுத்தபடியாக விடுதி பற்றி இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஆதி திராவிட மாணவர்கள் இலவசமாக பயிலுகிறபோது அவர்களுக்கு உறைவிடமாக இருந்து கொண்டிருக்கின்ற 713 விடுதிகள் இருக்கின்றன. அதிலே பழங்குடிமக்களுக்காக 22 விடுதிகளும் ஆக மொத்தம் 735 விடுதிகளும் இங்கே இருக்கின்றன. இதன் மூலமாகப் பயனடைகின்ற ஆதி திராவிடப் பழங்குடியின மாணவர்கள் 50,238 பேர்கள் ஆவார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்றேன்.

அதேபோல் விடுதிகள் கட்டணத்தைப் பற்றி நிறையபேர் பேசினார்கள். இருந்தாலும் மொத்த விடுதிகள் 735 என்று இருந்தாலும் அரசுக் கட்டிடங்களில் இயங்குவது 216 ஆகும். அதைப்போல் இதுவரையில் கட்டி முடிக்கப்பட்ட விடுதிகளின் எண்ணிக்கை 157 ஆகும். கட்டப்பட இருக்கின்ற விடுதிகள் 80 என்பதை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். கல்வியினைப் பொறுத்தவரையில் இந்த அரசு அதிக தொகையை ஒதுக்கீடு செய்திருந்தாலும் 1985—86-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் 7 கோடியே 90 இலட்சம் ரூபாய் அளவிலே இங்கே தீட்டப் படும் நான்-பிளான் என்று சொல்லப்படுகின்ற இந்தத் திட்டத்தில் வராத பல திட்டங்களின் மூலமாகவும் 26 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவிடப்பட இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன் மூலமாகப் பயன் பெறுகின்ற, 1971-லே படித்தவர்கள் எண்ணிக்கையைவிட இப் போது 11.43 விழுக்காடு உயர்த்தியிருக்கிறார்கள் என்பதைத் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் பற்றி நிறையப் பேர் எடுத்துச் சொன்னாலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆதி திராவிட மக்கள் மொத்தத்தில் 88.81 இலட்சம் பேர் இருக் கிறார்கள். அதிலே விவசாய வேலை பார்க்கின்ற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் 7.40 லட்சம் பேர்கள். அவர் களுக்காக நீர்ப் பாசனத் திட்டங்கள், கிணறுகள் வெட்டுதல் உழவு மாடுகள் வழங்குதல் போன்ற இப்படிப்பட்ட திட்டங்களுக்காக 1985—86-ல் கிட்டத் தட்ட 10.13 லட்சம் செலவிடப்பட இருக் கிறது. அதைப்போல சிறு தொழில்கள் பற்றி இங்கே குறிப் பிட்டார்கள். சிறு தொழில் வேலை வாய்ப்பு இப்படிப்பட்ட திட்டங்களுக்காக நடப்பு ஆண்டில் 32.15 லட்ச செலவிலே மேற்கொள்ளப்படும் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பயிற்சி வகுப்புபற்றி சில உறுப்பினர்கள் பேசினார்கள். சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் 4-வது குரூப் பரிட்சை எழுதுவதற் காக ஆதிதிராவிட மக்களுக்கு 2 மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது. 12 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ள ஆதி திராவிட மக்களின் பிள்ளைகளுக்கு டெல்லியிலே உள்ள டாக்டர் ராவின் படிப்பு மையத்திற்கு குடிமுறை அரசுப் பணித் தேர்வுக்காக பயிற்சி பெறவும் ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. அதேபோல் சட்டப்படிப்பு முடித்து விட்ட ஜூனி யர் வழக்கறிஞர்களாக உள்ள சட்டப்படிப்பு பட்டதாரிகளுக்கு, அவர்கள் பிராக்டீஸ் செய்வதற்காக சட்டப் புத்தகங்கள் வாங்கு வதற்காகவும், அறைகளை அமைத்துக் கொள்வதற்காகவும் 1,500 ரூபாய் வழங்கப்படுகிறது.

வீட்டு மனைகளைப் பொறுத்தவரையில் நிறைய பேர் அதைப் பற்றி பேசினார்கள். ஆதி திராவிட, பழங்குடி மக்க ளின் பாதுகாவலராக செயல்படுகின்ற புரட்சி தலைவர் அவர்





களின் ஆட்சியிலே ஒரு ஆதித் திராவிட குடும்பத்திற்கு 3 சென்ட் மனையாவது இருக்க வேண்டும் என்று குறிக்கோள் வைத்துக் கொண்டு, இன்றுவரையில் தனியார் நிலங்களை அரசு ஆர்ஜிதம் செய்ததன் மூலமாக கொடுக்கப்பட்ட பட்டாக்கள் 4 லட்சத்து 47 ஆயிரத்து 880 ஆகும். அதைப்போல நத்தம் புறம்போக்கு களில் குடியிருக்கின்றவர்களுக்கும், அரசு மூலமாக பட்டா வழங் கப்படுகிறது. புறம்போக்கு நிலங்களில் இருப்பவர்களுக்கும் 8 லட்சம் பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போல இந்த ஆண்டிலே 1985—86-லே ரூபாய் 98,88 லட்சம் அளவிற்கு பயன் கொடுக்கும் வகையில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள்.

வீடு கட்டுகின்ற திட்டத்தைப் பற்றியும் பலர் குறிப்பிட்டார் கள். இதைச் சொல்வதற்கு முன்னால், சில உறுப்பினர்கள் பேசியதற்கு நான் கடைசியிலே பதில் கூறுகிறேன், இந்த அறி விப்பை மட்டும் முதலிலே சொல்லிவிடுகிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் திகைப்பிலே இருக்க வேண்டாம்என்று சொல்லி, பிறகு அவர்களுக்கு பதில் சொல்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் தாட்கோ மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் கிட்டத்தட்ட 1974-லே யிருந்து 1985 வரை 71,397 வீடுகள், கட்டி முடிக்கப்பட்டு விட்டன ஆனால் இந்த ஆண்டிலே குறிப்பாக 1985—86-லே தாராளமாக 10 ஆயிரம் வீடுகளைக் கட்டுகின்ற ஒரு திட்டத்தை மேற் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த நிறுவனம் மட்டுமல்லாமல் என். ஆர். இ. பி. என்ற தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இருக்கிறது. அதிலே 9 ஆயிரத்து 358 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 6-வது ஐந் தாண்டு திட்டத்திலே 1985—86-லே 8 லட்சம் வீடுகள்—மன்னிக் கவும் 8 ஆயிரம் வீடுகள் கட்டுகின்ற ஒரு நிலையிலேஇருக்கிறோம். அதைப்போல ஆர். எல். இ. ஜி. பி. திட்டம் மூலமாக 1985—86லே 8,820 வீடுகளைக் கட்டுகின்ற ஒரு நிலையில் இருக்கிறோம். ஆதி திராவிட கிராம வீட்டு வசதி த்திட்டத்தின் மூலமாக 6-வது திட்டம் முடிய கட்டி முடிக்கப்பட்டிருக்கும் வீடுகள் 1 லட்சத்து 56 ஆயிரம் ஆகும்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் இந்த வீடுகள் கட்டு வதற்காக வழங்கப்படும் உதவித் தொகையை 6 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக.உயர்த்த வேண்டும் என்று கேட்டார்கள். அதைப் பத்தாயிரமாக அறிவிக்கின்ற ஒரு சூழ்நிலை அரசின் பரிசீ லனையில் இருக்கிறது என்பதை நான் சொலல்க் கடமைப்பட் டிருக்கிறேன்.

[ திரு. எ. அருணாசலம்] [1985 ஜூலை 11

ஆதி திராவிடர்களைப்பற்றி இங்கே பேசிய உறுப்பினர்
கள் கூட மிகவும் வருத்தப்பட்டு குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதி
திராவிட மக்கள் திருமணத்தை நடத்தும்போது, அவர்கள்
திருமணம் முடித்ததற்குப் பிறகு அங்கே சாப்பாடு பரிமாறக்
கூட இடம் இல்லை என்று வருத்தமாகக் குறிப்பிட்டார்கள்.
அதை நான் கேட்கிறபோது என்னுடைய கண்களிலிருந்து கண்
ணீர் வருகிற அளவிலே அவர்கள் வருத்தமாக சொல்கிற நிலை
இருந்தது. அதைப் போக்குவதற்காகத்தான் இந்த ஆண்டிலே
இரண்டு இடங்களில் சமூகக் கூடங்களை அரசு அமைக்கவிருக்
கிறது. ஒவ்வொரு கூடத்திற்கும் ஒரு லட்சம் ரூபாய் என்ற
அளவில் இரண்டு லட்ச ரூபாய் செலவில் இந்தச் சமூகக் கூடங்
களைக் கட்டுகிற வகையில் அரசு செயல்பட்டு வருகிறது.
1985—86-ம் ஆண்டில் இதற்காகும் செலவு ரூ. 5.00 லட்ச
மாகும்.

(பிற்பகல் 12.10)

அடுத்து மயான வசதியைப்பற்றி எடுத்துச்சொல்லாத
உறுப்பினர்களே இல்லையென்று நான் நினைக்கிறேன். மாண்பு
மிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் மயான வசதியைப்பற்றி
எடுத்துச் சொன்னார்கள். இதற்கு 1985—86-ம் ஆண்டிற்கு
20 லட்சம் ரூபாய் செலவில் ஒதுக்கப்பட்டு அவைகள் அமைக்
கப்படவிருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அடுத்து தீண்டாமை ஒழிப்பைப்பற்றி உறுப்பினர்கள்
மிகவும் சிறப்பாகபேசினார்கள். ஆமைகளில் மிகவும்கொடிய
ஆமையாக தீண்டாமையைச் சொல்லலாம். இந்த ஆமையைப்
போக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய அரசியலமைப்புச்
சட்டத்தின் கீழ் பி.சி.ஆர். கோர்ட் மூலமாக கிட்டத்தட்ட 21
நடமாடும் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. குறிப்
பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திலும், மற்றும்
திருச்சி, மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களிலும் நான்கு
சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

தீண்டாமை ஒழிப்பை வெளிப்படுத்துகிற வகையில் 9-ம்
தேதி இரவு ஒரு திரைப்படத்திற்கு ஏற்பாடு செய்திருந்தோம்.
எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தார்கள். குறிப்
பாக எட்டு பெண் உறுப்பினர்களில் ஆறு பெண் உறுப்பினர்
கள் வந்திருந்தார்கள். அவ்வளவு அக்கறையோடு ஆதிதிராவிடர்
நலத்தை கருத்தில் கொண்டு அந்தத் திரைப்படத்தைப் பார்ப்
பதற்காக வந்திருந்த உறுப்பினர்கள் அத்தனைபேருக்கும் நன்றி



1985 ஜூலை 11] [ திரு. எ. அருணாசலம்.]

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்று தீண்டாமை ஒழிப்பு
பிரச்சாரப்படமான தீர்த்த யாத்திரை என்ற படம் காட்டப்
பட்டது. நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். இதுபோன்ற
படங்களைக் காட்டுவதற்காக தனியாக வேன் கொடுக்
கப்பட்டிருக்கிறது. அதற்காக 1984—85-ல் 33 ஆயிரம்
ரூபாய் செலவு செய்திருக்கிறோம். அதற்காக பிரச்சாரம்
செய்வதற்காக அரசு தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி
அளித்துள்ளது. இந்தத் தொண்டு நிறுவனங்கள் பொது
இறை வழிபாடு மற்றும் கோவில்களில் விளக்கு பூசை செய்வதற்
காகவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. 36 ஆயிரம் ரூபாய்,
அரசு அதற்காக ஒதுக்கியுள்ளது, தீண்டாமை ஒழிப்பு உதவி
மற்றும் ஆலோசனை வழங்க கிராம அளவில், மாவட்ட அளவில்
குழுக்களை அமைக்க அரசு ஆணை வழங்கியிருக்கிறது. அதைத்
தான் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். வெல்
பேர் கமிட்டி போடவேண்டுமென்று கேட்டார்கள்.

அடுத்து சமபந்தி போஜனம் என்பதை அறநிலையத்துறை
மூலமாக மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அரசு சிறப்
பாக செயல்படுத்தி வருகிறது என்பதை நான் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஆலயத்திற்கே வராதே என்ற நிலையி
யிருந்து, இன்றைக்கு ஆலயத்திலே உணவு அருந்துகிற சூழ்
நிலையை ஏற்படுத்தித் தந்த இந்த அரசிற்கு நாம் எல்லோரும
நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து வழக்குகளைப் பற்றி உறுப்பினர்கள் சொன்னார்
கள். பி.சி.ஆர். கோர்ட்டிலே 11,101 வழக்குகள் பதிவு செய்
யப்பட்டாலும், அதிலே தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள்
4,400 ஆகும். அதிலே புலன் விசாரணைக்குப்பிறகு காவல்
துறையினரால் முடிக்கப்பட்டது. 1,287 வழக்குகள் ஆகும்.
நிலுவையில் 58 வழக்குகள் இருக்கின்றன.இன்னும் நிறைய இருந்
தாலும் அதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இந்த
வழக்குகள் சம்பந்தப்பட்டவரையில் பி.சி.ஆர். கோர்ட் என்
பது தனியாகவே செயல்பட்டு வருகிறது. போலீஸ் நிர்வா
கத்திலே இதனைச் சொல்லவில்லை என்று மாண்புமிகு உறுப்
பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது வேறு, இது
வேறு என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சிறப்பு உள்ளடக்கத் திட்டம், ஸ்பெஷல் கம்போ
னன்ட் பிளான் என்று சொல்வார்கள். அதிலே வேளாண்மை
பராமரிப்பிற்காக, நில சீர்திருத்தம், ஊரக வளர்ச்சி சிறப்
புத் திட்டம், நிலம் மற்றும் நீர்வளம், கால்நடை பராமரிப்பு,
பால் பண்ணை, வனம், சமுதாய காடு, சமுதாய மேம்பாடு,
கூட்டுறவு, மின் அபிவிருத்தி, கிராமம் மற்றும் சிறுதொழில்கள்
சாலை மற்றும் பாலங்கள், கல்வி, மருத்துவம் மற்றும்
பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல், கழிவுநீர்

அகற்றல், வீட்டு வசதி, நகர்ப்புற வசதி, வேலை வாய்ப்பு, ஆதி
திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், ஆகிய இவைகளை
உள்ளடக்கி அந்த சிறப்புத் திட்டத்திற்கு கிட்டத்தட்ட ரூ. 125
கோடியே 34 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான்
மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அதுமட்டுமல்லால் பழங்குடியினர் நல்வாழ்வைப் பற்றி இங்கே
பேசிய உறுப்பினர்கள் பேசினார்கள். சப்-பிளான் என்று ஒரு
துணைத் திட்டத்தை ஏற்படுத்தி, அந்த மக்களுடைய நல்
வாழ்விற்காக, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் வட ஆர்க்
காடு மாவட்டங்களில் 9 தெரிந்தெடுத்த இடங்களில்
செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத்
திட்டத்தின் கீழ், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு மண்
வளப் பாதுகாப்பு, சிறு பாசனம், பட்டுப்புழு வளர்ப்பு; சிறு
தொழில் தேனி வளர்த்தல் போன்ற திட்டங்களுக்காக
1985—86-ல் ஒதுக்கப்பட்ட தொகை 7 கோடியே 62 லட்சம்
ரூபாய் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டு
இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும், பழங்குடி மக்களு
டைய நலத்தைப்பற்றியும், ஆதி திராவிட மக்களின் நலத்
தைப்பற்றியும் மிகவும் சிறப்பாகவும் அந்த மக்களுடைய
சேவைக்காக எப்படி பணி ஆற்ற வேண்டும் என்றும் ஒவ்வொரு
உறுப்பினரும் சொன்னார்கள். இங்கே வெட்டுத் தீர்மானத்
தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 10 பேர்கள் கொடுத்
திருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களையும் நான் இங்கே
சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், திரு
வாளர்கள், பழனிமுத்து, தங்கமணி, கிருஷ்ணமூர்த்தி,
எஸ். என். இராமசாமி, கோ. வீரய்யன், க. பாரமலை, மற்றும்
தீர்த்தகிரி கவுண்டர், ராஜங்கம், திருமதி ஏ. எஸ். பொன்னம்
மாள், மணிமாறன் ஆகியோர்கள் எல்லாம் வெட்டுத் தீர்
மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் வெட்
டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருந்தாலும், நேற்று பேசிய
மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் பேசுகின்ற
போது, தோட்டக்குறிச்சியிலே கலவரம் நடந்தது என்று குறிப்
பிட்டுச் சொன்னார்கள்.

அந்தக் கலவரம் ஏப்ரல் மாதத்திலே நடந்தது. அந்தக்
கலவரம் நடந்த இடத்தைப் பார்ப்பதற்காக, மாண்புமிகு இதய
தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், என்னை முதலிலே
அனுப்பினால், சில பிரச்சினைகள் ஏற்படலாம் என்று நினைத்
தார்களோ என்னவோ, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்
சர் அருமை அண்ணன் திரு நல்லுசாமி அவர்களை அனுப்பி,
அந்த இடத்தைப் பார்த்துவிட்டுவரச் சொன்னார்கள். அதன்
பிறகு 21—4—1985 அன்று அந்த இடத்தைப் பார்வையிட்டு,
அங்கே வசிக்கின்ற மக்களுக்கு நாங்கள் வீடு கட்டிக் கொடுப்ப
தாக ஒரு உறுதிமொழியையும் சொல்லி, மாவட்ட ஆட்சித்



தலைவரை அணுகி, அங்கே வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு
கள் செய்திருக்கிறோம். இந்த நேரத்தில் குறிப்பாக காவல்
துறையைப்பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டு
இருக்கிறேன். காவல்துறை மானியம் நேற்று இருந்தாலும் இன்று
ஆதி திராவிட நலத் துறையின் மானியத்தை வைக்கின்றபோது
இந்தக் காவல்துறை ஆதி திராவிட மக்களுக்குப் பாதுகாப்பாக
இருக்கவேண்டும் என்ற வகையில் இருக்க வேண்டும் என்பதற்
காக இதை ஒட்டி வைத்தார்களோ என்று நான் நினைக்கிறேன்,
காவல் துறையை அடுத்து இந்த மானியத்தை வைத்திருக்கிறார்
கள். எனவே தோட்டக்குறிச்சியிலே 35 பேர்களை
ஒரு அறையிலே வைத்து, அங்கே அவர்களை தீயிடச் சென்ற
போது அதைத் தடுத்து, அவர்கள் உயிரைக் காப்பாற்றி
இருக்கிறார்கள். அப்படிப்பட்ட காவல் துறையை நான்
பாராட்டி, அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

எனவே அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களுக்கு, சிறப்புத்
திட்டத்தின் மூலமாக உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்
கின்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே தான் மத்திய
அரசு உதவியோடு இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட
கையை நானும், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர்
அவர்களும், அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்ட
மன்ற உறுப்பினர்களும், அங்கே சென்று வழங்கினோம்
பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்
கிறேன்.

குறிப்பாக திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசுகின்ற
போது, 1983—84-ல் அவர்களுடைய ஊரிலே கிட்டத்தட்ட
4,309 வீடுகள் கட்டிக் கொடுப்பதாக இருந்தது. இந்தத்
திட்டத்தின் கீழ் 14 வீடுகள்தான் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்
கின்றன என்று சொன்னார்கள். தற்போது 70 வீடுகள் கட்டி
முடிக்கப்பட்டுவிட்டன. அங்கே வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற
பணி துரிதமாக நடந்து கொண்டு வருகிறது என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு, கிட்டத்தட்ட 14
பேர்கள் பேசினார்கள். அவர்களுடைய பெயரையும் நான்
குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசும்
போது, வீடு குருவிக் கூடுபோல் இருக்கிறது என்று சொன்
னார்கள். அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கின்ற வீடுகள், அவர்
களுடைய வாழ்க்கை வளத்திற்குத் தேவையான அளவில் 201
சதுர அடியில் கட்டிக் கொடுக்கிறோம். அவர்களுடைய வாழ்க்
கையும் மிகச் சிறப்பாக அளவோடு இருக்கவேண்டும் என்ற
அடிப்படையிலேதான் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்
கப்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது குருவிக்கூடு அல்ல, நாம் நினைத்தால் அதை பெரிய வீடு என்று வைத்துக்கொள்ளலாம்.

(பிற்பகல் 12-20)

அதைப் போலவே சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சகோதரி சரோஜா அவர்கள் பேசும் போது ஐ.டி.ஐ. வேண்டும் என்று சொன்னார்கள். அது என்னுடைய துறை இல்லை என்றாலும் சம்பந்தப்பட்ட துறைக்கு சொல்லி நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவகுமார் அவர்கள் பேசும் போது தன்னுடைய தொகுதிக்கு பல சலுகைகள் வேண்டும் என்றும், நடுநிலைப் பள்ளி திறக்க வேண்டும் என்றும்கூறினார்கள், அதுவும் அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன், இங்கே ஒரு உறுப்பினர் இன்னிசை முழங்கி இந்த ஆதிதிராவிட நல மானியத்தை வரவேற்றுப்பேசினார் அவர் பேசுகிறபோது நான் உண்மையில் அந்த பாட்டை கேட்டுக்கொண்டே இருந்தேன். இருந்தாலும் மாண்புமிகு அரக்கோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. கே. இராசு அவர்கள் அவருடைய தொகுதியைப் பற்றி பேசினார்கள். அவருடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 1,728 வீடுகள் கட்டிக்கொண்டு இருக்கிறோம் என்பதை அவருக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இந்த அமைச்சரை நான் இன்று தான் பார்க்கிறேன் என்று அவரைப் பொறுத்த வரையில் அவர்தான் என்னை வந்து பார்க்க வேண்டும். ஏதாவது கோரிக்கை இருந்தால் அவர் கொடுத்தால் நான் செய்யத் தயாராக இருக்கிறேன். அவர் பார்க்கவில்லை என்பது அவர் தப்பு தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லக்கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி லட்சுமி அவர்கள் மிகவும் வருத்தத்தோடு சொன்னார்கள் .பட்டா வழங்குவதில் அரசு அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்றார்கள். கட்டாயமாக தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே செருப்பு ஸ்தக்கும் தொழிலாளர்களுக்கு இப்போது நாம் தாட்கோ மூலமாக அதுவும் கதர் வாரியம் 5ஆயிரம் ரூபாய் கொடுத்து மக்கள் நடமாடும் சாலைகளில் அந்த பங்குக் கடையை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறார்கள்.



அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு செல்லமுத்து அவர்கள்
சிறப்பான குடிநீர் வசதி வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்
கள். அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. பால சுப்பிர
மணியம் அவர்கள் இதைப் பாராட்டி பேசியிருக்கிறார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள்
தீண்டாமை பற்றி மிகவும் தீவிரமாக எடுத்துச் சொன்னார்கள்.
மாண்புமிகுஉறுப்பினர்தமிழரசன்,குடியரசுகட்சியைச் சேர்ந்தவர்
மிகவும் காலம் கடந்து விட்டது என்றும் இந்த மானியத்
தொகையை கொடுக்கும் போதே காலத்தை நிர்ணயிக்கிறார்கள்
என்றும் சொன்னார்கள் .அதிகமாக பேசுவதாலே அதிகமான
பணம் ஒதுக்கி அதிகமான திட்டங்கள் நிறைவேற்றப்படுவது
இல்லை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். கொஞ்சமாகப்
பேசி, அதிகமாக சேவை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில்
நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு.எஸ். என். இராமசாமி,
காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவர்
குறிப்பிடுகிறபோது மத்திய உணவு, சத்துணவுபற்றிச் சொன்
னார்கள். கிட்டத்தட்ட தமிழகத்தைப் பொறுத்த வரையில்
85 லட்சம் குழந்தைகள் இதனால் பயனடைகிறார்கள். அதிலே
மாண்புமிகு இதய தெய்வம் அவர்களின் கருணையால் 39 ஆயிரம்
ஆதி திராவிட மக்கள் இதனால் பயனடைகிறார்கள் என்று குறிப்
பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே புத்தகம் விநியோகிக்கப்படவில்லை என்று மாண்பு
மிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் குறிப்பிட்டார்கள்.
இந்த புத்தகங்கள் 30–6–1985ல் ஒவ்வொரு பள்ளிக்கும்
விநியோகிக்கப்பட்டு விட்டது என்பதை இப்போது சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவப்பிரகாசம்
அவர்கள் பராட்டிப் பேசினார்கள். அதைப்போலவே மாண்புமிகு
உறுப்பினர் திரு. திருஞானம் அவர்கள் பேசும்போது ஆசிரியர்கள்
தவறு செய்கிறார்கள். அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று சொன்னார்கள். தவறு செய்யும் ஆசிரியர்கள்
மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்
கிறேன்.

இப்படி பல சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மானிய கோரிக்
கையை மிகவும் பாராட்டி வரவேற்று அவரவர்களுடைய
தொகுதியில் இருக்கின்ற பலபிரச்சினைகளைச் சொன்னார்கள்.
நான் முடிந்த அளவுக்கு எங்கெங்கு பிரச்சினை இருக்கிறதோ
அதைநீங்கள் நேரடியாகக் கொடுத்தாலும் நான் போகின்ற இடத்
தில் கொடுத்தாலும், அரக்கோணத்திற்கு நான் போன வாரம்
கூட போயிருந்தேன், அவர் தொகுதிக்கு 2, 3 தடவை போய்
சுற்றிவிட்டு வந்து இருக்கிறேன், நான் போகின்ற இடங்களில்

எல்லாம் பிரச்சினைகளை தாய் உள்ளத்தோடு கேட்டுக்கொண்டு இருக்கிறேன் என்பதை மட்டும் சொல்லி இங்கே பேசிய அனைவருக்கும் ஆதி திராவிட, பழங்குடிமக்கள் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும், நன்றி தெரிவித்துக் கொண்டு வெட்டுத் தீர்மானம் கொடுத்த அனைவரும் அதை திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த ஆதி திராவிட பழங்குடி மானியத்தை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா. : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு சில ஐயங்கள் இருக்கின்றன. அதை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக கேட்டுத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். மதம் மாறிய கிருத்துவர்கள் மீண்டும் மதம் மாறினால் இவர்களுக்கு ஆதி திராவிடர் சான்றிதழ் அளிப்பதற்கு தாசில்தார் அலுவலகம் மறுக்கிறது. அது குறித்து உங்கள் விளக்கத்தையும், நாமினேஷன் காண்டிராக்ட் என்று சொல்லுவது அரிசனங்களுக்கு கொடுக்கக்கூடிய ஒன்று, அதுஏழு ஆயிரம் ரூபாய் வரையில்கொடுக்கலாம் என்று ஜி. ஓ. இருக்கிறது. ஆனால் அந்த ஒப்பந்தத்தை போய் கேட்கிற போது அரிசனங்களுக்கு சால்வன்சி சர்ட்டிபிகேட் இருந்தால்தான் கொடுக்க முடியும் என்று என்னிடத்தில்கூட வேல்போர் அதிகாரி சொல்லுகிற நிலைமை இருக்கிறது.

ஆகவே, அதைப்பற்றி தங்களுடைய தீர்மானமான முடிவையும், ஆதி திராவிடர்கள் மறைந்தால், அந்தச் சாவினை எடுப்பதற்கு 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அந்த ரூபாய் 50, சாவை எடுப்பதற்குப் போதாது. என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அதனை 100 ரூபாயாக உயர்த்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம். : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது; இந்த சால்வன்சி சர்ட்டிபிகேட் பற்றி சொல்லி, நாமினேஷன் அளவில் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது எப்படி இருக்கிறது என்று அதற்குரிய விளக்கங்கள் இங்கே இப்போது தெரியவில்லை, இருந்தாலும் முன்பு நான் சொன்னது போல், இந்த அரிஜன மக்கள் மதம் மாறுவதைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் திரு. ஆறுமுகம் அவர்கள்கூட நன்றாகக் குறிப்பிட்டார்கள். மதம் மாறியதால் மனம் மாறாதுஎன்று, ஆகவே, மதம் மாறாமல் இருப்பது நல்லது. ஆகவே, மதம் மாறியவர்களுக்கு கொடுத்துக்கொண்டே போனால், எல்லோருமே மதம் மாற ஆரம்பித்து விடுவார்கள், அது இப்போது கிறிஸ்துவருக்கு—ஆதி திராவிட கிறிஸ்துவருக்குக் கொடுக்கப்படுகிறது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, கிறிஸ்துவர்களாக இருக்கின்ற போது நீங்கள் ஆதி திராவிட கிறிஸ்துவர்கள் என்று சொல்வதிலே நான் குற்றம் சொல்லவில்லை. கிறிஸ்துவர்கள் இந்துக்களாக மாறுகிறார்கள். அந்த முறைப்படி ஆரிய சாமஜத் தில் போய் சேர்ந்து, அந்த மதத்தை எல்லாம் கற்றுக்கொண்டு டிரெயினிங்-இல் பாஸ் செய்ததற்குப் பிறகு அந்த சர்ட்டி பிகேட்டைக் கொண்டு வந்து,—கெஜட்டிலே வருகிறது, இந்துக் களாக மாறிவிட்டார்கள் என்று,—அந்த கெஜட்டை எடுத்துக் கொண்டு போய் தாசில்தாரிடம் கொடுத்தால் கூட, அவர் சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கு, அவர் இந்து ஆதி திராவிட சமூ கத்தைச் சேர்ந்தவர் என்று கொடுப்பதற்கு மறுக்கிறார். அதைப் பற்றித்தான் நான் உங்களிடத்தில் விளக்கம் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, அமைச்சரவர்கள் நேற்று ஆற்றிய உரையில்—கொள்கைக் குறிப்பில்— தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய விகிதாச்சாரம் சொல்லுகிற நேரத்தில், ஆதி திராவிடர்கள் 18·35 விழுக்காடு என்றும் மலைஜாதி வாழ் மக்கள் 1·07விழுக்காடு என்றும் சொல்லி மொத்தம் கூட்டினால் 19·42 விழுக்காடு ஆதி திராவிட மலை ஜாதி மக்கள் சதவிகிதம் வருகிறது. எனவே, வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு செய்கிறபோது இப்போது 18 சதவிகிதம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏறத்தாழ 20 சத விகிதம் இருக்கக்கூடிய மக்களுக்கு வேலைவாய்ப்பில் 20 சதவிகிதம் ஒதுக்குவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று கேட்பதோடு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு ட்யூட்டர்கள் கொடுக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கிளாரி பிகேஷனில் நீங்கள் உதாரணங்கள் சொல்லிக்கொண்டு போகக் கூடாது நேரம் ஆகிவிட்டது. இன்னும் 3 பில்கள் பாஸ் பண்ண வேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதிகளில் டியூட்டர்களை நியமிக்கிறார்கள். அந்தச் சமயங்களில், பள்ளிகளிலிருந்து ஆசிரியர்களைத் தான் ட்யூட்டர்களாக நியமிக்கிறார்கள். ஆசிரியர்கள் சில நேரங்களில் வருவதும் கிடையாது. வகுப்பு நடப்பதும் கிடையாது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது இந்த ஆசிரியர்களை நியமிப்பதைவிட தனிப்பட்டவர்களை, ட்யூட்டர்களாக நியமிக்க அரசு பரிசீலிக்குமா, அதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 11

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த இட ஒதுக்கீட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். 18 சதவீதம் என்று அரசியல் சட்டத்திலே இருக்கிறது. அதைப் பொறுத்த வரையில், அரசியல் சட்டம் திருத்தப்பட்டால்தான் நாம் ஏதாவது வழி செய்யலாம் என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் சி. பழனிமுத்து, எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண் 31 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 44,09,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

8. அறிவிப்பு.

விளம்பரப் பலகைகள் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 1985

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகள் கையகப் படுத்துதல் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1985) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தனது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.



1985 ஜூலை 11]

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) விளம்பரப் பலகைகள் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 1985.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதைக்கூட எதிர்த்து நான் ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். போது மான கால அவகாசம் கொடுக்கப்படவில்லை..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I have power to waive. I have already waived.

(பிற்பகல் 12-30)

திரு ஜே. ஹேமச்சந்திரன் : நான் என்ன சொல்கிறேன் என்றால், 24 மணி நேரம் டைம்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப் பெறுதவற்கு இரண்டு நாட்கள் முன்னதாக உறுப்பினர்கள் அனைவருக்கும் அச்சட்ட முன்வடிவின் பிரதிகள் கிடைக்கப் பெறவேண்டும். அவ்வாறு கிடைக்கப் பெறாவிட்டால் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். இருப்பினும் பேரவைத் தலைவர், சட்டமுன்வடிவின் முக்கியத் துவத்தைக் கருதி, அத்தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதித் தால், தீர்மானம் மொழியப் பெறலாம். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் எற்கனவே 9-7-1985 அன்றே அச்சிட்டு உறுப்பினர்கள் அனைவருக்கும் முன்னதாக வழங்கப் பட்டுள்ளது. எனவே இதில் எதிர்ப்புத் தெரிவிக்க நியாயம் இல்லை.

சட்ட முன்வடிவின் முக்கியத்துவத்தைக் கருதி நான் இதை அனுமதித்து இருக்கிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகள் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

* 1985 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூலை 11

தலைவர் அவர்களே, சென்னையில் தனியார் நிறுவனங்களுக்கு அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களில் விளம்பரப் பலகைகள் வைக்கும் உரிமை சென்னை மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டு வந்தது. இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமை 1981-ம் ஆண்டுடன் முடிவடைந்தது. எனினும், ஒருசிலர் இந்த உரிமையை மேலும் 5 ஆண்டு காலத்திற்குத் தங்களுக்கு அளிக்க வேண்டுமென சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்கள். மற்றொரு பிரிவினர் சென்னை மாவட்ட ஆட்சியருக்குச் செலுத்தும் ஏலத்தொகையில், உள்ளாட்சி வரி 23 சதவீதம் அடங்கியுள்ளபடியால் மாநகராட்சிக்கு விளம்பர வரி கட்டத் தேவையில்லை என ரிட் மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். இந்த ரிட் மனுக்கள்மீது இன்னும் உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கவில்லை.

சென்னை மாநகராட்சியில் தற்போது சுமார் 900 விளம்பரப் பலகைகள் சாலை ஓரங்களில் உள்ளன. இவைகளில் உரிமம் பெறாத விளம்பரப் பலகைகள் மாநகராட்சியால் அகற்றப்பட்டு வருகிறது. எனினும், நாளுக்கு நாள் உரிமம் பெறாத விளம்பரப் பலகைகள் வைப்பது சென்னையில் அதிகரித்து வருகிறது. மேலும், இவ்வாறு அதிகரிப்பதினால் ஆபாச விளம்பரங்கள் பெருகுவதற்கும் வாய்ப்பு அதிகரித்து வருகிறது. இதனால், உயிர்ச் சேதம் ஏற்படுமளவு பெரும் சாலை விபத்துக்களும் அதிகரிக்கின்றன. இவ்வாறு சில குறிப்பிட்ட தனியார் விளம்பர நிறுவனங்கள் உரிமம் பெற்றோ, பெறாமலோ விளம்பரப் பலகைகள் வைத்து லாபம் அடைவது மட்டுமல்லாமல், போக்குவரத்துக்கு இடைஞ்சலும், விபத்துக்களும் ஏற்படக் காரணமாக இருக்கின்றன. எனவே, அரசே இந்த உரிமைகளை எடுத்துக்கொண்டு, அரசு அனுமதிக்கும் இடங்களில், அரசு அல்லது அனுமதிக்கப்படும் நிறுவனங்கள் மட்டுமே விளம்பரம் செய்ய ஒரு புதிய சட்டம் கொண்டு வர முடிவு செய்துள்ளது.

இச்சட்டம் சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் 10–7–1985 முதல், அதாவது இப்பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட நாளிலிருந்து அமுலுக்குவரும், மற்ற இடங்களில் அரசு அறிவிக்கை வெளியிடும் நாளிலிருந்து அமுலுக்கு வரும். இச்சட்டம் அமுலுக்கு வரும் நாளிலிருந்து விளம்பரப் பலகைகள் மற்றும் அவற்றிற்கான உரிமம் அனைத்தும் அரசுக்குச் சொந்தமாகும். அதுவரை அந்த விளம்பரப் பலகைகளை அனுபவித்து வந்தவர்கள் தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்தி அதற்கான ஈட்டுத்தொகையை ஒரு ஒப்பந்தம் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு ஒப்பந்தம் செய்ய அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஒரு நடுவர் (ஆர்பிட்ரேட்டர்) நிர்ணயிக்கும் தொகையை ஈட்டுத் தொகையாகப் பெற்றுக் கொள்ளலாம். நடுவர் அளிக்கும் ஈட்டுத் தொகை திருப்திகரமானதாக இல்லையென்றால், பாதிக்கப்பட்டவர்கள் தீர்ப்பு ஆயத்திற்கு



136421

1985 ஜூலை 11] [திரு. ப. உ. சண்முகம்]

(ட்ரிபூனல்) மேல் முறையீடு செய்யலாம். இச்சட்டம் அமுலுக்கு வரும் நாளில் உள்ள நிலவரத்திற்கேற்ப ஈட்டுத் தொகை வழங்கப்படும். உரிமம் பெற்று விளம்பரம் செய்தவர்களுக்கு எஞ்சியுள்ள உரிமக் காலத்தில் எவ்வளவு வருமானம் கிடைத்திருக்குமோ அந்த அளவுக்கு ஈட்டுத்தொகை நிர்ணயிக்கப்படும். ஆனால் முறையான உரிமம் இல்லாமல் அல்லது முறையான ஒப்பந்தம் இல்லாமல் விளம்பரப் பலகைகள் வைத்திருந்தால் அவர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்கப்படமாட்டாது. விளம்பரப் பலகைகளுக்குரிய மதிப்பீடுத் தொகை மட்டுமே கொடுக்கப்படும். இச்சட்டம் அமுலுக்கு வந்த காலத்தில் உரிமம் முடிவடைந்திருந்தால், அவர்களுக்கு ஒரு மாத காலத்தில் கிடைத்த வருமானத்தை ஈட்டுத் தொகையாக வழங்கப்படும்.

இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது சிறைத் தண்டனையுடன் அபராதமோ அளிக்கப்படும். தனியார் நிறுவனங்கள் இச்சட்டத்தை மீறினால் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இச்சட்டப்படி,

(1) மத்திய மாநில அரசுக்குச் சொந்தமான விளம்பரப் பலகைகள்.

(2) அரசு அனுமதி அளிக்கும் வேறு எந்த நிறுவனங்களுக்குச் சொந்தமான விளம்பர பலகைகள்.

(3) தனியார் நிறுவனங்கள், தாங்கள் தொழில் நடத்தும் இடங்களிலோ அல்லது கட்டிடங்களிலோ உள்ள அந்த சம்பந்தப்பட்ட விளம்பரப் பலகைகள்.

(4) ஒரு இடத்தின் பெயர் அல்லது கட்டிடத்தின் பெயர் கொண்ட விளம்பரப் பலகைகள் ஆகியவைகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

விளம்பரம் செய்ய இடங்களைத் தேர்ந்தெடுக்க

(1) மாவட்டக் காவல்துறை அதிகாரி அல்லது துணை காவல் துறை ஆணையர்.

(2) உள்ளாட்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றும்

(3) ஐந்து அரசு அதிகாரிகளுக்கு மிகாமல் அரசால் நியமிக்கப்படுபவர்களடங்கிய குழு அமைக்கப்படும்.

இச்சட்டத்தை நிறைவேற்றத் தேவையான விதி முறைகளையும் உடனடியாகத் தயார் செய்யப்படும்.

இச்சட்ட முன்வடிவிற்கு இந்திய அரசு அனுமதி பெறப் பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு பேரவையிலும் சட்டமன்ற மேலவையிலும் நிறைவேறிய பிறகு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறப்படும். எனவே, மாநிலத்திலுள்ள அனைத்து விளம்பரப் பலகைகளையும் மற்றும் அவற்றிற்கான உரிமை களை அரசு கையகப்படுத்திக்கொண்டு வரப்படும் இச்சட்ட முன்வடிவினை இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 38/1985) .. .. .. உறுப்பினர் களைக் கொண்ட சட்டமன்றப் பேரவையின் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பெற வேண்டும் ".

திரு. எம். செல்லமுத்து : நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜே. ஹேமச்சந் திரன் (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாஸ் மீது தனியே ஒரு அமெண்ட்மெண்ட் இருக்குமானால் அந்த க்ளாஸ் வரும்பொழுது டிஸ்கஷன் வைத்துக் கொள்ளலாம். ஆனால், பொதுவாக, பில்லையே செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று சொல்லும்போது, இப்பொழுது அதைப் பிரேரேபிப்பதுதான் முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது பற்றி. மாண்புமிகு மணிமாறன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை அதிகமாக ஆகியிருப்பதற்கு ஏற்ப, விகிதத்தை அதிகப்படுத்த முடியுமா என்று கேட்டார்கள். அதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டியதில்லை. அரசே முடிவெடுக்க லாம். அரசு அதை ஆய்ந்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் மிக முக்கியமான ஒரு சட்டம் என்ற காரணத்தினாலே தான் மக்கள் பல முறையில் பாதிக்கப்படுகிற வாய்ப்பிருக் கிறது என்ற காரணத்தினால்தான் இந்தச் சட்டத்தை நிறைவேற்று வதற்கு முன்னால் விரிவான முறையில் ஆய்வு செய்ய வேண்டியது





தேவை என்று நாங்கள் எண்ணுகிறோம். அதனாலே இதை ஒரு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி, ஆய்வுக் குழு நல்லமுறையில் அதைப் பரிசீலனை செய்த பிறகு சட்டம் ஆக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறோம்.

ஆபாச விளம்பரங்களைத் தடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இந்த அவையிலேயே வைக்கப்பட்டது. ஆபாச விளம்பரங்கள் தடை செய்யப்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், ஆபாசச் சுவரொட்டிகளைத் தடை செய்வது என்ற நோக்கத்தோடு, இங்கு கொண்டு வந்திருக்கிற சட்டம் ஒரு சில கெடுதல்களை ஏற்படுத்துகிற முறையிலே அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தச் சட் டத்தை இன்று நிறைவேற்றுவதற்குச் சொல்லப்பட்டிருக்கிற காரண காரிய விளக்கத்திலேயும், அதே போன்று அதனுடைய இன்னொரு பக்கத்திலேயும் Declaration as to the policy of the State என்ற முறையிலே, அரசியல் சட்டத்தினுடைய 39-வது ஷரத்திலே பி. அன்ட் சி. அடிப்படையிலே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் சட்டத்திலே 39-வது ஆர்ட்டிக்கில் கீழே சொல் லப்பட்டிருக்கிறது. மக்களுடைய பொருளாதார ஏற்றத் தாழ்வு நீக்கப்படுவதற்கான நடவடிக்கையை எந்த முறையிலே எடுத்துக் கொள்ள முடியுமோ அந்த முறையிலே நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12—40)

ஆனால் அந்த முறையிலே இது எந்த அளவுக்குச் சரியாக இருக்கும் என்பதைப் பொறுத்தவரையில் சில கருத்து வேறுபாடு களுக்கு இடம் இருக்கிறது. இப்படி அரசு விளம்பரத்தை தன் னுடைய மோனாபலியாக, ஏகபோகமாக எடுத்துக் கொள் வதன் மூலம் வருவாயை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று சொல்கிறார்கள். ஓரளவுக்கு அரசுக்கு வருவாய் உயர்வு கிடைக் கலாம். ஆனால் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். இன்று பொருளாதார ஏற்றத் தாழ்வைச் சரிக்கட்டு வதற்காக கான்ஸ்டிடியூஷனுடைய டைரக்டிவ் பிரின்சிப்பிளினு டைய நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிற இந்த அரசு நாங்கள் ஏற்கெனவே சொன்னதை ஏன் கேட்க வில்லை? பொருளாதார ஏற்றத் தாழ்வைச் சரிக்கட்ட நிலப் பிரபுக்களிடம் குவிந்துக் கிடக்கிற நிலத்தை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுங்கள் என்று டைரக்டிவ் பிரின்சிப்பில் நோக் கத்தோடு கொடுங்கள் என்று பல தடவை இந்த மன்றத்திலே கருத்துச் சொல்லப்பட்ட பிறகும் இந்த மாதிரியான ஒரு சட்டம் கொண்டு வரப்படவில்லை. இன்று நிலப் பிரபுக்களுடைய கையில் குவிந்துக் கிடக்கிற நிலங்களைக் குத்தகை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று, டைரக்டிவ் பிரின்சிப்பில் கொள் கையை ஏற்றுக் கொண்டு, சட்டம் கொண்டு வர முன்வராத இந்தச் சர்க்கார் இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிலப் பிரபுக்களிடம் நிலம் குவிந்து கிடக்கிறது என்று சொன்னார்கள். எந்த நிலப் பிரபுவிடம் எவ்வளவு நிலம் குவிந்திருக்கிறது என்று சொன்னால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் பல நிலப் பிரபுக்கள் கையில் ஆயிரம் ஏக்கர், 2,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. லான்ட் சீலிங் ஆக்ட் வந்த பிறகு பினாமி முறையில் அவர்கள் கையிலேயே அந்த நிலம் இருந்து வருகிறது. அதை இந்த அரசு ஏற்றுக் கொண்டு, அந்த பினாமி முறையை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்றி, மத்திய சர்க்காருக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டு, அவர்கள் அனுமதி அளிக்கவில்லை என்று இந்த அவையிலேயே அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை இந்த அமைச்சர் அவர்களும் அறிவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இன்றைக்கு தமிழ் நாட்டில் பல நிலப் பிரபுக்கள் கையில் பினாமி முறையில் அல்லது மற்ற முறைகளில் 1,000 ஏக்கர், 2,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்தச் சொத்துக்களுக்கு அவர்கள் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பட்டியலை வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களுக்குப் பின்னால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

இந்த நேரத்தில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இப்படிப்பட்ட பொருளாதார ஏற்றத் தாழ்வைச் சரிக்கட்டும் வகையில் கொண்டு வரக் கூடிய சட்ட முன்வடிவுகளை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் பொருளாதார ஏற்றத் தாழ்வை இது எந்த அளவுக்குக் குறைக்கப் பயன்படும் என்பதற்குச் சில விளக்கங்களைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவில் "The Government or such other authorities as me the authorised bythe Government should alone erect hoardings at such convenient and select place." All existing hoardings should be acquired by the State Government for a Public Purpose. என்று சொல்லப்பட்டிருகிறது. அப்படி என்றால் இன்று சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் அல்லது மத்திய தரமான நகரங்களைப் பொறுத்த வரையில் சில இடங்களில் சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் அவர்களுடைய வீடுகளில் ஒரு பகுதியை விளம்பரத்திற்கு என்று ஒரு கம்பெனிக்குக் கொடுத்து அதன் மூலம் ஆதாயம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தினால் என்ன நடக்கும் என்றால் அரசு அந்த இடங்களை எல்லாம் கையகப்படுத்திக் கொள்வதின் மூலம் இப்படிப்பட்ட சாதாரண, நடுநிலை மக்கள்



பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படலாம். அவர்களுக்கு அரசு என்ன சொல்கிறது என்றால் மார்க்கெட் வால்யூபடி என்ன கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்கும் என்று. இன் றைக்கு இருக்கக்கூடிய முறையில் மார்க்கெட் முறைப்படி காம் பன்சேஷன் கொடுக்கலாம். ஆனால் இன்றைக்கு சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் பல மிடில் கிளாஸ் பீப்பிள் தங்கள் வீட்டில் ஒரு சிறு பகுதியை அட்வர்டைஸ்மெண்டுக்குக் கொடுத்து, அதன் மூலம் வருவாய் பெற்று குடும்பத்தை நடத்தக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தினால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். அதே நேரத்தில் அரசு என்ன சொல்கிறது ? 'It is only the Government or any other authority or officer specially authorised by the Government' அப்படி என்றால், அரசு இந்த அவையிலே ஒரு சில மாதங்களுக்கு முன்னால் திரு. குமரி அனந்தன் அவர்களுடைய ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது இன்பர்மேஷன் மினிஸ்டர் அவர்கள் சொன்னார்கள்.

இன்று பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற விளம்பரங் கள்கூட தனியார்களின் ஏஜென்சிக்குக் கொடுக்கப்படுகின்றது என்றால், அதன் காரணமாக அரசுக்கு நஷ்டம் ஏற்படவில்லை என்றால் அதுவல்ல பிரச்சினை. தனியார் ஏஜென்சிகளுக்குக் கொடுக்கப்பட்டு அந்த இடங்களை அவர்கள் வைத்துக் கொண் டிருக்கிறார்கள் என்றால் பிறகு யாருக்குக் கொடுக்கப்படும்? அரசுக்கு வேண்டியவர்களுக்கு வருவாய் ஏற்படுத்திக் கொடுக்க ஒரு ஏற்பாடாகத் தான் இது அமையும். அப்படிப்பட்ட அபாயம் இந்தச் சட்டத்தில் இருக்கின்றது. ஆகவே நடுத்தர மக்கள் ஒரு விதத்தில் இதனால் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அரசுக்கு வேண்டியவர்களுக்கு ஆதாயம் தரக்கூடிய வகையில் உள்ள ஒரு அமைப்பாக மாற்றுவதற்காகத்தான் ஒரு ஏற்பாடாக இதனை மாற்றுவது என்பது தான் இந்தச் சட்டத்ினுடைய நோக்கமாக அமைகின்றது. அதுமட்டுமல்ல.

இந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அதிகாரங் களை வைத்துப் பார்த்தால் ஏஜென்சிகளுக்கு இதைக் கொடுப் பதன் மூலம் அவர்கள் மிஸ்யூஸ் பண்ணுவதற்கான வாய்ப்பை இந்தச் சட்டம் ஏற்படுத்துகின்றது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கும் மேலாக இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் Section 3(e). "hoarding means any screen of boards or frame work or other support,—

(i) intended for exhibiting advertisment, or

(ii) on which any advertisement has been exhibited."

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையிலும், மற்ற பொது ஸ்தாபனங்களைப் பொறுத்த வரையிலும் அவர்கள் பல மாநாடுகள் சம்பந்தமாகவும், விழாக்கள் சம்பந்தமாகவும், விளம்பரங்கள் செய்யக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஆனால், அப்படிப்பட்ட அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களின் விளம்பரங்கள் பற்றி இதிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. எனவே, இந்தச் சட்டத்தின் மூலமாக இதனை ஒரு ஏஜென்சிக்குக் கொடுக்கின்றபோது நாளை அந்த ஏஜென்சிகள் அவர்களுக்குப் பிடிக்காத அரசியல் கட்சிகள் விளம்பரம் செய்ய விரும்புகின்றபோது, நீங்கள் இந்த இடங்களில் விளம்பரம் செய்யக் கூடாது என்று சொல்கிற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்குக் கூட அவர்களுக்கு இது வாய்ப்பு அளிக்கும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று இன்னொரு பக்கத்தில் என்ன சொல்லப்படுகின்றது என்றால் ''Public place'' means any place (including a road, str et or way, whether a thoroughfare or not, and a landing place) to which the public are granted access, or have a right to resort or over which they have a right to pass''. ஆகவே விளம்பரம் என்பது பல வகையிலும் மக்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத்தால் பப்ளிக் ப்ளேஸஸ் என்பதிலே விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்பது முக்கியமான ஒன்றாகும். எனவே, அந்த விளம்பரங்களுக்கான இடங்களைப் பொறுத்த வரையில் ஏகோபித்து ஒரு சில ஏஜென்சிக்குக் கொடுக்கக் கூடிய ஏற்பாடு சரியல்ல என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது சம்பந்தமாக இன்னொரு பிரச்சினையையும் நான் சொல்ல விரும்புகிறேன். இது சம்பந்தமாக சில கருத்து வேறுபாடுகள் அல்லது குறைபாடுகள் இருந்தால் அதற்காக ஒரு ட்ரிபுனல் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஏதேனும் பிரச்சினை என்றால் அந்த ட்ரிபுனலுக்குப் போக வேண்டும். No appeal under Section shall be preferred aft r the expiry of thirty days எனவே, அதன் மீது அப்பீல் கொடுக்கின்ற வாய்ப்பு கூட இன்றைக்கு எடுக்கப்பட்டு இருக்கின்றது. 30 நாள் அவகாசத்தில் அவர்கள் அப்பீல் கொடுக்கவில்லை என்றால் அவர்களுக்கு எந்த விதமான சிரமம் இருந்தாலும் சரி, எந்தக் கஷ்டம் இருந்தாலும் சரி அதற்கான நிவர்த்தியை ஏற்படுத்திக் கொள்ள முடியாது என்று வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்னொரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற தண்டனையைப் பார்த்தால் மிகப் பெரிய குற்றம் செய்தவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தண்டனைபோல் இருக்கின்றது. அந்த அளவுக்கு அதிகமானதாக இருக்கின்றது.

''Penalty for Offences.............any provision of this Act, or any rule or order made und r this Act or obstructs the lawful exercise of any power conferred by or under thisAct shall be punished with imprisonment for a term which may extend to three years or with fine or





with both''. ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு விளம்பரம் செய்தால் அந்த விளம்பரத்திற்காக மூன்றாண்டுக் காலம் தண்டனையோ அல்லது மூன்று ஆண்டுக்கால தண்டனையோடு அபராதமும் விதிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத்திலே சொல்லியிருப்பதன் தேவை என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

(முற்பகல் 12–50)

இன்று இந்த விளம்பரம் செய்யக் கூடிய நேரத்திலே ஏதேனும் சட்டப்படி விதிகள் மீறப்பட்டிருந்தால் அதற்கென்று தனியாக ஒரு தண்டனை கொடுக்க வேண்டுமே தவிர, இப்படி 3 வருட கால தண்டனை என்பது ஒரு நியாயமான தண்டனை அல்ல என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதைப் போல இன்னொரு விஷயம் என்னவென்றால், இதிலே அரசுக்கு வேண்டியவர்களைக் காப்பாற்றுவதற்கு இன்னும் ஒரு வழி வகுக்கப்பட்டிருக்கிறது. எப்படி என்றால், For example, Rule 25- power to exempt: "Where the Government of their own motion or otherwise, are satisfied that the application of the provisions of this Act would cause undhe hardship to any class of persons owning the hoardings, the Government may, by order, exempt, whether Prospectively or retrospectively, and subject to such conditions if any, as may be specified in the order, such hoardings from all or any of the provisions of this Act.'' என்று இருக்கிறது.

அதாவது இன்றைக்கு அரசைப் பொறுத்த அளவிலே அரசுக்கு வேண்டியவர்களை முன்பாக இருக்கிற பிரபல்யத்தினாலோ, அல்லது பின்னாலே வருகிற பிரபல்யத்தினாலோ அவர்களுக்கு இந்தச் சட்டத்திலேயிருந்து முழுமையாகவோ அல்லது பார்ஷியலாகவோ விதி விலக்கு கொடுப்பதற்கு உள்ள அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது நிச்சயமாக ஒரு மிஸ்-யூசுக்கு வழி வகுக்கும் என்பதைப் பொறுத்த அளவிலே இரண்டு கருத்துக்கு இடம் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இந்த எக்ஸம்ஷனைப் பொறுத்த அளவிலே, யார் முடிவு செய்ய வேண்டியது? 'of their own m tion or otherwise' என்றிருக்கிறது. ஆகவே, அரசைப் பொறுத்த அளவிலே இன்று இப்படி எக்ஸம்ஷன் கொடுப்பதற்கு—எக்ஸம்ஷன் என்று சொன்னால் பெரிய வசதி படைத்தவர்களுக்குக்கூட, இந்தச் சட்டத்தின் கீழ், இந்த ஷரத்தின் கீழ் அதைப் பயன்படுத்தி அவர்களுக்கு விதிவிலக்கு கொடுப்பதற்கான அதிகாரத்தை அரசு வாங்கிக் கொள்கிறது. (மணியடிக்கப் பெற்றது). இன்னும் 2 நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்திலே என்ன சுட்டிக்
காட்ட விரும்புகிறேன் என்றால், இந்த ஆபாச சுவரொட்டிகள்
தடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு புதிய சட்டத்
தைக் கொண்டு வர வேண்டும் என்று இந்த அவையிலேயும்,
வெளியிலேயும் மக்கள் விரும்பினார்கள் என்ற காரணத்திற்காக,
இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்த வாய்ப்பைப் பயன்
படுத்தி சென்னை நகரத்திலேயும், அதைப் போல தமிழகத்தி
லுடைய மற்றப் பகுதிகளிலேயும் விளம்பரம் செய்வதற்கான
உரிமையை ஒரு ஏக போக உரிமையாக அரசு ஏற்றுக் கொண்டு,
தனிப்பட்ட நபர்களைப் பொறுத்த வரையிலும், பொது ஸ்தாப
னங்களைப் பொறுத்த வரையிலும் உள்ள விளம்பரம் செய்வதற்
கான உரிய எல்லா வாய்ப்புக்களையும் அரசே ஏற்றுக் கொள்கிற
முறையில் வந்திருக்கக்கூடிய ஒரு சட்டமாகத்தான் இந்தச் சட்டம்
இருக்கிறது. இந்தச் சட்டத்தின் ஆப்ஜெக்ட்ஸ் மற்றும் ரீசன்ஸிலே
Many cf the adveitiseme ts are obscene. The,e has been in the recent
past a haphazard growth of ho:rdings in different cities and towns in
the State leading to traffic hazards and n:merous accidents',
என்று சொல்லப்பட்டிருக்கிறது. விபத்துக்களை ஏற்படுத்துகிற
முறையிலே அல்லது மற்ற முறையிலே, டிராபிக் பிரச்சினைகள்
போன்றவைகள் இதனால் ஏற்படுகிறது என்று சொன்னால் தற்
போதுள்ள சட்டப்படி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்
டுமோ அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமே
தவிர (மணியடிக்கப் பெற்றது). இதோ முடித்து விடுகிறேன்.
....ஆகவே நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சட்
டத்தை ஆய்வுக்குழுவிற்கு அனுப்பி அதை நல்ல முறையிலே
பரிசீலித்து, இதை இன்னும் மிக நல்லசட்டமாகக் கொண்டு
வந்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு
விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்
வடிவினை ஆய்விற்கு எடுத்துக் கொள்கிற இந்த நிலையில் நான்
சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக
சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இவ்வளவு அவசர அவசரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு
வருவதற்கு என்ன நிர்ப்பந்தங்களுக்கு இந்த அரசு உள்ளாகியிருக்
கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இ
தச் சட்டமன்றத்திலே பலமுறைகள், பல ஆண்டுகளாக பேச
படுகிற விஷயம். " அப்சீன் போஸ்டர்ஸ், ட்ராபிக் அசார்ட்ஸ்
ஆகிய இவைகளைப் பற்றிப் பேசியிருந்தும்கூட இவ்வளவு நாள்
கழித்து, திடீரென்று " ஓவர் நைட் " கொண்டு வந்திருக்கிறார்
கள். இரண்டு நாட்கள்கூட சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள்
இதனைப் படிப்பதற்கு, புரிந்து கொள்வதற்கு நேரம் கொடுக்
காமல், அதுவும் தங்களுடைய விசேஷ அதிகாரங்களை எல்லாம்
பயன்படுத்தி, இப்போது இந்தச் சட்ட முன்வடிவை எதற்காகக்
கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள
முடியவில்லை.



இந்தச் சட்ட முன்வடிவினுடைய உன்னதமான நோக்கங்கள்,
காரணங்கள் ஆகியவை எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட
வேண்டிய விஷயங்கள்தான். அதிலே எந்தவிதமான இரண்டு
கருத்துக்களும் இருக்க முடியாது. விளம்பரம் என்று சொல்கிற
போதே அது மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு சப்ஜெக்ட்.
சட்டத்திலே, சிட்டி முனிசிபல் ஆக்ட்டிலே, அட்வர்டைஸ்மென்ட்
டாக்ஸ் கலெக்ட் பண்ணுவதற்கான ரைட்ஸ் உரிமைகள் மாநக
ராட்சிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சிக்கு என்று ஒரு
சட்டத்தையும் வகுத்து, அதன் மூலமாக, மாநகராட்சிகள்
இயங்கிக் கொண்டிருக்கின்றன.

Wh ther the same objects co:ld not be achived by a simple
amencm t t the City Municipal Act, என்பதுதான் என்னுடைய
கேள்வி. சிட்டி முனிசிபல் ஆக்ட்டிலே சட்ட திருத்தத்தைக்கொண்டு
வந்து இந்தக்காரியங்களுக்கான நோக்கத்தை நம்மால் நிறைவேற்ற
முடியுமா, முடியாதா என்று தான் நான் கேட்கிறேன். மாநில
சட்டத்துறை, அதுவும் தமிழக அரசின் சட்டத்துறை மிகுந்த
திறமையானது என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு.
அந்த அடிப்படையிலே சிட்டிமுனிசிபல் ஆக்ட்டிலே சாதாரண ஒரு
அமென்ட்மென்ட் கொண்டு வந்து இந்த நோக்கத்தை நாம் பெற
முடியுமா, முடியாதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "A Bill to provide for the acquisition of the
right, titl and interests in the hoardings" அதாவது இந்த விளம்பரப்
பலகைகளை 'ரைட்' அவைகளை நிறுத்துவதற்கான உரிமை:
'title and interests in the hoardings' என்று தான் இங்கே சொல்லி
இருக்கிறோம். இங்கே 'amount means, the mount payble under
this Act for the acq.isition of the hoarcing' சரித்திரத்திலேயே
காணாத ஒரு வரலாறு. வரலாறே காணாத ஒரு நிகழ்ச்சி.
எங்கேயோ இருக்கிற ஓட்டை உடைச்சல் பித்தளையை எல்லாம்
இந்த அரசாங்கம் வாங்குகிறது என்ற நிகழ்ச்சியை நான்
இப்போதுதான் பார்க்கிறேன். இந்த விளம்பரப் பலகைகள் என்று
சொல்கிறபோது, வீடுகளிலே, தெருக்களிலே வைத்திருக்கிற
உளுத்துப் போன பலகைகள், பெயிண்ட் அடித்த சில பலகைகள்,
இவைகளை வாங்குவதற்கு இந்த அரசாங்கம் முன்வந்திருக்கிறது
என்றால் அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. By a
stroke of Ordinanc all these things could be declared illegl l...
அதை விட்டுவிட்டு யாரோ வீட்டுக்குள்ளே ஒரு பலகையை
வைத்திருந்தானாம், பெயின்ட் அடித்து எழுதி வைத்திருந்தா
னாம், அதைக் காசு கொடுத்து இந்த அரசாங்கம் வாங்குகிற
அளவிற்கு அது அவசியம் தானா? தேவைதானா என்பதைச்
சிந்தித்துப் பார்க்கிறபோது Tre whole concept is totally wrong—
By on Act the right to keep the hoardings or any publicity materials
can be tak n away by the Corpoaation, or if anybody has al eady
acquired certain rights, comp nsation could be paid and all these
htings could be demolished overnight. கோர்ட்டுக்குப் போய்

ொர்க்கலாம். அவர்களுக்கு உரிமை கொடுத்திருக்கிறோம். அந்த உரிமையை ரத்து செய்வதற்கு மாநகராட்சிக்குஅதிகாரம் இருக்கிறது. நான் என் வீட்டிலே விளம்பரப்பலகை வைத்திருக்கிறேன். அதற்கு வரி கட்டுகிறேன். It is more or less a licence fee அந்த உரிமை எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமையை ரத்து செய்வதற்கு மாநகராட்சிக்கு என்றைக்கும் அதிகாரம் இருக்கிறது.பணம் கட்டினால அந்தப் பணத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளச் சொல்வதற்கு அதிகாரம் இருக்கிறபோது, அதை விட்டு விட்டு அவர்களுக்கு உரிமை கொடுத்து விட்டோமா, ஓட்டை உடைசல் பித்தளை தகரத்தை அடித்து வைத்திருக்கிறார்களா, ஆகவே நான் காசு கொடுக்கிறேன் என்று அதற்கு ஒரு ஆபீசர், அதற்கு ட்ரிபியூனல், அதற்கு ஒரு ஆர்பிட்ரேட்டர், இவர்களை எல்லாம் கண்டுபிடித்து தயாரித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது எந்த ஓட்டை உடைச்சலை, யாருடைய ஓட்டை உடைச்சலை தாங்குவதற்கு அரசாங்கம் தயாராக காத்திருக்கிறது என்பதைத்தான் என்னால் இந்த நேரத்தில் கேட்க முடிகிறது.

அடுத்தபடியாக, இன்னொரு ஆச்சரியமான விஷயம். மாநகராட்சிக்கு அட்வர்டைஸ்மெண்ட் டாக்ஸ் மூலமாக வரவேண்டிய வருமானங்களில் நடக்கிற நிலைமை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எங்கே பார்த்தாலும் சினிமா விளம்பரங்கள். இந்த சினிமா விளம்பரங்களுக்கு எல்லாம் மாநகராட்சி ரெவின்யூ ஆபீசரிடம் சென்று முத்திரை குத்தி வந்து தான் அவைகளை எல்லாம் சுவற்றில் ஒட்ட வேண்டும். ஆனால் இப்போது என்ன நடக்கிறது? 10 ஆயிரம் போஸ்டர்களை அடிக்கிறார்கள். அதிலே 100 போஸ்டர்களுக்கு மாநகராட்சியில் காசு கொடுத்து விட்டு 10 ஆயிரம் போஸ்டர்களையும் ஒட்டிவிடுகிறார்கள். இவற்றைத் தடுத்து நிறுத்தினாலே மாநகராட்சிக்கு ஏராளமான வருமானம் கிடைக்கும்.

[பிற்பகல் 1-00]

அடுத்தபடியாக இன்னும் ஒரு விசேஷமான நிலைமை என்னவென்று சொன்னால், இங்கே அன்டர் கிளாஸ் 24-ன் கீழ் என்ன எக்சம்ஷன் கொடுத்து இருக்கிறார்கள். என்ன எக்சம்ஷன்?

''Under Clause 24 Exemptions—(i): The trade or business carried on within the land or building, upon or over, which such hoarding is erected or to any sale or letting of such land or building or any effects therein or to any sale, entertainment or meeting to be held upon or in such land or building; or''.. ..அதாவது ஒரு வீட்டு வாசலிலே டாக்டர் சௌரிராஜன் என்று ஒரு போர்டு போட்டிருக்கிறார்கள். இதிலே சில பெரிய விளம்பரப்பலகைகளை, வக்கீல்கள், ஆடிட்டர்கள், மற்றும் டாக்டர்கள் ,எல்லாம் போட்டுக் கொள்கிறார்கள். அல்லது ஒரு நிர்வாகம் இருக்கிறது. அதனுடைய உரிமையாளர்கள் பெரியதாக விளம்பரப்படுத்துகிறபோது, that is exempted. அந்த வீட்டிலே நடக்கின்ற நிகழ்ச்சிகள், அதை விளம்





பரப் படுத்துவது, அதற்கு நாம் விளம்பரத்தில் எக்சம்ஷன் கொடுத்திருக்கிறோம். ஒரு பெரிய கம்பெனி இருக்கிறது, அவர்கள் பெரிய லெட்டரிலே எழுதுகிறார்கள். உதாரணமாக Tarapore Towers, Macmillan and Co., Glaxo Laboratory என்று எழுதியிருக்கிறார்கள். இந்த இடத்திலே நீங்கள் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிளாஸ்கோ லெபாரட்டரி என்ற ஒரு நிறுவனம் அண்ணா சாலையிலே மிகப் பெரிய இடத்திலே அந்த நிறுவனம் தன்னுடைய சைன் போர்ட் போட்டிருக்கிறது. பக்கத்திலே அவர்கள் தயாரிக்கின்ற பொருட்களை அழகாக ஒரு குழந்தையைப் போட்டு, ''better get your baby feed by Farex or Glaxo'' என்று அவர்கள் போட்டால், அதை என்ன செய்வீர்கள்? அதற்கு சரியான விளக்கம் கொடுக்கப்படவில்லை. கம்பெனியினுடைய பொருள், அது தயாரிக்கின்ற பொருள்களுக்கான விளம்பரங்கள். இவைகளை அவர்கள் அண்ணா சாலையிலே உள்ள இடத்திலே வைத்தால், அப்போது என்ன நிலைமை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். இது சிந்திக்க வேண்டிய விஷயம். கம்பெனியினுடைய பெயரைப்போடுகிறார்கள். கம்பெனி தயாரிக்கின்ற பொருட்களை, அந்த நிறுவனத்தினுடைய லேண்ட் அன்ட் பில்டிங்ஸ்க்குள்ளே அவர்கள் விளம்பரபடுத்துகிறார்கள். அந்த விளம்பரத்தின் பேரில் நமக்கு உரிமை உண்டா? அதற்கு விதி விலக்கு உண்டா? என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த உரிமையை வழங்குகின்றபோது, ஒரு கமிட்டி போடுகிறார்கள். அந்தக் கமிட்டியிலே எந்த இடத்திலே விளம்பரம் வைக்கலாம். இதனால் பொதுமக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இருக்காது, அல்லது போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லை என்பதை Commissioner of Police, Deputy Commissioner of Police R.D.O. என்று பலரை அதிலே போடுகிறார்கள். அதிலே பப்ளிக் ரெப்ரசன்டேஷன் என்ற முறையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது மாநகராட்சி உறுப்பினர்களைப் போடுகிறார்கள். 5 பேர்களை வைக்கிறார்கள். இவைகள் எல்லாம் தேவை தானா? இதற்கு ஒரு கமிட்டி தேவைதானா? One man who can decide the whole issue is the Collector of Madras or the Commissioner of Police இதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள், இன்றைக்கு 5 பேர்களைக் கொண்ட கமிட்டி, இவைகள் எல்லாம் தேவைதானா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படியே இன்னின்ன இடங்கள் என்று போட்டு வைத்த பிறகு, It is better to see that it is given by Tender to Registered Companies இப்போது நாம் எல்லாம் விளம்பர யுகத்திலே இருந்து கொண்டு இருக்கிறோம். விளம்பரம் செய்வது என்பது அது ஒரு தொழில். அதற்காக பல நிறுவனங்கள் இன்றைக்கு இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டு இருக்கின்றன. Registered Companies can be given contract on Tender but not on individual likes and dislikes அவைகளுக்கு

கொடுத்து, ஒரு டெண்டர் மூலமாக, ரெஜிஸ்டர்ட் கம்பெனி
களுக்கு ரெஜிஸ்டர்ட் டெண்டரர்களுக்கு, அண்ணாசாலையிலே,
உள்ள இந்தந்த ஹோல்டிங்ஸ் இவர்களுக்கு என்றும், அதே
நேரத்தில் இருக்கிற ஹோல்டிங்ஸ் எல்லாம் same standard size-லே
இருக்க வேண்டும் என்பதை எல்லாம் திருத்தி, அழகாக
ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தால் நல்லதாக இருக்கும்.
எனவே இந்தக் கருத்துக்களை நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், பின்னாலே புரசீஜர்
என்று வருகின்றபோது, சில திருத்தங்களை நீங்களே நடை
முறைக்காக நாளைக்கு உருவாக்குவீர்கள்.

அதே நேரத்தில் இந்த விளம்பரத்தின் மூலமாக வருகின்ற
பணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இங்கே
மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே செலுத்துகிறார்கள், 23
சதவீதம்தான் மாநகராட்சிக்குப் போகிறது என்று சொன்னார்கள்.
சென்னை மாநகராட்சியிலே எவ்வளவோ மக்கள் வருகிறார்கள்
போகிறார்கள், மக்கள் அதிகமாக நடமாடுகின்ற
காரணத்தாலே சென்னை மாநகராட்சியிலே ஏராளமாக அவர்
களுக்கு எல்லாம் செதி செய்து கொடுக்க வேண்டும் என்ற
காரணத்தாலே, அங்கே மக்கள் அதிகமாக நடமாடுகிறார்கள்
எனவே இந்த விளம்பரத்தின் மூலமாக வருகின்ற பணம் எல்லாம்
மாநகராட்சிக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற வகையில்
நீங்கள் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில்
சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, 1985-ம்
ஆண்டு, தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல்
சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதத்திற்காக
இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின்
மூலம் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய விளம்பரப் பலகை
களை இனி அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். தனியார்கள்
யாரும் விளம்பரப் பலகைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்
பட மாட்டாது என்பது இந்தச் சட்டத்தினுடைய முக்கியமான
ஷரத்து. ஆனால் இங்கே ஒரு அடிப்படைப் பிரச்சினையை
நான் முதன் முதலாகவே கிளப்ப விரும்புகிறேன். விளம்பரம்
செய்வது என்பது, விளம்பர போர்டு வைப்பது என்பது, தனி
மனித உரிமை. அது பண்டமெண்டல் ரைட். நம்முடைய
அரசியல் சட்டத்திலே மிகத் தெளிவாகவே சொல்லப்பட்டு
இருக்கிறது.

''All citizens shall have the right to freedom of speech and expression''
தன்னுடைய கொள்கைகளை, தன்னுடைய இலட்சியங்களை
தன்னுடைய கருத்துக்களை விளம்பரப் பலகையின் மூலமாக,
விளம்பரத்தின் மூலமாக சொல்லுகிற உரிமை இந்த தேசத்தி
னுடைய பிரஜைகளுக்கு உண்டு. அது ஜீவாதார அடிப்படை
உரிமை.



ஆனால் இப்போது கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்த
சட்டத்தின் மூலம் அந்தத்தனி மனிதனின் உரிமை பறிக்கப்படு
கிறது. அரசியல் இயக்கங்கள் தன்னுடைய கட்சியினுடைய
கொள்கைகளை விளம்பரமாக, விளம்பரப் பலகை வைப்பதற்கு
உரிமை உண்டா ? கிடையாது. பல மதங்கள் இருக்கின்றன.
இன்றைக்கு கூட பல சுவர்களில் கிருத்துவ மதத்தைச்
சேர்ந்தவர்கள், இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள், இந்து
மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சமுதாயத்தினுடைய
கருத்துக்களை சுவர்களில் எழுதுகிறார்கள், விளம்பரமாக வைக்
கிறார்கள். விளம்பரப் பலகை வைக்கிறார்கள். இந்த உரிமை
இனி அந்த மதங்களுக்கு அல்லது அந்த 'ரிலிஜியஸ் இன்ஸ்டி
டியூஷன்களுக்கு ' அமைப்புகளுக்கு உண்டா? கிடையாது.
அதைப் போலவே கலாச்சார இயக்கங்கள் இன்றைக்கு பல
இருக்கின்றன. இந்தி திணிக்கப்படக்கூடாது, மாநில சுயாட்சிக்
கொள்கை என்ற அரசியல் கொள்கையை விளம்பரப்
பலகையில் அறிமுகப்படுத்த முடியுமா ? முடியாது. தந்தை
பெரியாருடைய பகுத்தறிவுக் கொள்கைகளை இன்றைக்கு
விளம்பரப் பலகை மூலம் ஒரு இயக்கம் அல்லது ஒரு
சமுதாய சீர்திருத்தத்தைச் சேர்ந்தவர்கள் செய்ய முடியுமா ?
இந்தச் சட்டத்தின் மூலமாக செய்ய முடியாது. மாநாடுகளை
பல அரசியல் தலைவர்கள் நடத்துகிறார்கள். அப்படி மாநாடு
நடத்தும்போது, அவர்கள் இதுபோன்ற விளம்பரப் பலகை
மூலம் தங்களுடைய கொள்கைகளை பரப்புகின்ற காரியத்தை
செய்ய முடியுமா ? முடியாது. ஆக மொத்தத்திலே இது
அரசியல் உரிமைகளை, மதவாதிகள் உரிமைகளை, கலாச்சார
இயக்கங்களின் உரிமைகளை இன்றைக்கு அடிப்படை மனித
உரிமைகளைத் தடுக்கின்ற ஒரு சட்டமாக இருக்கிற காரணத்தி
னால் முதன் முதலில் இதைக் கடுமையாக எதிர்க்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இரண்டாவது என்னுடைய வீட்டில் நான் ஒரு விளம்பர
பலகை வைத்துக் கொண்டு எந்த 'விதத்திலும் பிறருக்கு
இடையூறு இல்லாமல் அது இருக்குமானால், நீ அப்படி வைத்துக்
கொள்ளக் கூடாது என்று சொல்வதற்கு இந்த அரசுக்கு என்ன
உரிமை இருக்கிறது. இந்த அரசுக்கு அந்த உரிமையை கொடுத்
தது யார் ? ஏன் என்றால் என்னுடைய வீடு, எந்தவிதத்திலும்
பாதிக்காத சூழ்நிலையில் நான் ஒரு விளம்பரப் பலகையை
நான் செய்கின்ற தொழிலின் சார்பாக இருக்கலாம் அல்லது
எனக்குப் பிடித்த ஒரு கொள்கையை நான் அதில் எழுதி வைக்க
லாம். ஆனால், நீ அப்படி செய்யக்கூடாது, அந்த உரிமை
கிடையாது, தனியார் வீடாக இருந்தாலும் கூட அந்த விளம்பரப்
பலகையை வைக்கக் கூடாது என்று சொல்லுகிற அந்த உரிமை,
என்னுடைய உரிமையைப் பறிப்பதற்கு அரசுக்கு அதிகாரம்
கிடையாது.

இன்னும் ஒன்றை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.
அரசு குறுக்கிடலாம், எப்போது குறுக்கிடலாம். விளம்பர
பலகை வைத்து இருப்பது போக்குவரத்துக்கு இடையூறாக
இருக்கிறது என்றால் அப்போது குறுக்கிடலாம். ஏன் என்றால்அது
பொதுமக்களுடைய பிரச்சினை. இங்கே வைத்து இருக்கக்கூடிய
விளம்பர பலகை ஆபாசமாக இருக்கிறது என்று சொன்னால்
அப்போது குறுக்கிடலாம். அதுபோலவே நீங்கள் வைத்துஇருக்கக்
கூடிய விளம்பர பலகையால்அரசியல் கருத்துக்களால்சமுதாய கருத்
துக்களால், மதகருத்துக்களால் அப்ஜெக்‌ஷனபிள் ஒத்துக்கொள்ள
முடியாததாக வகுப்பு கலவரங்கள், மாச்சரியங்கள் உண்டாவதற்கு
இடம் கொடுக்கக்கூடியதாக இருந்தால் குறுக்கிடலாம். விளம்பரப்
பலகை ஆபாசமாக இருந்தாலோ அல்லது போக்குவரத்துக்கு
இடையூறாக இருக்குமானால் அல்லது அப்ஜெக்‌ஷனலாக இருக்கு
மானால், அப்படிப்பட்ட விளம்பர பலகைகள் இடம்பெறக்கூடாது
என்று உத்திரவு போடலாம். ஆனால் விளம்பரப் பலகையை தனி
நபர் வைக்கக்கூடாது, அரசு தான் வைத்துக்கொள்ளவேண்டும்
என்று சொல்லுவது எந்த விதத்தில் நியாயம் ஆகும், எந்த
விதத்தில் முறையாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, இன்னும் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு
விளம்பரப் பலகை வைக்கிறார்கள், கண்ணியம் அற்ற முறையில்,
அல்லது போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது அல்லது
ஆபாசமாக இருக்கிறது. சரி அப்படியானால் நான் கேட்க
விரும்புகிறேன். இந்த விளம்பரப் பலகையை அரசே எடுத்துக்
கொண்டு கையகப்படுத்தித் தான் தடுக்க வேண்டுமா? இப்போது
வைத்து இருக்கக்கூடிய நடைமுறைச் சட்டத்தின் மூலமாகவே
அது முடியாதா ? நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்
சௌரிராஜன் அவர்கள் சொன்னார்கள், முனிசிபாலிட்டி ஆக்டை
அமெண்டுமெண்டு செய்து அதைச் செய்ய வேண்டும் என்று
சொன்னார்கள். அப்படிச் செய்யவேண்டிய அவசியம் கூட
கிடையாது. இருக்கக்கூடிய நடைமுறைச் சட்டத்திலேயே அதை
சாதிக்க முடியும். உதாரணமாக சொல்கிறேன். விளம்பரப்
பலகை ஆபாசமாக இருந்தால் அது போக்குவரத்துக்கு இடையூ
றாக இருந்தால் கமிஷனர் ஆப் போலீஸ் அவர்கள் நடவடிக்கை
எடுக்க முடியும். ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஆபாச
தடைச் சட்டத்தை பயன்படுத்தி அதை செய்யலாம்.

(பிற்பகல் 1–10)

ஒரு ஸ்டேண்டிங் கமிட்டி இருக்கிறது. விளம்பரப் பலகைகளை
இஷ்டத்திற்கு தனி நபர்கள் பொது இடங்களிலும், மற்ற
இடங்களிலும் வைத்துவிட முடியாது. உதாரணத்திற்குச்
சொல்கிறேன். அந்த ஸ்டேண்டிங் கமிட்டியிலே கலெக்டர்
இருக்கிறார், போலீஸ் கமிஷனர் இருக்கிறார். அந்த ஸ்டேண்
டிங் கமிட்டியிலே கார்ப்பரேஷன் கமிஷனர் இருக்கிறார்.
அதிலே ஆல் சீப் இன்ஜினியர்ஸ் ஆப் ஆல் டிபார்ட்மென்ட்ஸ்,
அதாவது பி.டபிள்யூ.டி, அதுபோலவே மற்ற துறைகளிலே
இருக்கக்கூடிய சீப் இன்ஜினியர்கள் அந்த ஸ்டேண்டிங் கமிட்டி
யிலே இருக்கிறார்கள்.



எனவே, ஒரு இடத்திலே விளம்பரப் பலகையை வைக்க
வேண்டுமானால், அது கலெக்டர், கமிஷனர் ஆப் கார்ப்பரேஷன்,
போலீஸ் கமிஷனர், ஆல் சீப் இன்ஜினியர்ஸ் இவ்வளவு பேரும்
அனுமதி கொடுத்ததற்குப் பிறகு தான் விளம்பரப் பலகையை
வைக்க முடியும்.

ஆக, அப்படி விளம்பரப் பலகை வைக்கின்றபோது, ஆபாச
தடைச் சட்டத்தின் மூலம், ஏற்கனவே நடைமுறையில் இருக்கக்
கூடிய சட்டத்தின் மூலம் கமிஷனர் அதிகாரத்தைப் பயன்படுத்தி,
கலெக்டர் அதிகாரத்தைப் பயனபடுத்தி, நடைமுறைச் சட்டத்
தின் மூலமாகவே அந்த ஆபாசப் போக்கைக் களையலாம். இன்டீ
சென்ட்-ஆக இருப்பதைக் களையலாம். போக்குவரத்துக்கு
இடையூறாக இருப்பதைக் களையலாம். ஆக, இதை விட்டு
விட்டு, அவசரம், அவசரமாக ஆபாசம் நிரம்பியதாக இருக்கிறது,
கண்ணியம் அற்றதாக இருக்கிறது. எனவே யாரும் தனி நபர்
வைத்துக் கொள்ளக் கூடாது, சர்க்கார் தான் விளம்பரப் பலகை
வைக்கும் என்று சொல்கிற வாதம் எந்த விதத்தில் நியாயம் ?

அதுமட்டும் அல்லாமல், அன்றைக்கு காங்கிரஸ் அரசாங்க
மாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்க
மாக இருந்தாலும் சரி, ஆட்சிக்கு வந்து இருக்கக்கூடிய உங்க
ளுடைய சர்க்காராக இருந்தாலும் சரி, 21 ஜி.ஓ.க்கள் போட்டு
இருக்கிறார்கள். ஆபாசத்தை ஒழிப்பதற்கு நடைமுறைப்படுத்து
வதற்கு, அந்த ஜி.ஓ.க்களின் மூலம் ஒழுங்கு படுத்துகின்ற காரியங்
கள் நடைபெற்று இருக்கின்றன.

ஆனால், ஒன்றைக் கேட்கின்றேன். விளம்பரப் பலகை
களில் வியாபாரத்திற்காக வைக்கப்படுகின்ற விளம்பரங்களில்
ஆபாசம் எங்கேயாவது இருக்கிறதா ? அமைச்சர் அவர்கள்
கோடிட்டு காட்டட்டும். ஆனால் சினிமாப் படங்களில், அந்த
விளம்பரப் பலகையில் வைக்கப்படுகின்ற சினிமா சம்பந்தப்பட்ட
காட்சிகள் தான் ஆபாசமாக இருக்கின்றது. அண்ணாசாலையி
லிருந்து சபையர் தியேட்டர் வரைக்கும் இருக்கக்கூடிய விளம்பரப்
பலகையில்— இன்றைக்கு எக்ஸ்பிரஸ் பத்திரிகை கூட படம்
பிடித்து முதல் பக்கத்திலே போட்டு இருக்கிறது— ஆபாசம்
களையப்படவேண்டும் என்று.

அந்த விளம்பரப் பலகையை எடுத்து விடுவதன் மூலம் அந்த
ஆபாசம் களையப்படுகிறதா என்றால், சினிமா தியேட்டருக்
குள்ளே மூன்று மணி நேரம் படம் பார்க்கிறோமே, அந்த
ஸ்கிரீனிலே ஆபாசம் வருகிறதே, தடுக்க முடியுமா ? பாட்டிலே
ஆபாசம் வருகிறதே தடுக்க முடியுமா ? நாடகத்திலே ஆபாசம்
வருகிறதே, தடுக்க முடியுமா ?

நான் கேட்கிறேன். பத்திரிகைகளில் ஆபாசம் வருகிறதே,
தடுக்க முடியுமா ? அப்படியானால் சர்க்காரே பத்திரிகை
நடத்துமா ? அப்படியானால், சர்க்காரே நாடகம் நடத்துமா ?
சர்க்காரே சினிமா நடத்துமா ?

ஏனென்றால், தனியார் நடத்துகின்றதால், இது போன்ற
வைகள் எல்லாம் வருகின்றன. எனவே, சர்க்கார் நடத்தினால்
இதெல்லாம் களைய முடியும். ஆகவே, எடுத்துக் கொள்
கிறோம் என்று சொல்ல முடியுமா ?

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், இந்த சட்டம்,
கொண்டு வந்திருப்பதிலே காட்டப்படுவது. பொது நோக்கி
அல்ல; இதில் வேறு ஏதோ விவகாரம் இருக்கிறது. அதனால்
தான் இவ்வளவு அவசரம், அவசரமாக வருகிறது. இன்னொன்
றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அண்ணா சாலையிலிருந்து சபையர் தியேட்டர் வரைக்கும்
இருக்கக் கூடிய அந்த விளம்பரப் பலகைகளில் வைக்கப்பட்
டிருக்கிற படங்கள் யாருடையது ? நம்முடைய சபையில்
இல்லாதவர்களைப் பற்றிச் சொல்லக் கூடாது. ஆனாலும்
ஆதாரத்தோடு சொல்கிறேன்.

ஜேப்பியார் அவர்களுடைய சினிமா போஸ்டர் இருக்கிறதா,
இல்லையா ? அது ஆபாசம் தானே, என்று நான் கேட்கிறேன்.
மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களுடைய படங்கள்
இல்லையா ? கோவைத்தம்பி அவர்களுடைய படம் இல்லையா?

இவைகளை எல்லாம் எதற்குச் சொல்லுகிறேன் என்றால்,
ஆபாசம்களையப்பட வேண்டும் தான். ஆனால், அதை இருக்கக்
கூடிய சட்டத்தின் மூலமாகவே களையலாம்.

இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சினிமாவிலே
ஆபாசம் வருகிறது என்பதற்காக சினிமாவை சர்க்கார் எடுக்க
முடியாது. ஆக, இதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று ஒரு முக்கியமான விஷயம். இந்த '' ஆப்
ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்''-லே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத்
தனியார்கள் விளம்பரப் பலகைகள் வைத்திருக்கின்ற காரணத்
தினாலே தவறான வழிகளிலே செல்வம் சேர்க்கிறார்கள்.
செல்வம் அவர்களிடத்திலே குவிகிறது, பணக்காரர்கள் ஆகிறார்கள்
இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தினுடைய பிரிவு,'
'' டைரக்டிவ் பிரின்ஸ்பிள்ஸ் '' ஆப் தி ஸ்டேட்ஸ் ''—மாநிலம்
பின்பற்ற வேண்டிய ஒழுங்கு நெறி கோட்பாடு என்ன சொல்
கிறது என்றால், செல்வம் சிலரிடத்தில் குவியக் கூடாது, ஓரி
டத்தில் குவியக்கூடாது என்று சொல்கிறது.

செல்வம் குவியக்கூடாது, அப்படிப்பட்ட ஒரு சமூக அமைப்பை
உருவாக்க வேண்டும் என்பதிலே இந்த சர்க்கார் அக்கறை உடை
யதாக இருக்கிறது. செல்வம் ஒரு இடத்தில் குவியக்கூடாது,
அந்த சமூக அமைப்பை இந்த சர்க்கார் விரும்புகிறது ; எனவே
தான் இன்றைக்கு அந்த விளம்பர போர்டுகள் வைத்து இருப்ப
வர்கள் எல்லாம் இத்தகைய வழிகளில் பணம் சம்பாதித்து பணக்
காரர்கள் ஆகிறார்கள். செல்வம் ஓரிடத்தில் குவிகிறது, அதைத்
தடுக்க வேண்டும், சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்



காகத்தான் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இது கொண்டு
வரப்படுகிறது. இவ்வாறு, டிக்ளரேஷன் ஆப் பாலிசி என்று
கூட அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால், இந்த அரசுக்கு, செல்
வம் ஓரிடத்தில் குவியக் கூடாது என்ற கொள்கை உறுதியாக
இருந்தால், பாட்டிலிங், பிளெண்டிங் உற்பத்தி செய்யும் இடத்
திலே கோடிக்கணக்கான ரூபாய்கள் இன்றைக்குத் தனியாரிடத்
தில் குவிகிறதே, நான் கேட்கிறேன், அங்கே ஏன் அவசரம்
அவசரமாக இப்படிப்பட்ட சட்டம் வரவில்லை ? சுப்ரீம் கோர்ட்
டிலேயே தீர்ப்பாகியிருக்கிறது. பஸ்கள் தேசீய மயமாக்கப்பட
வேண்டுமென்ற கொள்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அண்
ணாவின் கொள்கையும் பஸ்கள் தேசீய மயமாக்கப்பட வேண்டு
மென்பதுதான். இன்றைக்குத் தனியார் கோடி கோடியாகக்
கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்களே, மக்களின் பணத்தை
பஸ்களின் மூலம், தனியார் தொழிலின் மூலம். தனியாரிடத்தில்
செல்வம் குவிகிறதா இல்லையா ? அப்படித் தனியார்கள் ஓட
விடுகின்ற பஸ்களைத் தேசீய மயமாக்குவதற்கு இந்தச் சர்க்கார்
ஏன் அவசர அவசரமாக முயற்சிக்கக் கூடாது ?

இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். சினிமா ஸ்டுடி
யோக்களினால் பலருக்குச் செல்வம் குவிகிறதே, அரசாங்கம் அதை
எடுப்பதற்குச் சட்டம் கொண்டு வருமா ? சினிமாத் தியேட்டர்
களின் மூலம் பலரிடத்தில் செல்வம் குவிகிறதே, அதை எடுப்
பதற்குச் சர்க்கார் சட்டம் கொண்டு வருமா ?

சிமெண்ட் தொழிற்சாலை, பஞ்சாலை, சர்க்கரை ஆலை,
சிம்சன், லூகாஸ் என்றெல்லாம் இருக்கின்றனவே, நான் கேட்க
விரும்புகிறேன், அவற்றின் மூலம் தனி நபர்களிடத்திலே செல்வம்
குவிகிறதே, அதைத் தடுப்பதற்குச் சர்க்கார் சட்டம் கொண்டு
வருமா ? ஆகவே, இதிலேயிருந்து என்ன தெரிகிறது ? விளம்
பரப் பலகை வைத்திருப்பவர்களிடத்திலே செல்வம் குவிகிறது
என்று சொல்லி, சட்டம் கொண்டு வருகின்ற இந்தச் சர்க்காரில்
மற்றவர்களைக் கேட்பதற்கான சட்டம் இல்லை என்றால்,
இதற்கு மட்டும் சட்டம் என்றால், இது என்ன நியாயம் ? இது
என்ன முறை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை ஒரு சிதம்பர இரகசிய
மாக வைக்க வேண்டாம். பகிங்கரமாக உங்கள் மூலமாக நான்
கேட்க விரும்புகிறேன். விளம்பரப் பலகைகளை வைத்திருப்ப
தன் மூலம் அவர்கள் பணக்காரர்களாகி விட்டார்கள்; பணம்
அவர்களிடத்திலே குவிகிறது, அப்படி குவியக் கூடாது என்று
சொன்னால், இதன் மூலமாக சர்க்காருக்கு எவ்வளவு ரூபாய்
வருமானம் வரும் என்ற அந்தப் பட்டியலை அமைச்சரவர்கள்
வைத்திருப்பார்கள், அந்தப் பட்டியலைச் சொல்லவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். தனியாரிடத்தில் இல்லாமல், அரசாங்
கமே விளம்பரப் பலகைகளை எடுப்பதன் மூலம் இந்தச்
சர்க்காருக்கு எவ்வளவு ரூபாய் வருமானம் வருகிறது என்பதை

மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். எவ்வளவு கம்பெனிகள் இருக்கின்றன என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சென்னையில் 75 கம்பெனிகள் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதில் நான்கே நான்கு பேர்கள்தான் இன்கம்டாக்ஸ் அசெஸி என்று கேள்விப்படுகிறேன். இரண்டாயிரம் மூவாயிரம் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு பற்றி பிரச்சினை இருக்கிறது. செல்ப் எம்ப்ளாய்ஸ் என்று சொல்லப்படக்கூடிய ஏழை, நடுத்தர மக்களும் இந்தத் தொழிலை நடத்துகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள்கூடம் சொன்னார்கள். இந்த மாதிரி விளம்பரப் பலகைகளை வைத்திருப்பவர்கள் மீது இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதால் அவர்களிடத்தில் இருந்து விளம்பரப் பலகைகளை அரசாங்கம எடுத்துக் கொள்வதிலே ஏதாவது சிரமம் இருந்தால் இந்தச் சட்டம் அவர்களுக்குச் செல்லாது. அப்படி என்றால் என்ன அர்த்தம்? தனிப்பட்ட நாங்கள் கேட்டால், அல்லது மற்றவர்கள் கேட்டால் அவர்கள் விளம்பரப் பலகைகளை வைத்துக் கொள்ள முடியாது. ஆனால், இந்த அரசாங்கம் பார்த்து, யாருக்கும் கொடுக்கலாம் என்றால், அதில் மிஸ்யூஸ் ஆப் பவருக்கு—அதிகார துஷ்பிரயோகத்திற்கு—இடம் இருக்கிறதா இல்லையா? பேரம் பேசுவதற்கு இடம் இருக்கிறதா இல்லையா?— இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன், இந்த விளம்பரப் பலகையை எடுத்துக் கொள்வதைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் இந்த நிலைமைக்கு இடம் தருகிறது. ஆகவே, நீங்கள் எந்த நோக்கத்திற்காகச் சட்டம் கொண்டு வந்தீர்களோ அந்த நோக்கம் கூட நிறைவேறுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஓட்டைப் பானையில் தண்ணீர் ஊற்றினால் எப்படி நிற்கும்? அது உங்களுக்குத் தெரிந்தேதான் கொண்டு வருகிறீர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? மற்றவர்களுக்கு அனுமதி கிடையாது. நீங்கள் பார்த்து அந்த விளம்பரப் பலகையை யார் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வதற்கு வாய்ப்பு உண்டு என்று இதிலேயிருந்து தெரிகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குப் போகக் கூடாது. நீதிமன்றத்தைக் கொஞ்சமாவது நீங்கள் மதிக்க வேண்டாமா? இன்றைக்கு நாட்டிலே மூன்று விதமான அமைப்புகள் இருக்கின்றன. லெஜிஸ்லேச்சர், அதாவது சட்டமன்றம் என்றும், எக்சிகியூட்டிவ், அதாவது அரசாங்க நிர்வாகம் என்றும், ஜூடிஷியரி, அதாவது நீதித் துறை என்றும் ஆக இன்றைக்கு இப்படி மூன்று துறைகள் ஜனநாயக நாட்டிலே, இந்தியாவிலே,. இருக்கின்றன. ஆனால், நீதிமன்றத்தைப் பற்றிக் கவலைப்படுவதாக இந்தச் சர்க்கார் இருப்பதாகத் தெரியவில்லை. எக்ஸ்கியூட்டிவ்-அரசாங்க நிர்வாகம் மற்றும் லெஜிஸ்லேச்சர்-சட்டசபை ஆகிய இவை இரண்டு மட்டும் இருந்தால் போதும், நீதித் துறை தேவையில்லை என்று சொல்லுகிறீர்களே, அப்படியென்றால் நீங்கள் போட்





டிருக்கின்ற உத்தரவு தவறுக்கு உள்ளானதாக இருந்தால் யாரிடத்திலே சென்று நியாயம் கேட்பது? ஆகவே, இன்டிபெண்டெண்ட்டாக, சுதந்திரமான, நியாயமான நீதித்துறை இருக்க வேண்டாமா? அங்கே போகக் கூடாது என்றால், இது என்ன அயூப்கான் ஆட்சியா அல்லது சர்வாதிகார ஆட்சியா அல்லது மிலிட்டரி நிர்வாகமா நடந்து கொண்டிருக்கிறது?

(பிற்பகல் 1–20)

ஒரு மார்ஷல் லா இருந்தால், ஒரு சர்வாதிகாரி இட்லர் ஆண்டால், முசோலினி ஆண்டால், அங்கே கோர்ட் தேவையில்லை. ஆனால், சட்டப் புத்தகத்திலே போடுகிறீர்கள், கோர்ட்டுக்குச் செல்வதற்கு உரிமை கிடையாது, கோர்ட் தடை உத்தரவு கொடுக்க உரிமை கிடையாது என்று. இது ஜனநாயக உரிமையைப் பறிப்பது அல்லவா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

3 ஆண்டுகள் தண்டனை என்று சொன்னால், சட்டத்தின் எந்தப் பிரிவை மீறினாலும் 3 ஆண்டு. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது என்னுடைய வீட்டிலே ஒரு விளம்பரப் பலகையை வைத்திருக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். அது எப்படி இருக்கிறது என்று பார்க்க, நடு இரவு 12 மணிக்குக் கூட அவன் வந்து உள்ளே நுழைகிறேன் என்று நுழைந்தால், '' என்னைத் தடுத்தார் '' என்று புகார் கொடுத்தாலும் 3 ஆண்டுக் காலம் உள்ளே அனுப்புகின்ற அபாயம் இருக்கிறது. அதற்கு 3 ஆண்டுக் காலம் தேவைதானா என்பதை இந்த நேரத்திலே நான் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன்.

ஆக நான் மிகத் தெளிவாகச் சொல்கிறேன். இந்தச் சட்டம் பொது நன்மைக்காக கொண்டு வரப்பட்டது அல்ல. யாரோ ஒருவர், யாருக்கோ பிடிக்காத காரணத்தால், இந்த அரசாங்கத்திற்குப் பிடிக்காத காரணத்தால்,—தமிழ் நாட்டில் பல பேர்கள் விளம்பரப் பலகை வைத்திருக்கிறார்கள்— அவரிடமிருந்து இந்தத் துறையைப் பறித்துவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறீர்களோ என்ற ஐயம் வந்து விடுகிறது. ஆனால், அது தனியாக தெரியக் கூடாது என்பதற்காக, அலிபாபா கதையிலே ஒரு கதவிலே கோடு போட்டுவிட்டு, அதைக் கண்டு பிடித்துவிடுவார்கள் என்பதற்காக எல்லா கதவுகளிலும் கோடு போட்டதைப் போல, பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் ஒரு வீட்டுக் கதவைத் தவறாகத் தட்டிவிட்டு, அது தப்பாக நினைக்கப்படக் கூடாது என்பதற்காக எல்லோடைய வீட்டுக் கதவையும் தட்டியதுபோல, இங்கே தனிப்பட்ட ஒருவரை....

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளம்பரப் பலகைகளை அரசு எடுத்துக் கொள்வது என்கிற ஒரு சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் ஆனால், தனியாரிடத்திலே அரசு எடுத்துக் கொள்வது சரியல்ல என்ற அடிப்படையில் யாரோ ஒருவருக்காக, அலிபாபா கதவில் போட்ட இன்டைப் போல, யாருக்கோ செய்யப்படுகிற நிலை என்று

சொன்னார்கள். அப்படி யாராவது ஒருவர் என்று சொல்கிற பெயரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் சபைக்கு நன்மையாக இருக்கும்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, சர்க்கார், தேசியமயமாக்கும் கொள்கையை, செல்வம் ஓரிடத்திலே குவியக்கூடாது என்ற கொள்கையை அமுல் நடத்துமானால் அதை ஆதரிக்கின்ற முதல் நபராக நான் இருப்பேன். நான் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டியது போல, பல விஷயங்களில் அக்கறை காட்டாத சர்க்கார், அவசரமாக, இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, 5 நாள் அவகாசம் கொடுக்காமல் கூட இந்தச் சட்ட முன்வடிவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதும், அது மட்டுமல்லாமல், திடீர், திடீரென்று பேசிக்கொண்டிருக்கும்போதுகூட அமெண்டுமென்டுகள் என்று சொல்வதால், இன்னுங்கூட, அந்தச் சட்டத்தைப் பற்றி ஒரு தெளிவான அபிப்பிராயம் வராத சூழ்நிலையில் இவ்வளவு அவசரம், அவசரமாகக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். இதனாலே பொது மக்களுக்கு என்ன நன்மை ? பொது மக்கள் அதனால் என்ன நன்மை அடைகிறார்கள் இவ்வளவு அவசரத்திற்குப் பின்னாலே என்று பார்க்கிறபொழுது, ஏதோ மிகப் பெரிய ரப்பர் தோட்டத்தை, தேயிலைத் தோட்டத்தை சர்க்கார் தன் உடமையாக்குகிறது என்பதைப் போல், அல்லது சி.ஐ.டி. தொழிற்சாலையை எடுத்துக் கொள்வதைப் போல் டி.வி.எஸ். ஹூக்காஸை எடுத்துக் கொள்வதைப் போல், ஒரு மாய தோற்றத்தை உருவாக்குகிறீர்களே, எனவேதான் நான் சந்தேகிக்கிறேன், இதற்குப் பின்னாலே யாரோ ஒருவர் உங்களை உறுத்திக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட வேண்டும் ; உங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக, ஏதோ பெரிய ஒரு சோஷலிசக் கொள்கை, இன்னும் சொல்லப் போனால், சுரண்டலற்ற சமுதாயம் என்ற அரசியல் சட்டத்தினுடைய டைரக்ட்டிவ் பிரின்சிபில்ஸ் எல்லாம் காட்டி ஏமாற்றுகின்ற காரியம், மக்களை ஏமாற்றுவதாக ஆகும் என்று சொல்லி இதைக் கடுமையாக எதிர்த்து, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி கொஞ்சம் சட்ட வல்லுநர்களாவது இதைச் சிந்தித்துப் பார்த்து தனி மனித உரிமையில் கை வைக்கலாமா, அது சரிதானா என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் மீண்டும் பரிசீலிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு நான் அமைகிறேன்.

* **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல், வகைப்படுத்துதல் சட்ட முன் வடிவு குறித்து என்னுடைய கருத்துக்கள் ஒரு சிலவற்றை இங்கே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுவதாக அமைந்திருக்கிறது என்பதை நான் முதலிலே குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். ஒன்று அரசுக்கு வருவாய் வருகிறது—நிதி ஆதா



ரத்தை உருவாக்கித் தருகிற நோக்கம். மற்றொன்று, விளம்பரம் என்ற பெயரால் கட்டுப்பாடு இல்லாமல் ஆபாசத்தோடு புற்றீசல் போல் உருவாகி வரும் விளம்பரத்தை ரெகுலேட் செய்கிற நோக்கம். ஆக, இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றுகிற இந்தத் தன்மையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன், வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் நேஷனலைசேஷன் பாலிசி என்ற அடிப்படையில் மற்ற இரண்டு மூன்று உதாரணங்களைக் காட்டி, இதையும் ஒத்துக் கொண்டதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல இன்றைக்கு இருக்கிற இந்தச் சட்டம் அரசுக்கு வருவாய்த் தேடித்தருகின்ற வகையில், சில நிதி ஆதாரங்களைக் கொடுத்து அரசுக்கு உதவி புரிகின்ற வகையில் இந்தச் சட்ட முன்வடிவு இருக்கிறது என்பதை நான் சொல்கிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அண்ணா அவர்கள் 'Tap the rich and pat the poor' என்று சொன்னார்கள். அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற நாம் ஏழை எளிய மக்களைப் பாதிக்காத வகையில் நிதி ஆதாரங்களை தேடுவதும், அந்த நிதியைக் கொண்டு மக்களுடைய வளர்ச்சிப்பணிகளுக்கு செலவிடுவதும், அண்ணா அவர்களுடைய கொள்கையை நாம் பின்பற்றி நடக்கிறோம் என்கிற ஒரு தன்மை என்பதைச் சுட்டிக்காட்டி, அந்த வகையிலே இந்தச் சட்ட முன்வடிவு செயல்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது இந்த விளம்பரப் பலகைகளை எடுப்பது அரசினுடைய ஏகபோக உரிமை என்று குறிப்பிட்டார். அரசாங்கம் ஒரு நல்ல நோக்கத்தோடு நேஷனலைசேஷன் கொள்கையை ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு காரியத்திலும் பயன்படுத்துகிறது என்றால் அந்தக் கொள்கையை அவர் வரவேற்க வேண்டுமே தவிர, அரசு எடுத்துக் கொள்வது ஏகபோக உரிமை என்று சொல்வது அவருடைய கட்சியின் கொள்கைக்கு முரணானது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்போது இந்த புதிய சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறீர்களே, ஏற்கெனவே இருக்கிற நகராட்சிகள் சட்டத்தின் படியே இந்த ஆபாச போஸ்டர்களை, தட்டிகளை அப்புறப்படுத்தலாமே என்று சொன்னார்கள். அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். அந்தச் சட்டம் எல்லாம் வந்த பின்னாலே நடவடிக்கை எடுக்கக்கூடிய சட்டம். பழமொழி ஒன்று சொல்வார்கள். '' வந்த பின் காப்பதை விட வருமுன் காப்பது மேல் '' என்று சொல்வார்கள். ஆபாச போஸ்டர்களையும் விளம்பரப் பலகைகளையும் அல்லது

தட்டிகளையும் ஆபாசம் கலந்து வெளியே வந்த பின்னால் அதிகாரிகள் தடுக்க நடவடிக்கை எடுப்பது வந்தபின் காப்பதாகும். அப்படி வந்தபின் காப்பதை விட வருமுன் காப்பது ஒரு அரசின் தலையாய கடமை என்ற அடிப்படையில், எப்படி தடுப்பது என்ற அடிப்படையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அதே நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்சில் ஒன்றைச் சொல்லியிருக்கிறோம். பல விளம்பரங்கள் ஆபாசமாக வருவதைத் தடுக்க, அதைக் கட்டுப்படுத்த என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இந்தச் சட்டத்தின் 26 ஆவது பிரிவில் எங்கெங்கே விளம்பரப் பலகைகளை அமைக்கலாம் என இடங்களைத் தெரிந்தெடுப்பதற்காக ஒவ்வொரு வட்டாரப் பகுதிக்கும் ஒரு குழுவை அரசு அமைப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, ஆபாசம் இல்லாமல் விளம்பரத்தைக் கண்காணிப்பதற்கு இந்தக் குழுவுக்கு அதிகாரம் இருக்கிறதா என்றால் இல்லை. எனவே, எந்த எந்த இடத்தில் விளம்பரப் பலகைகளை அமைக்கலாம் என்பதை முடிவு செய்ய குழு அமைக்கப்படுவதுபோல, விளம்பரத்திலே ஆபாசம் கலக்காமல் சென்சார் செய்வதற்கு '' அட்வர்டைஸ்மெண்ட் சென்சார் போர்டு '' என்ற ஒரு அமைப்பை அமைத்தால் நல்லதாக இருக்கும். அப்படி இருந்தால் போலீஸ் அதிகாரிகள், விளம்பர நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள், மாநகராட்சி, நகராட்சி சம்பந்தப்பட்ட அதிகாரிகள், சமூக நலத்தில் அக்கறை கொண்டிருக்கிற நல்லவர்கள் ஆகியவர்களை எல்லாம் அதிலே உறுப்பினர்களாக நியமித்து, விளம்பரத்தை சென்சார் செய்து, அந்த போர்டிலிருந்து சர்டிபிகேட் பெற்றால்தான் அதை விளம்பரப்படுத்தலாம் என்று முடிவு செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு குழுவை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி தனியார் நிறுவனங்கள் விளம்பரம் செய்கிறபோது, இன்னொரு யோசனையையும் தெரிவிக்க விரும்புகிறேன். தனியார் நிறுவனம் விளம்பரம் செய்கிறபோது அரசின் கொள்கைகள் பல இருக்கின்றன. மதுவிலக்குக் கொள்கை இருக்கிறது, குடும்பக் கட்டுப்பாடு இருக்கிறது.

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் நேரம் அவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. செ. செம்மலை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார்கள் விளம்பரங்கள் செய்கின்றபோது விளம்பரப் பலகைகளில் மதுவிலக்கு ஸ்லோகன்கள், குடும்பக் கட்டுப்பாடு ஸ்லோகன்கள் போன்ற அரசின் கொள்கைகளைப் பொறுத்த வரையில் குறைந்தது 10 சதவீத அளவிற்காவது விளம்பரப்



படுத்த வேண்டும் என்று கட்டாயப் படுத்த வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

* **திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் ஆய்வுக்காக வைக்கப்படிருக்கின்ற தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப் படுத்துதல் சட்டமுன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

காரணநோக்க விளக்கம் என்ற முறையில் அரசின் சார்பிலே சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்கள் நல்ல கருத்துக்களாகத்தான் இருக்கின்றன. அவை நல்ல கருத்துக்களாக இருப்பதால் அரசின் நோக்கமும் நல்லதாக இருக்க வேண்டும் என்று கருதுவதற்குரிய வாய்ப்புக்கள் இந்தச் சட்ட முன்வடிவின் ஷரத்துக்களில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே துவக்கத்திலே சொல்லப்பட்டு இருக்கின்ற விஷயம் ஆபாசச் சுவரொட்டிகள் தடுக்கப்பட வேண்டும் என்பது. மனித சிந்தனையில் நஞ்சு கலக்கின்ற இத்தகைய போக்கு தடுக்கப்பட வேண்டும் என்பது அனைத்து தரப்பினருடைய நீண்டகாலக் கோரிக்கையும் கூட. ஆனால் அரசின் காரணநோக்க விளக்கத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல் இந்த ஆபாசத்தைத் தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது உண்மையிலேயே உண்மையைச் சார்ந்ததாக இல்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

மூட்டைப் பூச்சியை அப்புறப்படுத்துங்கள் என்று அரசுக்கு மனுப் போட்டால் வீட்டையே எரித்து மூட்டைப் பூச்சியைக் கொல்கிறோம் என்று சொல்வதுபோல் இச்சட்டம் இருக்கின்றது. பொதுவாக சமீப காலத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஜனநாயக நெறிமுறைகள் மீது ஒரு தீரா வெறுப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்று எண்ணுகிறேன். ஒவ்வொரு துறையிலும் ஜனநாயகநெறி முறைகளை மறுப்பது அல்லது அவற்றை அப்புறப்படுத்துவது என்பது இயல்பாகவே இந்த ஆட்சிக்கு இருந்து வந்திருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவில் என்ன சொல்கிறார்கள்? உண்மையிலேயே படித்துப் பார்த்தால் சிரிப்புத் தான் வருகிறது. செல்வம் ஒரு இடத்திலே குவிவதைத் தடுக்க இத்தகையச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாக இந்தப் பேரவைக்கு முன்னால் சொல்லப்பட்டதைப் பார்க்கும்போது கேலி செய்கிறார்களோ என்னவோ எனக்குப் புரியவில்லை. செல்வம் ஒரு இடத்தில் குவிவதைத் தடுப்பது என்றால், அதுவே இந்த அரசினுடைய நோக்கம் என்பது உண்மையானால் 1960-ல் பல்வேறு குறைபாடுகளுடன் நிறைவேற்றப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டத்தின் சந்து பொந்துகளைப் பயன்படுத்தி பினாமிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற அந்த நிலைமைகளை மாற்ற இந்த அரசு ஒரு திருத்தச் சட்டம் இயற்றியது, ஆனால், அந்தச் சட்டத்திற்கு அனுமதி மறுத்த மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு எதிராக இந்த அரசு என்ன நிலை எடுத்தது என்று நான் கேட்க விரும்புகிறேன். அது செல்வத்தை எங்கே கொண்டுபோய்ச்

சேர்க்கிறது ? பினாமிகளை உருவாக்கிக்கொண்டு செல்வத்தை ஒரே இடத்திலே கொண்டு போய்க் குவிக்கின்ற உத்தியாகத்தான் கையாளப்பட்டதே அவற்றைத் தடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

கண்ணுக்கு முன்னால் இருக்கின்ற ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு செல்வம் ஒரு இடத்தில் குவிவதைத் தடுக்க வேண்டும் என்று சொல்லுகிற அதே நேரத்தில் காரைக்குடிக்கு அருகில் இருக்கக் கூடிய தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான டிட்கோ நிறுவனமான, தமிழ்நாடு கெமிக்கல்ஸ் ப்ராடக்ஸ் நல்ல இலாபத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. 1983-லே அதற்குக் கிடைத்த இலாபம் 125 இலட்சம் ; 1984–85-லே அதற்குக் கிடைத்த இலாபம் 200 இலட்சம். இப்படி இலாபகரமாக நடக்கிற டிட்கோ நிறுவனத்தைத் தனியாருக்குக் கொடுக்க முயற்சிகள் எடுப்பது செல்வம் ஒரேயிடத்தில் குவிவதைத் தடுக்கவா அல்லது குவிப்பதற்கு உதவவா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். உண்மையிலேயே அந்த நோக்கம் இந்த அரசுக்கு இருக்குமேயானால் (குறுக்கீடு).... மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சம்பந்தம் இல்லாமல் பேசுவதாகச் சொன்னார்கள். இங்கே முன்மொழியப்பட்டிருக்கின்ற மசோதாவில் செல்வம் ஒரு இடத்தில் குவிவதைத் தடுக்க வேண்டும் என்பது அரசின் நோக்கம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், மாநில அரசிற்குச் சொந்தமான 200 இலட்சம் ரூபாய் இலாபம் வருகின்ற ஃபேக்டரியை அரசு நிறுவனத்திலிருந்து தனியாருக்கு விற்க முற்படுவதற்கு என்ன நோக்கம் என்று கேட்பதில் என்ன தவறு இருக்கின்றது என்று நான் கேட்க விரும்புகிறேன். மாநில அரசின் இத்தகைய சிந்தனை தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காகக் குறிப்பிட விரும்புகிறேன்.

விபத்து காரணமாக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவந்துள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. மவுண்ட் ரோட்டிலே மட்டும்தான் தமிழ்நாட்டிலே விபத்து என்பது நடக்கின்றதா ? தமிழ்நாட்டிலே விளம்பரப் பலகைகளே இல்லாத இடங்களில், இல்லாத ரோடுகளில் ஆக்ஸிடென்ட் நடக்கவில்லையா ? எனவே விபத்துக்கு விளம்பரப் பலகை மட்டுமே காரணம் என்பதல்ல. இந்தச் சட்டத்தைக் காரணமாகக் கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு அதிகாரத்தைப் பயன்படுத்தி பல சலுகை அளிப்பதற்குரிய வாய்ப்பை இந்தச் சட்டம் வழங்குகின்றது என்று நான் குற்றம்சாட்டுகிறேன்.

குறிப்பாக எதை வைத்துச் சொல்கிறேன் என்றால் ஒரு விளம்பர ஏஜென்சி உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது யாருக்கு வழங்கப்படும்? தனியார்களுக்கு வழங்கப்படும். அந்தத் தனியார் யாராக இருப்பார்? ஆளும் கட்சிக்கு யார் அனுசரணையாக இருப்பார்களோ அவர்களுக்கு கொடுக்கப்படும், என்பதுதான் இதில் இருக்கிற பிரச்னை. அத்தோடு அதிகாரிகளுக்கு ஒரு புதிய அறுவடை கருவியை இந்த அரசு வழங்குகிறது என்றும் சொல்வேன். அதன் மூலமாக ஆளும் கட்சிக்கு தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் செய்துக் கொள்வதோடு, அதனுடைய அரசியல் எதிரிகளையும் பழி



வாங்குவதற்கு அது பயன்படுத்தப்படும் என்ற முறையிலே இந்த சட்டம் உண்மையான பொது நோக்கமுடைய சட்டமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, அரசின் உண்மையான நோக்கமான செல்வம் ஓரிடத்தில் குவிவதை தடுப்பதற்கு இந்த சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுவதாகச் சொல்லுகிறார்களே, அந்த ஜனநாயக அரசியல் லட்சியங்களில் எதையும் புறக்கணிக்காத அளவுக்கு நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்குமானால், தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைத் தொழில்களை, தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளை, மற்றும் தமிழ் நாட்டில் உள்ள பெரிய பெரிய தொழிற்சாலைகளையெல்லாம் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கையை அறிவித்து, அந்த அறிவிப்பின் படி மைய அரசு அதை நிறைவேற்ற வேண்டும் என்று பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி இயக்கங்களை நடத்துவார்களேயானால், அத்தகைய இயக்கங்களுக்கு உங்களோடு நின்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போராடும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். ஜனநாயக மரபுகளுக்குப்புறம்பான, அரசியல் உள்நோக்கம் கொண்டு, ஆளும் கட்சிக்கு ஆதரவாக அமைந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன் வடிவை வாபஸ் பெறவேண்டும், புதிதாக ஒரு சட்டத்தை, ஆபாசத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக மட்டுமே இருப்பதாக கொண்டு வரவேண்டும், என்று சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டு முடித்துவிடுகிறேன். வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனியார்களும், அரசாங்கமும் இணைந்து பேசி தேச நலம் காப்பதற்கு புதியதாக ஒரு சட்ட முன் வடிவைக் கொண்டு வர இதை ஆய்வுக் குழுவிற்கு அனுப்புங்கள். வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளம்பரப் பலகைகளை கையகப்படுத்துவதற்கான ஒரு சட்டம் கொண்டு வந்து, அதன் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துக்கொண்ட உறுப்பினர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் தூய்மையான உள்ளத்தோடு கருத்துக்களைச் சொல்லியிருக்க வேண்டும் என்று திடமாக நான் நம்புகிறேன்.

இருந்தாலும் கூட அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சில ஐயங்களை போக்குவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தை கொண்டு வந்ததன் நோக்கம் தெளிவாகவே கடைசி பக்கத்திலே காரண காரியங்கள் விளக்கத்தின் மூலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்திற்கு பதிலாக இருக்கின்ற மாநகராட்சி சட்டத்திலேயே ஒரு சிறு திருத்தம் செய்தாலும் போதும் என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது போதாது, சரிப்பட்டு வராது என்ற காரணத்தினால்தான், இந்தச் சட்டமே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கம் யாரையோ மனத்திலே வைத்துக் கொண்டு, யாரோ ஒருவரை கெடுப்பதற்காக, யாரோ ஒருவரை பிடிக்கவில்லை என்பதற்காக கொண்டு வரப்

யட்டிருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அது போல யாரையும் மனத்திலே வைத்துக்கொண்டு, இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. அப்படி யாராவது இருப்பார்கள் என்ற சந்தேகம் இருந்திருந்தால், அவர்கள் பெயரைச் சொல்லி, அவர்களைக் கெடுப்பதற்காகவா என்று கேட்டிருந்தாலும் கூடப் பரவாயில்லை, பதில் சொல்ல வசதியாக இருந்திருக்கும், அவர் சொல்லவில்லை.

இந்தச் சட்டத்தைப் பற்றி பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களும், இளம் துடிப்போடு எப்போதும் அவையிலே பேசி, தன் வாதத்திற்கு வலிவூட்டுகிற நண்பர் சுப்பராயன் அவர்களும், இந்தச் சட்டத்தை இவ்வளவு கடுமையாக எதிர்ப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. வரவேற்பார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். ஏமாந்து விட்டேன். என்ன காரணமோ எனக்கே தெரியவில்லை. நம்பிக்கை வைத்தது தவறு போல் இருக்கிறது.

பொது உடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள், இந்தச் சட்டத்தை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஏன் என்று தெரியவில்லை. இது என்ன ஹூகாஸ் கம்பெனியைப் போன்று, டி.வி.எஸ். கம்பெனியைப் போன்று பெரிய பெரிய தொழிற்சாலைகளை தேசிய மயமாக்குகின்ற சட்டமா, அவற்றை தேசியமயமாக்கப் போகிறீர்களா என்றெல்லாம் கேட்டார்கள். அவைகள் எல்லாம் காலப் போக்கில் எடுக்கப்படும்போது, நிச்சயமாக எடுக்கப்படும். ஆனால் உங்களுக்கு ஜனநாயகத்தில் மன்னிக்கவும் சமதர்மத்தில் சோஷலிசத்தின் லட்சியங்களில் ஒன்றையும் புறக்கணிக்காது கடைப்பிடிக்கின்ற நம்பிக்கை இருக்குமானால்...............

(பிற்பகல் 1–40)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத்தலைவர் அவர்களே, நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்கி இந்த நோக்கத்திற்கு தகுந்த அளவிலே ஒரு நல்ல சட்டத்தை உருவாக்குவதற்கு ஆய்வு குழுவிற்கு இது அனுப்பப்பட வேண்டுமென்று சொன்னோமே தவிர இந்தச் சட்டத்தின் எல்லா அம்சங்களையும்,நோக்கத்தையும் நாங்கள் எதிர்க்கவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, நன்றி. நான் பேசுகிறபோது சொல்வதாகத்தான் இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது இது ஆபாசத்தைத் தடுப்பதற்கு பதில் ஆபாசத்தை வளர்க்குமோ என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள் இந்தச் சட்டம் வருகின்றபோது, இதனைப்பயன்படுத்திக்கொண்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் என்னவாயிற்று? நிலப்பிரபுக்களின்



நிலத்தை எல்லாம் கையகப்படுத்துவது என்னவாயிற்று என்று எல்லாம் கேட்டார்கள். அதுபற்றி நான்கூட ஒன்றை கேட்டேன். 15 ஏக்கராவிற்கு மேல் யாருக்கும் நிலம் இருக்கக்கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோமே, யாரிடம் குவிந்திருக்கிறது, சொல்லுங்கள் என்றேன். ஆகவே அதை இப்போது சொல்லி நேரத்தை எடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. அப்படி எங்கேயாவது நிலம் குவிந்திருக்குமானால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் உறுதியாகத் தெரிவிக்கிறேன். காரணம் நிலச்சீர்திருத்தச் சட்டம் இந்த அவையிலே நிறைவேறுவதற்கு காரணமாக இருந்தவனே நான் தான். நான்தான் அந்தச் சட்டதைக் கொண்டு வந்து நிறைவேற்றியவன். அதிலே ஓட்டை உடைசல்கள் இருக்கிறதென்று சொல்வார்களானால் அதுபற்றி ஆராய்ந்து, அந்த ஓட்டை உடைசல்களை அடைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) தனியாருக்கு ஏஜென்சி கொடுப்பதற்கு தான் நீங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்; ஏஜென்சி உருவாக்கப்போகிறீர்கள் என்று எல்லோரும் பேசினார்கள்.

அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சுப்புராயன் அவர்களும், ஹேமச்சந்திரன் அவர்களும் பேசுகிறபோது, தனியார் யாரையோ உங்கள் கட்சிக்காரர் யாரையோ தான் உருவாக்கப் போகிறீர்கள், அதற்காகத் தான் ஏஜென்சியை உருவாக்குகிறீர்கள் என்று அழுத்தந்திருத்தமாகப் பேசினார்கள்.

மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அரசு சார்பிலே உறுதி அளிக்கிறேன். நிச்சயமாக மாநகராட்சிக்கு தான் இது ஒப்படைப்படுகிறதே தவிர, தனியாருக்கு கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, தனியார் ஏஜென்சி என்பது ஒருபுறம் இருக்கட்டும். அதிலே இருக்கிற விதிவிலக்கின் அடிப்படையில் உங்களை வந்து அணுகுகின்ற யாருக்கு வேண்டுமானாலும் விளம்பரப் பலகைகள் வைத்துக்கொள்ள தங்கள் இஷ்டப்படி செய்ய முடியுமா, முடியாதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைத் தான் சொல்கிறேன். தனிநபருக்கு கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் சுப்புராயன் அவர்கள் இதன்மூலம் திருப்தியடைந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். மாநகராட்சிக்குத்தான் கொடுக்கப் போகிறோமே தவிர, அது தனிநபருக்கு கிடையாது என்று உறுதி அளிக்கிறேன்.

எக்சம்ப்ஷன் விதிவிலக்கின் கீழ் நீங்கள், 'மேற்கொண்டு அரசு விரும்பினால் யாருக்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு அளிக்கலாம்' என்று ஒரு ஷரத்து போட்டிருக்கிறீர்களே, யாருக்காவது அப்படி கொடுப்பதற்கு வாய்ப்பில்லையா, கொடுக்க மாட்டீர்களா? என்றும், கொடுக்க மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம், என்றும், விதிவிலக்கை தவறாக பயன்படுத்த மாட்டீர்களா என்றும் கேட்டார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் கேட்டார்கள். எதெதெற்கு விதிவிலக்கு என்று போட்டுக் கொண்டு வந்தபோது, மேற்கொண்டு ஏதேனும் விடப்படுமானால், அரசுக்கு சொந்தமானவை அல்லது மற்றவைகள் ஏதேனும் விடப்பட்டிருக்குமானால் அவைகளுக்காகத்தானே தவிர, உறுதியாக தெளிவாக சொல்கிறேன், எந்த ஒரு தனிநபருக்கும் இந்தச் சட்டத்தின் கீழ் விதிவிலக்கு அளிக்க முடியாது, அளிக்க மாட்டோம்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வார்த்தைக்கு வார்த்தை விளக்கம் கேட்க அனுமதிக்க முடியாது. உங்களுடைய கருத்துக்களை முடிக்க சொல்லி விட்டீர்கள். (குறுக்கீடு) ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் கடைசியில் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. எங்களுடைய பொறுமைக்கு ஒரு அளவு இருக்கிறது. நாங்கள் என்ன கொத்தடிமைகளா? (கூச்சல் குழப்பம்) நான் விளக்கம் கேட்க அனுமதிக்கிறீர்களா இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒவ்வொரு தடவையும் விளக்கம் வேண்டுமென்றால் முடியாது. அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு கடைசியாக விளக்கங்களைக் கேளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** எனக்கு உரிமையிருக்கிறது விளக்கம் கேட்க.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு வேண்டுமானால் கேட்கலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது யாராவது குறுக்கிட்டுப் பேசினார்களா?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் படிக்க இருப்பதை நானே படிக்கிறேன். அந்த கிளாசை நானே படிக்கிறேன்.

"25. Power to exempt-Where the Government, of their own motion or otherwise, are satisfied that the application of the provisions of this Act would cause undue hardship to any class of persons owning the hoardings, the Government may, by order, exempt, whether prosf pectively or retrospectively, and subject to such conditions, if any, as may be specified in the order, such hoardings from all or anyo- the provisions of this Act,'' என்று இருக்கிறது. அதைத்தான் சொல்வார்கள் என்று நினைக்கிறேன் (குறுக்கீடு) நீங்கள் சொல்ல வந்ததை நான் படித்துவிட்டேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** அவர்கள் சொன்னது தப்பாக இருக்கிறது. என்பதற்காகச் சொல்கிறேன். மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, முக்கியமாக ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் வாசித்துக் காட்டினார்கள். இங்கே இருக்கக் கூடிய எல்லோருக்கும் தெரியும். நான் கேட்கிறேன். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதால் யாருக்காவது இடையூறு ஏற்படுமேயானால் இந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்களை, புரவிஷன், ஒரு பகுதியோ, அல்லது சட்டமோ, அவர்களுக்கு அமுல் படுத்தப்படாது என்று சொன்னால், யார் விளம்பரப் பலகைகளை வைத்திருக்கிறார்களோ, அவர்கள் பாதிக்கப்படுவதாக அரசாங்கம் ஒரு நோஷன், அல்லது முடிவுக்கு வந்தால், அல்லது அரசாங்கமே அதிலே திருப்தி அடைந்தால், இந்தச் சட்டமே அவர்களுக்குச் செல்லாது என்று சொல்லலாம். அப்படியானால் என்ன பொருள்? விளம்பரப் பலகைகள் யாருக்குக் கொடுக்க வேண்டுமோ, அவர்கள் வைத்துக் கொள்ளலாம். என்றுதானே பொருள். நான் சொல்வது தப்பாக இருந்தால், அமைச்சர் அவர்கள் தெரிவிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஆத்திரப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. எல்லோரும் சேர்ந்து அமைதியாக நிறைவேற்ற வேண்டிய ஒரு சட்டம். இதிலே விதிவிலக்கு கொடுத்திருப்பது எந்த ஒரு தனிப்பட்ட நபருக்கோ சலுகை காட்ட வேண்டும் என்றோ, சலுகை காட்டப் போகிறோம் என்றோ தவறாகக் கருதத் தேவையில்லை. இந்த விதி விலக்கினால், நிச்சயமாக உறுதி அளிக்கிறேன், ஒருவருக்கு அல்லது எந்த ஒரு தனி நபருக்கும், தனி ஆளுக்கும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, விதி விலக்கு அளிக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே அதிகமாக அதைப்பற்றி வருத்தப்படத் தேவையில்லை. விதி விலக்கைத் தவறாகப் பயன்படுத்த மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பேசும்போது ஓட்டை உடைசல்களை எல்லாம் நீங்கள் வாங்கப் போகிறீர்களா என்று கேட்டார்கள். ஓட்டை உடைசல் பித்தளை சாமான்கள் எல்லாம் பேரீச்சம் பழக் கடையிலேதான். இங்கே அல்ல. அவைகளை எல்லாம் வாங்குவதாக உத்தேசம் இல்லை.

விளம்பரப் பலகைகளுக்கு நட்ட ஈடு கொடுப்பதற்கு இது போடப்பட்டதே தவிர, வேறு அல்ல. நஷ்ட ஈடு ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். கொடுத்தால்தான் அரசியல் சட்டத்தில் சரியாக வரும். கையகப்படுத்துவதற்கு சரியாக இருக்கும் என்பதற்காகத்தான் நஷ்ட ஈடு கொடுக்கப்படும் என்று போட்டிருக்கிறார்கள். நஷ்ட ஈடு எப்படிக் கொடுக்கப்படும் என்பதைப் பற்றி எல்லாம், விதி முறைகளிலே வகை செய்யப்படும் என்பதைச் சட்டத்திலேயே சொல்லியிருக்கிறோம். மேற்கொண்டு விளக்கமாகவும், அரசு போடுகின்ற உத்தரவுகளிலேயும் தெளிவாக ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்பெனிகளிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு செய்யப்படுகின்ற விளம்பரங்களைக் கூட இது அட்ராக்ட் செய்யுமா? என்று கேட்டார்கள். அதே விதிவிலக்கிலே சொல்லியிருக்கிறோம். ஹோட்டல் நடத்துகிறவர்களோ, அல்லது சினிமாக் கொட்டகை நடத்துகிறவர்களோ, அல்லது கம்பெனி நடத்துகிறவர்களோ, சொந்தமாக விளம்பரப்படுத்துவதாக இருந்தால் ஆட்சேபிக்கப்படமாட்டாது. ஆனால் எல்லாரும் தி.மு.க. உறுப்பினர்கள் உட்பட சொன்னார்கள். மவுண்ட் ரோடு, மவுண்ட் ரோடு என்று, எல்லோர் வாயிலேயும் வந்து கொண்டிருக்கிறது. அண்ணா சாலை என்று தான் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது வேண்டுகோள் தான். இதற்கும் கோபப்பட வேண்டாம்.

அண்ணா சாலையிலே இருக்கக் கூடிய விளம்பரங்களுக்கு எல்லாம் இப்படிப்பட்ட கம்பெனிகள் ஏதாவது வைத்தால், நிச்சயமாக அது தடுக்கப்படும். அது அரசுக்குத்தான் சொந்தமாக இருக்க வேண்டுமே தவிர, தனிப்பட்ட கம்பெனிகளுக்கு, அப்படி வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

இன்னும் ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும் போது, விளம்பரம் செய்வது தனிப்பட்ட மனித உரிமை என்று சொன்னார்கள். தனி மனித உரிமை என்று எடுத்துக் கொண்டால், எல்லாமே தனி மனித உரிமை என்று சொல்லிக் கொண்டு போகக் கூடாது. உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தான் சில சட்டங்கள் உண்டு. விளம்பரம் செய்வதிலே தனி மனிதன் உரிமை இருக்கிறது என்று சொல்லிவிட்டு, ஆபாச விளம்பரம் செய்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது என்று வாதாடக் கூடாது. விளம்பரம் என்பது தனி மனிதன் உரிமை அல்ல. சொந்த வீட்டிலே நான் விளம்பரம் செய்வதற்கு, எங்கள் வீட்டிலே விளம்பரப் பலகை வைப்பதைத் தடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார் என்று அழுத்தந் திருத்தமாகக் கேட்டார்கள்.



மிக பணிவன்போடு நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வளவு பெரிய அதிகாரத்தை எங்களுக்குக் கொடுத்தது பொதுமக்கள். அவர்கள் தான் கொடுத்தார்கள். கொடுத்து எங்களை எல்லாம் உட்கார வைத்து ஆட்சியை எங்கள் கையில் கொடுத்து இந்தச் சட்டத்தை போடுங்கள் என்ற அதிகாரத்தை கொடுத்தது பொதுமக்கள் தான். யார் கொடுத்தார்கள் என்று நோக்க வேண்டியது இல்லை. பொதுமக்கள் தான் அந்த அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு தான் இந்த சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோமே தவிர வேறு அல்ல. யாரையோ பிடிக்கவில்லை என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொன்னார். இப்போது கூட நான் கேட்க விரும்புகிறேன். யாரையாவது எந்த நபரையாவது மனதில் வைத்து இருந்தால் அதை வெளியே கொட்டி விடுங்கள். நாங்கள் அப்படி ஒரு நபரை விரோதியாகவோ, பகைவராகவோ யாரையும் கருதவில்லை. தனிப்பட்ட நபரை பாதிப்பதற்காக இந்தச் சட்டம் உருவாக்கப்படவில்லை. யாரையாவது மனதில் வைத்துக்கொண்டு இருந்தால் அது தவறு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–50.)

அரசியல் கட்சிகள் மாநாடு நடத்தினால், மதத் தலைவர்கள் விளம்பரம் வைத்தால் என்று எல்லாம் கேட்டார்கள். மாநாடு நடத்துவது பற்றி ஏதாவது விளம்பரம் இருக்குமானால் அவைகளுக்கு விதிவிலக்கு கொடுப்பது பற்றி நிச்சயமாக அரசு கொடுக்கும் என்று நான் உறுதி அளிக்கிறேன். இந்த அரசியல் மாநாள் நடக்கும் வரை அப்படிப்பட்ட விளம்பரம் இருக்கலாம், ஆனாக் மாநாடு முடிந்த பிறகு அவைகளை எடுத்துவிட வேண்டும்.

தந்தை பெரியார் கொள்கைகளை நாங்கள் விளம்பரம் செய்தால் அதற்கு என்ன ஆட்சேபணை செய்வீர்கள் என்று கேட்டார்கள். தந்தை பெரியார் கொள்கையை அரசு, மரியாதைக்குரிய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களே விளம்பரம் செய்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆங்காங்கே தந்தை பெரியார் சிலை திறப்பது, தந்தை பெரியாருடைய கொள்கைகளை பரப்புவதாக இருக்கிறார்கள். அவர்களுக்கு தடை விதிக்க இந்த அரசு நிச்சயமாக செய்யாது என்பதை நான் வலியுறுத்தி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பெரிய தொழிற்சாலைகளை தேசீய மயமாக்குவது போல் இந்த சின்ன தொழிற்சாலையை செய்கிறீர்களே என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இது சின்னதாக இருந்தால் நீங்கள் ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்கள். இது சாதாரண ஒரு சட்டம். இதற்கு ஏன் ஆத்திரப்பட வேண்டும். ஆத்திரப்படுவதில் இருந்து எனக்கு சந்தேகம் வருகிறது. யாரோ ஒருவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் பாதிக்கப்படுகிறார் என்ற சந்தேகம் வருகின்ற அளவுக்கு ஏன் இப்படி பேச வேண்டும்.

இன்னும் ஒன்று. கட்சி நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டது அல்ல. கொண்டு வரப்பட்டச் சட்டம் பொதுவாக ஆப்ஜெக்ட் அண்டு ரீசன்ஸிலே சொல்லப்பட்டு இருப்பது போல மாநகராட்சி வருமானத்தை பெருக்குவதற்கு ஒரு வழி என்று கருதப்பட்டு தான் இது கொண்டு வரப்பட்டு இருக்கிறது. எவ்வளவு பணம் வந்துவிடும் என்றும் எவ்வளவு பணம் இதனால் சேகரித்து விட முடியும் என்று கேட்டார்கள். வருகின்ற பணம் எவ்வளவு என்று என்னால் அறுதியிட்டு சொல்ல முடியாது.

கையகப்படுத்திய பிறகு அடுத்த ஆண்டு ஒரு கேள்வி போடுவார்களானால் அந்தக் கேள்விக்கு பதில் சொல்கிறோம். எவ்வளவு வந்து இருக்கிறது, எவ்வளவு வரும் என்பதைச் சொல்கிறோம். பார்த்துக் கொள்ளுங்கள். எவ்வளவு வரும் என்று முன்கூட்டியே கேள்வி கேட்கத் தேவையில்லை. எவ்வளவு பேர் விளம்பரப் பலகை வைத்து இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அது வேண்டுமானால் தோராயமாக கணக்கு இருக்கிறது. ஏறத்தாழ சென்னையில் இருக்கிற விளம்பரப் பலகைகளே 1,276. இதிலே உரிமைப் பெற்ற பலகைகள் சில உண்டு. உரிமை இல்லாத பலகைகள் பல உண்டு. ஏன் இருக்கிற சட்டத்தை வைத்து இவைகளை கட்டுப் படுத்த முடியாதா என்று கேட்டால், கட்டுப் படுத்த முடியாது தான் போய் விட்டது. நாளுக்கு நாள் சென்னையிலே ஒவ்வொரு மூலையிலும் ஒரு விளம்பரப் பலகை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதை அப்புறப்படுத்தினால் நீதி மன்றங்களுக்குப் போய் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். அவர்களும் ஸ்டே கொடுத்து விடுகிறார்கள். இப்படி நீதிமன்றங்களுக்குப் போய் ஸ்டே வாங்குகிற காரணத்தால் வேறு வழி இல்லாமல் தேசீய மையம் ஆக்க வேண்டும், நாட்டுடமை ஆக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோமே தவிர, வேறு இல்லை. இதில் தயவுசெய்து தவறாக கருத வேண்டிய அவசியம் இல்லை என்று மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

இந்தச் சட்டம் யாரையும் பாதிப்பதற்காகக் கொண்டு வரப் பட்ட சட்டம் அல்ல. இதன் மீது நீதிமன்றத்திற்கு போகக் கூடாது என்று தடை விதிக்கிறீர்களே இது என்ன அயூப்கான் ஆட்சியா என்று கேட்டார்கள். இல்லை, அயூப்கான் ஆட்சி இல்லை, இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சி. நீதிமன்றத்திற்கு போவதற்கு தடை விதித்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாங்கள் ஒன்றும் அவ்வளவு குருட்டுத் தனமாக சட்டத்தைப் போட்டு விட மாட்டோம். உயர் நீதிமன்றத்திற்கு போவதற்கு அப்பீல் செய்வதற்கு உரிமையிருக்கிறது. ரிட் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. அதைத் தடுக்கவில்லை. தடுத்தாலும் நிற்க மாட்டீர்கள் என்று தெரியும். போவீர்கள். அதற்கு நீதிமன்றத்தில் இடம் இருக்கிறது. நிறுத்தி விட முடியாது. நிறுத்துவதற்கு அதிகாரம் இல்லை. அதுவும் எங்களுக்குத் தெரியும்.





அட்வர்டைஸ்மென்டு டாக்ஸ் தொடர்ந்து இருக்குமா, இதோடு நின்று விடுமா என்று கேட்டார்கள். இரண்டும் வேறு வேறு. அட்வர்டைஸ்மென்டு டாக்ஸ் என்பது தனி. வால்போஸ்ட்டர்கள் போடுவது சம்பந்தப்பட்டது அது. அது வேறு விவகாரம். அது நிச்சயமாக தனியாக வசூலிக்கப்படும். இது ஓர்டிங்ஸ். கால்நட்டு விளம்பரம் பலகை போட்டு செய்யக்கூடிய விளம்பரங்களை அரசுடைமை ஆக்கினோமே தவிர, அட்வர்டைஸ்மென்டு டாக்ஸ்க்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தனியாக நிச்சயமாக அது இருக்கிறது. அதை வேண்டுமானால் இன்னும் எவ்வளவு கடுமையாக்க வேண்டுமோ அவ்வளவு கடுமையாக ஆக்கலாம்.

இதில் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து இருக்கிறீர்களே என்று கேட்டார்கள். ஒரு குற்றம் செய்தவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று சொன்னால் நீதி மன்றத்தால் 3 ஆண்டு காலம் சிறை தண்டனை கொடுத்து விட வேண்டும் என்பது அல்ல. சட்டத்தைக் கடுமையாக போட வேண்டும் என்பதற்காக சிறைத் தண்டனை போட்டு இருக்கிறோம். அதுவும் பொது உடமை கட்சியைச் சேர்ந்தவர்கள் இவ்வளவு கடுமையாக சட்டத்தை எதிர்த்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

எனக்கே புரியவில்லை. இந்தச் சட்டத்தில் மேற்கொண்டு சொல்வதற்கு எதுவும் இல்லை. இந்த விளம்பரப் பலகைகளை கையகப்படுத்துவதன் மூலமாக யாரையும் கெடுக்கவேண்டும் என்ற நோக்கம் அல்ல. பொதுவாக, நாட்டில் நடைபெறுகின்ற விபத்துக்களைத் தடுக்க, ஆபாச விளம்பரங்களைத் தடுக்க, அதோடு கூட, மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்கத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, வேறு அல்ல என்று சொல்லி, இந்தச் சட்டத்தை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன், திருத்தத்தை வலியுறுத்துகிறீர்களா;

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சில விளக்கங்களை இங்கே கொடுத்தார்கள். அந்த விளக்கங்களின் அடிப்படையில் இந்தச் சட்டத்தை நல்லமுறையிலே மாற்றி அமைக்கவேண்டும். அதாவது 'ஏஜென்சி' என்பதற்கு பதிலாக 'நகராட்சி' என்று போட்டு விடலாம். அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஏற்கனவே விவாதத்தில் பேசிவிட்டீர்கள்; மறுபடியும் பேசமுடியாது. உங்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறீர்களா, இல்லையா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஆகவே, நான் எனது திருத்தத்தை வலியுறுத்துகிறேன். செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது வாக்கெடுப்பு.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகள் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 21 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 22

Mr. DEPUTY SPEAKER : The question is:

"That Clause 22 do form part of the Bill".

Hon. Thiru P. U. SHANMUGAM : Sir, I move that— "In Clause 22, add the following words at the end, namely; 'or in any decree or order of any court, tribunal or other authority.".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 22, திருத்தப் பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 23 முதல் 27 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

அட்டவணை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "அட்டவணை சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,- நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :



"In the schedule, In clause 2, after the proviso, add the following namely:–

provided further that in the case of any hoarding which has been erected on any land without the consent of the owner and the hoarding is in existence on the date of the commencement of this Act and where any lease or licence has been entered into in respect of such hoarding, no amount shall be paid to any person interested in such lease or licence, whether the period of lease or licence has expired or not.

Explanation I.—For the purposes of the second proviso, a 'hoaring' shall be deemed to have been erected without the consent of the owner of the consent of the owner though obtained initially, has not been expressly obtained in writing for the renewal of the lease or licence.

Explanation II.—For the purpose of the second proviso, 'owner' includes any person deriving rights through him."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

அட்டவணை திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 38/1985) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு, திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 2–00)

(இ). மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு— 1985.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1985-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

[திரு. ப.உ. சண்முகம்] [1985 ஜூலை 11

மதுரை மாநகராட்சிக்குத் தேர்தல்கள் கடைசியாக 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் ஆறு ஆண்டு பதவிக் காலம் 29—7—1984 நண்பகலுடன் முடிவடைந்தது. மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் தேர்தல்களை நடத்துவதற்கு முன் வாக்காளர்களுக்கு, புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்க வேண்டும் என அரசு தீர்மானித்ததால் 29—7—1984 அன்று மதுரை மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைந்ததும், மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் பிரிவு 48-A-ன் கீழ், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மாநகராட்சி மற்றும் மேயர் பணிகளைச் செய்ய தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இத்தனி அதிகாரி அவர் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 29—7—1984 நண்பகலில் இருந்து, ஒரு ஆண்டு காலத்திற்குள் மதுரை மாநகராட்சித் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 62-Aல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஓராண்டுக் காலம் 29—7—1985 நண்பகலில் முடிவடைய இருக்கிறது.

ஊராட்சி மற்றும் நகராட்சித் தேர்தல்களை முதல் கட்டமாகவும், மாநகராட்சித் தேர்தல்களை இரண்டாவது கட்டமாகவும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஊராட்சி மற்றும் நகராட்சித் தேர்தல்களை 9—9—1985ல் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. செப்டம்பர் மாதம் ஊராட்சி, நகராட்சித் தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பிறகு, மாநகராட்சித் தேர்தல்கள் நடத்துவது குறித்து முடிவு செய்யப்படும். எல்லா மாநகராட்சிகளிலும் 1—1—1984 அன்று 18 வயதடைந்தவர்களின் பெயர்களை வீட்டுக்குவீடு சென்று கணக்கெடுத்து புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 1—1—1985 அன்று 18 வயதடைந்தவர்களின் பெயர்களையும் சேர்த்து, புதிதாக அச்சடிக்க வேண்டும். அதன் பின்னர், மாநகராட்சித் தேர்தல்களை நடத்நலாம். இவ்வாறு வாக்காளர் பட்டியல்களை திருத்தி அமைத்து தேர்தல்களை நடத்த இன்னும் ஆறு மாதங்களுக்கு மேலாகலாம். ஆகவே, ஒரு ஆண்டுக்குள் அதாவது 29—7—1985க்குள் மதுரை மாநகராட்சித் தனி அதிகாரி மாநகராட்சித் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 62—ஏல் உள்ளதை ஒரு ஆண்டு ஆறு மாத காலத்திற்குள், அதாவது 29—1—1986க்குள் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று சட்டத்திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, மதுரை மாநகராட்சி தனி அதிகாரி, மாநகராட்சித் தேர்தல்களை 29—1—1986க்குள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய கொண்டுவரப்படும் இச்சட்ட முன்வடிவை இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

* 1985 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் தேதியன்று தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1985 ஜூலை 11]

*திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுரை மாநகராட்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்தச் சட்டத்தில் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களை மட்டும் எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். 15/1971 தமிழ்நாடு சட்டம் 62-ஏ என்ற பிரிவினை தமிழ்நாடு திருத்தச் சட்டம் 8/1985-இல் உள்ள பிரிவு 48-ஏ இன் கீழ் நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரியின் காலக் கெடுவை நீட்டிக்கின்ற அடிப்படையில் இந்தத் திருத்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மன்றத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தனி அதிகாரியின் காலக்கெடு 29—7—1985-இல் முடிவடையும் காரணத்தால், அதை மேலும் ஆறு மாத காலம் தள்ளி வைத்திட வேண்டும். அந்த இடைவெளியில் தேர்தல் நடத்தப்படலாம் என்ற அடிப்படையில் இந்தத் திருத்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

ஆனால், நோக்கங்களைப் பற்றி அரசின் சார்பாக, இந்தத் திருத்தச் சட்டத்தில் எடுத்துத் தெரிவிக்கின்ற நேரத்தில், வருகின்ற 9—9—1985-இல் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தல் நடத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், மாநகராட்சி தேர்தலைப் பொறுத்தவரையில், ஆறு மாத காலம் தனி அதிகாரியின் காலக்கெடு நீட்டிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல், தேர்தல் எப்பொழுது என்று அறிவிக்கப்படவில்லை. ஏன் இந்தக் காலக் கெடு ஆறு மாத காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான காரணங்களை, சட்டத்தின் நோக்கங்களை விவரிக்கின்ற நேரத்தில் அதிலே தெரிவிக்கவில்லை. இப்படி நீண்டகாலமாக ஜனநாயக அமைப்பில் காலக்கெடுவை நீட்டித்துக்கொண்டே செல்வதால், மக்கள் பணிகள் தடைபடுகின்றன. மாநகராட்சியினுடைய பணிகள் என்பது அன்றாடம் மக்கள் பிரதிநிதிகள் பார்த்து, ஒழுங்கு செய்ய வேண்டிய பணிகள். சுகாதாரப் பணிகளாக இருந்தாலும், சாலைப் பணிகளாக இருந்தாலும், குடிநீர்ப் பணிகளாக இருந்தாலும், அன்றாடம் பார்த்து நிறைவு செய்ய வேண்டிய பணிகள் என்பதால் இப்படிப்பட்ட மாநகராட்சிகளின் அமைப்புகளுக்குத் தேர்தல் மூலமாகப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான், பணிகள் செவ்வனே நடைபெற வாய்ப்பாக அமையும். ஏற்கெனவே ஒரு ஆண்டு நீட்டிக்கப்பட்டு, மேலும் ஆறு மாதங்கள் நீட்டிக்கப்பட்டு, இன்றைக்கும் தேதி குறிப்பிடப்படாமல் இருப்பதால், இந்த மன்றத்திலேயும் மக்கள் மத்தியிலேயும் மேலும் நீடிக்கப்படலாமோ என்ற ஐயப்பாடு இன்றைக்கு எழுந்திருக்கிறது. இன்றைக்கு, காலங்கள் நீட்டிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்ற காரணத்தாலே, அத்தியாவசியப் பணிகள் எல்லாம் மதுரை மாநகராட்சியிலே தேங்கிக் கிடக்கின்றன. எங்கு பார்த்தாலும் சுகாதாரக் கேடு. சுகாதாரப் பிரிவில் பணியாற்றுகின்றவர்கள் ஒழுங்காகத்

தங்களுடைய கடமைகளையெல்லாம் செய்யாமல் இன்றைக்கு நகரமே சுகாதாரக் கேடான நிலைமையில் இருந்து கொண்டிருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது.

சரியான முறையிலே குடிநீர் வழங்காத காரணத்தாலே, மதுரை மாநகராட்சி மக்கள் சொல்லொணாத அளவிற்கு அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் நீக்கி விட வேண்டுமென அதிகாரிகளிடம் தெரிவிக்கின்ற நேரத்தில், மாநகராட்சிக்கான மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அதிகாரிகளிடம் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னாலும் உரிய, தொடர்புடைய, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தாலே, எங்களுடைய கோரிக்கைகளைக் காலதாமதப்படுத்துவதற்கான சூழ்நிலை உருவாகி விடுகிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

குடிநீர் எடுத்துச் செல்வதற்கான லாரிகள் எத்தனை இருக்கின்றன என்று பார்த்தால், 40, 50 என்று கணக்குக் காட்டுகிறார்கள். ஆனால், 10, 15 வண்டிகள்தான் இன்றைக்குப்பணியாற்றிக் கொண்டு இருக்கின்றன. பாக்கி எல்லாம் ஓர்க்ஷாபிலே அப்படியே இருக்கிறது. ஓர்க்ஷாப்பிலே உள்ள லாரிகள் இன்றைக்குப் பழுதடைந்திருக்கின்றன என்றுதான் சொல்லுகிறார்களே அல்லாமல், பழுதடைந்த அந்த லாரிகளில் இஞ்ஜின்களில் உள்ள பாகங்கள் அனைத்தும் இல்லையென்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளை எல்லாம் பார்வையிட்டு மேலும் நகரத்தினுடைய சீர்குலைந்த பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு, இத்தகைய சூழ்நிலை உருவாவதற்கு முறையான மக்கள் பிரதிநிதிகள் இல்லாதது தான் காரணம் என்பதை உணர்ந்து என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டு, வெகு விரைவிலே, 6 மாதத்திற்கு முன்பாகவே, தேர்தலை நடத்த வேண்டிய தேதியை அறிவித்து, தேர்தலை நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே, ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்படுகிற நேரத்திலே இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கின்ற நேரத்தில் ஒரு வேண்டுகோள் வைக்கப்பட்டது. அதாவது, இந்த மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்துவதற்கான நாளைக் குறிப்பிட்டு, அந்த நாளிலே தேர்தல் வைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும், என்று. அப்படி அறிவித்துவிட்டு இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்ட நேரத்தில், அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், தேர்தல் என்றைக்கு நடத்தப்படும் என்று என்னால் உடனடியாகச் சொல்ல முடியாது. ஆனால், விரைவிலே தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார். ஆய்வு செய்ய எடுத்துக் கொள்கிற நேரத்தில் அமைச்சர் அவர்



கள் அப்படிப்பட்ட ஒரு அறிவிப்பு கொடுப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், இன்று படிக்கப்பட்ட நேரத்திலே, ஒரு வருஷ காலத்திற்குள் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றுதான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நேரத்திலே, அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்ன வென்றால், மாநகராட்சியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால், வேறு சில பிரச்சினைகள் உள்ளன. மக்களுடைய பிரச்சனைகளைப் பற்றி, மக்களுடைய பாதிப்புகளைப் பற்றி உறுப்பினர் பொன்முத்துராமலிங்கம் அவர்கள் எடுத்துச் சொன்னார். நான் அந்த விஷயங்களுக்கு வரவில்லை. 6 வருஷம், 7 வருஷம் வேலை செய்யக் கூடிய ஊழியர்கள், மின்சாரத் துறையிலே, சுகாதாரத்துறையிலே இன்னும் தினக் கூலியாட்களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பல உரிமைகள் இன்றைக்கு வழங்கப்படவில்லை. பல சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநகராட்சி இருக்குமேயானால் அவர்களுடைய பிரச்னைகளைச் சொல்ல அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால், துரதிருஷ்ட வசமாக, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்தான் ஸ்பெஷல் ஆபீசராகப் பொறுப் பேற்று நடத்திக் கொண்டிருப்பதன் காரணமாக, இப்பிரச்னைகளுக்குத் தீர்வு காண அவர்களுக்குச் சங்கடமாக ஏற்படுகின்றது. ஆகவே, அவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு, இன்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், ஒரு வருஷ காலத்திற்குள், தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடு என்பதற்குப் பதிலாக, 3, 4 மாதத்திற்குள்ளாக, குறிப்பாகச் சொல்வோமேயானால், டிசம்பர் 31-ஆம் தேதிக்குள்ளாக தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று தெரிவித்து, இந்தச் சட்டத்திற்கு அந்த முறையிலே அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்து, அந்த வேண்டுகோளோடு முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-10.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டிசம்பர் 31-ந் தேதி வரையில் கால நீட்டிப்பு கொடுக்கலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். நான் கேட்டுக்கொள்வது அதிகமில்லை, மேலும் ஒரு 29 நாட்களுக்குத்தான். 29—1—86 வரையில் நீட்டிப்பு கேட்கிறேன். அவ்வளவுதான். எவ்வளவு சீக்கிரம் தேர்தலை வைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வைப்போம் என்ற உறுதியை இந்த நேரத்தில் தருகிறேன்.

மாநகராட்சியிலுள்ள குடிநீர் எடுத்துச் செல்லும் லாரிகள் சரியாக ஓடவில்லை, தண்ணீர் கொடுக்கவில்லை, லாரிகளில் சில சாமான்கள் இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். அதை அவர்கள் புகாராக எழுதிக் கொடுத்தாலும் விசாரிக்கிறோம். அல்லது இங்கே சொன்னதை வைத்து வேண்டுமென்றாலும் விசாரிக்கிறோம்.

1985 ஜூலை 11] [திரு ப. உ. சண்முகம்]

வேறு வழியில்லாமல்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். பற்ற நகராட்சி, ஊராட்சித் தேர்தல்களை நடத்த விருக்கிறோம். மூன்று மாநகராட்சித் தேர்தல்களை மட்டும்தான் ஒத்தி வைக்கிறோம். எப்படியும் சீக்கிரம் தேர்தலை நடத்துவோம். தனி அதிகாரிகளை வைத்து ஆட்சி நடத்த வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. எனவே இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1985 ஆம் ஆண்டு பதுரை பாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட பன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்பானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு—2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுபதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: பாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்பானத்தை பொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு பதுரை பாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.



1985 ஜூலை 11]

(ஈ) நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழக்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள்* (திருத்த சட்டமுன்வடிவு சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

சென்னை மாநகராட்சி சட்டத்தில், இம்மாநகராட்சியில் அலுவலர்களை, நகராட்சி ஏதொன்றின் பணிக்கோ அல்லது அத்தகைய நகராட்சி ஏதொன்றின் அலுவலர்களை இம் மாநகராட்சியின்பணிக்கோ மாற்றம் செய்வதற்கு மாநிலஅரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இம் மாநகராட்சியின் அலுவலர்களை மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் பணிக்கு மாற்றம் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

மதுரை மாநகராட்சிச் சட்டத்தில், இம் மாநகராட்சியின் அலுவலர்களை சென்னை மாநகராட்சியின் அல்லது நகராட்சி ஏதொன்றின் பணிக்கும் மாற்றல் செய்வதற்கும், அதேபோன்று சென்னை மாநகராட்சியின் அல்லது நகராட்சி ஏதொன்றின் அலுவலர்களை இம் மாநகராட்சியின் பணிக்கு மாற்றல் செய்வதற்கும் மாநில அரசுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இம் மாநகராட்சியின் அலுவலர் எலரையும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பணிக்கு மாற்றல் செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

எனினும் கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் இம் மாநகராட்சியின் அலுவலர்களை சென்னை மாநகராட்சியின் அல்லது மதுரை மாநகராட்சியின் அல்லது நகராட்சி ஏதொன்றின் பணிக்கு மாற்றல் செய்வதற்கும் அதேபோன்று சென்னை மாநகராட்சியின் அல்லது மதுரை மாநகராட்சியின் அல்லது நகராட்சி ஏதொன்றின் அலுவலர்களை, இம் மாநகராட்சியின் பணிக்கு மாற்றல் செய்வதற்கும் மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் ஒரு நகராட்சியின் அலுவலர்களை வேறு ஒரு நகராட்சியின் பணிக்கு, சம்பந்தப்பட்ட அந்த நகராட்சிகளைக் கலந்தாலோசித்து பின்பு, மாற்றல் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு நகராட்சியின் அலுவலர்களை ஒரு மாநகராட்சியின் பணிக்கு மாற்றம் செய்வதற்கு, அதே போன்று ஒரு மாநகராட்சியின் அலுவல்களை ஒரு நகராட்சியின் பணிக்கு மாற்றம் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

---

* 1985 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இம் மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றின் நிருவாகத்தை மேம்படுத்தவும் அவை பொதுமக்களுக்கு மேலும் சிறந்த முறையில் பணியாற்றவும், ஒரு மாநகராட்சியில் வேலையிலுள்ளவர்கள், பிற மாநகராட்சி அல்லது நகராட்சி ஏதேனொன்றிற்கும், நகராட்சிகளில் வேலையிலுள்ளவர்கள் தற்போது இருந்துவருகிற மற்றும் புதிதாக அமைக்கப்படக்கூடிய மாநகராட்சி மற்றும் பிற நகராட்சி ஏதொன்றிற்கும் மாற்றல் செய்யப்படுவதற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும் என்று அரசு கருதுகிறது. எனவே, இந்நோக்கத்தை எய்தும்பொருட்டு சென்னை மாநகராட்சி சட்டம், மதுரை மாநகராட்சிச் சட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் மாவட்ட நகராட்சிகள் சட்டம் ஆகியவற்றை தக்கவாறு திருத்த அரசு முடிவு செய்துள்ளது.

எனவே, மாநகராட்சி மற்றும் நகராட்சி அலுவலர்களை மற்றொரு மாநகராட்சி அல்லது நகராட்சிக்கு மாற்றல் செய்ய வகை செய்துகொண்டு வரப்படும். இச்சட்ட முன்வடிவினை இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, ட்ரான்ஸ்ஃபர் எல்லா டிபார்ட்மென்டிலும் இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. அது நடைமுறைக்கும் வருகிறது. ஆனால் இந்தச்சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில் எப்படி இருக்கிறது என்றால், எனக்கு ஒருவர் தேர்தல் காலத்தில் ஓர்க் பண்ணினார் என்பதற்காக அவரை ஸ்டேட்வைட் ட்ரான்ஸ்ஃபர் பண்ண வேண்டுமென்று நினைக்கிறார்கள். செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ நாட்டில் இருக்கின்றன.

இங்கே இருக்கின்ற உறுப்பினர்களைத் தூக்கி கடலூருக்கு அடிப்பதும், கடலூரில் இருப்பவரைத் தூக்கி சிதம்பரத்திற்கு அடிப்பதும் அல்லது மதுரைக்கு அடிப்பதும் எப்படி சரி? இப்படிப்பட்ட ஒரு சட்டம் இந்த நேரத்தில் அவசியம் தானா? இங்கே இருந்து 10 சேனிட்டரி இன்ஸ்பெக்டர்களை மதுரைக்கு மாற்றுகிறீர்கள். Better service to the public அதுதான் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ். ஆனால் இங்கேயிருந்து அங்கே மாற்றிட்டால் அங்கே போய் நன்றாக வேலை செய்வார்களா ? எனவே நீங்கள் சொல்கிற ரீசன்ஸ் நியாயமானதாக இல்லை. இதிலே மோட்டிவ் இருக்கின்றது. அதனால்தான் அப்போஸ் பண்ணுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊழியர்களை ட்ரான்ஸ்ஃபர் பண்ணுவதற்கான அதிகாரம் அரசுக்கு இருக்கின்றது என்பதைக் கொள்கை அளவில் நான் மறுக்கவில்லை. ஆனால் பிரச்சினை என்னவென்றால் லோக்கல் பாடியிலே இருக்கக்கூடியவர்களை எல்லாம் அதாவது தமிழகத்தின் முனிசிப்பாலிட்டிகளிலும், கார்ப்பரேஷன்களிலும் வேலை செய்யக்கூடியவர்களை ட்ரான்ஸ்ஃபர் பண்ணுவதற்கான ஒரு சட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் தற்சமயம் அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் ட்ரான்ஸ்ஃபர் என்பதே





ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக ஏற்பட்டு இருக்கின்றது. இதனை நான் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்வதற்கு விரும்பவில்லை. பல இடங்களில் ட்ரான்ஸ்ஃபர் கிடைக்கவேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட சில உயர் அதிகாரிகளைத் திருப்திப்படுத்தினால்தான் அவர்களுக்குச் சில இடங்களில் பணம் கொடுத்து கேட்டால்தான், கிடைக்கின்ற நிலைமை இருக்கின்றது. இது பற்றி அரசு ஊழியர்களிடத்திலே இருந்து பல புகார்கள் வந்திருக்கின்றன. ஆதாரம் இருக்கின்றதா என்று இதற்கெல்லாம் கேட்டால் ஆதாரம் கொடுப்பது சுலபமாக இருக்காது. பல அரசு ஊழியர்கள் அப்படி சொல்கிறார்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது போன்ற குற்றச்சாட்டுகளை எல்லாம் ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது. ஆதாரம் இருந்தால் என்னிடத்திலே கொண்டு வந்து காட்டிவிட்டு என்னுடைய முன் அனுமதியைப் பெற்றுத்தான் அவையிலே பேச வேண்டும். இப்போது சொன்ன குற்றச்சாட்டு நீக்கப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் லோக்கல் பாடீஸ்-லே இருக்கக்கூடிய ஊழியர்களைப் பொறுத்த வரையில் அவர்களையும் கன்னியாகுமாரியிலிருந்து சேலத்திற்கும் நீலகிரிக்கும் ட்ரான்ஸ்பர் பண்ணக்கூடிய நிலைமை ஏற்படலாம். அது அவர்களுக்குப் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும் அப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படாத வகையில் இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அந்த வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் எந்தத் துறையில் பணியாற்றினாலும் அவர்கள் அத்தனைபேருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய முழுப் பொறுப்பு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு. உள்ளாட்சித் துறையிலே இருப்பவர்களை ஏதோ பழிவாங்கும் நோக்கத்தோடு மாற்றுவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். யாரோ ஒருவர் தேர்தலிலே எதிர்த்து வேலை செய்ததால் அதற்காக அவரை மாற்றிவிட்டதாகச் சொன்னார்கள். அது யார் என்றே தெரியவில்லை. தயவுசெய்து பெயரைச் சொன்னால் பரவாயில்லை. அப்படி நான் யாரையும் மாற்ற விரும்பவில்லை. (குறுக்கீடு) அரசு ஊழியர்கள் தேர்தல் வேலையில் கலந்துகொள்ளக்கூடாது என்பது விதி. அது சட்டம். ஆனால் கலந்துகொண்டதாக அவர்களே ஒத்துக் கொண்டார்கள். அவர்களே பகிரங்கமாக சட்டமன்றத்திலே ஒத்துக்கொண்டார்கள் எனவே அரசியல் நோக்கத்திற்காக எந்தச் சட்டமும் கொண்டு வரப்படவில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(திரு. ப. உ. சண்முகம்) [1985 ஜூலை 11

18 ஆண்டுகள், 20 ஆண்டுகள் ஒரே இடத்திலே பணியாற்றினால் சில அதிகாரிகள் சில நேரங்களில் தவறு செய்து விட்டால் அவர்களை மாற்றவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. எந்த வேலையும் செய்யாமல் தவறுகளையும் தொடர்ந்து செய்கிறார்கள் என்பதால் தேக்க நிலை ஏற்படுகின்றது. ஆகவே அவர்கள் சிலநேரங்களில் மாற்றப்படவேண்டிய அவசியம் ஏற்படுகின்றதே தவிர எல்லோரையும் மாற்றவேண்டிய அவசியம் இல்லை. அது போல் விளையாட இந்த அரசு தயாராக இல்லை. எப்படி மற்ற துறைகளில் இருக்கின்ற ஊழியர்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார்களோ, அதேபோல் உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற ஊழியர்களைப் பொறுத்தவரையிலும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும். எனவே தேவையற்ற முறையில் பழி வாங்கும் நோக்கத்தோடு இந்த அரசின் இந்தச் சட்டம் இருக்காது என்ற உறுதியினைக் கூறிக்கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 39/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.



1985 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(மாலை 4-30)

மாலை 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

7. வரவு-செலவுத் திட்டம் 1985—86 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,24,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 32 பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,54,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை * நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு நான் இறுதியில் பதிலளிக்கிறேன்.

* 236—276-ம் பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

*திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் பற்றிய எண் 32, மானியக் கோரிக்கையின் மீதும், மீனளம் பற்றிய எண் 21, மானியக் கோரிக்கையின் மீதும் நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு ஒருசில கருத்துக்களை கூறுவதற்கான வாய்ப்பினை அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவதாக எண் 32 ஆம் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுகிறபோது, மனித குலம் ஜாதியின் பேரால் பிரிக்கப்படக் கூடாது என்ற கொள்கையிலேயிருந்து எங்களுடைய இந்து முன்னணி இயக்கம் எங்கே விலகி விட்டதோ என்ற ஐயப்பாடும் அல்லது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 14-வது பிரிவிலே சொல்லப்படுகின்ற, "equality before law" என்ற தத்துவத்தை விதிவிலக்குகள் இன்றி செயல்படுத்த வேண்டும் என்ற கொள்கையில் இருந்து இந்து முன்னணி விலகி விட்டதோ என்ற ஐயப்பாடும் யாருக்கும் தேவையில்லை. ஆனாலும், நாட்டு மக்கள் ஜாதியின் பேரால் பிரிக்கப்பட்டு, அதன் காரணமாக சலுகைகள் நீண்ட நாட்களாக வழங்க வேண்டுமென்ற கொள்கை இருந்தாலும், நாட்டுமக்கள் நலன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அந்தத் துறையின் சார்பாக வைக்கப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய இயக்கத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

தென் குமரியிலே தோன்றி, முடி சூடும் பெருமாளாக பேர் கொண்டு, பிற்காலத்தில் ஆண்டவன் அவதாரமாகக் கருதப்பட்டு, அதன் காரணமாக வணங்கப்பட்ட ஐயா வைகுண்டர் அவர்களுடைய அருள் உரையில் 'தாழக் கிடப்போரை தற்காத்தலே தர்மம்' என்று சொல்லுகிறார். ஆக தாழக் கிடப்போரை தற்காக்க வேண்டுமென்ற தர்மத்தில் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அதற்கான பணிகளைத் திறம்பட செய்யும்போது, எங்கள் இந்து முன்னணி இயக்கத்தின் சார்பாக இந்த அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாய வளர்ச்சியிலும், பல்வேறு ஏனைய முனைகளிலும், பொருளாதார ரீதியிலும் பின்தங்கிய சமுதாயம் மலர்ந்து வரவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு ஆக்கபூர்வமான பல உதவிகளைச் செய்யவேண்டுமென்பதை இந்த அரசாங்கம் கருத்திற்கொண்டு, பல்வேறு பணிகளைச் செய்துகொண்டு வருகிறது.





கல்வியைப் பொறுத்தவரை, ஆண்டுக்கு ரூ. 5,000-க்கும் குறைவாக வருமானமுடைய பெற்றோர்களின் குழந்தைகளுக்கு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால், அவர்களுக்குக் கல்விச் சலுகைகள் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் கல்விச் சலுகைகள் இன்றைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் ரூ. 5,000-க்கும் மேற்படாமல் வருமானம் உள்ள பெற்றோர்களின் குழந்தைகள், அவர்களது பெற்றோர்கள் இன்றைக்கு வருமான சான்றிதழ் பெற மிகவும் அல்லல்பட வேண்டியிருக்கிறது அல்லது இல்லாத ஊருக்குப் போகாத ஒரு பாதையை நாடிச் செல்லும் ஒரு பணியாக இருந்து கொண்டிருக்கிறது.

சான்றிதழ்களைப் பெறுவதற்காக கிராம அதிகாரிகளின் அலுவலகங்களுக்குச் சென்று 2, 3 நாட்கள் காவல் கிடந்து ஒரு பரிந்துரையை ஒரு அறிக்கையின் மூலமாகப் பெற்று அதைக் கொண்டுபோய் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அலுவலகத்தில் கொடுத்து அங்கே 2, 3 நாட்கள் தவம் கிடந்து பரிந்துரையைப் பெற்று அதற்குப் பிறகு வட்ட ஆட்சியரிடம் சென்று குதிரைக் கொம்பைத் தேடியது போல் தேடி அது வந்தாலும்கூட அந்த சான்றிதழ் சரியான சான்றிதழாக இல்லை. ஆகவே சலுகை சுரண்டல் நடந்து கொண்டிருக்கிறது. வருமானம் அதிகம் உள்ளவர்கள் அதிகாரிகளிடத்திலே நெருக்கமடைகிற காரணத்தினால் அவர்கள் நெருங்கி வருமானத்தைக் குறைத்துக் காட்டி ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைத் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெற்றுவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே வருமானத்தைக் காட்டி சான்றிதழ் பெறுகி முறையை முறைப்படுத்த வேண்டும்; எளிமைப்படு வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் குழந்தைகள் தேர்வில் 40 சதவீத மதிப்பெண்கள் பெற்றால்தான் அவர்களுக்கு அடுத்த ஆண்டு சில சலுகைகள் கொடுக்கப்படக்கூடிய நிலை, கட்டுப்பாடு இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி குறைந்த பட்சம் மதிப்பெண்கள் பெற்று வெற்றிபெற்றால் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். மதிப்பெண்கள் அடிப்படையிலே சலுகைகள் கொடுக்கப்படக்கூடிய முறை மாற்றப்பட வேண்டும். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் கல்விச் சலுகைகள் கிடைப்பதாக நாம் எல்லாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்திலே வாழ்கிற ஒரு இனம், உழைக்கின்ற வர்க்கமாக ஒரு இனம் இருந்துகொண்டு இருக்கிறது. கிருஷ்ணன் வகை சமுதாயம் என்ற ஒரு சமுதாயம் இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் உள்ள சமுதாயங்களை எல்லாம் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்து எந்த சமுதாய மக்கள் படிப்பறிவு, பட்டம் பெறுவதில் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்று பார்த்தால் இந்த சமுதாயம் தான் அப்படி இருந்துகொண்டிருக்கிறது. காலையிலிருந்து மாலை வரையில் அந்த சமுதாயத்தினர் கழனிகளிலே பணியாற்றுகிறார்கள். காலையிலே அவர்கள் சேற்றிலே கைவைத்தால்தான், நாட்டுப்புறங்களிலே வாழ்கிற

அவர்கள் காலையிலே சேற்றில் கைவைத்தால் தான் நகர்ப்புறங் களிலே, பட்டணங்களிலே வாழ்கின்றவர்கள் சோற்றிலே கைவைக்கமுடியும் என்ற அளவுக்கு உழைக்கின்ற பிற்பட்ட சமுதாயமாக அவர்கள் இருக்கிறார்கள். பிற்பட்ட சமுதாய மாக அவர்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் என்று எதுவுமே கிடைக்க வில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அந்த சமுதாயத் தினருக்கு உழைக்கின்ற ஏழைகளுக்கு ''கிருஷ்ணன் வகை'' என்ற அந்த சமுதாயத்தின் மாணவ மாணவியருக்கு கல்வியிலே பள்ளிப் படிப்பாக இருந்தாலும், கல்லூரிப் படிப்பாக இருந்தாலும் சலுகைகளைக் கொடுப்பதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும், கனிவோடு அரசு இந்த வேண்டுகோளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பனையேறும் நாடார் குலத்தைச் சேர்ந்தவர்கள் பனையேறும் தொழிலிலே ஈடுபடுகிறவர்கள், விபத்துக்கு ஆளாகி கீழே விழுந்து இறக்க நேரிட்டால் அல்லது அவர்கள் வேறு வகையிலே இறக்க நேரிட் டால் அவர்களுக்கு உதவித் தொகைகள் கொடுப்பதிலே கால தாமதம் ஏற்பட்டு அதற்குக் காரணங்கள்காரியங்கள் சொல்லப் படுகின்ற நிலை இருக்கிறது. அவர்கள் வேலைக்குப் புறப்பட்டுச் செல்கின்ற இடத்திலிருந்து வேலை முடித்து வீட்டிற்குத் திரும்பி வரும்வரையிலும் ஏதேனும் விபத்துக்கு ஆளானால் அதையும் பணியிலே இருக்கிறபோது விபத்து ஏற்பட்டு இறக்க நேரிட்ட தாகக் கருதி நட்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே அவர்கள் காலையிலே 2 மணி 3 மணிக்கே எழுந்து தினந் தினம் அவர்கள் தொட்டு வணங்கும் முருக்குத் தட்டி யோடும், அரிவாள் பெட்டியோடும் பனையேறும் தொழிலுக்குச் செல்கிறார்கள். விடியாத வேளையிலே அவர்கள் சென்றால் தான் மதியத்திற்குள் வேலை முடிந்து திரும்ப முடியும் என்ற நிலை இருக்கிறது. அப்படி அவர்கள் வேலைக்கு அதிகாலை யிலே செல்கிறபோது நல்ல பாம்பு, நச்சுப் பாம்பு கடித்து இறந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் அறிந்து கொண் டிருக்கிறார்கள். அப்படி இறந்து விட்டால் அவர்கள் வேலைக்குச் சென்று திரும்பி வருகிற வரையில், இடையிலே இறந்து விட்டால் அவர்கள் விபத்து ஏற்பட்டு இறந்தார்கள் என்று கருதி அவர் களுக்கும் நட்ட ஈடு வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4—40)

எட்டாவது வகுப்பில், 10-வது வகுப்பில் முதல் மதிப்பெண் மற்றும் இரண்டாவது மதிப்பெண் பெற்ற பிற்படுத்தப்பட்ட மற்றும் கீழ் மரபினர்களுக்கு வழங்கப்படு கிற உதவித் தொகை





அதிகப்படுத்த வேண்டுமென்ற சிந்தனை இந்த அரசுக்கு இருப்ப தாகக் கொள்கைக் குறிப்பு சொல்கிறது. அதனை உடனடியாக அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டு என்னுடைய வேண்டு கோளை வைக்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் ஒரே ஒரு பிரம்பு பயிற்சி நிலையம் தான் இருக்கிறது. அது என்னுடைய தொகுதியான தக்கலையில் இருக்கிறது. அந்த நிலையத்தில் 15 பேர்கள் பயிற்சி பெறு வதற்குத்தான் வாய்ப்பிருக்கிறது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறைந்தது 50 பேர்கள் பயிற்சி பெறுகிற அளவில் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல மாணவரில்லங்கள், மாணவியரில்லங்களைப் பொறுத்த வரையில் அங்கே வழங்கப்படுகிற உணவு வாய்க்கு ருசியாக இல்லாமல், வயிறும் ஏற்றுக் கொள்கிற அளவில் இல் லாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். தரமான உணவு கொடுக்கப்படவில்லை என்ற புகார் மாண்புமிகு அமைச்சர் அவர் களின் காதுகளுக்கு வந்திருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் புகாருக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு நல்ல தரமான உணவு வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சலவைத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு சலவைத் துறைகள் கட்டிக் கொடுப்பதைப் பற்றி குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இரண்டு சலவைத் துறைகள் கட்டுவதற்கு திட்டமிருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த இரண்டு சலவைத் துறைகளில் ஒன்றினை என்னுடைய தொகுதியில், மேலப்பள்ளம் பகுதியில் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் 500-க்கு மேற்பட்ட சலவைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். சலவைத் தொழிலை நம்பி வாழும் அந்தத் தொழிலாளர்கள் துணிகளைக் கல்லில் அடிப்பதன் மூலம் கல் தேயத் தேய, அதன் மூலம் அவர்கள் கைகளும் தேயத் தேய அவர்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். அந்த வகையில் குளம் எங்கே இருக்கிறது, கல் எங்கே இருக்கிறது என்று தேடி, துணிகளைத் துவைத்து வாழ்க்கையை நடத்தலாம் என்றால் அந்தப் பகுதியில் குளமும் இல்லை, படித்துறையும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே மேலப் பள்ளம் பகுதியில் கண்ணங்குளம் என்று சொல்கிற குளத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து ஒரு படித் துறையைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல முடிதிருத்தும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு கருவிகள் 120 ரூபாய் மதிப்பில் வழங்கப்படுவதாகவும் சலவைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற சகோதரர்களுக்கு 406 ரூபாய் மதிப்பில் கருவிகள் வழங்கப்படுவதாகவும், அந்த வகையில் அரசு அவர்களுக்கு உதவி செய்வதாகவும் கொள்கைக் குறிப்பில் சொல்லி இருக்கிறார்கள். இப்படி அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள்

அவர்களுக்குப் பயனில்லாமல் இருக்கிறதென்ற புகார் இருக்கிறது. அந்தக் கருவிகளின் விலை மதிப்பிற்கேற்ப வழங்கப்படுகிற உதவியை அதிகப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் தக்கலை நகரில் மாணவியரில்லம் ஒன்று உண்டு. அதற்காக அரசாங்கத்திற்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அங்கே முறை கேடுகள் நடப்பதாகவும், நிர்வாகம் சரியாகச் செயல்பட வில்லையென்றும் சொல்லப்படுகிறது. அதுகுறித்த புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்குமென்று நம்புகிறேன். ஏனென்றால் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட புகார்களின் ஒன்றிரண்டு நகல்கள் எனக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நிர்வாகம் ஒழுங்காக நடப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு, அந்தப் பகுதியில் மாணவர் இல்லம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி மனித சமுதாயத்தை ஜாதியின் பெயரால் பிரித்து, ஜாதியின் அடிப்படையில் மனிதர்களுக்குச் சலுகைகள் வழங்கி அவர்களை முன்னேற்றுகின்ற அந்தச் சிந்தனையிலிருந்து இந்த அரசாங்கம் சிறுகச் சிறுக தன்னை விலக்கி, பொருளாதாரத்தில் கீழே இருப்பவர்கள், வறுமைக் கோட்டிற்கு மேலே இருந்தாலும், தங்களுடைய குழந்தைகளை, தங்களுடைய குடும்பத்தை பராமரிக்க முடியாத நிலையில் இருக்கிறவர்களை எல்லாம் கணக்கிட்டு, அவர்களுக்குப் பொருளாதார அடிப்படையில் அரசாங்கத்தின் உதவி சேர வேண்டுமென்ற கொள்கையை வகுத்து, இந்தக் கொள்கையிலிருந்து அந்தக் கொள்கையை நோக்கி அரசாங்கம் தன்னுடைய பாதையை மாற்றிக் கொள்வதற்கு சிறுகச் சிறுக முயல வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க ஆசைப்படுகிறேன்.

அதே போல இன்றைக்கு திருக்கோயில்களில் பணியாற்றுகின்ற அர்ச்சகர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கூட அர்ச்சகர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கூட ஒருவர் இருந்து கொண்டிருக்கிறார். அப்படி ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அல்லாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் திருக் கோவில்களில் அர்ச்சகர்களாக இருப்பவர்களை எல்லாம், ஆலய ஊழியர்களாக இருப்பவர்களை எல்லாம் அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களைத் தனி கிளாசாக, ஒரு செப்பரேட் கிளாசாக கருதப்பட்டு அவர்களையும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்குள்ளே கொண்டு வந்து, அவர்களுக்கு இந்தச் சலுகைகளை வழங்க வேண்டும். அப்படி வழங்குவதன் மூலமாக அரசாங்கத்தினுடைய உதவி தங்களுக்குத் தேவை தேவையென்று துடிக்கிற ஒரு சமுதாயத்திற்கு உதவி செய்ததாக அமையும்.





யானைப் பசிக்குச் சோளப் பொறி கொடுப்பதைப் போல இந்த 11 கோடி ரூபாய் இந்தப் பிற்பட்டோர் நலப் பணிகளுக்கு என்று ஒதுக்கியிருப்பது போதாது என்றுசொல்லி, மீனளம் பற்றி என்னுடைய ஒரே ஒரு கருத்தைச் சொல்லி, முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். இன்றைக்கு உள்நாட்டிலே மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிற சகோதரர்கள் எல்லாம் அந்த மீன் பிடி உரிமையை அரசாங்கம் வாபஸ் பெற்றிருக்கிற ஆணையின் மூலமாக மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே அவர்கள் பாதிக்காத அளவிற்கு அரசாங்கம் தன்னுடைய ஆணையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரியில் உள்ள கடல் ஓரமாக இருந்தாலும் சரி, கொளச்சலாக இருந்தாலும் சரி, அல்லது கொல்லங்கோடாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியில் வாழ்ந்துக் கொண்டு இருக்கிற மீனவர்கள் எல்லாம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். எனவே அவர்களைக் கடல் ஓரத்திலிருந்து நாட்டுப் பகுதிக்கு இட மாற்றம் செய்து, அவர்கள் வாழ்க்கைக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடல் ஓரத்தில் இருப்பவர்களையும், கடல் மணற் பரப்பில் இருக்கின்றவர்களையும் அங்கேயிருந்து இடமாற்றம் செய்து, உள் நாட்டுப் பகுதிக்குக் கொண்டு வந்தால், பல பிரச்சினைகள் தீரும் என்பதை நான் கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மு. ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்களின் இதய தெய்வமாக விளங்குகின்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், சாதாரண கிராம நிர்வாக அதிகாரியாக இருந்த என்னை, சட்டமன்ற உறுப்பினராக்கி இந்த மாமன்றத்திற்கு அறிமுகம் செய்து வைத்துள்ள எங்கள் இதய தெய்வத்தின் பொற்பாதங்களைத் தொட்டுவணங்கி என்உரையை ஆரம்பிக்கின்றேன்.

நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்றும் பதினாறாக நவீன கால மார்க்கண்டேயனாக விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவருக்கும், உளுந்தூர்பேட்டைத் தொகுதி தி.மு.க. கோட்டை என்று கொக்கரித்தவர்களுடைய ஆணவத்தை அழிக்கும் வகையில் என்னை 27 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, உளுந்தூர்பேட்டை அண்ணா தி.மு.க. வின் கோட்டை என நிரூபித்து, வாக்களித்த எனது தொகுதி வாழ் மக்களுக்கும், கழக வெற்றிக்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்ட கழக நண்பர்களுக்கும், கூட்டணிக் கழகத் தோழர்களுக்கும், என்னுடைய இதய பூர்வமான நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது என்னுடைய கன்னிப் பேச்சாக இருக்கின்ற காரணத்தால், எனது தொகுதியில் இருக்கிற சில முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிச் சொல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. ஆனந்தன்] [1985 ஜூலை 11

உளுந்தூர்பேட்டைத் தொகுதி வறட்சிப் பகுதியாகவும், வானம் பார்த்த பூமியாகவும் இருக்கிறது. அங்கே மழையின்றி எதுவும் பயிரிட முடியாது. எனவே அந்தப் பகுதியை வறட்சிப் பகுதி என அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதேபோல் அங்கே கிணறு போன்ற பாசன வசதி களுக்கும் வகை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் சிறு விவசாயி களுக்கு, அவர்கள் தன்னுடைய கிணற்றை ஆழப்படுத்த கடன் உதவிகளைச் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

மேலும் உளுந்தூர்பேட்டையை ஒரு தொழிற் பேட்டை யாக அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன். அதேபோல் உளுந்தூர்பேட்டையில் பாலிடெக்னிக் ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும். அதே போன்று இந்த நூற்றாண்டிலும் சாலை இணைப்பு இல்லாத ஊர்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன.

மேலும் என்னுடைய தொகுதியில் உள்ள ஏமம்-வெள்ளையூர், காட்டுச் செல்லூர்-காலணி, கிளியூர்-ரகுநாதபுரம், நல்லூர் ஒன் றியத்தில் கண்டப்பங்குறிச்சி, வரம்பனூர் ஆகிய இடங்களில் தண்ணீர் வசதி இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேப்பூர் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டும் என்று இந்த அரசுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன். மற்றும் தற்போது விழுப்புரத்திலிருந்து எனது சொந்த ஊரான நத்தாமூர் வரை செல்லும் பஸ்ஸை திருக்கோவிலூர் வரை நீட்டித்துத் தர வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உளுந்தூர்பேட்டையிலிருந்து வெள்ளையூர், சிறுபாக்கம், அங்கனூர், பில்ராம்பட்டு, நெய்வனை கிளியூர், நத்தாமூர், அத்திப் பாக்கம், நரிப்பாளையம் வழியாக திருக்கோவிலூர் வரை ஒரு புதிய பேருந்து தடம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உளுந்தூர்பேட்டையில் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்திற்கு என ஒரு கவுண்டர் அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். விருத்தாசலத் திலிருந்து வேப்பூர் வழியாக பெரிய நெசலூர் வரை சென்று வர புதிய டவுன் பஸ் வழித்தடம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.



[1985 ஜூலை 11 [திரு. மு. ஆனந்தன்]

(மாலை 4-50).

பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளை போக்கு கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு அரசு மாணவியர் விடுதி அமைத்துத் தந்து இருக்கிறார்கள். அதுபோல மாணவர் களுக்கு ஒரு விடுதியை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் உளுந்தூர் பேட்டைத் தொகுதி ஒரு பிற்பட்ட தொகுதி என்பதால் அங்கே மக்கள் அரைகுறையாக படித்து விட்டார்கள். அங்கே நல்ல படிப்பு வசதியை ஏற்படுத்த ஒரு பொறியியல் கல்லூரியை இந்த அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த அரசு கள்ளக்குறிச்சி--திருக்கோவிலூர் செல்லும் நெடுஞ்சாலையிலுள்ள காட்டுசெல்லூர் வழியாகச் செல்லும் கெடி வம் ஆற்றின் குறுக்கே நீர் தேக்க ஆணையை கட்டிக் கொடுத்தால் சுமார் 40 கிராமங்கள் பயன்பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் இருக்கின்ற எனது தொகுதி மக்கள் மிகவும் மோச மான சூழ்நிலையில் இருப்பதால் வெளியூர்கள் சென்று, பெங்களூர் பம்பாய், போன்ற இடங்களுக்குச் சென்று பிழைக்கிறார்கள். ஆகவே, அவர்கள் என்னுடைய தொகுதியிலேயே இருந்து பிழைக்க ஏதாவது கைத்தொழில் செய்து பிழைக்க சில வழி முறைகளை இந்த அரசு செய்து தருமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறு கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகத்திலே மீனவ சமுதாயம் பெரிய ஒரு சமுதாயமாக இருக்கிற காரணத்தால் இன்றைய தமிழகத்தின் மொத்த பட்ஜெட்டில் 2368 கோடியில் மீனவ சமுதாயம் நீர் உழவராக கடலிலே நீர் உழவராக சென்று கொண்டு இருக்கிறார்கள். ஏர் உழவர்களுக்கு செய்ய வேண்டும் என்று இருக்கின்ற எண்ணங்களிலே இந்த நீர் உழவர்களுக்கு இந்த அரசு அதிகமான காரியம் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். 2368 கோடி ரூபாயில் 527 லட்சம் மொத்தமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே நிர் வாக செலவு 275 லட்ச ரூபாய் இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மீதி இருக்கின்ற 252 லட்ச ரூபாய் மீனவ சமுதாயத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப் பிட விரும்புகிறேன். மீனவசமுதாயம் என்று சொன்னால் இன் றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பின்னால் நின்று கொண்டு இருக்கிற சமுதாயம், இன்றைக்கு என்று சொன்னால் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பின்னால் பெரும் சமுதாயமாக நின்று கொண்டு இருக்கிற அந்த சமுதாயத்திற்கு இந்த அரசு மிகவும் குறைவான பணத்தை ஒதுக்கியிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கும் போது நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

சிறிய விவசாயிகளுக்கு அடையாள கார்டு வழங்குவது போல் சிறு மீனவர்களுக்கும் அடையாள கார்டு வழங்கப்படும் என்றும், அந்த அடையாள கார்டு வழங்கி அவர்களின் நலன்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் உண்மையிலேயே சிறு விவசாயிகளுக்கு கொடுக்கின்ற கார்டு போல சிறு மீனவர்களுக்கு கொடுக்கப்படுவதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் சிறு விவசாயிகளுக்கு என்ன என்ன லாபகரமான காரியங்களைச் செய்கிறீர்களோ அத்தனை காரியங்களையும் இந்த சிறு மீனவர்களுக்கும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மீனவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னால் கொடுக்கப்பட்ட சிறு சிறு கடன்கள் எல்லாம் இன்றைக்கு பெரும் அளவுக்கு உயர்ந்து இருக்கிறது. அந்த கடன்களை இந்த அரசு திரும்பப் பெற வேண்டும், தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்குக் குடியிருப்பு என்று சொல்லி மீனவர்களுக்கு குடியிருப்பு, சாலை வசதி, புயல் பாதுகாப்பு இல்லங்கள் போன்ற கட்டுமான பணிகளை வேறு ஒரு துறையால் அதாவது பொதுப் பணித் துறையில் இருக்கிறது. இன்றைய தினம் அது மீனவர்களுடைய இலாகாவில் வந்து ஆக வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய ஆவலை, உத்வேகத்தை இந்த மீனவ சமுதாயத்திற்கு அதிகமாக செய்து ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுப்பணித்துறையில் எக்குப்மெண்ட்ஸ் எல்லாம் அங்கே இருக்கிறது. ஆனால் இந்த மீனளத் துறைக்கு வந்த உடனே அவைகளை வாங்குவதற்கு காலதாமதம் ஆகும் என்பதாலே நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மீனளத்துறையின் காரியங்களை பொதுப்பணித்துறை செய்தாலும் மீனளத்துறை அமைச்சர் கண்காணிப்பில் நடைபெற வேண்டும், துரிதமாக நடைபெற வேண்டும்

அடுத்து இன்றைக்கு இந்த அரசால் கொள்கை விளக்கக் குறிப்பில் புதியதாக குழுக்கள் போட்டு இருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது. பொது மக்கள் கண்காணிப்புக் குழு என்றும், உயர்மட்ட கண்காணிப்புக் குழு என்றும், கடல் மீனவர்கள் குழு என்றும், உள்நாட்டு மீனவர்கள் குழு என்றும், மீன் வளர்ச்சி கழகத்தின் மூலம் மீன் விற்பனை செய்கின்ற குழு என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஒன்ஂறு இதில் சிறப்பாகச் சொல்லவேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து ஆலோசனைக் குழுக்களே போடவில்லை. இதற்கு முன்னாலே இருந்த சர்க்கார் ஆட்சிகளிலே இருந்தவர்கள் போட்டார்கள். செம்மையாகச் செயல்பட்டார்கள். ஆனால் என்றைக்கு பொறுப்பேற்றுக் கொண்டார்களோ, அன்றையிலிருந்து இந்தச் சர்க்கார் போடவில்லை, என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.



ஆனால் இன்றைய தினம் நம்முடைய அமைச்சர் அவர்கள் போடுகிறேன் என்று சொல்லி, அதற்கான உத்தேசமான அறிக்கையை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். இருந்தாலும், கடல் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள் என்று இரண்டாகப் பிரித்துப் போடுவதாக சொல்லப் பட்டிருக்கிறது. ஒரே ஆலோசனைக் குழுவை இப்படி போடுவதால், கடல் மீனவர்கள் தனியாகவும், உள்நாட்டு மீனவர்கள் தனி ஆகவும் பிரிக்கப்படுகின்ற எண்ணங்கள் வந்து விடும்.

எங்கெங்கு மீன் இருக்கிறதோ, எங்கெங்கு மீன் பிடிக்கிறார்களோ, எங்கெங்கு மீன் பிடிக்கிறவர்கள் இருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் ஒரு மித்த, ஒரே இனத்தவர்களாக, ஒரே வகையின் கீழ் இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய எண்ணம். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினைகளை குழு ஆலோசனைகள் செய்து, காரியங்கள் ஆற்ற வேண்டும்.

மீன் வளர்ச்சிக் கழகத்தில், மீன்களைப் பிடித்து விற்பனை செய்கிற குழு என்று போட்டு இருக்கிறார்கள். அதற்கு நான் சொல்வது எல்லாம், கடற்கரையிலே வாரியத்தின் சார்பாக படகுகள் வருகின்றன. மீன் பிடித்து, ஏலம் விடப்படுகிறது. ஏலம் விடுகிறபோது, அங்கே நடக்கிற சம்பவம் அமைச்சர் அவர்களுக்கு தெரியும், எப்படி, செய்கிறார்கள் என்று, மீன் விற்கிற நேரத்தில், யார் மீன் விற்பது, யாருக்குக் கொடுப்பது எந்த கார்டுக்குக் கொடுப்பது எப்படிப்பட்டவர்களுக்குக் கொடுப்பது என்பதில் ஆளுங்கட்சிக் காரர்கள் போடுகின்ற போட்டிகளும் அங்கே நடக்கின்ற சம்பவங்களும் இதயம் உள்ளவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும்.

அப்படிபட்ட குழுக்கள் போடுவதிலே, எந்த எந்தக் குழுக்களைப் போடவேண்டுமோ, அந்தந்த குழுக்களைப் போட வேண்டியது தான். ஆனால் இப்படிப்பட்ட குழுக்களைப் போடுவதனாலே கடற்கரைகளில் பிரச்சினைகள் வரும் என்பதைச் சொல்லி, அடுத்து உயர்மட்ட அதிகாரிகள் குழு என்று சொல்கிறார்கள்.

உயர்மட்ட அதிகாரிகள் குழு என்று சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் அடிக்கடி சில சம்பவங்களைச் சொல்வார்கள். அதிகாரிகள் சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்கிற நேரத்தில், மேட்டூர் சம்பவம் என்ன என்று உங்களுக்குத் தெரியும். அதற்கு மேலே நான் விவாதத்திற்கு உள்ளே இறங்கவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம், மீனவர் மானியத்திலோ சென்னை கடற்கரையிலே இருக்கின்ற உழைப்பாளர் சிலை அருகே மீனவர் சமுதாயத்தில் தலைவராக இருக்கிற மாரிமுத்து அவர்கள் உண்ணாநோன்பு இருக்கிறார்கள், இரண்டாயிரம், மூவாயிரம் மீனவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். உள்நாட்டு மீனவர்கள். அவர்களுடைய பிரச்சினை என்னவென்று சொன்னால் உங்களுக்குத் தெரிந்தது தான், மீனவ சமுதாயத்தில் இருக்கிறவர்களுக்கு அங்கே ஓடு பாசியில் இருக்கிற மீன்களைச் கொடுத்தாக வேண்டும், என்ற குத்தகை இருந்தது. அந்தக் குத்தகையை திடீரென்று அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறுத்திவிட்டார்கள். நிறுத்தப்பட்டதற்குப் பிறகு ஏன் நிறுத்தப்பட்டது என்ற விளக்கம் கேட்டபோது, அதில் இருக்கிற உண்மையான மீனவர்களுக்குத் தரப் போகிறேன் என்று சொல்கிறார்.

அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் இன்றைக்கு அந்தக் குத்தகை கொடுக்காமல் விடப்பட்டதற்குப் பின்னால், யாருக்குக் கொடுக்கப்போகிறார் என்றால், அளந்து தனிப்பட்ட மனிதனுக்கு கொடுப்பதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் நமது நாட்டில் கூட்டுறவு நாட்டுயர்வு என்று சொல்லிக் கொண்டு இருப்பார்கள். எனவே, கூட்டுறவில் தான் இருக்க வேண்டும். தனிப்பட்ட மனிதனிடம் கொடுப்பதிலே எந்தப் பிரச்சினையும் தீர்ந்து விடாது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி செல்வார்கள் கூட்டுறவே நாட்டு உயர்வு என்று. அது போல் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுங்கள்.

மீனவர் யார் அங்கே இல்லையோ, அவர்களையும் அப்புறப் படுத்துங்கள். மீனவர்கள் அங்கத்தினராக இல்லை என்று சொன்னால் வெளியே தூக்கிப் போட்டு, மீனவர்களை உள்ளே போட்டு அதைச் சங்கங்ககளுக்குக் கொடுங்கள்.

மேட்டூர் அணை திறந்தவுடனே மறுபடியும் செய்யலாம் என்று எண்ணிக் கொண்டு இருந்தால், மேட்டூர் அணை திறக்கப் பட்டு விட்டது. மீன்கள் வெளியே வந்து விட்டது. ஆனால் அங்கே யாரும் மீன் பிடிப்பதில்லை.

அரசாங்கத்திற்கும் வரி வருவது இல்லை. அரசாங்கத்திற்கும் குத்தகை வருவது இல்லை. தனிப் பட்ட மனிதர்கள் மீன் பிடிப்பதிலே கலவரங்கள் ஏற்படுகிறது. தயவுகூர்ந்து, அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; கருணை கூர்ந்து செய்யுங்கள்.



வீழ்ந்த சமுதாயம் வாழுகின்ற சமுதாயமாக ஆவதற்கு அவர்களுடைய பிரச்சினைகளை அணுகி நல்ல சூழ்நிலையினை ஏற்படுத்த வேண்டும்.

அடிக்கடி சொல்வது, இடைத்தரகர்கள், இடைத்தரகர்கள் என்று சொல்வார்களா. வேண்டவே, வேண்டாம். யார் இந்த இடைத்தரகர்கள்? எப்படிப்பட்டவர்கள் இந்த இடைத்தரகர்கள்? அவர்களை ஒழிப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்கத் தயார். உண்மையிலேயே இருக்கிற மீனவர்களுக்குக் கொடுங்கள் என்பதிலே நான் ஒத்துப் போகிறேன்.

ஆனால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்காமல் மற்றவர்களுக்கு கொடுப்பது என்பது சரியாக இருக்காது. அதை வெளியே பேசிக் கொள்வதை நான் சொல்லமாட்டேன். அங்கே இருக்கின்ற சங்கங்களில் இருப்பவர்கள், தனிப்பட்ட விரோதம் காரணமாக, தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக, அமைச்சரைப் பற்றி ஏதோ சொல்கிறார்கள். நான் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

இன்றைக்கு வாய்க்கால், திறந்துவிட்டதற்குப் பிறகு ஓடு பாசி மீன்கள், வீணாகப் போகிறது. இதனால் அரசாங்கத்திற்குப் பயனும் இல்லை. சமுதாயத்திலுள்ள பலபேர் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

அதனாலே இன்றைக்கு உண்ணா நோன்பு மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசு உடனடியாக இதிலே கவனம் செலுத்தி, அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு மறுபடியும் அதைக் கொடுக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 5-00]

அடுத்து, கடற்கரை ரோந்துக்காக ஒரு படகு வாங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நமது கடற்கரை நீண்ட நெடிய 1,000 கிலோ மீட்டர்கள் கொண்ட கடற்கரை. ஆனால், வாங்கப்பட்ட படகோ ஒரு படகு. ஆனால் , அந்த ஒரு படகு எப்படி இந்த ஆயிரம் கிலோ மீட்டர்கள் இடத்தை சுற்றிக் கொண்டு வரமுடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அடுத்து, தூத்துக்குடியில் ஒரு சம்பவம் நடைபெற்றது. தூத்துக்குடியில் இருக்கின்ற மீனவர்கள் மின்விசைப் படகுகளில் காலையில் 5 மணிக்குப் புறபபட்டு, இரவு 11 மணிக்கு வருகிறார்கள். கடந்த ஆண்டு மட்டும் 20 படகுகள் மூழ்கடிக்கப் பட்டு விட்டன ; அதனால் 9 பேர்கள் இறந்திருக்கிறார்கள். தயவுசெய்து இந்த அரசு சட்டங்களைச் சொல்லாமல், மரபுகளைக் கடைப்பிடித்து காலையிலே 4 மணியிலிருந்து அதாவது

ஒரு மணி நேரம் முன்னதாகவும், மாலையில் இரவில் ஒரு மணி நேரமும் கூட்டித்தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். பல படகுகள் நாசமாக்கப்பட்டு விட்டன.

கடல் முகத்துவாரத்தில் இறால் மீன்கள் பிடிக்க தனியாருக்கு குத்தகை கொடுக்கவில்லை என்று இந்த கொள்கை குறிப்பு விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. இரால் மீன்களைப் பிடிக்க இதுவரை தனியாருக்கு அனுமதி கொடுக்கவில்லை என்று இல்லாத ஒன்றைச் சொல்லி, முன்பு இருந்ததுபோல், இப்போது அவ்வாறு கொடுக்கப்படாதது போல், அப்படியில்லாமல் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரப்படுகின்றது என்று சொல்லுகிறார்கள். அது எப்படி என்று தெரியவில்லை. முகத்துவாரத்தில் மீன் பிடிப்பவர்கள் தனியாக மீன் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே கலவரம் செய்து, அங்கே விஷப் பரீட்சை செய்வது நன்றாக இருக்காது. காந்தியார் அவர்கள், உப்பு நீருக்கும், உயரே பறக்கும் பறவைகளுக்கும் பறப்பவைகளுக்கும் வரி போடக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். காந்தியார் அவர்களே அப்படி சொல்லியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர்கள் தொழில் செய்யும்போது இறந்துவிட்டால் அவர்களுக்கு இதுவரை ரூ. 15,000 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய தினம் அது திரும்பப் பெற்று, இன்சூரன்ஸ், ஆயுள் காப்பீட்டு நிதித் திட்டத்தின்கீழ் கொண்டுவந்து, மைய அரசு ஆறு ரூபாயும், மாநில அரசு ஆறு ரூபாயும், ஆக மொத்தம் 12 ரூபாய் என்று ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த 12 ரூபாயைக் கொண்டு, மீனவர்கள் இறந்துவிட்டால், அவர்களை போஸ்ட்-மார்டம் செய்து பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது எப்படி முடியும்? நடுக்கடலிலே இறந்து விடுகிறார்கள்; கடலிலே காணாமல் போகிறார்; சுறா மீன் இழுத்துக்கொண்டு போய்விடுகிறது; அல்லது பெரிய மீன்கள் இழுத்துக்கொண்டு போய்விடுகின்றன. அப்படிப்பட்டவர்களை எப்படிக் கொண்டுவந்து, போஸ்ட் மார்டம் செய்து, சர்டிபிகேட் கொடுக்க முடியும்? அப்படி கொடுக்க முடியாது. அது சரியான முறையாக இருக்காது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று குடும்பங்கள் இராமேஸ்வரத்திலே இறந்தும், அவர்களுக்கு எந்தவிதமான நிதியும் கொடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங்கப்படவிருக்கும் மீன் அங்காடி உணவகங்களை ஒதுக்குவதில் மீனவ விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். மீனவ விதவைத் தாய்மார்களுக்கு அவ்வாறு முன்னுரிமை கொடுப்பதோடு, அப்படிப்பட்ட மீனவ தாய்மார்களுக்கு வேலை கொடுப்பதிலும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு மீனவர் கூட்டுறவு சங்கம் என்று கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது. அப்படிப் போட்டால் அது சரியாக வராது. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சங்கம் என்று போட்டு, அதிலே மகளிர் சங்கமும், மீனவர் சங்கமும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு வேடிக்கையும் இங்கே நடந்திருக்கிறது. சமுதாயத்திலே மீனவர் என்பவர் யார்? உண்மையிலே மீன் பிடிப்பவர்கள்தான் மீனவர்களா? ஆக்சுவல் பிஷர்மென் யார்?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு ஒரு சங்கம் என்று சொல்லுகிறபோது, உள்நாட்டுச் சங்கம் என்று சொல்கிறபோது, அது சின்ன சங்கமாக இருக்கிறது. மேலும் ஊரிலே அதிகமான உறுப்பினர்கள் சேராத இருக்கிற காரணத்தினால், மீன்பிடிக்க முடியவில்லை என்பது உண்மை. பெரிய சங்கங்களாக இருக்கின்ற காரணத்தினால், எங்கெங்கே மீனவர்கள் இருக்கிறார்கள் என்பது கூட தெரியாமல், யார் வேண்டுமானாலும் உறுப்பினராகச் சேர்ந்து, குளத்தை குத்தகைக்கு எடுக்கிறார்கள். அதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஒரு வட்டத்திற்கு இரண்டாயிரம் மீனவர்கள் ஒரு உள்நாட்டு சங்கத்திலே இருந்தால், உண்மையான மீனவர்களுக்கு மீன் கிடைக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தினால், இது உள்நாட்டு மீனவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம் இது. கடலோர மீனவர்களைப் பொறுத்த வரையில் எல்லாக் கிராமங்களிலும் சங்கங்கள் இருக்கின்றன.

திரு. எஸ். வேணுகோபால்: மீனவர்கள் யார் என்பதைப் பற்றி ஒரு அரசு ஜி.ஓ.-வில், கடந்த காலத்திலே இருந்த அமைச்சர் போட்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் நான் மீனவன்தான். பிறப்பால் நான் மீனவன். கடலிலே தொழில் செய்திருக்கிறேன். இன்றைக்கு வெள்ளை உடை அணிந்துகொண்டு வந்துவிட்ட காரணத்தினால, கடலில் மீன்பிடிக்க போக முடியவில்லை என்ற காரணத்தினால், நான் மீனவன் அல்லாதவன் என்று ஆகிவிட முடியுமா? விவசாயிகள் என்பவர்கள் ஏர் உழுபவர்கள்தான் விவசாயிகளாக இருக்கிறார்களா? சட்டமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும், நிர்வாகத்திலே இருக்கின்ற ஆபீசர்களும் விவசாயிகள் ஆக மாட்டார்களா? தறியாளர் என்பது தறியை ஆட்டுபவர்கள் மட்டும்தானா?

அந்தச் சமுதாயத்தில் பிறந்தவர்கள் தறியாளர்களாக மாட்டார்களா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படித் தாழ்ந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை உயர்த்த வேண்டிய இந்த அரசு உண்மையிலேயே பாடுபட்டுக் கொண்டிருக்கிற மீனவ சமுதாயத்திற்கு மட்டும் சோதனையை ஏன் கொடுக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. சோதனை செய்து பார்க்

கின்ற காலகட்டத்திற்கு இந்த மீனவ சமுதாயம்தானா அகப்பட்டுக்கொண்டது? தாழ்ந்த சமுதாயத்தைச் சேர்ந்த மீனவ சமுதாயம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். பொருளாதாரத்திலே உயராத சமுதாயம், பட்டதாரிகள் இல்லாத சமுதாயம், ஜட்ஜ்கள் இல்லாத சமுதாயம் இது. இப்படிப்பட்ட சமுதாயம் பொருளாதாரத்திலே உயர்வதற்கான சிந்தனையைச் செய்து, புதிய விஞ்ஞானக் கழகத்திலே, புதிய எண்ணத்தை உருவாக்கி, ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கி அவர்கள் கடலிலே தொழில் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறோம்.

இந்த நாட்டிலே, உலகத்திலே, யாரும் கட்டுமரம் வைக்கவில்லை. இங்கே கட்டுமரம்தான் இருக்கிறது. கோவணாண்டிகளாக இருப்பவர்கள் கோவணாண்டிகளாகவே இருக்க வேண்டுமா? சட்டமன்றத்திற்கு வருகிறோமே தவிர அவர்கள் என்ஜினியராக, படித்தவர்களாக, பண்பாடு உடையவர்களாக இந்தச் சமுதாயத்திலே உயர வேண்டாமா? பண்பாட்டோடு இருந்த எங்கள் தாத்தா, முப்பாட்டன்கள் இருந்த நிலையில், நாங்களும் கோவணாண்டிகளாக இருக்க வேண்டுமென்பதற்காக இந்தக் கைகளிலே அந்த விலங்கை மாட்டி வைத்திருக்கிறார்கள். இந்த மீனவர்களின் கரங்களிலே போட்டிருக்கின்ற அந்த விலங்கை இந்த அரசாங்கம் வந்தபிறகு தயவு செய்வு அகற்ற வேண்டும் என்று இந்தச் சபையின் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, விசைபடகு வழங்குதில் சுழல் முறை என்று சொல்லப்படுகிறது. எதன் பேரிலே? கூட்டுறவுச் சங்கத்திலே விசைப்படகுகளைச் சுழல் முறையிலே தரப்படும் என்று சொல்லப்படுகிறது. நான் இங்கே ஒரு விஷயத்தைக் கூறுவதால் இந்த அரசைக் குத்திக் காட்ட வேண்டும் அல்லது தொடுத்துக் காட்ட வேண்டும் என்பது அல்ல. உறவாக இருப்போம் என்று இங்கே சொன்னார்கள். உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அந்த முறையில் எங்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுக்கிறேன். உறவுமுறையிலே எந்தவிதத்திலேயும் பாதிக்கப்படும் நோக்கத்தில் இல்லை; அமைச்சருடனோ அல்லது அரசுடனோ உறவு இருக்கிறது, உரிமையைத்தான் சொல்கிறேன்.

இந்த அரசு வந்த பிறகு விசைப்படகுகள் கொடுக்க மறுக்கப்பட்டது. கட்டிய விசைப்படகுத் தளங்களைத் தகர்த்து விட்டார்கள், வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டு நடு ரோட்டிலே நிற்கின்ற நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையில் மேலும் இப்பொழுது சுழல் முறையில் விசைப்படகுகளைத் தருகிறேன் என்று சொன்னால் எந்த அடிப்படையில் தரப்போகிறீர்கள்? கூட்டுறவுச் சங்கத்தில் சாதியின் பேரிலா அல்லது பணம் படைத்தவன் பேரிலே அல்லது எப்படி? அது முறைப்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. ஆனால் நான் தகவல் சேகரித்த அளவில் சொல்கிறார்கள், ஒரு கூட்டுறவுச்



சங்கத்தில் 40 பேர்கள் இருந்தால் பத்துப் பேர்கள் முதல் ஐந்தாண்டுகளுக்கு அந்த விசைப்படகை வைத்துக் கொள்வார்கள்; அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு அதே விசைப்படகை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இது எவ்வளவு விந்தையாக இருக்கிறது? யார் இந்த யோசனையை அமைச்சருக்குச் சொன்னது? எந்த நிர்வாகி இந்த யோசனையை சொன்னார் என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்று கேட்டால், ஒரு படகை ஐந்தாண்டுகள் கடலிலே ஓட்டினால், அதை ஓட்டிய நேரம், அதன் உழைப்புத் தன்மை, அதன் உடல் சத்து குன்றி விடும், அதற்குப்பிறகு அது உதவாது. மறுபடியும் ரிப்பேர் செய்துதான் உருவாக்க முடியும். ஆகவே, இந்தத் திட்டம் முறையல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியத்தின் மீதும், மீனளத் துறை மானியத்தின் மீதும் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலேயும், இந்த பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே அதிகப்படியான ஜாதிகள் என்று சொல்லப்படும் மதத்தினரை பிரித்து வைத்திருந்தாலும், அப்படிப் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் அந்தச் சாதாரண மக்களுக்கு இன்றைக்கு மிகப்பெரிய அளவில் உதவும் வகையில் விளங்குகின்றது இந்தத் துறை. மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கும் தொகையைப் பார்த்தால் 11,54,12,000 ரூபாயும், மீனளத்துறைக்கு 5,24,63,000 ரூபாயும் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் இங்கே எத்தனையோ நினைத்துப் பார்க்க முடியாத திட்டங்களுக்கெல்லாம் எவ்வளவோ தொகைகளை அள்ளி வழங்கினாலும், இந்தப் பிற்படுத்தப்பட்ட, அல்லலுற்றிருக்கும் சாதாரண மக்களுக்கு இந்த பிற்படுததப்டோர் மானியக் கோரிக்கையின்மீது அருள்கூர்ந்து தயவு செய்து இன்னும் அதிக நிதியை ஒதுக்குவதன் மூலம் அந்த மக்களுடைய பொருளாதாரத்தை, கல்வித்தரத்தை உயர்த்தும் வகையில் அமையும், எனவே, அந்த மக்களுக்கு ஏற்றவகையில் நிதியை ஒதுக்குவதற்கு மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் சொல்ல வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று சொல்லக்கூடிய 122 பிரிவினரும் 70 சீர் மரபினர் வகுப்பினரும் உள்ளார்கள்.

அதில் ஒரு கோடி மக்களுக்கு மேலாக வசிக்கக் கூடிய ஒரு சமுதாயம்தான் இந்த முத்திரையர் சமுதாயம். அந்த முத்திரையர் சமுதாயம் தமிழ்நாடு மலைப் பகுதிகளில்

எல்லாம் கிட்டத்தட்ட 27 பிரிவினர்களாக இருக்கிறார்கள். அந்த 27 பிரிவினரை இந்த மாமன்றத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5–10.)

முத்தரையர், முத்திரியர், முத்துராஜா, முத்துராச்சா, முத்திராஜ் அம்பலம், அம்பலக்காரர், வலையர், கண்ணப்ப குல வலையர், பூசாரி, தலையாரி, தலையாரி நாயுடு, காவல்காரர், முத்திரிய மூப்பனார், முத்திரிய நாயக்கர், முத்திரிய நாயுடு, பாளையக்காரர், பாளையக்கார நாயுடு, முத்திரிய ஊராளிக் கவுண்டர், கம்பளத்தார், சேர்வை, சேர்வைக் காரர், தேவர், வழுவாடியார், பிள்ளை முதலிய 27 பிரிவினராக இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிற காரணத்தினால் அரசினுடைய சலுகைகளைப் பெற, அரசு அறிவித்திருக்கின்ற திட்டங்களை அனுபவிக்க, அந்தச் சாதாரண மக்கள், கல்வித் துறையில் முறையாக சான்றிதழ்களை வாங்க முடியாத நிலையில் இன்று அவதிப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.

வாழ்க்கை, கல்வி, பொருளாதாரம், அந்தஸ்து இவற்றில் மற்றவர்களைப் போல், உயர்ந்திருக்கிறார்களா, வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா, எடுத்துக் காட்டாக இருக்கின்றார்களா என்று எண்ணிப் பார்க்கக் கூடிய அளவில், இந்தச் சமுதாயத்தினரை இதுவரையில் யாரும் எண்ணிப் பார்க்கவில்லை. ஆகவே, அந்த முத்தரையர் இன மக்களைப் பற்றி ஆய்ந்து சரியான புள்ளி விவரங்களைக் கொடுப்பதற்கு நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தாக வேண்டும்.

அதோடு, அந்த ஆய்வுக் குழு அறிக்கை மீது, முத்தரையர் சீரமைப்பு என்ற திட்டங்களைத் தீட்டித் தர தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன்.

அதோடு, 1979-ல் புதுக்கோட்டை மாவட்டத்திலே தமிழ் நாடு முழுவதும் இருந்து வந்த முத்தரையர் கூடிய மாநாட்டை நடத்துகின்ற பொழுது, இதய தெய்வம் புரட்சித்தலைவர், அந்த மாநாட்டுக்கு வருகை தந்த நேரத்தில், அங்கே இருக்கிற அந்தச் சாதாரண மக்கள், பின் தங்கிய மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், எந்த விதமான பொருளாதார, நாகரீக வளர்ச்சி இல்லாத மக்கள், மற்றவர்களைப் போல் அந்தஸ்தில் உயர்ந்து விளங்க முடியாத மக்கள், உளப் பூர்வமாக, அன்பாக அளித்த வரவேற்பைப் பார்த்த பொழுது, அமெரிக்க தேசத்திலே ஆப்பிரகாம் லிங்கன் அவர்கள் தோன்றியதற்குப் பிறகு, அங்கே இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு விடிவுகாலம், சுதந்திரம்





கிடைத்ததைப் போல், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு பேசுகின்றபொழுது, 'என் வாழ்நாளில் முதன் முறையாக பிரச்னையைச் சந்திக்கிறேன்' என்று உள்ளபூர்வமான வார்த்தைகளை மாநாட்டிலே உதிர்த்தார்கள்.

அதோடு மட்டும் விடாமல் அந்த மாநாட்டிலே பேசும் பொழுது, 27 ஜாதிகளை ஒழிக்கக்கூடிய மாநாடாக இருக்கிற காரணத்தால், அந்த 27 ஜாதிகளை ஒழித்து, ஒரே ஜாதியாக்கக்கூடிய 'முத்தரையர்' என்ற ஒரே ஜாதியின் கீழ் கொண்டு வரும் அரசாணையை விரைவிலே பிறப்பிக்க இருக்கிறேன் என்று கூறினார். ஆனால், என்ன காரணத்தினாலோ, இது வரையில் தமிழக அரசாங்கம், அரசாணையிலே, முத்தரையர் என்று அறிவிக்காத காரணத்தாலே, அவர்கள் கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், எல்லாத் துறைகளிலும், பின் தங்கி வைக்கப்படக்கூடிய நிலைமையிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்பு மிகு முதல்வர் அவர்கள் இனிமேலாவது, அரசு ஆணையில் முத்தரையர் என்ற அறிவிப்பைச் செய்வார்கள் என்று எதிர் பார்த்து அந்தக் கோரிக்கையை நான் வைக்கிறேன்.

பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் மொத்தம் 523 இருக்கின்றன என்று கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அந்த 523 விடுதிகளில் சீர்மரபினர் விடுதி 81 தான் இருக்கின்றன. அதிலும், குறிப்பாக மதுரையில் மட்டும் இந்த 81 விடுதிகளில் 35 சீர்மரபினர் விடுதிகள் இருக்கின்றன.

மற்ற மாவட்டங்களிலே இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கும்போது மற்ற மாவட்டங்களில் அது இல்லை. இந்த 533 மாணவர் விடுதிகளில் 1983–84 ஆம் ஆண்டு கணக்கின்படி பார்க்கும்போது இந்த முத்தரையர் வகுப்பைச் சேர்ந்த 134 மாணவர்கள் மட்டுமே தங்கிப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். 533 மாணவர் விடுதிகளில் 6,500 பேர்கள் தங்கிப் படிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும் கூட 134 பேர்களுக்கு மட்டுமே 1983–84-ல் தங்கி படிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது என்றால் அவர்களுடைய கல்வியின் தரம் எப்படி இருக்கும்? வேலை வாய்ப்பில் முன்னேறக்கூடிய சாத்தியக் கூறு எப்படி வரும்? ஆகவே மதுரையில் இருக்கக்கூடிய சீர்மரபினருக்கு எப்படி 35 சீர் மரபினர் விடுதி கட்டியிருக்கிறார்களோ அதைப்போன்று தஞ்சை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், கோவை மாவட்டம், பெரியார் மாவட்டம், இன்னும் பிற மாவட்டங்களிலும் சீர்மரபினர் விடுதிகளைக் கட்டித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மதுரையில் இருக்கிற சீர்மரபினருக்கு தொழிற் பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப்போல பின்தங்கிய வகுப்பினர் இருக்கக்கூடிய புதுக்கோட்டை, இராமநாதபுரம்,

தஞ்சை, கோவை, பெரியார் மாவட்டங்களிலும் தொழிற்பயிற்சி மையங்களை, மாவட்டத்திற்கு இரண்டு என்ற அளவில் நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மிகச் சாதாரண பட்டப்படிப்பு கூட தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. சாதாரண கலைக்கல்லூரியில் கூட சேரமுடியாத நிலைமை இருக்கிறது. கலைக்கல்லூரியில் கூட சேரமுடியாத நிலையில் இருப்பதால் மருத்துவத் துறையிலும் பொறியியல் துறையிலும் மற்ற துறைகளிலும் வருவதற்கான வாய்ப்பு நிச்சயமாக இல்லை. அதனால் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மருத்துவர்களாகவோ, எஞ்சினீயர்களாவோ, டிபுடி கலெக்டர்களாகவோ, தாசில்தார்களாகவோ வரமுடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிற ஒரு சமுதாயமாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதிதிராவிட வகுப்பினர் என்றால் தலையாரி வேலை, இந்தச் சமுதாயத்திலுள்ளவர்களுக்கு பியூன் வேலை, வாட்ச்மென் வேலை தான் கிடைக்கிறது. ஆகவே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சமுதாய மக்கள் சற்று மேம்பட்டு வாழக்கூடிய வகையில் வேலை வாய்ப்பு, ப்ரமோஷன் போன்றவைகளில் முன்னுரிமை கொடுத்து, சீர்தூக்கிப் பார்த்து, அவர்கள் வாழ வழிவகைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்புச் சட்டம் வைத்திருக்கிறார்களோ அதைப்போன்று இந்த முத்தரையர் சமுதாயத்திற்கும் பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்படி எல்லாம் இன்று சலுகை அளித்திருக்கிறார்களோ அதைப்போன்று தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் இடையில் ஒரு வகுப்பை ஏற்படுத்தி, இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் நல்லபல சலுகைகளை அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் ஒரே நபர் தொடர்ந்து தேர்வாணைக் குழுவில் இருப்பதால் தேர்வாணைக் குழுவில் தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்கள் இல்லாத காரணத்தால், அவர்களை மாற்றி, மற்றவர்கள் அந்த இடத்தில் வருவதற்கு வழிவிட வேண்டும். அப்படி வருகிறபோது தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து 8 ஆண்டுகள் ஆகியும் இன்றுவரையில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த யாராவது ஒருவர் ஒரு மாவட்டத் துணை ஆட்சியர் பதவியில் அல்லது டி.எஸ்.பி.



பதவியில் வந்திருக்கிறாரா என்றால் நிச்சயமாக இல்லை. ஆகவே ஒரு சிலருக்கே அது இருக்கிறது என்ற அச்சம், பயம் உருவாகி இருக்கிறது. இந்த பயத்தை, அச்சத்தைப் போக்க, தொடர்ந்து தேர்வாணைக் குழுவில் இருக்கிறவர்களை மாற்றிவிட்டு, இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடமளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பிற்பட்ட வகுப்பினரில் சுமார் ஒரு கோடி மக்களுக்குமேல் இந்த முத்தரையர் இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல முத்தரையர் சமுதாயத்திற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும். அதேமாதிரி மதுரை, தஞ்சை மாவட்டங்களிலும் பிற மாவட்டங்களிலும் இந்தச் சமுதாய மாணவர்களுக்கு விடுதிகள் ஏற்படுத்தி, இந்தச் சமுதாய மக்கள் முன்னோடியாக விளங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, மீனளத்துறை மானியங்களை வரவேற்று, பாராட்டி, தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டி, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

(மாலை 5–20)

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த மீனளத்துறை பிற்பட்டோர் நலன் ஆகிய மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களை வைக்க நான் விரும்புகிறேன். முதலிலே நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், நீங்கள் மீன் இலாக்கா அமைச்சர்தானா என்று. உங்கள் பாலிசி நோட்டிலேயே சொல்லியிருக்கிறீர்கள், நீங்கள் மீன் இலாக்கா அமைச்சர் இல்லை என்று. 'High-level Supervisory Committee under the Chairmanship of Minister for Backward Classes, நீங்கள் மீன் இலாக்கா அமைச்சர் இல்லை என்றால் எதற்காக அந்த இலாக்கா உங்களிடத்திலே இருக்கவேண்டும். முதலிலே அதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சரிடத்திலே பல்வேறு இலாக்காக்கள் இருக்கின்றபோது ஒரு இலாக்காவை வைத்துத்தான் அவருடைய பெயரைப் போடுவது வழக்கம், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே வருவாய்த்துறை இருக்கிறது என்றால் அவர்களை ஏன் வருவாய்த்துறை அமைச்சர் என்று போடவில்லை என்று கேட்க முடியுமா? அப்படிப் போட்டுவிட்டால் உங்களுக்குத்தான் கஷ்டமாக இருக்கும்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அழைக்கக் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அவ்வாறு போடுவதில் என்ன கஷ்டம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அழைப்பதற்காகத்தான் போடுவது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே மீன் இலாக்கா அமைச்சர் என்று போடுவதில் அமைச்சருக்கு வெட்கமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 5 கோடியே 24 இலட்சம் ரூபாய் மானியம் கோருகிறீர்கள். இந்த ஃபிஷரீஸ் இலாக்காவிற்கு என்று 7 கோடியே 14 இலட்சம் என்று பெர்ஃபாமன்ஸ் பட்ஜெட்டிலே காட்டியிருக்கிறீர்கள். பின்னால் எவ்வளவு, எவ்வளவு ஒதுக்கிச் செலவு பண்ணுகிறீர்கள் என்று பார்க்கும்போது விநோதமாக இருக்கின்றது. மீனவர் வளர்ச்சிக்காகவா செலவு செய்கிறீர்கள். 7 கோடியே 14 இலட்சம் மீனவர் வளர்ச்சிக்காக எந்தெந்த முறையில் போகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். Salary, wages, travelling expenses, other expenses, payment for professional and special services, that is staff and not for fishermen. Rent, advertisement, grant, stipend, major works. அதற்காக எவ்வளவு தெரியுமா? 7 ஆயிரம் ரூபாய். மைனர் ஒர்க்ஸ் அதற்கு எவ்வளவு தெரியுமா? நில். கடந்த ஆண்டு 1 இலட்சத்து 91 ஆயிரம். machinery and equipment. யாருக்கு? உங்களுடைய டிபார்ட்மெண்ட்டுக்கு. அதற்கடுத்து மோட்டார் வெஹிக்கில்ஸ். யாருக்கு ? மீன்காரருக்கா ? இல்லை. ஸ்டாப்ஃ யூஸ் பண்ணுவதற்கு. அதிகாரிகள் போகின்ற மோட்டார் வெஹிக்கில்ஸ் ஆகியவற்றை எல்லாம் மெய்ன்டெய்ன் பண்ணுவதற்கு. எவ்வளவு தள்ளுபடி பண்ணியிருக்கிறீர்கள். பயங்கரமான தள்ளுபடி. நில். அதுதான் தள்ளுபடி. இந்த ஆண்டு கேப்பிட்டல் எக்ஸ்பெண்டிச்சர் என்னவென்று போடவில்லை.

நீங்கள் மீனவர்களுக்காகச் செலவு பண்ணவில்லை. லோன். அதுகூட மீனவர்களுக்காக இருக்காது, ஸ்டாஃப்க்காக இருக்கலாம். 7 கோடியே 14 இலட்சம் மீன்காரர்களுக்கா செலவு பண்ணுகிறீர்கள் ? இல்லை. ஆனால் பெயர் மீனவர்களுக்காக ஒதுக்குகிறோம் என்று. ஆஃபீஸர்ஸ், எம்ப்ளாயிஸ் போன்றவர்கள் சம்பந்தப்பட்ட செலவு. வெஹிக்கில்ஸ் மெய்ன்டெனன்ஸ் செலவு, டீசலுக்கு, பெட்ரோலுக்கு, ஒரு அதிகாரி பாரின் டூர் போனால் அதற்கு, இப்படி ட்ராவலிங் எக்ஸ்பெண்டிச்சர் போன்றவற்றுக்கு என்றுதான் ஒதுக்கி இருக்கிறீர்கள். இவ்வாறு ஒதுக்கிவிட்டு இலாக்காவிற்கு ஒதுக்குகிறோம் என்கிறீர்கள். நீங்கள் மீன் இலாக்கா அமைச்சர் என்பதையே ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்வதால்தான் மீனவர்களுக்காக ஒதுக்கவில்லையோ என்று நான் சந்தேகப்படுகிறேன். இப்படி ஒரு டிப்பார்ட்மென்ட். A department without any scheme. இப்படி ஒரு டிப்பார்ட்மென்ட் நடைபெறுகிறது என்றால் அது



பிஷரீஸ் டிப்பார்ட்மென்ட்தான். எந்தவிதமான ஸ்கீமும் கிடையாது. இருக்கின்ற ஸ்கீமையும் தூக்கிக் குப்பையிலே போட்டாகிவிட்டது. அப்படி ஒரு இலாக்கா இருக்கின்றது என்றால் அது மீன் இலாக்காதான். அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். அதுவும் அல்லாமல் இந்த இலாக்காவிலே மீனவர்கள் சம்பந்தப்பட்ட வேலையே நடப்பது இல்லை. 8 லட்சம் பேர்கள் மீனவர்கள் இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்— சர்க்காரே சொல்லியிருக்கிறது - ஆனால் வேலை இல்லை என்பதற்கு அத்தாட்சியாக நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்த இலாக்கா என்ன செய்ய வேண்டும்? மீன் பிடிக்கிறவனுக்கு துணை செய்து அவனுடைய வருவாயைப் பெருக்குகின்ற விதத்திலே உதவிகள் செய்து, அவனுக்கு சோஷியல் ஸ்டேட்டஸ்ஸை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க மீன் பிடிக்கும் பணிகளை நவீனப்படுத்த வேண்டும் விரைவுபடுத்த வேண்டும். ஆனால் இவர்களுக்கு எதிலே நாட்டம் செல்கிறது என்றால், மீனவர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகளைக் கட்டப் போகிறோம் என்று நெடுஞ்சாலைத் துறையிடமிருக்கும் அந்தப் பணியை ஃபிஷரீஸ் டிபார்ட்மென்ட் எடுத்துக் கொள்கிறது. உங்களுக்கு ஏன் இந்தக் கட்டிட வேலை. வேலை இல்லை அதனால் கட்டிட வேலையாவது பார்க்கலாமே என்று செய்கிறார்கள். அது போல புயல் பாதுகாப்பு இல்லங்களை கட்டுவதையும் இவர்கள் பி.டபிள்யூ. டி-யிலிருந்து எடுத்துக் கொள்கிறார்கள்.

அது போல ஸீ-எரோஷன் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்கான பணிகளை மேற்கொள்ளுகிறார்கள். இவைகள் எல்லாம் பி.டபிள்யூ.டி-யின் வேலைகள். இவைகளையெல்லாம் மீன் இலாக்காவிற்கு வாங்கிக்கொண்டு கட்டிட வேலைகளைப்பார்த்துக் கொண்டு வருகிறோம் என்கிறார்கள். மீன் பிடியில் வளர்ச்சித் திட்டங்களைப் போடக் கூடாதா? மீனவனின் சோஷியல் ஸ்டேட்டஸை உயர்த்துவதற்கு திட்டம் போடக் கூடாதா ? அந்த வேலைகள்தான் ஒன்றும் இல்லையே. ஒன்றும் இல்லாததினால்தான் ஆபீசர்களை எப்படி சும்மா வைத்துக் கொண்டிருப்பது என்று இந்தக் கட்டிடம் கட்டுகின்ற வேலையையாவது மேற்பார்வை பார்க்கட்டும் என்பதற்காகத்தான் இந்தப் பாலிஸி நோட்டிலே இதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் வேலையை ஒன்றும் இல்லாத ஒரு இலாக்கா ஏற்படுத்தியிருக்கிறார்கள். வேறும் *இலாக்கா.

வேண்டுமானால் ஒரு குழு போடுங்கள், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு. அந்தக் குழு விசாரிக்கட்டும். அவர்கள் விசாரித்து நிலைமை அப்படி இல்லையென்றால், நான் வேண்டுமானால் எங்கள் கட்சியின் தலைவர் கலைஞருடைய அனுமதியை வாங்கி சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்கிறேன். ஏன் சொல்கிறேன் என்றால் அந்த அளவுக்கு இந்த இலாக்காவிலே ஒன்றுமே இல்லை. சொன்னதைக்கூட செய்வது இல்லை. இப்படிப்பட்ட ஒரு இலாக்கா வேண்டுமா? அதற்கு ஒரு மானியம் தேவையா? அவசியம்தானா? அதற்கு ஒரு அமைச்சர் வேறு வேண்டுமா? அவசியமா? என்று கேட்க விரும்புகின்றேன்.

அடுத்து, 2 குழுக்களைப் போட்டிருக்கிறீர்கள், போடுங்கள் அதிலே பாருங்கள் வேடிக்கை. நாட்டிலே விலைவாசி ஏறிவிட்டது ஸ்டேட் கவர்ன்மெண்ட் எம்பிளாயிஸ்ஸுக்கு எல்லாம்கூட சம்பளம் ஓரளவு உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

இந்த மீனவர்களுக்கான பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு இப்போது 75 ரூபாய் அளிக்கப்படுகிறது. அதனை 125 ரூபாயாக ஆக்கலாமா என்று 'to be considered' என்று போட்டிருக்கிறது. அதை பரிசீலித்து முடிவு செய்வதற்கு ஒரு குழு 125 ரூபாய் வைக்கலாமா வைக்கக்கூடாதா என்பதற்கு. ஏனென்றால் 125 ரூபாய் என்பது பெரும் தொகை பாருங்கள் அதுவும் 50 ரூபாயை அதிகமாகக் கொடுக்க வேண்டுமே. ஆகவே அதற்கு ஒரு கன்சிடரேஷன். அதற்கு ஒரு குழு. அந்தக் குழு போய் பார்த்து கன்சிடர் பண்ணி பிரபோசல் செய்து, அந்த அளவுக்கு வைக்கலாமா வைக்கக்கூடாதா என்று சொல்ல வேண்டும். இப்படி முரண்பட்ட காரியங்களைச் செய்கிறதே தவிர உருப்படியான காரியங்கள் நடைபெறுவதே இல்லை.

நாவலர் ஃபிஷரீஸ் மினிஸ்டராக இருந்தபோது ஒன்றை அறிவித்தார்கள். இந்த மீனவர்கள் எல்லாம் மிகுந்த தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டும். அதற்காக ஜனவரியிலிருந்து, செப்டம்பர் வரையில் 10,10 ரூபாய் அவர்களிடம் பிடித்து விட்டு, அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் புயல் காலம், அவர்களால் அந்த நேரத்தில் கடலுக்குப் போக முடியாது. ஆகவே, அவர்களுக்கு மேலும் ஒரு 90 ரூபாய் போட்டு 180 ரூபாய் ஆக்கி, அந்த மூன்று மாதங்களுக்கும் 60, 60 ரூபாயாக கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அதை நடத்தினீர்களா? நாவலர் பைனான்ஸ் மற்றும் ஃபிஷரீஸ் மினிஸ்டராக இருந்தபோது கொண்டு வந்த திட்டம். அந்த திட்டத்தின்படி சில இடங்களில் 10, 10 ரூபாய் பிடித்திருக்கிறீர்கள். மீனவர் சங்கங்களின் மூலமாக அதை நடைமுறைப்படுத்தியிருக்கிறீர்களா? நடைமுறைப்படுத்தியிருந்தால் சொல்லியிருப்பீர்கள். எவ்வளவு பேருக்கு கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருப்பீர்கள். ஆனால் எவ்வளவு பேர்கள் அந்த சொசைட்டி மூலமாக பதிவு செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லியிருக்கிறீர்களே தவிர எவ்வளவு பேர்களுக்குக் கொடுத்தீர்கள் என்று சொல்லவில்லை.



கோட்டூர் குப்பத்திலே இருக்கிற மீனவர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் ஒழுங்காக மாதா மாதம் 10, 10 ரூபாய் கட்டியிருக்கிறார்கள், 1984லே. அவர்களுக்கு 1984 அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் அந்தப் பணத்தைக் கொடுத்திருக்க வேண்டாமா? இல்லையே காரணம் என்ன? இன்னும் வேடிக்கை என்னவென்றால், அந்த மீனவ சொசைட்டியைச் சார்ந்த தலைவர்கள் செயலாளர்கள் என்று எக்சிகியூட்டிவ் மெம்பர்கள் போய் கன்சர்ன்ட் ஏ.டி. யைக் கேட்டால், I do not know whether there is any such scheme, How far it is true, I do not know. என்று சொல்கிறார். அந்த மாதிரி ஸ்கீம் இருப்பதாக எனக்கு தெரியவில்லை என்று ஏ.டி. சொல்கிறார்.

I do not know whether there is any such scheme, என்று சொன்னால், இதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம். 10 ஆயிரம் வீடுகளை 7, 8 வருடங்களாக கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். கட்டுகிறேன் கட்டுகிறேன் என்று சொல்லி எத்தனை வருஷம் கட்டுவீர்கள். Every year, 100 lakhs, that is, one crore is being allotted in policy note. I do not know whether it is being utilised or not. இந்த அமைச்சர் நல்ல அமைச்சர். முன்னாடி இருந்த அமைச்சர்கள் எல்லாம் 100 லட்சம் கேட்டார்கள்.

(மாலை 5-30)

அது தவறு, அது சரியாக வேலை செய்யவில்லையென்று சொல்லி அதை 50 லட்சமாக்கி விடுகிறேன் என்று இவர்கள் பாலிசி நோட்டிலே ஆக்கிவிட்டார்கள். என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டால், rest of the construction of the houses for the previous year will be carried out விலைவாசி ஏறிவிட்டது என்றா? கொள்கைக் குறிப்பிலே சொல்கிறார்கள். rest of the construction of the houses for the previous year will be carried out. நீங்கள் சொல்வது. பாலிசி நோட்டிலே சொல்லி இருக்கிறீர்கள். எதற்கு 50 லட்சம்? சும்மா பெயருக்கு, ஏதாவது புள்ளி விவரம் சொல்ல வேண்டாமா சட்டசபையிலே, அதற்கு 2 லட்சம் ஒதுக்கினார்கள், இதற்கு 3 லட்சம் ஒதுக்கினார்கள் என்று புள்ளி விவரம் சொல்ல வேண்டாமா?

அதுமட்டுமல்ல நீங்கள் அடிக்கடி பல இடங்களில் பாலிசி நோட்டிலே சொல்கிறீர்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்று. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் உங்களுக்குத் தெரியும். ஒருவேளை எழுதிக் கொடுத்ததிலே அப்படியே கையெழுத்து போட்டு விட்டீர்களோ என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம், எது, இதுவா? நான் கேட்கிறேன், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்போது இந்த வருஷம் ஆரம்பித்தாகி விட்டது. அது முடிந்து

விட்டது. அந்தத் திட்டத்தை பணத்தை வைத்துக்கொண்டு, இந்தத் திட்டச் செலவை நாம் செய்து கொண்டிருக்கிறோம், என்று பாலிசி நோட்டிலே பல இடங்களில் சொல்லி இருக் கிறீர்கள். நாவலர் அவர்கள்கூட நிதி நிலை அறிக்கையில் சொன்னார்கள். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 50 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படுமென்று சொன்னார்கள். நான் அப் போது அதைக் குறித்து நாவலர் அவர்களிடம் கேட்டேன். ஆனால் அவர் பதில் சொல்லாமல் இருந்து விட்டார். அதிகாரி கள் தவறு செய்தால் அதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அதிகாரிகள் சொல்வதை அப்படியே ஒப்புக்கொள்வது முறை யில்லை. அமைச்சர் அவர்கள் புதியவர் இந்த இலாக்காவிற்கு.

அடுத்து இராமேஸ்வரம் பகுதியில் எப்போது பார்த்தாலும் கலவரம் இருக்கிறது. இப்போது கூட திருநெல்வேலி மாவட்டத் தைச் சார்ந்த ஒரு பகுதியிலிருந்து 7 மீனவர்களை இலங்கை யைச் சார்ந்த ஸ்ரீலங்கா அதிகாரிகள் படகோடு இன்றும் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்பது எனக்கு வந்திருக்கிற தகவல்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : இப்போது கிடைத்துள்ள தகவல்படி அந்த மீனவர்கள் ஊருக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: காலையில் எனக்குத் தகவல் கொடுத்தார்கள். ஆகவே தான் நான் சொல்கிறேன். நீங்கள் ரொம்பவும் அட்வான்ஸ் நடவடிக்கைகளை எடுக்கிறீர்கள். அது தான் எனக்கு ரொம்பவும் சந்தோஷம். என்னவென்றால் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 50 லட்சத்தை ஒதுக்கி வைத்து விட்டீர்கள். ரொம்ப சந்தோஷம். பாவம், அவன் சுட்டுக் கொண்டே இருக்கட்டும்., நாம் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம். ரொம்பவும் துரித நடவடிக்கை. 50 லட்சம் ரூபாயை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்து, அவன் சுட்டுத் தள்ளினால் இவ்வளவு ரேஞ்சு, இன்ஜூரி ஆனால் இவ்வளவு ரேன்ஜ். ஆகவே அவன் சுட்டுக் கொண்டே இருக்கட்டும். அதுபற்றி நாங்கள் கவலைப்பட வில்லை. எந்த நடவடிக்கையும் நாங்கள் எடுக்கவில்லை. சுட்ட பின்னாலே, செத்த பின்னாலே கொடுக்கிற நடவடிக்கை யிலே தான் இருக்கிறோம். We want advance activ ties நான் ஒன்றைச் சொல்கிறேன். தமிழக அரசு அல்லது அமைச்சர் அவர்களே அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை கண்டித்து இருக்க வேண்டாமா ? ஜோர்டானிலிருந்து திருவனந்தபுரத் திற்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு ஒரு விமானம் வருகிறது. இந்தியாவில் இருக்கிற ஏர்போர்ட் அதிகாரிகள் அதைத் தடுத்து நிறுத்தினார்கள். அவர்களுக்கு விதி தெரியாதா ? தெரியும், தெரிந்து தான் நிறுத்தினார்கள். ஆனால் அந்த விமானம் பூமாலை போட்டு ஸ்ரீலங்காவிற்கு அனுப்பப்பட்டது. அந்த



ஆயுதத்தைக் கொண்டு இராமேஸ்வரத்தில் இரண்டு மீனவர் களைச் சுட்டிருக்கிறார்கள். இலங்கையில் சுடுவதைப் பற்றி கூட நான் கவலைப்படவில்லை. ஆனால் இராமேஸ் வரத்தில் மீனவர்களைச் சுடுவதற்கு செல்கிற இந்த ஆயுதங் களை எப்படி இந்திய சர்க்கார் அனுப்பியது என்று ஒரு வார்த்தை கேட்டீர்களா ? அந்த ஆயுதத்தை பயன்படுத்த மாட்டானா ? அவன் என்ன செலக்ட் பண்ணியா கொண்டு வருவான்.

இந்திய மீனவர்களைச் சுடுவதென்றால், இது, இலங்கை மீனவர்களைச் சுடுவதென்றால் இது என்று செலக்ட் பண்ணியா கொண்டு வருவான். ஆகவே நீங்கள் தட்டிக் கேட்க அஞ்சு கிறீர்கள், பயப்படுகிறீர்கள்.

அதைவிட இன்னொன்று. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிஷரீஸ் டெவலப்மெண்டிற்காக 24கோடி ரூபாய். அதாவது 2,400 லட்சம் ஒதுக்கப்பட்டதாக உங்கள் பாலிசி நோட்டில் சொல்லி இருக்கிறீர்கள். நான் ஒன்றை அமைச்சரவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 24 கோடி, அதாவது 2,400 லட்சம் ஒதுக்கப்பட்டதாக பாலிசி நோட்டில் சொல்கிறீர்கள். எதற்காக என்றால் under the development of fisheries in Tamil Nadu. Actual எக்ஸ்பெண்டிச்சர் அது கொஞ்சம், குறைந்திருக்கிறது. 23.17 லட்சம், ஆனால் நான் கேட்கிறேன். இதை நீங்கள் எந்த வருஷத்திலே ஒதுக்கினீர்கள்? எப்படிச் செலவு பண்ணுகிறீர்கள் ? For the development of fisheries எல்லாம் அட்மினிஸ்ட்ரேசனிலே தான் போட்டிருக்கிறீர்கள். மீனவர்கள் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட தொகையைக் கூட நீங்கள் எதற்காக பயன்படுத்தியிருக்கிறீர்கள் என்றால், இதிலே 3 கோடி, 4 கோடி, இப்போது 5 கோடியாக ஆகி இருக்கிறது. எனக்கு இது ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே இந்தத் தொகை யோடு அந்தத் தொகையை இந்த 5 ஆண்டுக் காலத்திலே ஒப்பிட்டுப் பார்க்கும்போது 5 ஆண்டுகளில் மீனவர்களுடைய வளர்ச்சிக்காக, அந்த இலாக்காவை நம்பிக்கொண்டு இருக்கின்ற மக்களுடைய வளர்ச்சிக்காக, செலவு செய்ய வேண்டிய தொகை 24 கோடி ரூபாய், இந்த 5 ஆண்டை வைத்துப் பார்க்கும் போது, இதிலே டிமாண்டாக வருகிறது. அப்படி டிமாண்டாக வருகின்றபோது, அட்மினிஸ்ட்ரேசன் எக்ஸ்பென்டிச்சருக்காக போய்விடுகிறது.

எனவே அப்படிப் பார்க்கும்போது, உண்மையிலே இந்த இலாக்காவை நம்பியுள்ள, இந்த மக்கள் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற இலாக்காவா ? இதுதான் பாடுபடுகின்ற முறையா? அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும். இப்போது ஒரு நல்ல வேலை செய்திருக்கிறார்கள். சட்டம்

கொண்டு வந்து இருக்கிறார்கள். கட்டுமர மீனவர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் சண்டை வரக்கூடாது, அரசாங்கம் அதற்கு சட்டம் கொண்டு வரும் என்று நாவலர் அவர்கள் சொன்னார்கள் அவர்கள் பிஸ்ஷரிஸ் மினிஸ்டராக இருந்த போது. அது என்ன என்றால், திருச்செந்தூர் பை எலக்சன் வந்தபோது, எலக்சனுக்காக அந்தச் சட்டம். எப்படி இம்பிளிமென்ட் பண்ணப்போகிறார்கள் என்று கேட்டேன்.

Is it possible ? நாவலர் அவர்கள் சொன்னார்கள், மீனள வளர்ச்சிக்காக அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் செய்வதைப்போன்று செய்ய வேண்டும் என்று பொன்னுரங்கம் அவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னார். முடியாத சட்டம் தான் இது. இந்தச் சட்டத்தையும் இம்பிளிமென்ட் பண்ண இப்போது 8 லட்சத்தில் ஒரு ஸ்கீம் போட்டு இருக்கிறார்கள் பாருங்கள். அந்தச் சட்டத்தை இம்பிளிமென்ட் பண்ண வேண்டும். இதை இம்பிளிமென்ட் பண்ணுவதற்கு கன்னியாகுமரியிலேயிருந்து பழவேற்காடு வரையிலும் அந்த போட் ரொம்ப வேகமாகப் போகும், இந்த ஜெட் பிளைட்டர் இருக்கிறதே அது கூட இதோடு ஈடு செய்யாது.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, தகராறு சென்னையிலேயிருந்து கன்னியாகுமரி வரையிலும் ஒரே நேரத்தில் வருவதல்ல. எனவே எங்கே வருகிறதோ, அங்கே போய் இந்தப் படகு பாதுகாப்பு அளிக்கும். அதற்காகத்தான் வாங்கினோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஒரு நேரத்திலே 10 மைல் என்பதுதான் இல்லை, எனக்குப் பிராக்டிகலாகத் தெரியும், 100 மைல் கூட சீசன் இருக்கும்., 200 மைல், 300 மைலிலே கூட சீசன் இருக்கும். சீசனிலேதான் இந்தத் தகராறு வரும். நாகப்பட்டினத்திலேயும், தண்டையார்பேட்டையிலும் தகராறு வந்தால் என்ன செய்வீர்கள் ஒரு படகை வைத்துக்கொண்டு. பிராக்டிகலாகப் பாருங்கள்.

உங்களுக்கு முன்னால் மீன்வளத்துறை அமைச்சராக இருந்த எட்மெண்ட் அவர்கள் மீனவர்கள் காணாமல் போய்விட்டால், கடலில் தவறிவிட்டால் மீனவர்களைத் தேடுவதற்காக 2 படகுகள் ஒவ்வொன்றும் 10 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும் என்று சொன்னார்கள். That is called rescue boats இந்த இலாக்கா வைத்திருக்கிறது. அதிலே ஏறிப்போய் பார்த்திருக்கிறீர்களா ? விட்டிருக்கிறீர்களா, தண்ணீரிலே. அப்படி ஒரு போட் இருக்கிறதா ? பணம் ஒதுக்கியாகிவிட்டதா ? இல்லை. சொல்வதோடு சரி. ஏன்? இங்கே கேட்பதற்கு ஆள் இல்லை. அதனால்தான். ஆகவே இப்படிப்பட்ட மாறுபட்ட காரியங்கள் நிரம்ப நடைபெறுகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



அங்கே உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இருக்கிற பிரச்சனையே அதிகம். இலாக்காவிலே வேலை இல்லை. ஏன் இந்த பான்ட்லே மீன் பிடிக்கிறார்கள்? வருஷக் கணக்கிலே காங்கிரஸ்காரர்கள் கொடுத்தார்கள். * தி.மு.க.காரர்கள் கொடுத்தார்கள் * ஆனால் நம்முடைய எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலே கொடுத்தால் விவரம் தெரியாதவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * என்ற வார்த்தையை உபயோகிக்கக்கூடாது. அது நீக்கப்படுகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : அது அன்பார்லிமென்டரி வார்த்தை அல்ல. ஆகவே அங்கே உண்ணாவிரதம் இருக்கிறார்கள். எனவே பெரிய மனது பண்ணி போய் பார்த்து, ஒரு சிலர் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அதற்காக ஒட்டு மொத்தமாக கை வைப்பது நல்லதல்ல. என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மேலும் ஒரு உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அது முக்கியம். சஸ்பென்சன் உத்தரவு. இந்த ஆண்டு ஜூனோடு முடித்துவிடு கதையை என்று சொல்கிறார்கள். இதை அடுத்து வேறு இடத்திலேயாவது இருக்கிறது பாருங்கள் என்று டெபுட்டி டைரக்டர் அவ்வாறு கேட்டு இருக்கிறார்கள். உத்தரவு என் கையிலே இருக்கிறது. இதெல்லாம் தேவையில்லாத ஒன்று. இருக்கிற பிரச்சனையே அதிகம். பிறகு ஏன் நீங்களே பிரச்சனையை கிரியேட் பண்ணுகிறீர்கள்.

(மாலை 5.40)

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கிற காலம் ஏப்ரல், மே மாதங்கள். குளங்கள் எல்லாம் வறண்டு இருக்கின்றன. இந்த மீனவர்கள் இதனால் பாதிக்கப்பட்டதாக எந்த மீனவ பிரதிநிதியும் எந்த சட்டமன்ற உறுப்பினரும் என்னிடத்தில் இதுவரையில் சொல்லவில்லை. மேட்டூரில் தண்ணீர் திறந்து விட்டாலும் கூட இன்னும் 2, 3 மாதங்கள் ஆகும் மீன்கள் ஆற்றில் துள்ளுவதற்கு. அரசு மீனவர்களுக்கு எந்தவிதமான இடையூறும் செய்யப் போவது இல்லை. மீனவர்களுக்கு நலன்கள் கிடைப்பதற்காக வட்ட சங்கங்கள் அமைப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதற்காக இந்த ஏற்பாடே தவிர மீனவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது வரையில் எந்தச்சட்டமன்ற உறுப்பினரும் அல்லது மீனவ பிரதி

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நிதியும் என்னிடத்தில் ஒரு பெரிய காரணம் என்று என்னிடத்தில் சொல்லவில்லை. சாதாரணமானவர்கள் கூட என்னை அடிக்கடி வந்து பார்க்கின்ற அளவுக்கு நான் எளிமையாகப் பழகிக்கொண்டு இருக்கிறேன். வந்து பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள். யாரும் என்னிடம் இதுபற்றிச் சொல்லவில்லை. ஆகவே, உள் நோக்கம் வைத்து இப்படி உண்ணாவிரதம் இருக்கிறார்கள். உத்தரவு போட்டு 10 நாள் தான் ஆகிறது. ஆகவே, 10 நாளுக்குள் உண்ணாவிரதம் இருப்பதற்கு ஏதோ உள் நோக்கம் இருக்கிறதே தவிர அரசு மீனவர்கள் மீது எந்தவிதமான ஆபத்தான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை அவர்களுக்கு இந் நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எப்போது வாய்ப்பு இருக்கிறதோ, எப்போது மீன் இருக்கிறதோ அந்த நேரத்தில் அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதற்கு உத்தரவு போடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உத்திரவு போட்டு 10 நாள் ஆகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இன்று தேதி 11 ஆகிறது. அவர் முதல் தேதியில் உத்திரவு போட்டு இருக்கலாம். ஆனால் The instruction not to lease the fishing rights in Inland Waters beyond 30th June 1985, until further information" goes from the office of the" Director of Fisheries. எப்போது போட்டு இருக்கிறார்கள்? 14—6—1985-ல் போட்டு இருக்கிறார்கள். ஆகஅது ஒருசமயம் இவர்களுக்கு முன்னாலேயே உத்திரவு போட்டுவிட்டார்களோ என்னவோ, அதிகாரிகள் இவர்களை மீறி இவருக்குத் தெரியாமல் போட்டு இருக்கிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை. அதிகாரிகள் போட்ட உத்திரவாகக் கூட இருக்கலாம். ஆகவே, இதைப் பார்த்து பரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆக அதற்காக பெரிய உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சேலத்தில் இருந்து எல்லாம் வந்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் குறைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து, திருத்துறைப்பூண்டியில் கோயிலுக்குச் சொந்தமான டாங்க் இருக்கிறது. அந்த டாங்கை நம்பி இருக்கிற ஒரு சொசைட்டி Inland Fishermen Co-operative S ciety இருக்கிறது Thanjavur Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowments Board and Commercial Taxes Department அவர்கள் 2 பேரும் ஆர்டர் வழங்கியிருக்கிறார்கள், சொசைட்டிக்கு லீஸ் கொடுக்கலாம் என்று. அங்கே என்ன நடக்கிறது என்றால் அந்த Temple Executive officer· அவ்வாறு முடியாது என்று சொல்லி பப்ளிக் ஆக்ஷனுக்கு கொண்டு வருகிறார். கோ-ஆப்பரேடிவ் சொசைட்டிக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி, மீன்காரர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் கொடுக்கமாட்டேன் என்று சொல்லி, பப்ளிக் ஆக்ஷன் கொண்டு வருகிறேன் என்று சொல்லி தேதி நிர்ணயித்து



ஆக்ஷனுக்குக் கொண்டு வந்து இருக்கிறார். சர்க்கார் ஜி.ஓ.-வை மதிக்காத அதிகாரிகள் நம் மாநிலத்தில் இருக்கிறார்கள். எப்படிப்பட்ட வெட்கக்கேடு. இப்படி இருக்கலாமா ? இது முறை தானா ? ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி இதைக்கவனிப்பார்கள் என நினைக்கிறேன்.

அடுத்து, Insurance Fee 12 ரூபாய் கட்ட வேண்டும். மாநில அரசு 6 ரூபாய், மத்திய அரசு 6 ரூபாய் ஆக 12 ரூபாய் செலவழித்து Insurance Scheme implement செய்வதாக, கடந்த கூட்டத்தொடரில் சொல்லப்பட்டது. அது நடைமுறைப்படுத்தப் படுகிறதா ? எத்தனை பேருக்குக் கொடுத்து இருக்கிறீர்கள் ? கணக்குச் சொல்ல முடியுமா ? அது ஆரம்பித்த காலத்தில் இருந்து இதுவரை எத்தனை பேருக்கு என்று கணக்குச் சொல்லமுடியுமா ? எனக்குக் கிடைத்தத் தகவல், உங்கள் பாலிசி நோட்டில் உள்ள தகவல் பதிவு செய்து இருக்கிறார்கள். A number of fishermen have been registered. That is all. But nobody has been given the compensation அதைப்பற்றி ஒன்றும் இல்லை என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த Inshore Fishing Station-க்குப் புதியதாக படகு வாங்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். அது தேவைதானா? நீங்கள் அமைச்சராக வந்து ஒரு வருடமாக இருக்கிறீர்கள். இந்த Inshore Fishing Station தேவைதானா ? என் வீட்டிற்கு அருகில் ஒன்று இருக்கிறது. அப்படி 5 இடங்களில் தமிழ்நாட்டில் இருக்கிறது. it is necessary? அந்தத் துறையில் உள்ள எந்த இலாகாவிற்காகவாவது அல்லது அந்த சமுதாயத்திற்காகவாவது அது பயன் உள்ளதாக இருக்கிறதா ? எனக்குக் கிடைத்த தகவல் ஒரு மாதத்திற்கு 75 ஆயிரம் ரூபாய் ஒரு Inshore Fishing Station-க்கு செலவு ஆகிறது. ஆனால் அதிலிருந்து என்ன ஆதாயம் வருகிறது என்றால் 1,200 ரூபாய்க்கு மீன் பிடித்துக் கொண்டு வருகிறார்கள்.

மீதி எல்லாம் எங்கே போகிறது ? எங்கேயோ போகிறது. தேவை அற்ற இன்ஷோர் ஃபிஷிங் ஸ்டேஷன் போன்றவற்றை எல்லாம் நீங்கள் நிச்சயமாகக் க்ளோஸ் பண்ணவேண்டும். அந்த இலாக்காவினுடைய தொடர்புடைய நான் சொல்கிறேன்.

சர்வே பண்ணி மீன்காரனுக்குக் கடலிலே எந்தெந்த மீன் இருக்கிறது என்று சொல்லவேண்டும். அந்த இன்ஷோர் பிஷிங் ஸ்டேஷன் ஏற்பட்டு 15,20 வருஷத்திலே இதுவரைக்கும் 20 ஃபேத்தம் லைன் தான் சர்வே பண்ணுகிறான். இப்போதும் சொல்கிறேன் ; இந்த ஆண்டு பாலிசி நோட்டிலே கூட 20 ஃபேத்தம் லைன் சர்வே என்று போட்டிருக்கிறது. இது பிளாக் பாக்ஸ், கருப்புப் பெட்டி போல, கண்டுபிடிக்க முடியவில்லை. ரொம்பக் கஷ்டம் என்றால் இது அன்னெசசரி. வீண் விரயம். அதனாலே இதை எல்லாம் க்ளோஸ் பண்ணுங்கள். தேவை இல்லை.

அப்படிப்பட்ட குறைகளோடு, இந்த இலாகாவிலே இப்படிப்பட்ட பிரிவுகள் எல்லாம் இருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 9 பேர் பேசவேண்டும். நேரம் ஆகிவிட்டது. எதிர்க்கட்சியிலேயே நிறைய பேர் பேசவேண்டும். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : அதை மூடவேண்டும் என்று அக்கவுன்டண்ட் ஜெனரல் கூட அபிப்பிராயம் மூன்று நான்கு தடவை தெரிவித்து இருப்பதாகத் தகவல். அது வேண்டியது இல்லை. அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டாம்.

ஆக இந்த மானியம் சரியான, நல்ல மானியம் அல்ல. இது ஒரு இலாகா. இதற்கு ஒதுக்குவது தேவை அற்றது. இதை வேறு ஏதாவது இலாகாவிலே போட்டு, சம்பளம் கொடுங்கள். அதிகாரிகளுக்கு மெயின்டனென்ஸுக்கு. இதிலே போடுவது தேவை இல்லாதது.

அடுத்து, பேக்வேர்டு கிளாஸ் குறித்த மானியம் வைத்து இருக்கிறார்கள். இது குறித்து மண்டல் கமிஷன் ஒரு அருமையான ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. நமக்கு எந்த நஷ்டமும் இல்லை. நம் மாநிலத்தைச்சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மக்கள்எல்லாம் வேலை வாய்ப்புப்பெற வசதியாக மத்திய சர்க்கார் இன்ஸ்டிடியூஷனிலே இடம் பெற வசதியாக—என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால்—27 சதவிகிதம். நாம் 50 சதவிகிதம் என்று வைத்து இருக்கிறோம்.

27 சதவிகிதம் பெறுவதற்கு வாய்ப்பாக மண்டல் கமிஷன் ரிப்போர்ட் வந்திருக்கிறது. அருமையான ரிப்போர்ட். அந்த ரிப்போர்ட்டைக் கூட நாம் வைத்து விவாதித்து, இந்த மாநில சர்க்காருக்கு, அதை இம்பிளிமெண்ட் பண்ணவேண்டும். நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மத்திய சர்க்காரை வற்புறுத்துவதற்குக் கேட்டுக்கொள்கின்ற தன்மை கூட நமக்கு இல்லையே, இது சரிதானா ? இது முறைதானா ?

இப்போது இருக்கிற பிற்பட்டோர் நலத் துறை லிஸ்ட்-ஐப் பற்றி உச்ச நீதிமன்றத்திலே கொஸ்டின் பண்ணி இருக்கிறார்கள். நாம் பயப்படுகிறோம். என்ன பண்ணப் போகிறோம் என்று தெரியவில்லை.

அம்பாசங்கர் அறிக்கை வந்து, It is not favourable to our Government மாநில சர்க்காருக்கோ, மாநில மக்களுக்கோ, மாநிலத்திலே இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கோ, சாதகமாக அமையவில்லை என்று இங்கேயே சட்டமன்றத்திலே சொல்லப்பட்டது.



அப்படிப்பட்ட ஒரு அறிக்கையை வைத்துக் கொண்டு, நாம் இருக்கிறோம். உச்ச நீதிமன்றத்தில், எல்லாம் கொண்டு வா என்கிறார்கள். கேஸ் இப்போது திருப்பிப் போட்டாச்சு. ஆகவே, பிற்பட்டோர்நலத்துறை அமைச்சராக இருக்கிற தாங்கள் உடனடியாக அதை எல்லாம் தவிர்ப்பதற்காக ——அங்கே போனால் பீஸ், பீஸ் ஆக ஆக்கிவிடுவார்கள்—மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டை இந்த மாமன்றத்திலே வைத்து, மாமன்றம் சிபாரிசு செய்து, மத்திய சர்க்காருக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டெல்லியில் சுப்ரீம் கோர்ட்டில் நடைபெறுகிற, ரிட் மீது நடைபெறுகிற அந்த கேஸுக்கு பலி ஆகி விடக்கூடாது. அதற்கான துரித நடவடிக்கையை, மாநில சர்க்கார் பேக்வேர்டு க்ளாஸைப் பொறுத்தவரையில், எடுக்கவேண்டும் என்று கேட்டு உரையை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பேசிய வார்த்தைகளில், *
என்ற வார்த்தையையும், * என்ற வார்த்தையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன். பல சட்ட மன்றங்கள், பாராளுமன்றங்களில் அந்த வார்த்தையை நீக்கி இருக்கிறார்கள். அது அன்பார்லிமென்டரி வேர்ட் ஆகும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மீன் வளத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு மீனவர்களுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அந்தத் திட்டங்களின் பயன்கள் எல்லாம் அவர்களுக்குப் போய்ச் சேரத்தக்க வகையில், இன்றைக்குச் சிறப்பாக பணியாற்றி வருகிறது.

(மாலை 5-50)

அந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொள்கை விளக்கக் குறிப்பில் பரிசீலனையிலே இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கின்ற அந்த 18 அறிவிப்புக்களும், மீனவர்களுடைய நலன் கருதி, திட்டம் இடப்பட்டிருக்கின்ற அந்த 18 அறிவிப்புக்களும் நடைமுறைப்படுத்தப்படுமேயானால், நிச்சயமாக மீனவர்களுடைய வாழ்க்கையில் புதிய திருப்பம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் பேசுகிறபோது, இந்தத் துறையைப் பொறுத்த வரையில் எந்த ஸ்கீமுமே இல்லை என்ற கருத்தை எடுத்துச் சொல்லி தன்னுடைய ஆதங்கத்தை எல்லாம் எடுத்து வைத்தார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வது போல புரட்சித்தலைவர் அரசு ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகுதான் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் 'தமிழ்நாடு பேர்ல்ஸ்' என்கிற முத்துக் குளிப்புக் கழகத்தையும், 'டேனிஷ் கொலாபரேஷனோடு' தமிழ்நாடு மரைன் பிளாஸ்ட் என்ற புதிய திட்டத்தையும் இங்கே நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன், காரணம், மீனவர்கள் நலத்தினைப் பொறுத்தவரை அக்கறை கொண்டவராக இருக்கிற அவருக்கு இந்தப் பிரச்சினை தெரியாமல் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் அவர்கள் தனக்குத் தெரியாததுபோல் தன்னுடைய கருத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவருடைய கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே ஆண்டுகொண்டிருந்த காலத்திலே மீனவர்களுடைய நலனுக்கு எத்தனை திட்டங்களைப் போட்டார்களோ அத்தனை திட்டங்களையும் விரிவாக்குகின்ற வகையில் அந்தத் திட்டப்பணிகளையெல்லாம் இன்னும் விரிவுபடுத்தி சிறப்பாகப் பணியாற்றுகிற நிலையில் தான் இன்றைக்கு, புரட்சித்தலைவர் ஆட்சி பணியாற்றிக் கொண்டிருக்கிறதே தவிர, இந்த மீனளத்துறையைப் பொறுத்த வரையில் தி.மு.க. ஆட்சியில் கொண்டுவந்த எந்தத் திட்டத்தையும் கைவிட்டு விடவோ அல்லது கடைப்பிடிக்காமல் விடவோ இல்லை என்பதை நான் அவருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறிப்பாக, நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிற 'மீனவர்களுக்குக் கார்டு சிஸ்டம்' அறிமுகப்படுத்துவது பரிசீலனையில் இருக்கிறது என்ற திட்டத்தை உண்மையிலேயே நாம் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம். சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பிரிக்கப்பட்டு, நியாயமான அரசினுடைய சலுகைகள் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கிற வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதே போல, தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால் சிறு தொழில் அதிபர்கள், பெரிய தொழில் அதிபர்கள் என்று இருவகையாகப் பிரித்து அவர்களுக்கு அரசினுடைய சலுகைகள் வரைமுறைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இதுவரையில் மீனவர்களைப் பொறுத்த வரையில்





சிறு மீனவர்கள் அல்லது வசதிபடைத்த மீனவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அரசினுடைய திட்டங்கள் நியாயமாகக் கிடைக்கவேண்டிய மீனவர்களுக்குக் கிடைக்காமல் இருந்து வந்தது. ஆனால் இந்தத் திட்டத்தின்படி ஏழ்மை நிலையில் இருக்கிற சிறு மீனவர்களுக்கு அரசினுடைய பயன்கள் நிச்சயமாக வந்தடையும் என்ற நம்பிக்கையிலே அமைச்சர் அவர்கள், இந்த 'கார்டு சிஸ்டத்'தை முறையாக அமல்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மீனவர்களுக்கு இன்றைக்கு எவ்வளவோ சலுகைகளை நமது அரசாங்கம் கொடுத்து வந்தாலும், உள்நாட்டு மீனவர்களுக்கு அந்தச் சலுகைகள் அதிகமாகக் கிடைக்கவில்லை என்ற நிலைமை தான் இருக்கிறது. மீனளத் துறை என்று சொன்னாலே கடலிலே மீன் பிடிக்கிற அந்த ஒரு சாராரை மட்டுமே சார்கின்ற நிலைமையில் இந்தத் துறை செயல்பட்டுவருகிறதோ, அந்தக் கண்ணோட்டத்தோடு இந்தத் துறை செயல்படுகிறதோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. எனவே உள்நாட்டு மீனவர்களைக் கருத்தில் கொண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள், இந்தத் துறைக்குப் பொறுப்பேற்று இருக்கிற செயலாளர் அவர்கள், இந்தத் துறையினுடைய இயக்குநர் அவர்கள் எல்லாம் இந்த அரசினுடைய சலுகைகளை, உள்நாட்டு மீனவர்களுக்குக் கிடைக்கத் தக்க வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள் கிறேன்.

வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்த வரையில் கடலிலே மீன் பிடிக்கிற மீனவர்களுக்கு மட்டுமே இந்தத் திட்டம் இப்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது. உள்நாட்டு மீனவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்நாட்டு மீனவர்கள் ஆறு மாத காலம்தான் மீன் பிடிக்கிற வேலையிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். மற்ற நேரங்களில் வேறு வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல் கிறார்கள். நீர்நிலையிலே தண்ணீர் இருக்கிறபோதுதான் மீன் பிடிக்கிற தொழிலையே செய்ய முடிகிறது. தண்ணீர் வற்றி விட்டால் மீன்பிடிக்கிற வேலை மட்டும் அல்ல, வேறு விவசாயத் தொழிலைக் கூட அவர்கள் செய்ய முடியாமல் இருக்கிற அந்தக் காரணத்தால், உள்நாட்டு மீனவர்களுக்கு முழுக்க முழுக்க மானியமாக இல்லாவிட்டாலும் கூட பாதி மானியத்திலும், பாதி கடனாகவும் வழங்கி வீடு கட்டும் திட்டத்தை அந்த உள்நாட்டு மீனவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டூர் நீர்த் தேக்கத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியிலே இருக்கிற பூனாண்டியூர், கீரைக்கரானூர் போன்ற பகுதிகளிலே மக்கள் எல்லாம் இந்த நீர்த்தேக்கத்திலே மீன் பிடிக்கிற தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆண்டாண்டுக் காலமாக அவர்கள் உரிமை பெற்று, அந்த உரிமங்களின் மூலமாக மீன்களைப் பிடித்து, பிடித்த மீன்களை கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் மூலம் கொள்முதல் செய்கிற இடத்திலேயே விற்று தங்கள் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மற்ற நீர்த் தேக்கங்களில் இருக்கின்ற ஷேர் சிஸ்டம் முறையை இங்கேயும் செயல்படுத்துவதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நான் இந்தத் துறையின் இயக்குநர் அவர்களையும், செயலாளர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன், மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கும் மற்ற நீர்த் தேக்கங்களுக்கும் தயவு செய்து ஒப்பிடாதீர்கள். அதற்கும், இதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. இங்குள்ள மீனவர்கள் உரிமம் பெற்றுத் தொழில் செய்தாலே 300 ரூபாய், 350 ரூபாய்க்குமேல் பெற முடியவில்லை. ஆகவே, மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு மற்ற இடங்களில் உள்ள முறையைக் கொண்டு வந்தால் அங்குள்ளவர்கள் அதிகப் பாதிப்பிற்கு உள்ளாவார்கள். எனவே பழைய முறையை அங்கே தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற முறையில் அந்த முறையை மாற்ற வேண்டாமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரை இத்தனை ஆண்டுகளாகப் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு எவ்வளவோ காரியங்களில் ஒதுக்கீடு செய்து, இன்றைக்கும் பல சலுகைகளைத் தருகின்ற வகையில் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். என்னைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசாங்கம் இந்தத் திட்டத்தின் மூலமாக உண்மையிலேயே பிற்படுத்தப்பட்டவர்கள் பயனடைந்திருக்கிறார்களா என்ற ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று வழங்கப்படும் சலுகைகள், எல்லாத் திட்டங்களின் பலன்கள் பிற்படுத்தப்பட்ட, பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்குப் போய்ச் சேருகின்றதா என்ற நிலையைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில அரசைப் பொறுத்தவரையில், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, புரட்சித் தலைவருடைய அரசாங்கம் 50 சதவீதம் என்று ஒதுக்கீடு செய்து, வேலைவாய்ப்புகள் அல்லது மற்ற கல்விப் பிரச்னைகளில் இட ஒதுக்கீடுகளைச் செய்து இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த நிலையில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தஎவ்வளவோ பேர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். ஆனால் பிற்படுத்தப்



பட்டவர்களைப் பொறுத்தவரையில், மாநில அரசால் மட்டுமே அவர்களை முன்னேற்றி விட முடியுமா என்றால், முடியாது என்றுதான் கருதுகிறேன். காரணம் என்னவென்றால், மைய அரசுக்கும் இதில் பங்கிருக்க வேண்டும். ஆனால் மைய அரசைப் பொறுத்தவரையில் இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்னையைப் பொறுத்தவரையில், எஸ். சி., என்றும் ஓ.சி. என்றும் தான் வைத்திருக்கிறார்களே தவிர, பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற ஒதுக்கீடு அங்கே வைக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில், அதுவும் நேரு காலத்தில் அமைக்கப்பட்ட காலேல்கர் கமிட்டியானது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்தும் அது ஏற்கப்படவில்லை. அதற்கான காரணம் தெரியவில்லை.

பிறகு ஜனதா ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட மண்டல் கமிஷன் 27 சதவீதம் இவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தும், அந்தப் பரிந்துரையும் ஏற்கப்படவில்லை என்ற நிலைமை இன்றைக்கிருக்கிறது.

மைய அரசைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து, அவர்களை உயர்நிலைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். ஏனென்றால் மொத்த காரியத்தையும் மாநில அரசே செய்ய வேண்டுமென்றால் இந்தக் காரியம் முழுமை பெறாமலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ். தேர்வைப் பொறுத்தவரையில், தமிழகத்திலேயிருந்து எழுதுகின்றவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறதோ என்ற அச்சம்கூட ஏற்படுகிறது. காரணம், இன்றைக்கு 100 பேர்கள் தேர்வு எழுதினால் ஒருவர்தான் தேறுகிறார் என்ற நிலைமை, தமிழகத்திலே உள்ள மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் தெரியவில்லை. ஒருவேளை அங்கே உள்ள தேர்வு முறையிலே உள்ள கோளாறோ, என்னவோ தெரியவில்லை. இந்த ஐ. ஏ. எஸ். தேர்வைப் பொறுத்தவரையில் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு இந்து பத்திரிகையிலே 'லெட்டர்ஸ் டு தி எடிட்டர்' பகுதியில் திரு. தர்மராஜன் என்பவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கருத்தைச் சொல்வது பயனுள்ளதாக இருக்கும் என்று கருதி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களின் அனுமதியோடு அதைப் படிக்கிறேன். அவர் சொல்கிறபொழுது,

'A perusal ef the list of successful candidates selected for I.A.S. clearly indicates the tention behind the top leaders in Delhi in permitting candidates to answer papers in Hindi Medium as the vast majoriry of Sucessful candidates are Delhi based, The location of the UPSC in Delhi perhaps has also placed them and the candidates hailing from the Hindi belt in an advantageaous position'

அவர் சொல்கிறார், அவருடைய மாணவர்களைப் பற்றிச் சொல்லும்பொழுது சொல்கிறார்.

'In fact some of my students who faced the interview board said they became nervous when questions were asked in Hindi. This is really unfortunate but not surprising'.

என்று அவர் சொல்லியிருக்கிறார். இதை நான் சொல்வதற்குக் காரணம், ஏற்கனவே சொன்னதைப்போல தேர்வு முறையிலே கோளாறு இருக்கும் நிலையிலே இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறதா என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. அவர் சொல்லுகின்ற கருத்துக்களின் அடிப்படையிலேயே பார்க்கும்பொழுது, யு.பி.எஸ்.சி., என்று சொல்லும்பொழுது அது நம் நாடு தழுவிய தேர்வு முறை என்று சொல்லுகின்ற பொழுது அதில் அன்பயாஸ்டாக இருக்க வேண்டும்.

(மாலை 6—00)

அந்த யு. பி. எஸ். சி. யினுடைய தேர்வு மட்டும் தமிழகத்தில் அல்லது தென்னிந்தியாவில் ஏதாவது ஓரிடத்தில் இருந்தால் இங்கே நடக்கிற தேர்வு முறைக்கு அல்லது இங்கே இருக்கிற அட்மாஸ்பியருக்கு இன்னும் அதிக மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, அப்படிப்பட்ட முறையிலே அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

என்னதான் பிற்பட்ட நிலையிலே உள்ள மாணவர்களை நாம் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்தாலும் நம்மால் அளிக்கப்படுகிற பயிற்சி பயன் உள்ளதாகத் தெரியவில்லை. இப்பொழுது கல்வித் துறையிலே, விளையாட்டுக்காக, படிக்கிற பொழுதே விளையாட்டிலே ஆர்வம் உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எனவே, படித்துவிட்டு வருகிற பொழுது அவர்கள் சிறந்த விளையாட்டு வீரர்களாக ஆகமுடிகிறது. அதைப் போல், படித்துவிட்டு வந்த பிறகு ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதத் தேர்ந்தெடுக்காமல், படிக்கிற காலத்திலேயே, ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதத் தகுதி பெற்றவர்களை அரசே தேர்ந்தெடுத்து பயிற்சி அளிப்பதன் மூலமாக, அதிகமான ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத் தமிழகத்தில் உருவாக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது ப்ரபஷனல் கோர்சுக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. நகரத்திலே இருக்கிற மாணவர்களோடு கிராமத்திலே இருக்கிற பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் போட்டி போட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தத் தேர்வுக்கு 1 மாத காலம்தான் படிக்கிறார்கள். எனவே நுழைவுத் தேர்வுப் பயிற்சியையும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு வழங்க, மாவட்டந்தோறும் பயிற்சி மையம் ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.





ஒரே ஒரு வேண்டுகோள். குள்ளமுன்னையனூர் என்ற ஊரிலே உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு அருகில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையைச் சென்ற ஆண்டு வைத்தேன். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், என்னுடைய தொகுதியில், பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் நிச்சயமாக அமுல்படுத்தப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களும், செயலாளர்களும் நான் முதலில் குறிப்பிட்ட கோரிக்கையையும், இந்தக் கோரிக்கையையும் நிறைவேற்ற உத்தரவிடுவார்கள் என்று நம்புகிறேன். எனவே, மேட்டூர் நீர்த்தேக்கம் சம்பந்தப்பட்ட பகுதியில் கீரைக்காரனூர், புள்ளாண்டி ஆகிய பகுதிகளில் உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி வணக்கம்.

Thiru G.K. FRANCIS : Hon'ble Deputy Speaker Sir, In regard to Demand No. 32—Backward Classes, I wish to make the following observations :

The multipronged programmes undertaken for Backward Classes by the Government under the leadership of Dr. M.G.R. is outstanding and unique and deserves all encouragement and support. The Back ward Classes which have been suppressed for centuries couldbe prouded that here is a Government, that is deeply interested inimproving their economic and social status. The step up in the plan outlay proves this beyond all doubt.

In regard to Education for Backward Classes, it is noteworthy to find that the Government has made available various facilities such as schools and hostels. But the time has come to provide more facilities for students who should be encouraged to go in for higher education. Higher Education holds the key to furture success. The Reservation of seats is only one step in this direction. By merely obtaining a seat in a college there is no grarantee that the candidate would become accomplished. The need for follow up, a check on performance and on evaluating the performance is necessary. A watchdog cell on per tormance evaluation ot those students who are aided by the Governmet is extremely necessary in these days to mould these students into highly productive citizens. It would also justify the investment made for these students for higher education.

The Government has provided a large number of prizes for students in Schools. This is commendable I request the Government to extend this scheme of incentives by providing an equal number of prizes to students in the field of higher education. At the graduate level, the Post-graduate level and the doctoral level cash prizes should be offered. This would, I am sure, motivate students to higher and better performance.

Another vitalarea to which the Government should direct its and aid to Backward Class students is to select a Special Group of students and to preparet hem for the Joint Entrance Examination ofthe Engineering Colleges, Medical Colleges, Indian Institute of Technology and Indian Institute of Management Study.

There is no doubt that these institutions are the top-most on the premier in the country ; but how many backward class students were able to enter the portals of these institutions. A look at the papers of these Entrance Examinations reveal that they aim at weeding out a large number of students with their emphasis on though psychological objective and mathematical tests. I would like to point out that obviously, students from backward classes find it difficult to come to such high levels, with the result they get eliminated. Hence, I request, that special training to these Entrance Examinations for Medical Engineering Indian Institute of Technology, and Indian Institute of Managemen, should be forthwith started inorder to enable the backward class studentst to get in to these coverted institutions.

For students in Institutions of Higher Education, the Government should provide lunch allowance ; I books and other accessories. In these hard days, when prices of books and other aids are escalating, there is need to help the students by acquiring them.

The hostel facilities provided by the Government to backward class students is unique ; with a net work of hotsels throughout the length and breadth of the whole State. I am sure, the students from backward classes would be delighted. The Policy Note points out that nearly 30,803 students are benefitted from this scheme, which is remarkable. In the same manner, provision of clothing and furniture to students is remarkable.

The next note worthy point is the wide range of scholarships provided to students of Backward classes. You are all aware that a scholarship is a passport to the benefits of education, otherwise, it is unafforable by students. However, the scholarships given to students pursuing higher



education should be increased. Even the scholarship amount provided to students pursuing professional courses should be increased. For example, for pursuing a course in Chartered Accountancy, the amount of scholarships should be substantially increased.

In regard to the Special Training Institute for IAS and IPS and Allied Services, the Annexure to the Note shows that in 1979 out of 48 students only one was finally selected and in 1980 only two were selected and in the other years, no information has been made available. This reveals that there is the urgent need to intensify the coaching at the Institutes. Passing of these top examinations is not an easy task. It call for dedication, a commitment to excellance, discipline and hard work. My feeling is that the Special Training Institute should lay emphasis on this and show better results. One of the hon. Members pointed out that the questions asked at the highest level were in Hindi and that our students were finding it very difficult to answer them. As far as I know, the questions were asked not in Hindi, but were asked in English or in some other language. The problem is not with the asking of questions; but the problem is that most of the students were not able to raise to such high levels.

Next point I would like to refer to is Industrial Training and Technological Training. They are vital for the upliftment of the backward classes. While the Government does have the Industrial Training Institutes and its tailoring Institutes, they should be supplemented by other specialised Institute. I plead with the Government to start a Computer Institute to provide Computer training programmes for the students coming from backward classes. The future of the economy and the new jobs lie in the use of the Computer and its numerous benefits. If the students were trained in the use of the computer they could be rest assured of good jobs in the computer field.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

Finally, let me focus the attention of the House to the problems of the Anglo-Indian Community. Ever since the Centre withdrew the reservations of granting jobs to Anglo-Indians in the Central services like the Railways, Post and Telegraphs etc., the Anglo-Indian community has slied down the economic ladder. To-day, the Anglo-Indian community is steeped in poverty. Poverty is prevalent in nearly 75 per cent of the community. Poverty is so severe that they are forced to stay in slums and just manage with the charity from churches and Social Institutions. Poverty does not permit the children of these less fortunate of society to continue a good education. To-day there are many drop outs from schools purely due to the problem of poverty. This

group become frustrated and stress-oriented and they get into bad habits like taking drugs etc., unemployment among Anglo-Indian community is another serious problem. Most of the Anglo-Indian find it very difficult to get a good job in view of the severe competition With poverty and unemployment ruling the community, the Anglo Indians are frustrated a lot. I, therefore, urge this Government, which is known for its deep concern for the poor and down trodden to extend some of the concessions given to the Backward Classes, to the Anglo-Indian Community and allow itself to build once again.

With the above observations, I wholeheartedly support the Demand. Thank you.

(மாலை 6—10)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை இந்த மானியத்தின் மீது நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று பிற்பட்டோர் யார் என்பது சம்பந்தமாகவே தமிழகத்தில் ஒரு குழப்ப நிலை இருந்துக்கொண்டிருக்கின்றது என்று நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால் இந்தக் கொள்கைக் குறிப்பிலே ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டதைப் பொறுத்தவரையில் 11-வது பக்கத்தில் என்ன சொல்லப்படுகின்றது என்றால் 1982 டிசம்பர் மாதத்தில் செக்கன்ட் பாக்வர்ட் கிளாஸ் கமிஷன் அமைக்கப்பட்டதாகவும் அந்தக் கமிஷன் அறிக்கையை 28—2—1985 அன்று கொடுத்ததாகவும், அது அரசினுடைய பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்னும் இந்த அவையில் அந்தக் கமிஷனுடைய ரிப்போர்ட் வைக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல. அது சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன். 1978 ஆம் வருஷத்தில் என்று நான் நினைக்கிறேன். அரசு 9 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே உள்ளவர்களைப் பொறுத்தவரையில் பிற்பட்டவர்கள் என்ற முறையில் வைத்துக் கொள்ளலாம் என்றும் அவர்களுக்குக் கல்வி சம்பந்தமான சில சலுகைகளைச் செய்யலாம் என்றும் ஒரு கருத்தைத் தெரிவித்தது. அந்தக் கருத்தின் அடிப்படையில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு உச்சநீதி மன்றத்திற்குப் பிரச்சினை போய் உச்சநீதிமன்றம் அதிலே இந்த அரசு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று ஒரு கருத்து தெரிவித்து, இந்த அரசுக்கு ஆணையிட்டிருக்கின்றது. அதனை ஆணை என்று சொல்லாவிட்டாலும் ஒரு யோசனை என்று சொல்லலாம். அந்த யோசனை அடிப்படையில் ஒரு கமிஷன் நியமனம் செய்தார்கள். அதற்கிடையிலே 31 சதவீதம் ஆக இருந்ததை 50 சதவீதமாக உயர்த்தி விட்டார்கள். இன்னொரு பக்கத்திலே



அந்த பேக்வர்ட் க்ளாஸ் கமிஷன் 28 ஆம் தேதி ஒரு அறிக்கை கொடுக்கின்றது. அந்த ரிப்போர்ட்டில் சொல்லப்படுகின்ற பல்வேறு கருத்துக்கள் பல பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன என்பதுபற்றி எல்லாம் இந்த அவையிலே சொல்லப்பட்டபோது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இது சம்பந்தமான சில கருத்துக்களை இங்கே தெரிவித்தார்கள். அந்த இரண்டாவது மாதத்தில் கொடுக்கப்பட்ட அறிக்கையின் மீது இன்னும் அரசு ஒரு முடிவு எடுக்கவில்லை என்பது ஒரு பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜூலை 30 ஆம் தேதிக்குள்ளாக அரசினுடைய கருத்து என்ன என்கிற விவரத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் யோசனை சொல்லி இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். ஆகவே இந்த ஜூலை 30 ஆம் தேதிக்குள்ளாக யார் பிற்பட்டோர் என்பது சம்பந்தமாக ஒரு முடிவை இந்த அரசு எடுக்கவேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல.

இன்று நாம் என்ன பார்க்கிறோம் என்றால் இந்தக் கமிஷன் முன்னால் அநேகமாக பல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பிற்பட்டோராகக் கருதப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்று பல விஷயங்களில் உதாரணமாக மாநில சுயாட்சி சம்பந்தமான பிரச்சினையில் கூட இந்த அரசு சர்க்காரியா கமிஷனுக்கு கொடுக்கப்படவேண்டிய ரிப்போர்ட்டைக் கொடுக்கவில்லை என்று சர்க்காரியா அவர்கள் ஹைதராபாத்திலே ஒரு பத்திரிகைக்குப் பேட்டி அளிக்கும் போது நிருபர்களிடத்திலே சொல்லி, அதுபற்றி பத்திரிகையில் வந்திருக்கின்றது. இந்த அவையிலே கேட்கப்பட்டபோது அவை முன்னவர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் இதுசம்பந்தமாக, மாநில சுயாட்சி சம்பந்தமாக ஒரு கமிஷன் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றது, அந்தக் கமிஷனுடைய முடிவினை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் ; எனவே அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு அரசினுடைய கருத்து என்ன என்பதை சர்க்காரியாவுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். அதே போல்தான் பல பிரச்சினைகளிலே இந்த அரசு முடிவு எடுக்காமல் காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஒரு கமிஷன் ரிப்போர்ட் வந்ததற்குப் பிறகும் கூட நான்கு மாதங்கள், 5 மாதங்கள் ஆகியும் இந்த அரசு ஒரு முடிவு எடுக்க முடியாமல் இருப்பதன் காரணத்தால் இன்றைக்கு இந்த நாட்டிலே பல பிரச்சினைகள் ஏற்பட இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கணியார் என்ற சமுதாயத்தினரைப் பொறுத்தவரையில் அவர்களை ஷெட்யூல்ட் ட்ரைப் என்ற முறையில் கருதி தாசில்தார், அவர்களுக்கு அவ்வாறு சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்

டும் என்றிருந்தது. ஆனால் தற்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் அந்த சர்ட்டிபிக்கேட் கொடுக்க இயலாது ; ஏன் என்றால் ஒரு கமிஷன் போடப்பட்டிருக்கின்றது ; அந்தக் கமிஷன் இது சம்பந்தமாக என்ன முடிவு சொல்கிறது என்பதைத் தெரிந்ததற்குப் பிறகுதான் நாங்கள் இந்த முறையில் சர்ட்டிபிகேட் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இது சம்பந்தமாக மனு கொடுக்கப்பட்டது. ரெப்பிரசன்டேஷன் கொடுக்கப்பட்டது. ஆனால் பிரச்னை என்னவென்றால் ஏற்கனவே இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, ஷெட்யூல்ட் கேஸ்ட் என்ற முறையிலே அல்லது பிற்பட்டோர் என்ற முறையிலே சர்ட்டிபிகேட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்று அரசே இது சம்பந்தமாக தெளிவான ஒரு முடிவுக்கு வர முடியாது இருக்கும் காரணமாக, அவர்களுக்கு பல சலுகைகள் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல. அதிலே இருக்கும்படியான துரதிஷ்டமான நிலைமை என்னவென்றால், மத்திய அரசு இலாகாவான போஸ்டல் அண்டு டெலிகிராபிக் துறையிலே பணி செய்து கொண்டிருந்த இந்த கணியான் சமுகத்தைச் சேர்ந்த ஒருவர் கணியார் என்ற சர்டிபிகேட்டை வைத்து, ஷெட்யூல்ட் டிரைப் என்ற முறையிலே, அல்லது பிற்பட்டோர் என்ற முறையிலே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

அந்த இலாகாவிலே இப்போது அவர்களிடம் நீங்கள் ஷெட்யூல்ட் காஸ்ட்டைச் சார்ந்தவர்கள் அல்லது பிற்பட்டோர் இனத்தைச் சார்ந்தவர்கள் என்று சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு, கொடுக்க முடியாத நிலையில், அரசே ஒரு தெளிவான முடிவுக்கு வராத நிலையில், அந்த அம்மா வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார். அப்படி ஒரு துரதிருஷ்டமான நிலைமை ஏற்பட்டது. இதை நான் மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கூட கொண்டு வந்தேன். ஆனால் அவர்கள் இதிலே பொறுப்பேற்றுக் கொள்ள முடியாத நிலையில் கமிஷனின் முடிவிற்காக காத்திருக்க வேண்டிய பிரச்சினை இருக்கிறது என்று சொல்லி தட்டிக் கழிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்னை சம்பந்தமாக திட்டவட்டமான, தெளிவான ஒரு முடிவை அரசு எடுக்காமல் இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இது சம்பந்தமாக ஜூலை மாத இறுதிக்குள் முடிவு வேண்டும் என்கிற உச்ச நீதிமன்றத்தின் கருத்தின் அடிப்படையிலும், அவர்களுக்கு விரைவாக ஒரு முடிவை இதில் சொல்ல வேண்டிய நிலையில் நாம் இருந்துக் கொண்டிருக்கிறோம் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



அரசு என்னதான் முடிவை இதில் எடுக்கப் போகிறது என்று தெரியவில்லை. ஏதாவது ஒரு முடிவை அரசு எடுத்திருக்குமானால், அமைச்சர் அவர்கள் அதைச் சொன்னால், அது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்திலும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்தக் கொள்கை குறிப்பு புத்தகத்திலே 5-வது பக்கத்திலே போர்டிங் அண்டு லாட்ஜிங் சர்வீஸ் என்று பிற்படுத்தப்பட்ட நலத்துறை மாணவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படுவதாக இருக்கிறது ஆர்ட்ஸ்,சைன்ஸ் அண்ட் லா என்று போட்டு 60 ரூபாய் இதற்காக போட்டிருக்கிறது. சீர்மரபினருக்கு 70 ரூபாய். இதில் நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், கல்வித் துறையிலே லா-காலேஜிலே படிக்கக்கூடிய ஒரு மாணவனுக்கு 380 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் இந்த 60 ரூபாயை வைத்துக் கொண்டு சென்னை நகரத்திலே எங்கே தங்குவது ? ஆகவே இன்றைக்கு சென்னை நகரத்திலே போர்டிங் அண்டு லாட்ஜிங் என்கிற வகையில் என்ன தேவைப்படுகிறதோ அந்த முறையிலே இந்தத் தொகையை உயர்த்தி, நிதி ஒதுக்க வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் இது சம்பந்தமாக சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இந்த ஆண்டு, இந்த மக்களுக்காக வேண்டி பல நடவடிக்கைகளை எடுத்து வருவ தாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நிலைமை என்னவென்றால், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய பிரச்னையானாலும் சரி, மற்ற சலுகை களுக்காக உதவி கொடுக்கக் கூடிய பிரச்னைகளானாலும் சரி, இன்று என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், இந்து சமுதாயத்தைச் சார்ந்த பிற்பட்டவர்களுக்குத்தான் இதிலே இருக் கிற உதவிகள் எல்லாம் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கி றது. அதை இந்த அரசு மட்டும் அல்ல, மத்திய அரசே கூட அப்படிப்பட்ட நிலைமையைத் தான் எடுத்துக் கொண்டிருக்கி றது. இது நல்லது அல்ல. இந்த பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் இந்துக்களாக இருந்தாலும் சரி அல்லது கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லோருக்கும் இதனுடைய நலன் கிடைக்கக் கூடிய முறையிலே........ (குறுக்கீடு).

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, இந்திய அரசு இந்து மதத்திற்காக மட்டுமே நன்மைகளைச் செய்து வருவது போல படம் பிடித்துக் காட்டினார்கள். எல்லா மதத்தையும் ஒன்றாக நினைத்து, இந்தியாவினுடைய தலைமை அமைச்சராக

இருக்கிற திரு. ராஜீவ் அவர்கள், எல்லாவற்றிற்கும் ஒரே சிறப்பான தன்மையில் ஒன்றாக எண்ணித்தான் செயல்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களைப் போல கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் இப்படிப்பட்ட சலுகைகள் கொடுப்பதிலே ஒரே மாதிரியான முறையிலே ராஜீவ் காந்தி அரசு நடவடிக்கை எடுக்கிறது என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தற்போது நிலைமை அப்படி இல்லை என்பதற்காகச் சுட்டிக் காட்டவிரும்பினேன். ஏன் என்று சொன்னால் நானும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சேர்ந்து ஒரு இடத்திற்கு சென்றிருந்த நேரத்திலே, அங்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு இந்து சமுதாயத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தான் வீடு கட்டிக் கொடுக்க முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னபோது, அங்கே இருந்த கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே இடத்திலே ஒரே மாதிரியாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஒரே மாதிரியாக வருவாய் இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்கிறீர்கள். எங்களுக்கு இல்லையென்று சொல்வது சரியில்லை என்று சொன்னார்கள். அதற்கு ஆட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு சட்டம் அப்படி இருக்கிறது என்று சொன்னார்கள்.

(மாலை 6–20)

திரு. வை. பாலச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்துக்களுக்கு இல்லாத உரிமை இன்றைக்கு கிறிஸ்தவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. இந்த பிற்பட்டவர்களுக்கு இருக்கிற உரிமை. . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : உங்கள் கருத்தை சொல்லிவிட்டீர்கள். தொடர்ந்து திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசட்டும் உட்காருங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அந்த விவாதத்திற்கு வர நான் விரும்பவில்லை. இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிற நிலைமையை எடுத்துச் சொன்னேனே தவிர வேறல்ல. இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், மற்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும், நலிந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒரே விதத்தில் காரியங்கள் நடத்தப் படவேண்டுமென்பது தான் என்னுடைய கருத்து.



அடுத்து, மீனளத் துறையைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லி முடித்து விடுகிறேன். மீனவர்களிடமிருந்து மாதம் 10 ரூபாய் பிடித்து, மீன்பிடி இல்லாத காலங்களில், அதாவது 'லீன் சீசனில்' 120 ரூபாய் கொடுக்கிற திட்டம் இருக்கிறது. ஆனால் லீன் சீசன் என்று சொல்லிவிட்டு மீன்பிடி இல்லாத மாதமான ஏப்ரல் மாதத்தில் அந்தத் தொகை கொடுக்கப்படுவதில்லை. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அந்தத் தொகை கொடுக்கப்படுகிற நிலை இருக்கிறது. லீன் சீசனில் தராமல் மற்ற காலங்களில் தருவதால் பிரயோஜனமில்லை. குழந்தைகளுக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு பயன்படுகிற நிலையில் இந்தத் தொகையை ஏப்ரல் மாதத்தில் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், மீனவர்களுக்கு 3,000 ரூபாய் வங்கிகளில் கடன் கொடுக்கிறார்கள். அதிலே 1,000 ரூபாய் அவர்களுக்கு மானியமாக கொடுக்கப்படுகிறது. ஆனால் இன்றைக்குப் பல வங்கிகளில் என்ன செய்கிறார்கள் என்றால், 2,000 கடனைக் கொடுக்காமல், 1,000 ரூபாய் மானியத்தை மட்டும் கொடுத்துவிட்டு, கடன் கொடுப்பதற்கு தங்களிடம் பணம் இல்லையென்று சொல்லி தட்டிக் கழிக்கிறார்கள். ஆகவே மீனவர்களுக்கு இந்தத் திட்டத்தால் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல் இருக்கிறது. ஒரு எடுத்துக் காட்டிற்கு சொல்கிறேன். நெல்லை மாவட்டத்தில் குட்டம் என்ற ஊரில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் இப்படிப்பட்ட நிலையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். மீனவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு புறம் போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு சொந்தமாக இடம் இருந்தால் தான் வீடு கட்டிக்கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. கடற்கரைப் பகுதிகளில் அவர்களுக்கு சொந்தமான இடம் இருக்க முடியாது. அந்த நிலையை கருத்தில் கொண்டு, புறம்போக்கு இடங்களில் வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்கள் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் அரசு கொடுக்கிறது. ஆனால் எனக்குச் சொல்லப்படுகிற தகவல் பிணத்தைக் காட்டினால் தான் அந்தப் பணம் கொடுக்க முடியும் என்று சில இடங்களில் அதிகாரிகள் சொல்வதாகச் சொல்கிறார்கள். கடலில் மீனவர்கள் இறந்துவிட்டால் பிணத்தை காட்ட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலையை அரசு எடுத்திருக்குமானால், அதனை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாற்றுத் தலைவர் அவர்களே, கடலுக்குச் சென்ற மீனவர் இறந்துவிட்டார் என்று அங்கேயிருக்கிற கூட்டுறவுச் சங்கத் தலைவர் அதற்கான சடங்கு நடந்தது என்று சர்டிபிகேட் வழங்கினாலும், அந்த உதவித் தொகை வழங்கலாம் என்று நடைமுறையில் இருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அமைச்சர் அவர்களின் தகவலுக்கு நன்றி. இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கட்டுமரம் என்ஜின் லோன் பொறுத்தவரையில் டீசல் என்ஜினுக்கு மட்டும் தான் கடன் கொடுக்கப்படுகிறது. மண்ணெண்ணெயில் இயங்கும் என்ஜினுக்கு லோன் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறிய மீன்பிடி துறைமுகம் இல்லாததன் காரணமாக இந்த மாவட்டத்திலிருந்து ஆயிரத்திற்கு அதிகமான படகுகள் கேரளாவிலே போய் நிரந்தரமாக மீன்பிடித் தொழிலில் இருந்து வருகின்றன. அதனால் தமிழகத்தினுடைய வருவாய் பாதிக்கப்படுகிறது. சின்னமுட்டத்திலே மீன்பிடி ஹார்பர் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது மட்டும் போதாது.

இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்லமுறையில் இந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்றால், குளித்துறை ஆறு முதல் ஏவியன்கால்வாய் வரை கடலில் ஒருங்கே சேருகின்ற இடமான ஏவியன் துறையிலே ஒரு துறைமுகத்தையும் ஏவியன் கால்வாயை ஆழப்படுத்தி, ஒரு சிறிய மீன்பிடித் துறைமுகத்தையும் அங்கே ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைப்போன்று நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பதற்கு ஆண்டுதோறும் குத்தகை கொடுப்பதற்குப் பதிலாக 2 வருடத்திற்கும் 3 வருடத்திற்கும் என்று குத்தகை கொடுக்கின்ற சில இடங்களில் இந்த மீன்பிடிப்பதன் பேரிலே என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால்................

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது 10 ஆண்டு காலம் என்று தான் மீன்வளர்க்கின்ற திட்டத்திற்காக இருக்கிறது. அதை 3 ஆண்டுகளாக ஆக்கினால், அதிக பேர்கள் பயனடையலாம் என்று கருதுகிறோம்.

திரு. ஜே ஹேமச்சந்திரன் : அமைச்சர் அவர்கள் 10 ஆண்டு காலம் என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் வருடத்திற்கு வருடம் அந்த எப்.எப்.டி.ஏ. டிபார்ட்மென்ட் கொடுத்துக்கொண்டு இருந்தது அது 10 வருடமாக மாற்றப்படும் என்றால், அதற்கு நன்றி.



ஆனால் என்னுடைய மாவட்டத்திலே வேறு விதத்திலே அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. வை. பாலச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இந்துக்களுக்கு உள்ள உரிமைகள் கிருஸ்தவர்களுக்கும் வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் மைனாரிட்டி என்ற முறையில் கிருஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருக்கிற உரிமைகள் இந்துக்களுக்கும் வேண்டும் என்பதை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதை கேட்டுக்கொள்கிறேன்.

*திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலன், மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய சில கோரிக்கைகளை எடுத்து வைப்பதற்கு நான் விரும்புகிறேன். தமிழ்நாட்டில் உள்ள மக்களில் மூன்றில் 2 பங்கு பேர்கள் பின்தங்கியவர்களாக இருப்பதால் அதைக்கருத்தில் கொண்டு ஏற்படுத்தப்பட்டதுதான் இந்தப் பிற்பட்டோர் நலத்துறை என்பது நாம் எல்லாம் அறிந்த ஒன்று. ஆனால் இதற்கு முன்னாலே பிற்பட்ட நலத்துறை என்று அழைக்கப்பட்டு வந்த இந்தத் துறை எங்களுடைய இதய தெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர் கோவேந்தன் அவர்கள் இந்தத் துறையிலே பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகுதான், பிற்பட்டோர் நலத்துறை என்று அழைக்கக் கூடிய ஒரு வாய்ப்பினை இந்தத் துறை பெற்றிருக்கிறது என்று சொல்வதிலே நான் இந்த நேரத்திலே பெருமைப்படுகிறேன்.

பிற்பட்ட வகுப்பினரின் நிலையை உணர்ந்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இந்த பிற்பட்டோர் நலத்துறை எடுத்து இருக்கின்ற சில முயற்சிகளை இந்தியாவுக்கு எடுத்துக் காட்டாக விளங்கக்கூடிய அளவிற்கு நல்ல பல திட்டங்களை அமைத்து இருப்பதை நான் இந்தநேரத்திலே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1948-49 ஆம் ஆண்டில் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டு இருந்த தொகை 1 லட்சம் ரூபாய் தான். ஆனால் 1984—85 ஆம் ஆண்டிலே இந்தத்துறைக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை 10 கோடியை எட்டிப் பிடித்து இருப்பதைப் பார்க்கிறபோது, தமிழ்நாட்டிலே இருக்கிற பிற்பட்ட இனத்தைச் சார்ந்த மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்று

வதற்கு ஆன பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்கு புரட்சித் தலைவர் காட்டுகின்ற அக்கறை 10 கோடியை எட்டிப் பிடித்து இருக்கின்ற இந்தத் துறையை நான் இந்த நேரத்தில் வாழ்த்து வதற்கு கடமைப்பட்டு இருக்கிறேன்.

1948-ல் 609 மாணவர்கள் இந்தத் துறையின் மூலமாக உதவித் தொகை பெற்றிருக்கிறார்கள். ஆனால் 1984-ல் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, 2 லட்சம் பேர்களுக்கு மேல் உதவித் தொகை பெறுகிறார்கள் என்றால், உண்மையிலே பிற்படுத்தப்பட்ட மக்களின் மீது இந்த அரசு எவ்வளவு அக்கறை வைத்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் மாணவர்கள் இல்லங்கள் ஏறக்குறைய 500-க்கு மேல் இன்றைக்கு நடைபெற்று வருகின்றன. படிப்பிலே ஆர்வம் காட்டக்கூடிய மாணவர்களை அவர்கள் படிப்பு அறிவிலே அவர்களைத் தூண்டுவதற்காக பிளஸ் 2 மாணவர்களில் வெற்றி பெற்றவர்களுக்கு 1,000 ரூபாயும், 10-ஆம் வகுப்பிலே வெற்றி பெற்றவர்களுக்கு 500 ரூபாயும் இன்றைக்கு புரட்சித் தலைவர் அரசு அளித்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று சொல்கிறபோது, 10 வருடங்களுக்கு முன்னால் மோஸ்ட் பேக்வார்ட் என்று பிரிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த பேக்வார்ட் கிளாஸ் மூலமாக அதிகமான சலுகைகளை அரசாங்கம் அளிக்கின்ற காரணத்தால், எல்லாப் பிரிவைச் சேர்ந்தவர்களும், அந்த இனத்திலே தங்களைச் சேர்க்கவேண்டும் என்று குறிப்பிடுகிற காரணத்தால், எந்த ஒரு பிரிவும் மோஸ்ட் பேக்வார்ட் கிளாஸ் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

(மாலை 6-30)

நான் இந்தநேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், நீங்கள் பேக்வார்டு கிளாஸ் என்று பிரிக்கும்போது அந்த சலுகையை பெறுவதற்குத்தகுந்தது தானா உகந்தது தானா என்று பரிசீலித்து அந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குக் காரணம் இதற்கு முன்னால் சலுகை பெற்று வந்த பேக்வார்டு கிளாஸ்க்கு வழங்கக்கூடிய சலுகைகள் இதனால் பாதிக்கப்படுகிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



உணவு விடுதிகள் ஏறத்தாழ 450-க்கு மேல் இன்றைக்கு நடைபெற்று வருகின்றன. நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுவது அவைகள் எல்லாம் நல்ல நிலையில் இல்லாத சூழ்நிலையில் இருக்கிறது. அவைகள் இனிமேல் வருகிற ஆண்டிலாவது சொந்தக் கட்டிடங்கள் என்று மாவட்டத்திற்கு ஒன்று, இரண்டு என்று பிரித்து சொந்தக் கட்டிடங்களிலேயே மாணவர்கள் இல்லங்கள், உணவு விடுதிகள் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுடைய குறிப்பில் குறிப்பிடுகிறபோது இதையும் பரிசீலித்து கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ராவ் அவர்கள் இந்திய ஆட்சிப் பணித்திட்டத்தின் கீழ் அதிகமான மதிப்பெண்கள் பெறும் முதுநிலை பட்டப் படிப்பு தேறிய மாணவர்களுக்கு டாக்டர் ராவ் பயிற்சி மன்றம் பயிற்சி அளிக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே சிறந்த மாணவராக நம் நாட்டைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசு நிறுவனத்தின் பணியில் அமர்ந்துள்ளது நமக்கு எல்லாம் இன்றைக்கு பெருமைத் தரக்கூடிய ஒன்று ஆகும்.

அதேபோல் பிற்பட்டோர் வகுப்பைச்சேர்ந்த சீர்மரபு இனத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் புகழ் பெற்ற வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெற ஒரு திட்டத்தைத் தீட்டி செயல்படுத்துவதுஇந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி நடத்தும் இந்த புண்ணிய பூமியான தமிழகம் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் பல திட்டங்களை வகுத்து அதனால் இதுவரை ஆயிரம் குடும்பங்களுக்குமேல் பயன் அடைந்து இருக்கிறார்கள். நாடோடிகளாக இருக்கின்ற நரிக்குறவர்களுக்கு பலயிடங்களில் இன்றைக்கு வீடு கட்டித் தரப்பட்டு இருக்கிறது. 1980 ஆம் ஆண்டு வரை பிற்பட்டோருக்கு கல்வி வேலைவாய்ப்புத் துறைகளில் 31 சதவீதம் என்று இருந்ததை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு 50 சதவீதமாக உயர்த்தி இருப்பது இந்தப் பிரிவினருக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்து இருக்கிற வரப்பிரசாதம் ஆகும். அதனால் பயனடைந்தவர்கள் ஏறத்தாழ 70 லட்சம் பேர் என்று இன்றைக்கு கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டு இருக்கிறது. இந்தச் சலுகைகளை காரணம் காட்டி இன்றைக்கு பல பேர் பிற்பட்டோர் இனத்தில் சேர்க்க வேண்டும் என்று சொல்லுகிற போது இந்தத் துறை எந்த அளவுக்கு இந்த வகுப்பினருக்கு பல நல்ல திட்டங்களை தீட்டி வருகிறது என்பதை பார்க்கிறபோது உண்மையிலேயே பெருமைப்படக்கூடியதாக இன்றைக்கு இருக்கிறது.

தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் செய்து இருக்கின்ற சமுதாய புரட்சியின் காரணமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பிற்பட்டோர் நலனில் பெரும்

அக்கறை கொண்டு இருக்கிறார் என்பதை நினைக்கும் போது உண்மையிலேயே இந்த நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசை பாராட்டுவதற்கு கடமைப்பட்டு இருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அம்பாசங்கர் குழு அறிக்கைப் பற்றி இங்கே சொன்னார்கள். அம்பாசங்கர்குழு பிற்பட்டோர் நலனுக்கு அநீதி விளைவித்து விட்டதாக குறிப்பிட்டார்கள். ஆனால் எங்களுடைய இதயதெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் எந்த இடத்தில் தவறு நடந்தாலும் கூட அந்த அநீதியை தட்டிக்கேட்பதற்கு அதைச் சுட்டிக்காட்டுவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் தயங்க மாட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

''தாழ்வு என்றும் உயர்வு என்றும் சமூகத்தில் பேதம் கொண்டால் வாழ்வில் இன்பம் உண்டாகுமோ'' என்கிற பாவேந்தர் பாரதிதாசன் பாடலை நினைவுபடுத்தும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய மயிலாப்பூர் தொகுதியில் மீனவச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பாலாக வசிக்கின்ற காரணத்தால் அவர்கள் பிரச்சினை எனக்கு ஓரளவுக்கு தெரிந்து இருக்கின்ற காரணத்தால் என்னுடைய சில கருத்துக்களை இந்த மீனள மானியத்தின் மீது எடுத்து வைக்க கடமைப்பட்டு இருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார், இந்த மீனள மானிய கோரிக்கைப் பற்றி பேசுகிறபோது இந்த ஆட்சியில் என்ன திட்டங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுக் கேட்டார்கள். கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது, தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு முத்து நிறுவன தொழிற்சாலையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு துவக்கி செயல்பட்டு வரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது.

இது திட்டமா, இல்லையா என்கிற கேள்வி உண்மையிலேயே எனக்கு எழ ஆரம்பித்து இருக்கிறது. இன்னொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

டேனிஷ் நாட்டோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, கண்ணாடி இழைப் படகு செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையை வெகு விரைவிலேயே தமிழ்நாட்டிலே துவங்குவதற்கு உரிய திட்டம் இன்றைக்கு பரிசீலனையில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் ஆட்சியிலே எல்லாப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் இன்றைக்கு திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக் கொள்வதிலே நான் இந்த நேரத்தில் பெருமைப் படக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்னொன்றை சொல்ல விரும்புகிறேன். மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, புரட்சித் தலைவர் அரசு நன்மைகளைச் செய்து வருகிறது. விவசாயத்திற்கு அடுத்த படியாக அங்கம் வகிக்கின்ற துறை இந்த மீனளத்துறை தான். பல இலட்சம் மக்களுக்கு கடல் உணவை வழங்கக்கூடிய துறை இந்த மீன் துறை.

இங்கே படகுகளை வாங்குவதில் கடன்கள் சரியாக வழங்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டைக் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், இதற்கு முன்னாலே ஆட்சி நடத்தியவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பெற்றுக் கொண்ட கடன்கள் மூலமாக வழங்கப்பட்ட படகுகள் தோராயமாக கணக்கு பார்க்கிறபோது, 1721 படகுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

ஆனால் படகுகள் வாங்கியிருக்கிறார்களே தவிர, வாங்கிய கடனை இதுவரைக்கும் திருப்பித் தரவில்லை. ஆகவே, கடனைத்திருப்பிக் கேட்கிறபோது, கடன் வாங்கியவர்கள் பல இடங்களிலே தர மறுக்கிறார்கள். படகுகளை எடுத்து வைத்துக் கொண்டு விட்டாலும் கூட, அதற்கு சில பேர் வந்து, அதற்கு தூண்டுகோலாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வாங்கிய கடனை திருப்பித் தராத காரணத்தால், அடுத்து வங்கியின் மூலமாக கடனைக் கேட்கிற போது திரும்ப கடன் வழங்க நமக்கு மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது.

இதற்கு காரணம், ஏற்கனவே இருந்தவர்கள், ஆட்சியிலே இருந்தவர்கள் சரியான முறையில் நடந்து இருந்தால் அப்படிபட்ட குறைகள் இருந்து இருக்காது என்கிற உணர்வு இன்றைக்கு நமக்கு ஏற்படுகிறது.

என்ன இல்லை இந்தத் திருநாட்டில் என்று எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை சினிமாத் துறையின் மூலமாக தெரிவித்து இருக்கிறார். கடலிலே செல்வ வளம் கொழிக்கிறது. நிலத்தை விட மூன்று பங்கு பெருக்கெடுத்து ஓடும் கடல் நிச்சயமாக பல இலட்சம் பேர்களுக்கு உணவு அளிக்கும் என்று வெளிநாட்டு நிபுணர்கள் கூட இந்தியாவிலே எப்படிப்பட்ட வறுமை, பஞ்சம் வந்தாலும் கூட, நீண்ட நெடிய கடலை நம்பி மக்கள் வாழ்ந்து விடலாம் என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே ஏராளமான மீன் வளச் செல்வம் இருக்கிறது. இதிலே கிடைக்கின்ற வருமானத்தின் மூலம் மீனவர்களின் பொருளாதார நிலை சீர்பட்டிட, தமிழக அரசில் பல மேம்பாட்டுத் திட்டங்களை தீட்டிக்கொண்டிருக்கிறோம்.

(திருமதி. பா. வளர்மதி) [1985 ஜூலை 11

மீன் உணவு மட்டும் கிடைக்கவில்லை. பல இலட்சம் பேர்கள் வேலைவாய்ப்பு பெறக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய, அன்னியச் செலாவணியை வாங்கித் தரக்கூடிய துறையாகவும் இந்த மீன் வளத்துறை விளங்குகிறது என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

ஆண்டுக்காண்டு இந்தத் துறை முன்னேறி வருகிறது. அதற்கு ஒரு உதாரணம் ; மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது இங்கே குறிப்பிட்டார்கள், உள்நாட்டு மீனவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று. ஆனால், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே அந்த மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு பல்வேறு குடியிருப்புக்களை இன்றைக்கு அரசு கட்டித்தந்திருக்கிறது. அந்தக் குடியிருப்புகளின் மூலம், அங்கே மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் பல பேர் வசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் என்னுடைய கோரிக்கையாக இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், என்னுடைய மயிலாப்பூர் தொகுதியிலே, நொச்சிக்குப்பம், நம்பிக்கை நகர், டொம்மிங்குப்பம், சீனிவாசபுரம் போன்ற பகுதிகளில் மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வசிக்கிறார்கள்.

அவர்கள் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான, குடிசை மாற்று வாரிய குடியிருப்புக்களிலே குடியிருக்கிறார்கள். அவர்கள் ஆறு மாதக் காலம் மீன் பிடிப்பதற்குக் கடலுக்குச் செல்லமுடியாத மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் அவர்கள் வாடகை கட்ட முடியாமல் இருக்கிற காரணத்தால், அதற்கு வழி இல்லாத காரணத்தினால் அவர்கள் அவதிப்படுகிறார்கள். நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது எல்லாம், வீட்டுவசதித் துறை மூலமாக கலந்து பேசி அவர்களுக்கு ஏதாவது ஒரு சலுகையை தருவதற்கு வாடகை கட்டுவதிலே ஏதாவது ஒரு தவணை முறையின் மூலமாக அல்லது வேறு எந்த வழியிலாவது வகை செய்து அவர்களுக்குச் சலுகைகள் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் கல்வித் துறையாக இருந்தாலும் மற்ற துறையாக இருந்தாலும், முன்னேறாத சூழ்நிலை இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளவிரும்புவது, எப்படி இந்த மீன் வளத் துறைக்கு ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியை நீங்கள் டைரக்டராக நியமித்து இருக்கிறீர்களோ, எப்படி அவருக்குத் துணையாக, இரண்டு துணை அதிகாரிகளை இன்றைக்கு புரட்சித் தலைவர்



1985 ஜூலை 11] (திருமதி. பா. வளர்மதி)

அரசு நியமித்து இருக்கிறதோ அதைப் போல் மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் படிப்பு அறிவிலே முன்னேறி இருந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு முக்கியத்துவம் தந்து, அரசுத் துறையிலே முக்கியப் பங்கு அளிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 6-40)

இன்னொரு கோரிக்கையையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். சமூக நலத் துறையோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி மீனவச் சமுதாயத்தைச் சார்ந்த பெண்களுக்கு தொழிற் பயிற்சியிலே அவர்களுக்கு வேண்டிய பல கல்வி அறிவைப் போதிக்கின்ற அளவிற்கு ஒவ்வொரு மீனவர் குடியிருப்புப் பகுதியிலேயும் சமூக நல மையத்தின் மூலமாக வேண்டிய பயிற்சியைத் தருவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு கோரிக்கையாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்னொரு கோரிக்கையாக நான் சொல்ல விரும்புவது, தமிழ் நாட்டில் ஏறக்குறைய 400 குப்பங்கள் இருக்கின்றன. மீனவர்கள் வாழும் பகுதி இருக்கிறது. ஆனால் கட்டப்பட்டிருக்கின்ற குடியிருப்புகளோ குறைவாக இருக்கின்றன. ஆகவே, புரட்சித் தலைவர்களோடு கலந்து பேசி, மீனளக் கோரிக்கையின்மீது இன்றைக்குப் பதிலளிக்கின்றபொழுது ஏறக்குறைய பத்தாயிரம் குடியிருப்புகளைத் தமிழ்நாட்டில் கட்டி மீனவர்கள் குடியிருப்பதற்கான வழிவகைகளைச் செய்து தர வேண்டும். இப்பொழுது கட்டியிருக்கின்ற குடியிருப்புகளைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய அவர்களில் பாதிப்பேர்களுக்கு தான் கிடைக்கிறது, மீதிப் பேர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால், அவர்கள் வருத்தமடைகின்றார்கள். ஆகவே மீனவச் சமுதாயத்தினர் வாழும் இடங்களைத் தேர்ந்தெடுத்து பத்தாயிரம் குடும்பங்களுக்கு வீடுகட்டித் தருவதற்கான வழிவகைகளைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்த மாற்றுத் தலைவரவர்களுக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலன், மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்தத் துறைகள் என்பது, இரண்டும் அடித்தட்டில், பொருளாதாரத்திலும், கல்வித் துறையிலும், இப்படிப் பல்வேறு துறைகளிலும் பின்தங்கிய மக்களாக வாழும் மக்களைப்பற்றியவை இரண்டு துறைகளின் மானியக் கோரிக்கைகள் என்பது மிகவும் முக்கியமான கோரிக்கைகளாகும். ஆனால், ஒன்றை நான் முதலில் தெரிவிக்க விரும்புவது, நமது அமைச்சர

வர்கள் இந்த பிற்படுத்தப்பட்டோர் நல மானியக் கோரிக்கை
யில் கேள்விக்குறியாக ஒன்றைக் கடைசியில் விட்டு
வைத்திருக்கிறார்கள். ஜே.ஏ. அம்பாசங்கர் அவர்களின்
தலைமையில் அந்தக் குழுவை அமைத்தது 1982 ஆம் ஆண்டில்
அவர்கள் அறிக்கை கொடுத்தது 28—2—1985 இல். அது
இன்னும் அரசின் ஆய்வில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்
கிறது. அந்த அம்பாசங்கர் குழு எந்த நோக்கத்திற்காக 1982
ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதோ அதற்கு, 1982-ஆம் ஆண்டி
லிருந்து இரண்டரை ஆண்டுக்காலம் அந்தக் குழு ஆய்வு செய்து
அறிக்கையையும் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதை
இன்னமும் கேள்விக்குறியாக வைத்துவிடாமல் அந்தக் குழு
வின் ஆய்விற்கு அரசு விரைவில் இறுதி வடிவம் கொடுத்து
அதை மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்; இந்தச் சட்ட
மன்றத்திலே தற்பொழுது வைக்க முடியாமல் இருந்தாலும்
கூட, அடுத்து வரக்கூடிய கூட்டத்தில் வைத்து அதைப்பற்றி
விவாதிப்பது தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
நல்ல வழியை, நல்ல வடிவை உருவாக்கித் தருவதற்கான வாய்ப்
பாக அமையக் கூடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் என்பது ஒன்று. அடுத்து, தாழ்த்
தப்பட்டவர்கள், ஆதிதிராவிட மக்கள் என்று இந்தச் சமுதாயத்
தில் 5 சதவீதம் போக மீதியுள்ள 95 சதவீத மக்கள் பின்தங்கிய
நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அடுத்து எடுத்துக்
கொண்டால், பிற்படுத்தப்பட்டோர் என்ற அந்த அமைப்பி
லிருந்துதான் இந்த இலாக்காவிற்குக்கூட அமைச்சராக
வந்திருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது, இந்த விளக்க
நூலைப் படிக்கின்றபொழுது நிறைய விவரங்கள் இருக்கின்றன;
அதிகமாகச் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில்
யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் சுதந்திரம்
பெற்று 38 ஆண்டுக் காலமாகியும், ஏழாவது ஐந்தாண்டுத்
திட்டம் தீட்டப்பட்டு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றபொழுது
எந்த அளவிற்கு அந்தச் சமுதாய மக்கள், ஒட்டு மொத்தமாகப்
பார்க்கின்றபொழுது பெரும்பான்மையைக் கொண்ட மக்கள்
எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறார்கள் பொருளாதாரத்திலே
யும் மற்ற துறைகளிலேயும் என்று பார்த்தால், நாம் அந்த
அளவிற்கு இட்டுச் சென்று இருக்கிறோமா என்பதைப் பற்றித்
தான் முதலில்பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கின்றபொழுது
இந்த விளக்க நூலில் அந்த அளவிற்கு நாம் முன்னேறி இருக்கி
றோமா என்று நம்மால் பார்க்கமுடியவில்லை. எனக்குமுன்னால்
மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி அவர்கள்கூடச் சொன்
னார்கள். 1949-வது வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதியையும் இப்
பொழுது ஒதுக்கப்பட்ட நிதியையும் ஒப்பிட்டுக் காண்பித்தார்கள்.
1949ஆம் ஆண்டு ஒரு அணா எடுத்துக் கொண்டு கடைக்குச்
சென்றால், ஒரு நாள் குடும்பத்திற்குத் தேவைப்படும் அத்தனை



சாமான்களையும் வாங்க முடியும். ஆனால், இப்பொழுது
ரூ. 100 எடுத்துச் சென்றால், உண்மையிலே ஒரு நல்ல குழம்பு
வைக்க வேண்டுமென்றால், இரண்டு வேளைக்குத்தான்
சாமான்கள் வாங்க முடிகின்றது. அப்படி என்றால், இன்றைக்கு
ரூ. 3,000 கோடி பெறக் கூடிய தமிழகத்தில் எந்த அளவுக்கு
இந்தத் தொகை போதும்? போதாது என்பதுதான் என்னுடைய
கருத்தாகும்.

1979—80, 1980—81-க்கு 967 வீடுகளுக்கு மதிப்பீடு செய்
யப்பட்டு, 563 வீடுகள்தான் கட்டப்பட்டன. 1985—86-க்கு
1,000 வீடுகள் கட்ட ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்
வேறு குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

என்னுடைய தொகுதியிலும் மன்னார்குடி தொகுதியிலும்
எடுத்துக் கொண்டால், பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று சொல்லக்
கூடியவர்கள் நிறைய பேர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்
அவர்களுக்கு எந்தவிதமான வேலை உத்தரவாதமும் கிடை
யாது. அப்படிப்பட்ட மக்களுக்கு ஆட்டு லோன், மாட்டு லோன்,
தொழில் செய்யக் கூடிய லோன், வீடு போன்ற இப்பேர்ப்பட்ட
சலுகைகளை அந்தப் பகுதி மக்களுக்கு எந்த அளவுக்கு அதிக
மாகக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு சாங்ஷன் செய்ய
வேண்டும்.

என்னுடைய பகுதியிலே கூட, தொண்டியங்காடு, கருத்
தனாங்குளம், தில்லைவளாகம், கருவேலங்காடி, இடும்பா
வனம், உப்பூர், ஆலங்காடி ஆகிய இந்தப் பகுதிகளில் 95 சதவீதம்
மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, அந்தப் பகுதி
மக்களுக்கு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு
அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்கள் இல்லங்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.
மாணவர் இல்லங்கள் பெரும்பகுதி வாடகைக் கட்டிடத்தில்
தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. எண்ணிக்கை
யைப் பார்த்தோமானால், 500-க்கும் மேல் சொல்லப்பட்டிருக்
கிறது, வரவேற்கிறோம். ஆனால், எவ்வளவு காலத்திற்கு
நாம் வாடகை கொடுத்துக் கொண்டே இருக்கப் போகிறோம்?
நான் கேட்டுக் கொள்வது, 10 திட்டங்களுக்கு, சிறு சிறு தொகை
யாக ஒதுக்கக்கூடிய பணத்தை, 3 திட்டங்களுக்கு ஒதுக்கி, 1
ஆண்டுக்கு 100 பள்ளிகள், 200 பள்ளிகள் என்ற வகையில் அந்
மாணவர்கள் விடுதிகள் கட்டி முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள்
முன் வரவேண்டும்.

முத்துப்பேட்டையில் ஒரு மாணவர் விடுதி இருக்கிறது
அதற்கும் சொந்த கட்டிடம் கட்டித்தர வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திருத்துறைப்பூண்டியில் 50 மாணவர்கள் படிக்கக்கூடிய ஒரு
ஆதி திராவிடர் விடுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் பிற்
பட்ட மாணவர்கள் அதிகமாக வருகின்ற காரணத்தால், அங்கு

தங்கிப் படிக்க முடியாத நிலைமையில் கல்வியின் தரம் குறைகிறது. ஆகவே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக, அங்கு ஒரு மாணவியர் விடுதி கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், போட்டுகள் தனியார்களும் செய்கிறார்கள், நமது துறை மூலமாகவும் செய்யப்படுகிறது. நான் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகப் பார்த்தேன், நாகப்பட்டினம் மண்டபம், இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளில் தனியார் செய்து விற்பனைக்குக் கொடுக்கிற போட்டுகளைக் குறைந்த விலைக்கு கொடுக்கிறார்கள். ஆனால், அரசுத் துறையில் செய்கிற போட்டு அதிகமான விலைக்குக் கொடுக்கப்படுகிறது. அதனால் தனியார் துறையிலே விற்கக்கூடிய போட்டுகளைத் தான் வாங்குகிறார்களே தவிர, அரசு மூலமாகச் செய்யக்கூடிய போட்டுகளை விற்க முடியாமல், அதனை செய்யும் நிறுவனத்தை இழுத்து மூடக்கூடிய ஒரு அபாயமும் ஏற்பட்டு உள்ளது. அப்படி மூடுகின்றபொழுது அதை நம்பி வாழ்கின்ற தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. நான் கேட்டுக் கொள்வது, தனியார் துறையைவிட, அரசுத் துறை மூலமாக கொடுக்கிற போட்டுகளைக் குறைந்தவிலையில் கொடுத்து, வாங்குபவர்கள் சலுகை பெறக்கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், கடலோரப் பகுதியில் வாழக்கூடிய மீனவர்கள், கிட்டத்தட்ட சென்னையிலிருந்து வேதாரண்யம், கோடியக்கரை, மண்டபம், இராமேஸ்வரம் ஆகிய கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்கள், அல்லது அப்பகுதிகளைச் சார்ந்து வாழ்கிற மீனவர்கள், புயல், வெள்ளம் வந்தால் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, நான் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், என்னுடைய தொகுதி, தொண்டியங்கரையில் ரூ. 29 இலட்சம் செலவில், 50 ஹெக்டேர் நிலப்பரப்பில் இரால் குஞ்சு வளர்க்க இடம் தயார் செய்து வேலை நடந்து கொண்டிருக்கிறது. தீவிரமாக வேலை செய்து அதை முடிப்பதோடு அந்தப் பகுதியில் வாழ்கிற பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் மீன் பிடித்துதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டுமென்றால், 2 கிலோ மீட்டர் இடுப்பளவு சேற்றில் நடந்து அதற்கப்பால் போய்தான் மீன் பிடிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள்.



(மாலை 6.50)

ஆகவே மீன்பிடித் தொழிலை நம்பி வாழக்கூடிய அவர்க
களுக்கு இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்த ஆற்றுக்குள்
கடல் நீர் வரும்படியாகச் செய்து, அந்த அளவுக்கு வெட்டி
ஆழப்படுத்தி, மீனவர்கள் சுலபமாகச் சென்று மீன் பிடிக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று தஞ்சையில் மீன் சொசைட்டி மூலமாக
மீன் எடுக்கிறவர்கள் எல்லாம் மிகவும் வசதி படைத்தவர்கள்.
அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. பெரிய அதிகாரிகளைப்
பார்க்க கிராம மீனவர்கள் போக முடியாது. இரண்டு ஆண்டு
களுக்கு முன்னால் தலைஞாயிறு பகுதியில் இது சம்பந்தமாக
ஒரு தகராறு வந்து, பின்னால் ஸ்டே எல்லாம் வாங்கி, ஒரு
வழியாக முடிந்தது. தஞ்சை வெண்ணாறு டிவிஷனிலும்
தஞ்சை—காவேரி டிவிஷனிலும் இரண்டுபேர்கள்தான் எப்போதும்
பூராவும் எடுக்கிறார்கள். கடல் தொழிலில் யார், யார்
அதிகமாக இலாபம் சம்பாதிக்கிறார்கள் என்றால் அந்த இரண்டு
பேர்களும்தான். உண்மையில் மீன் பிடிக்கிறவர்களுக்கு
இலாபம் கிடைப்பதில்லை. திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி,
முத்துப்பேட்டை இப்படி ஒவ்வொரு தாலுகாவாக எடுத்துக்
கொண்டாலும் அல்லது ஒவ்வொரு டிவிஷனாக எடுத்துக்கொண்
டாலும் துண்டு துண்டாகப் பிரித்து கொடுத்தால் தான்
சர்க்காருக்கு வருமானம் அதிகம் கிடைக்கும். மீன் பிடிப்ப
வர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கும், கிராம மக்
களுக்கும் மீன் கிடைக்கும்.

இந்த மீனளத் துறையில் அந்நியச் செலாவணி அதிகமாகக்
கிடைக்கிறது. கேரளாவுக்குச் சென்று பார்க்கும்போது, கொச்
சித் துறைமுகத்திலிருந்து ஏராளமாக மீன் ஏற்றுமதி செய்யப்
பட்டு, கேரளாவுக்கு அந்நியச் செலாவணி அதிகமாக வந்து
கொண்டிருப்பது தெரியவந்தது. நம்முடைய மாநிலத்தில்
கூட இரால் பதனிடும் தொழிற்சாலை இருக்கிறது. பெண்கள்
தான் முகமூடி போட்டுக்கொண்டு அங்கே தொழில் செய்
கிறார்கள். மீனைப் பதப்படுத்தி ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்
கிறார்கள். அதிலிருந்து ஒதுக்கப்படுகிற கச்சாவைப் பயன்
படுத்தி, மாவாக அடித்து, கோழித்தீவனம், மற்றவைகள் எல்
லாம் தயார் செய்கிறார்கள். இப்படி இந்தத் துறையை எடுத்துக்
கொண்டால் பல்வேறு வகையில் வருமானம் வரக்கூடியதாக
இருக்கிறது. இதை எல்லாம் எண்ணிப்பார்த்து, இந்தத்
துறையை சீர் செய்தால் தமிழ் நாட்டுக்கு நல்ல வருமானம்
வரும் வாய்ப்பு இருக்கிறது.

மண்டபத்தில் சங்கு எடுக்கிறார்கள். ஒரு சங்கிற்கு 60
காசு, 70 காசுதான் கொடுக்கிறார்கள். வருஷத்திற்குக் குறைந்
தது. 1.5 இலட்சம் சங்கு எடுக்கிறார்கள். இங்கே எடுக்கப்
படுகிற சங்கு மேற்கு வங்கத்திற்குப் போகிறது. அங்கே இருக்

கிற அதிகாரிகள் இதை வைத்துக்கொண்டு, டெண்டர் விட்டு
அதிகத் தொகைக்கு விற்காமல், யார் யாருக்குக் கொடுக்க
அவர்களுக்கு விருப்பம் இருக்கிறதோ அவர்களுக்குக் கொடுக்
கிறார்கள். அப்படிக் கொடுத்து, அவர்கள் கொஞ்சம் பணத்தை
ஒதுக்கிக்கொள்கிறார்கள். ஆனால் சங்கு எடுக்கிற தொழி
லாளிக்கு 60 காசுதான் கொடுக்கப்படுகிறது. தமிழ்
நாட்டுச்கு வரவேண்டிய வருமானம் இப்படி வீணாகிறது.
வருஷத்திற்கு 8 இலட்சம், 10 இலட்சம் சங்கு எடுத்து
மேற்கு வங்கத்திற்கு அனுப்பிவைக்கிறார்கள். அங்கே அவர்களால்
சங்கிலிருந்து மோதிரம், வளையம் போன்ற பொருள்கள்
செய்யப்பட்டு, மீண்டும் இங்கே விற்பனைக்கு வருகின்றன. இதை
அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு, அவர்கள் காலத்
திலாவது தமிழ்நாட்டில் சங்கை மூலப்பொருளாகக் கொண்ட ஒரு
சிறு தொழிற்சாலையை அமைத்து, நம்முடைய மாநிலத்திலேயே
சங்கினால் செய்யப்படுகின்ற பொருள்களை உற்பத்தி
செய்து, வருமானத்தைப் பெருக்க ஏற்பாடு செய்ய முன்வர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தற்போது
சற்று உடல்நலம் குறைந்தவராக இருந்தாலும் அவர்கள் தஞ்சை
மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நான் அவர்களைக் கேட்டுக்
கொள்வது, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற இந்த மீனவர்
சொசைட்டிகளை எல்லாம் ஒழுங்குபடுத்தி, சாதாரண ஏழை
எளிய மீனவர்கள் நன்மை அடையக்கூடிய அளவுக்கு ஏற்
பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய
உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு பிற்பட்டோர்
நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற
மானியக் கோரிக்கைகளை வரவேற்று, ஒரு சில கருத்துக்களைக்
கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள்
உள்நாட்டுக் குத்தகை மீனவர்களுக்கு லீஸ் சிஸ்டத்தை நிறுத்தி
வைத்திருப்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிட
விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு
உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் இங்கே
விரிவாகச் சொன்னார்கள். உள்நாட்டு மீனவர்கள் எல்லாம்
ஏமாற்றப்பட்டு, அவர்கள் பெருந்தனக்காரர்களின் கைப்பாவை
யாக ஆக்கப்பட்டு, ஒரு சில இடைத்தரகர் கையிலே சிக்கித்
தவிக்கிறார்கள். குளங்கள்ஏரிகளில் மீன் பிடிப்பவர்கள் அவர்கள்
கையிலே சிக்கி, இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய இலாபம்
எல்லாம் அவர்களுக்குப் போய்விடுகிறது. இன்றைக்குத் தண்ணீர்
இல்லாமல் மீன் பிடிப்பது சிரமம் என்று சொன்னார்கள்.
மேட்டூர் அணையிலிருந்து இப்போததான் தண்ணீர் திறந்து



விடப்பட்டிருக்கிறது. 2, 3 மாதங்கள் ஆனால்தான் மீன்
குஞ்சுகளை— வளர்த்து, மீன் குஞ்சுகள் உற்பத்தியாகி, வளர்ந்து
பிடிக்க முடியும். குளங்களிலே ஏப்ரல், மே மாதங்களில்தான்
மீன் பிடிக்க முடியும். அந்த நிலையில் இன்றைக்குக்
குளம், ஏரிகளில் மீன் இல்லை. ஆகவே, இன்றைக்குக் கொண்டு
வந்திருக்கிற இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

காரணம் என்னவென்று சொன்னால் புதிதாகக் கூட்டுறவுச்
சங்கங்கள் வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் ஏற்படுத்த இருப்
பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்படி வட்ட
அளவிலும் அவற்றை அமைப்பதன் மூலம் அங்கே சாதாரண சிறு
விவசாயிகளாக இருப்பவர்கள், அதாவது உண்மையான மீனவர்கள்
பயன்பெறுவர். எனவே உண்மையான மீனவர்கள் கிராமங்களில்
யார், யார் என்பதைப் பார்க்கவேண்டும். பல கூட்டுறவுச் சங்கங்
களில்—கடலிலும், குளத்திலும் சென்று வலையை வீசி மீன்பிடிக்கக்
கூடிய ஆற்றல் இல்லாதவர்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே
தலைவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் இன்றைக்கு உண்மையான பலபேர் கூட்டுறவுச்
சங்கங்களில் சேரவேண்டும் என்று மனு செய்தாலும் அவர்களால்
உறுப்பினர்களாகச் சேர முடியவில்லை. இப்படிப்பட்ட பல
காரணங்களால் அதிகாரிகள் உத்தரவிட்டாலும் அந்தச்சங்கங்களின்
மூலம் கடன் வாங்க முடியவில்லை. அதைச் செய்ய முடியாத
சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீனவர் குடி
யிருப்புத் திட்டம், மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத்
திட்டம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் மீனவர்கள் தொழில்
செய்கின்றபோது இறந்துவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் தருகின்ற
நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இப்படி மீனவர்
களுக்காக பல நல்ல திட்டங்களை இந்த அரசு கொண்டுவந்திருக்
கின்றது. இன்றைக்கு மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய
வகையில் நல்ல பல திட்டங்களைப் புரட்சித் தலைவர் அவர்
களின் அரசு அறிவித்திருக்கின்றது. முன்பெல்லாம் இந்தத்
துறை திரும்பியே பார்க்கப்படாத சூழ்நிலை இருந்தது. மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் இந்தத் துறை
யினைச் சிறந்த துறையாக ஆக்கி இதற்கென்று தனியாக ஒரு
அமைச்சரையே அமைத்து அதுவும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த
ஒருவரையே இதற்கு அமைச்சராக அமர்த்தி அந்தத் துறை
சிறப்பாகச் செயல்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்
கிறார்கள். இன்றைக்கு மீன் வளர்ச்சியினையும் அதிக அளவில்
ஏற்படுத்தியிருக்கிறார்கள். இறால் வளர்க்கின்ற திட்டத்தினைப்
பரவலாக்கி அதனை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பி
அன்னியச் செலாவணியை ஈட்டக்கூடிய நல்ல வழியினை ஏற்
படுத்தியிருக்கிறார்கள்.

தமிழகத்தில் இருக்கின்ற கடற்கரையின் நீளம் 1,300 கி.
மீட்டர் என்று சொல்லப்படுகின்றது. தஞ்சை மாவட்டத்தில்
நாகப்பட்டினம், வேதாரண்யம் போன்ற பகுதிகளில் மீனவர்
குடியிருப்புகளில் எல்லாம் இருக்கின்ற சாலைகளை எல்லாம்
இந்தத் துறையின் சார்பிலே சீர் செய்துகொண்டு இருக்கிறார்கள்.
ஆனால் இந்த ஆண்டு இதற்கான தொகையைச் சற்றுக் குறை
வாக ஒதுக்கி இருக்கிறார்கள். அந்தத் தொகையினை அதிகரிக்க
வேண்டும். கிழக்குக் கடற்கரை சாலை முழுவதையும் எடுத்துக்
கொண்டு அதனைச் சீர் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

நாகப்பட்டினத்தில் மீன் ஆராய்ச்சி நிலையம் இருந்தது .அதை
மூடிவிட்டார்கள். அங்கே இருக்கின்ற துறையினை நல்ல மீன்
பிடிக்கின்ற ஒரு சிறந்த துறையாக ஆக்க வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பிற்பட்டோர் நலத் துறையினைப் பொறுத்தவரையில்
இந்த அரசு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றது.
பிற்பட்டவர்களுக்கு 31 சதவீதமாக இருந்த அந்த ஒதுக்கீட்டினை
50 சதவீதமாக ஆக்கியிருக்கிறார்கள். பிற்பட்ட சமுதாயத்தைச்
சேர்ந்த மக்கள் இன்றைக்கு மிகவும் பின்தங்கிய நிலையில்
இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டுவதற்காக 4,800
ரூபாய் கடன் கொடுக்கப்படுகின்றது. அந்தத் தொகையினை
அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
இன்றைக்கு அந்தத் துறையினைப் பொறுத்தவரையில் பணக்
காரர்களும், நகர்ப்புறத்தில் இருப்பவர்களும்தான் அந்தச் சலுகை
களைப் பெற்று பலன் அடைகிறார்கள். 31 சதவீதம் உயர்த்தப்
பட்டு 50 சதவீதமாக ஆக்கப்பட்டு பிற்பட்டோருக்குச் சலுகை
கொடுக்கப்படுகின்றது என்றால் நகர்ப்புறங்களில் பணக்காரர்
களாக இருப்பவர்கள்தான் அந்தச் சலுகையைப் பெற்று டாக்
டர்களாகவும், இன்ஜினியர்களாகவும் வருகிறார்கள்.

கிராமப்புறங்களில் இருக்கின்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்
களால் அவ்வாறு வர முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே
கிராமப்புறங்களில் இருக்கின்ற மாணவர்களுக்கு 10 மார்க்குகள்
அதிகப்படியாக் கொடுக்க வேண்டும்; அதாவது போனஸ்
மார்க் கொடுத்து அதன்மூலம் அந்தப் பிற்பட்ட மாணவர்களை
வாழ வைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 543 ஹாஸ்டல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
இந்த ஆண்டிலே 20 மாணவர் விடுதி கட்டவும், ஆரம்பிக்கப்
படவும் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். சமுதாயத்தில்
அதிகமாக வாழ்கின்ற பிற்பட்டோர் சமூகத்திலிருந்து அதிகப்
படியான மாணவர்கள் வருகிறார்கள். எனவே அதிகப்படியான
ஹாஸ்டல்களைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற குறிப்பிலே



ஒரு ஹாஸ்டலிலே 50 என்றும் 75 என்றும்தான் மாணவர்களின்
எண்ணிக்கை சேர்க்கப்பட்டிருப்பாகக் கூறியிருக்கிறார்கள். அந்த
எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். சட்டப்படிப்பு படித்தவர்களுக்கு ஊக்கத்தை
அளிக்கிறார்கள். அதுபோல் ஐ.ஏ.எஸ். படிப்பவர்களையும்
ஊக்கப்படுத்த சிறப்பாக இந்த அரசு திட்டங்களைக் கொண்டு
வந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இராமேஸ்வரம் கடற்கரையில் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்க
முடியாத நிலைமையில் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. பல
அநாதைகள் தஞ்சை மாவட்டத்திற்கும், தென்னாற்காடு
மாவட்டத்திற்கும் வந்துகொண்டு இருக்கிறார்கள். எனவே மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசினை அணுகி அவர்கள்
வசம் உள்ள இராணுவத்தின் மூலம் ஒரு நிலையான பாது
காப்பைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேச
வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு
நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(இரவு 7–00)

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பினர், மீனளம் ஆகிய
மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்திருக்கிற காந்தி காம
ராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச்
சொல்ல விழைகிறேன்.

பின் தங்கிய வகுப்பினர் வாழக்கூடிய பகுதியான என்னுடைய
தொகுதியில் 4 பகுதிகளில் முக்கியமானது முதலூர். அந்த
முதலூர்ப் பகுதியில் இருக்கும்படியான பின்தங்கிய பகுதியின
ருக்கு ஒரு மாணவர் இல்லம் அமைத்துத் தரவேண்டும். அங்கே
படிக்கக்கூடிய மாணவர்கள் போய் வருவதற்கு வசதி இல்லாமல்
வாழக் கூடிய சூழ்நிலை இருப்பதன் காரணமாக, அவர்கள் அந்த
இல்லத்திலேயே தங்கி படிக்கும் வகையில் முதலூரிலே ஒரு
மாணவர் இல்லத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல செய்துங்கநல்லூர் பகுதியிலேயும் பின் தங்கிய
வகுப்பு மாணவர்களுக்கு ஒரு விடுதி—இல்லம் அமைத்துத்
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பேய்க்
குளம் பகுதியில் இருக்கும் மாணவர்களுக்குப் படிப்பதற்கு வசதி
யாக ஒரு மாணவர் இல்லம் அமைத்துத் தருவதோடு, பாளையங்
கோட்டைக்குப் பக்கத்திலே இருக்கும் அனவரதநல்லூர் என்னும்
இடத்திலும் ஒரு மாணவர் இல்லம் அமைத்துத் தர வேண்டும்
என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மாணவர்களுக்கு நாள் ஒன்றுக்கு சாப்பாட்டிற்காக ரூ. 4 வீதம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த 4 ரூபாய் என்பது மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால், அவர் களுடைய சாப்பாட்டிற்காக நாள் ஒன்றுக்கு சுமார் 6 ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பாளையங்கோட்டையில் இருக்கும் தற்போதைய மாணவர் இல்லம் ஒரு வாடகைக் கட்டி டத்திலே தான் இயங்கி வருகிறது. ஆகவே உடனடியாக அந்தப் பாளையங்கோட்டை மாணவர் இல்லத்திற்குச்சொந்தக் கட்டிடம் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நாசரேத் என்னும் இடத்தில் சலவைத் தொழில் செய்யும் தொழிலாளர்கள் அதிகமாக வசித்து வருவதால், அந்தப் பகுதியில் சலவைத் தொழில் செய்வதற்கு வசதியாகச் சலவைத் துறைகளைக் கட்டித் தருவதோடு, அவர்கள் குடியிருக்க குடி யிருப்பு இல்லங்களையும் கட்டித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சாத்தான்குளம் பகுதியிலே வசிக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கும் சலவைத்துறைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதோடு அவர்கள் குடியிருக்கும் இடங்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டவையாக இருந்தாலும் அவை களுக்கு இன்னமும் பட்டா வழங்காத நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உடனடியாகப் பட்டாக்களை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்கள் பகுதியிலே இந்த இரால் மீன்கள் பிடிப்பது சம்பந்தமாக இரண்டுவிதமான படகுக்கார மீனவர்களுக்கும் இடையிலே தகராறு எப்போதும் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், இங்கு மட்டும் அல்ல.பல பகுதிகளிலே இந்த இரால் மீன்களைப் பிடிப்பதிலே தகராறுகள் இருந்து வருகின்றன. எங்கள் பகுதியில் தாளை என்னும் இடத்தில் உள்ளவர்கள் கட்டுமரப் படகுக்காரர்கள். அவர்கள் கட்டு மரங்களை வைத்துக் கொண்டு மீன் பிடிக்கிறார்கள். ஆனால் அங்கே வரக்கூடிய விசைப்படகுக்காரர்கள், இவர்களின் வலை களை அறுத்துவிட்டு, சேதம் விளைவித்துவிட்டுச் சென்றுவிடு கிறார்கள். அதன் காரணமாக தாளைப் பகுதியில் எப்போதும் பல ஆயிரக் கணக்கான வலைகள் சேதாரப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆகவே அங்கே வரக்கூடிய மெஷின் வைத்த படகுகளை ஓட்டி மீன் பிடிக்கின்றவர்களை, சுமார் 6 மைல் சுற்றளவுக்குள் கடலுக்குள்ளிருந்து வெளியே வரக்கூடாது என்ற நிலையில் அரசாங்கம் ஒரு தனி ஆணையிட்டால்தான் இந்த இரண்டு வகைப்படகு மீன்பிடிக்காரர்களுக்கும் இடையில் வரக் கூடியதகராறுகளைத் தவிர்க்க முடியும்.



காரணம் என்னவென்றால், இந்த இரண்டு மீன்பிடிக்காரர் களுக்கும் தகராறு ஏற்படும்போதெல்லாம், அடிக்கடி என்னைப் போன்றவர்கள் சென்று அவர்களுக்குள் இருக்கும் தகராறுகளைத் தீர்த்து வைக்க வேண்டிய நிலைமை இருந்து வருகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் மெஷின் வைத்து ஓட்டக் கூடிய படகுகளை 6 மைல் சுற்றளவுக்குள்ளாக நின்று மீன் பிடிக்க வேண்டும் என்று ஆணையிடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடலில் உள்ள சதுப்பு நிலங்களில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வசிக்கக்கூடிய இரால் மீன்கள் மற்ற மீன்களைப்போல வேகமாக நீந்திச்செல்ல இயலாதவை. அது மட்டும் அல்லாது இந்த இரால் மீன்கள் உஷ்ணப்பிரதேசச்சதுப்பு நிலங்களில் மட்டும்தான் வசிக்கும்.

தற்போது இழுவை வலைகளை உபயோகித்து இரால் மீன் களைப் பிடிப்பதால், நிலத்தை ஒட்டி இழுத்து வரப்படும் வலை களால் கரை ஓரங்களில் இருக்கும் இரால் குஞ்சுகள் புரட்டப் பட்டு செத்து விடுகின்றன. இதனால் இரால் மீன்கள் வளர்வது மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. இரால் மீன்கள் முழு வளர்ச்சி பெறவேண்டும் என்றால் சுமார் 120 நாட்கள் தேவைப்படும். எனவே கடற்கரையோரங்களில் பாறைகளை ஒட்டியிருக்கும் சதுப்பு நில உப்பளங்களில் இரால் குஞ்சுகளை விட்டு வளர்க்கலாம். தனியாரையும் இரால் வளர்க்க குத்தகைக்கு அனுமதிக்கலாம். இராமேஸ்வரத்திற்கு வடக்கே இலங்கைக்கும் தமிழகத்திற்கும் மத்தியில் உள்ள பாறைகள் சூழ்ந்த பகுதியில் இரால்மீன்கள் உள்ளன. தூத்துக்குடிக்குத் தென்கிழக்கில் புன்னைக் காயலுக்கு ஏழு மைல் கிழக்கே இரால் உள்ளது. திருச்செந்தூ ருக்கு தென்கிழக்கே சுமார் 25 மைல் தென்கிழக்கில் இரால் உள்ளது. இராமேஸ்வரம் பகுதியில் நிறைந்த அளவு மீன்கள் உள்ளன. கன்னியாகுமரிக்கு மேற்கே 22-வது மைலில் வெட்ஜ் பாங்க் என்ற இடத்தில் பாறைகள் சூழ்ந்த இடத்தில் மிகப் பெரிய அளவில் மீன்கள் உள்ளன.

அந்த மீன்களைப் பிடிக்க வருடந்தோறும் தாய்லாந்து நாட்டு சகல வசதிகளுமுள்ள கப்பல்கள் வந்து, மீன்களைப் பிடித்துச் செல்கின்றன. இந்த இடத்திலுள்ள மீன்களைப் பிடிக்க நம் முடைய அரசாங்கம் நவீன கப்பல்களைக் கட்டி அவற்றை அங்கே பயன்படுத்த வேண்டும். வேற்று நாட்டுக் கப்பல்கள் வருவதைத் தடை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் பெரியதளையில் வசிக்கும் மீன்பிடிக்காரர்கள், அவர்கள் படகுகளுக்கு என்ஜின் வைக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு என்ஜின் வாங்க லோன் வழங்க வேண்டும். அவர்கள் யமேகா, லெம்பாடினி, இவின்நோட் ஆகிய என்ஜின்களை வாங்க வேண்டுமென்றால் அவர்கள் 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் வரையில் கொடுக்க

வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு, அவர்கள்
என்ஜின் வாங்குவதற்கு மானியம் கொடுத்து, அவர்கள் தொழில்
வளர்ச்சி பெறுவதற்கு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

*திரு பி. கே. எம். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே,
இன்றைக்கு மீன் வளம் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலன்
குறித்த மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கிற
அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குக் குஜராத் மாநிலத்தில் ஆண்டி-ரிசர்வேஷன்
கலவரங்கள் தலையாய பிரச்னையாக இருந்துகொண்டிருக்கிற
நேரத்தில் 31 சதவீதமாக பிற்பட்ட வகுப்பினரின் சதவீதம்
இருந்த நமது மாநிலத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள்
அதனை 50 சதவீதமாக மாற்றி நல்லதொரு ஆதரவை பிற்பட்ட
வகுப்பினருக்குத் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் இன்றைக்கு நெல்லைப் பகுதியில்
உச்ச நீதி மன்றத்தில் வழக்கைத் தொடுத்திருப்பவர்களைப் பற்றி
யும், அம்பாசங்கர் கமிஷன் அறிக்கை பிற்பட்டவர்களுடைய
நலனுக்குச் சாதகமாக இல்லாத நிலையில் இருப்பதைப் பற்றியும்
எண்ணிப் பார்க்கிறபோது, இந்த 50 சதவீதம் நிச்சயமாக பிற்
பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுமா , இந்தச் சலுகை
நிரந்தரமானதா என்ற அச்ச உணர்வு இன்றைக்கு ஏற்பட்டுக்
கொண்டிருக்கிறது. அந்த 50 சதவீதம் நிரந்தரமானதுதான்
என்ற வகையில் இந்த அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இந்த அவைக்கு நல்லதொரு வாக்கினை அளிக்க
வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பாக்வர்ட் கிளாஸ் என்ற முறை அன்றைக்கு இருந்த
காலத்தில், 31 சதவீதம் இருந்த நேரத்தில் இங்கே மோஸ்ட்
பாக்வர்ட் கிளாஸ் என்பதும் இருந்தது. மாண்புமிகு உறுப்
பினர் வளர்மதி அவர்கள் பேசுகிற போது குறிப்பிட்டார்கள்.
இங்கே மோஸ்ட் பாக்வர்ட் கிளாஸ் மற்ற அனைத்து வகுப்பினரை
யும் ஒன்றாகச் சேர்த்து பிற்பட்ட நலப் பிரிவினர்கள் என்று
சொல்லி, அனைத்துப் பிரிவினர்களையும் ஒன்றாகச் சேர்த்து
அதற்காக அதிகப் படியான சதவீதத்தை மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள்.
ஆனால் அதே நேரத்தில் இன்றைக்கு அந்தச் சதவீதம் ஒதுக்கப்
படுகிற நேரத்தில் பாதிக்கப்படுபவர்கள் என்று பார்க்கிறபோது,
அந்த மோஸ்ட் பாக்வர்ட் கிளாஸ் என்ற நிலையில் இருக்கிற
' டீநோட்டிபைட் Tribes (or) Community என்று
சொல்லப்படுகின்ற, சீர்மரபினர் என்று குறிப்பிடக்கூடிய அந்த
'டீநோட்டிபைட் ' வகுப்பைச் சேர்ந்தவர்களே அதிகமாக
பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் பொருளாதார ரீதியாக நல்ல





முறையில் முன்னேறுவதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது
கல்வியாகும். ஆகவே கல்வியைக் கற்பிப்பதற்கு இன்றைக்கு
இருக்கிற முறையில் அவர்களுக்கு நாம் நிச்சயமாக நன்மையைச்
செய்ய முடியாது. இன்றைக்கு டி.என்.டி. என்று போட்டு
மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும்
படிவங்களை அச்சடித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் தாசில்
தார் மற்ற ரெவின்யூ அதிகாரிகளிடம் அவற்றை எடுத்துச்
செல்கிறபோது, அந்த டி.என்.டி. என்பதை அடித்துவிட்டு,
பாக்வர்ர்ட் கிளாஸ் என்று சர்டிபிகேட் கொடுக்கக்கூடிய நிலை
இருக்கிறது.

(இரவு 7–10)

இந்த நிலையைப் பார்க்கின்றபோது, எதற்காக இந்த டி.என்.
டி. என்ற பிரிவிலே எங்களைச் சேர்க்கிறார்கள். அதற்குப்
பின்னாலே, பேக்வர்ட் கிளாஸ் என்று மாற்றப்படுகிறது.
ஆரம்பக்காலத்திலே டி. என். டி. என்று குறிப்பிடப்பட்டு,
இது நடை முறையில் இருக்கின்ற காலத்திலே கூட இதே
நிலைதான் இருந்து இருக்கிறது. இதிலே நான் அனுபவப்
பட்டவன் என்ற முறையில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.
எனவே மீண்டும் அந்த டி-நோட்டிபைட் டிரைப்ஸ் என்பவர்கள்,
குற்றப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அதிலே இருக்கிறார்கள்.
கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இதிலே அதிகமாக இருக்கிறார்
கள். எனவே அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அத்தனை
பேர்களுக்கும், கல்வியில் முன்னேற்றம் பெறுவதற்காக
மீண்டும் அதே அளவிலான ஒரு அமைப்பை ஏற்படுத்தித் தர
வேண்டும். அந்த அமைப்பின் மூலமாக நிச்சயமாக நல்ல பல
காரியங்களை அந்தச் சமூகங்களுக்குச் செய்து, அதனால் இன்
றைக்கு இருக்கக்கூடிய இனக் கலவரங்களை எல்லாம், பொருளா
தாரச் சீர்கேட்டினால் இன்றைக்கு வளர்ந்து கொண்டு இருக்
கிற அவைகளை எல்லாம் மாற்ற வேண்டும் என்றால், நிச்சயமாக
பொருளாதாரச் சமநிலை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமாக
நிச்சயமாக இந்த இனக் கலவரங்கள் நடைபெறாது என்ற
உத்தரவாதம் கிடைக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே
சொல்லவிரும்புகிறேன்.

இன்றைக்குக் கள்ளர் ரெக்லமேசன் என்று சிறப்பு பிரிவு
இங்கே ஒன்று இருக்கிறது. அந்த கள்ளர் ரெக்லமேசன் டிபார்ட்
மென்ட் இன்றைக்கு பேக்வர்ட் கிளாசிலே இணைக்கப்பட்டு,
இருக்கிறது. ஆதி காலத்திலே போலீஸ் இலாகாவிலே இருந்
தது. நான் போலீஸ் மானியத்திலே பேசுகின்றபோது சொன்ன
தைப்போல, இந்த இனத்தை மேம்படுத்த வேண்டும் என்று
காவல்துறை கூட இன்றைக்கு நல்லதொரு பணியைச் செய்திருக்
கிறது. அதற்குப் பின்னால் ரெவின்யூ டிபார்ட்மென்ட்டில்
இருந்தது. அதற்குப் பின்னால், இன்றைக்குப் பிற்பட்டோர் நலத்
துறையில் இருந்து கொண்டு இருக்கிறது. அந்த நலத்துறையில்

(திரு. பி.கே.எம். முத்துராமலிங்கம்) [1985 ஜூலை 11

அதிகமாகக் கவனிக்கப்படாமல் இதுவரையிலும் இருந்தது.
ஆனால் இந்த ஆண்டு மிக அதிகமாகக் கவனிக்கப்பட்டு நடந்து
கொண்டு இருக்கிறது. ஸ்பெசல் டெப்புட்டி கலெக்டர் ஒருவரை
அவர்கள் சார்பாக நியமித்து இருக்கிறீர்கள். உண்மையிலே
உயிரூட்டப்பட்டிருக்கிற நல்லதொரு அலுவலகம் அங்கே பணி
யாற்றத் தொடங்கியிருக்கிறது. அது சம்பந்தமாக என்னுடைய
கோரிக்கைகள் சிலவற்றை நான் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். இந்தக் கள்ளர் ரெக்லமேசனிலே இன்றைக்கு 8
பள்ளிகளுக்கும், 2 நடுத்தர, மேல் நிலைப் பள்ளிகளுக்கும்
கட்டடம் தேவை என்பதை நான் எடுத்துச் சொல்லியிருக்
கிறேன். அது அரசுக்கு வந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.
எனவே அதை நீங்கள் நல்ல முறையில் ஏற்படுத்தித் தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் நம்முடைய கள்ளர் ரெக்லமேசன் ஆஸ்டல் 34 இருக்
கின்றன. அவற்றிலே 7 தான் சொந்தக் கட்டிடத்திலே இருந்து
கொண்டு இருக்கின்றன. இந்தக் கள்ளர் ரெக்லமேசன் ஆரம்பிக்
கப்பட்டக் காலத்திலேயிருந்து, இன்றைக்கு வரையிலும்
மண்ணால் கட்டியிருந்தாலும் கூட இப்போது நமக்குச் சொந்த
மான கட்டிடங்கள் வந்திருக்கும். எனவே மீதியுள்ள இடங்களுக்
கும் கட்டிடங்களை நல்ல முறையில், சொந்தக் கட்டிடங்களைக்
கட்டித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன்
என்றால், கள்ளர் இனம் மட்டுமே அதிலே நல்லதொரு கல்வி
யைப் பயிலக்கூடிய நிலையில் இல்லை. அங்கே ஆதிதிராவிட
மக்களும் அதிகமாகப் பயன் அடைகின்றார்கள். அவர்களுக்கும்
சேர்த்துத்தான் இந்தக் கள்ளர் ரெக்லமேசன் என்று இப்போது
நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, தமிழகத்தினுடைய காவல் தெய்வமாக இருக்கிற புரட்சித்
தலைவர் ஆட்சியிலே வந்திருக்கிற பிற்பட்டோர் நலன், மீனவத்
துறை ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய
உணர்வுகளை இந்த மன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.
பிற்பட்டோர் நலத்துறை என்று சொன்னால், மாணவர்களுக்கு
விடுதியை நடத்துகிற துறை என்பதை மாற்றி, மற்ற நலிந்து
கிடக்கிற, சமுதாயப் பள்ளத்தாக்கிலே வீழ்ந்துகிடக்கிற, வறுமைத்
தீயால் கொட்டப்பட்டு இருக்கின்ற மக்களுடைய பிரச்சினை
களைப்போக்கி அவர்களைக் கைதூக்கி விடவேண்டும் என்ற எண்
ணத்திற்காகப் பாடுபடுகின்ற இந்தத் துறையை நான் முதன்
முதலிலே பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். தள்ளாத
வயதிலும், மக்கள் தள்ளாத கருத்துக்களைத் தந்த வெண்தாடி
வேந்தர், ஈரோட்டுச் சிங்கம், தந்தை பெரியார் அவர்களையும்,
இந்நாட்டு இங்கர்சால், தென்னாட்டு பெர்னாட்சா என்று
சொல்லப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களையும், கர்ம
வீரர் காமராஜ் அவர்களையும் இந்தப் பிற்பட்டோர் நல
மானியத்திலே பேசுகின்ற போது, நினைவு கூர்ந்து, அவர்கள்



1985 ஜூலை 11] [திரு. க. சோலைராசு]

இல்லை என்று சொன்னால், நம்மைப் போன்ற சாதாரண,
சாமானிய மனிதர்கள் எல்லாம் இந்தச் சட்ட மன்றத்திலே
வந்து இருக்க முடியாது என்ற வகையில், முதலிலே அவர்களை
என்னுடைய நெஞ்சத்திலே நிறுத்திக்கொண்டு, இந்தத் துறை
யைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்குத் தமிழகத்திலே
தான் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களைக்
கைதூக்கி விடுகின்ற அளவிலே, இன்றைக்கு 50 சதவீதம் இட
ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. ேற்பட்ட சமுதாயத்
தினுடைய வர்க்கத்திற்காகப் பாடுபடுகிறோம், நலிந்த பிரிவினரின்
உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு
இருந்தவர்கள் எல்லாம் ஆண்டுகொண்டு இருந்த நேரங்களில்
அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு 38 சதவீதம் தான்
இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது என்பதை நான் இந்த
நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தத் துறை
யினர் மண்டல் கமிஷன் சொல்லியிருக்கிற குறிப்புகளை எல்லாம்
ஏற்கனவே சரியான முறையிலே இங்கே அமுல்படுத்தி வரு
கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கை நடைபெற்றுக்கொண்டு இருக்
கிற நேரத்திலே தமிழக மக்களுக்கு அச்சம் தருகிற வகையிலே
இன்றைக்கு உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழக மக்க
ளுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கி இருக்கக்கூடிய அந்தத்
தீர்ப்பு தமிழக அரசினுடைய இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு
சவாலாக அமைந்திருக்கிற அந்தத் தீர்ப்பை எதிர்த்து இந்த இட
ஒதுக்கீடு 50 சதவீதம்தான் என்று நிலைத்து நிற்கக்கூடிய
வகையிலே தமிழகத்திலே உள்ளவர்களுக்கு எல்லாம் பால் வார்க்
கின்ற வகையிலே, இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெற அரசும்
இந்தத் துறையைச் சேர்ந்தவர்களும், முயற்சிகளை மேற்
கொள்ள வேண்டும் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதேபோல் இன்னொரு கருத்தை நான் இங்கே
எடுத்து வைக்க விரும்புகிறேன். ஒரு
பரிசீலனைக்காக
சமுதாயத்தின் பிற்பட்ட தன்மை வளர்ந்துவிட்ட விஞ்ஞான
யுகத்தின் காரணமாக— பொருளாதார அடிப்படையில்தான்
அமைந்துள்ள காலத்தின் கட்டாயத்தை மாற்ற முடியும்
என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவிக்க விரும்புகிறேன்.
எனவே வருமானம் உடையவர்கள் எல்லா வாய்ப்பும்.
பெறுகிறார்கள். பண சக்தி உடையவர்களை எந்தச் சக்தியாலும்
குறைத்துவிட முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே தான்
தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே
ஒருமுறை சொல்லியபடி இந்த மாமன்றத்திலே அறிவித்து
இருந்த அடிப்படைக்கல்விச் சலுகை மிகவும் பயன் அடையத்தக்க

நாட்டில் பயன் விளையத்தக்கதாக இருந்தது. எனவே, மீண்டும் பொருளாதார அடிப்படையில் பிற்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு, வேலை வாய்ப்பு ஆகியவைகள் வழங்கினால் சரியான சமூக நீதியாக அமையும் என்பதை இங்கே இருப்பவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் பணிவோடு இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன். அரசியல் ஆலாபத்திற்கு இதை எதிர்ப்பார்கள். அப்படி எதிர்ப்பவர்களைப் பற்றி மக்கள் புரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இந்த நலன் பயக்கிற, மக்கள் வாழ் வுக்கு வளம் பயக்கிற இந்தத் திட்டத்தை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் துவரங்குறிச்சியில் உள்ள மாணவர் விடுதிக்கும், மணப்பாறை மாணவர் விடுதிக்கும், தொண்டாமுத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் இப் போது மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினருமாக இருக்கிற மாண்புமிகு திரு சின்னராஜ் அவர்கள் தொகுதியைச் சேர்ந்த சின்னதடாகம் மாணவர் விடுதி, ஆலந்துறை மாணவர் விடுதி, காரமடை மாணவர் விடுதி போன்றவற்றிற்கும் முறையான கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இங்கே மாணவர்களுக்கு வழங்குகின்ற சாப்பாட்டின் தரம் ஓரளவுக்கு தரமானதாக இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அதிகமாக ரூபாய்களை ஒதுக்கி ஓரளவுக்குத் தரமான உணவை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே இருக்கிற துன்பப் படுகிற, துயரப்படுகிற, அல்லல்படுகிற கிறித்துவ வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

*திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மீன் வளம் மற்றும் பிற்பட்டோர் நலன் ஆகிய மானியக்கோரிக் கைகளின்மீது பேசவாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன்,

இன்றைக்குப் பேசியஅனைவரும் அம்பாசங்கர் தலைமையிலான நலக் குழுவைப் பற்றி பேசியிருக்கிறார்கள். 1982-ம் ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குழு 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப் பித்து இருக்கிறது. இந்தக் குழு என்பது ஏறத்தாழ 25 பேருக்கு மேல் அடங்கிய ஒரு குழு என்று கருதுகிறேன். ஒவ்வொரு மாவட்டமாகச்சென்று அங்குள்ள மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களிடம் இருந்து பெற்ற அந்தத் தகவலின் அடிப்படையில்





இந்தக் குழு தன்னுடைய அறிக்கையை 2-ம் மாதம் சமர்ப்பித்து இருந்த போதும்கூட அந்த அறிக்கை இதுவரை அரசின் ஆய்வில் இருக்கிறது என்ற ஒரு வார்த்தையை தான் இந்தப் புத்தகத்தில் நான் பார்க்கும் போது அதற்கு மேலும் இதில் என்ன ஆய்வு இருக் கிறது என்ற ஒரு கேள்வியை தான் நான்கேட்க ஆசைப்படுகிறேன்.

வெளியிடுவதற்கு வேண்டுமானால் காலதாமதம் இருக்கலாமே ஒழிய மீண்டும் ஒரு ஆய்வு என்று சொன்னால் இந்தக் குழுவை அமைத்து இருக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியை கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

அதோடு இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் பல ஆயிரக் கணக்கான, பல லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான தொகையை ஒதுக்கீடு செய்தும் கூட ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்வதோடு சரி என்ற சூழ்நிலை தான் இருந்து வருகிறது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்று சொன்னால், N. R. E. P., I. R. D. P., R. L. E. G. P. போன்ற திட்டங்களுக்கு எல்லாம் தொகையை ஒதுக்கீடு செய் கிறோம். ஆனால் அதற்காக 1200 பேருக்கு தேர்ந்தெடுத்து கொடுத்தோம் என்றபுள்ளிவிவரம் இருக்கிறதேஒழிய, உண்மையாக அவர்களுக்கு அந்தத் தொகை சென்றுசேர்ந்ததா? அவர்கள்வாழ்க் கையில் பொருளாதார முன்னேற்றம் அடைந்தார்களா என்ற ஒரு ஆய்வை இதுவரையில் செய்து இருக்கிறதா என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட ஒரு நிலையை அறிய அங்கே சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து ஆய்வுக்கு அனுப்ப அரசு முன்வருமா என்ற ஒரு கேள்வியை முன் வைக்க கடமைப்பட்டு இருக்கிறேன்.

[இரவு 7-20.]

நலிவுற்ற நிலையில் உள்ள, சாதாரணமான தொழில் செய் கின்ற போயர்கள் மற்றும்பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த டோபிகள் போன்ற மிகக் குறைந்த ஜனத்தொகை உள்ளவர் களுக்கு அரசு வீடு கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்துகின்ற ஒரு முறையை 1981-வது ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தி வருகிறது. நான் அதை வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் எல்லாத் துறையிலும், அரிஜன் வெல்ஃபேர் துறையாக இருந்தாலும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையாக இருந்தாலும் வீட்டுமனை கையகப்படுத்தும்போது, பக்கத்திலிருக் கும் நிலத்தினுடைய அந்த விலையைத் தான் கொடுக்க வேண்டும் என்று அரசு சொல்கிறது. அந்தக் காரணத்தால், அதற்கு மேலும் தொகை கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அந்த மனை யில் எவ்வளவு பேருக்கு வீட்டு மனை வேண்டுமோ, அவர்களிட மிருந்து ரூபாய் 1,000, 1,500 என்ற முறையில் வசூல் செய்துதான்

அந்த மனை பெறக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, முழுத் தொகையையும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைக்கிறேன்.

அதோடு இன்றைக்கு நில ஆர்ஜிதத்தில் தாமதம் ஏற்படுகிற காரணத்தால், பழைய சட்டமுறைப்படி இல்லாமல், புதிய முறைப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களே நிலத்தைக் கையகப் படுத்தி, ஆர்ஜிதம் செய்து, நிலப் பட்டாக்கள், வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க மீண்டும் முன் வர வேண்டும்.

காரணம், தாழ்த்தப்பட்டவர்களுக்கானாலும், பிற்படுத்தப் பட்டவர்களுக்கானாலும், நிலக் கையகத்தில் 500-க்கு மேற்பட்ட வழக்குகள் இன்றைக்கு நிலுவையில் இருக்கிறது என்று 1980-லிருந்து கேட்டுக் கொண்டிருந்தாலும் கூட இது வரை அதே சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் சட்டத்தை மாற்றி, மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்களே கையகப்படுத்துகின்ற ஒரு சூழ் நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளு கிறேன்.

அதோடு, இன்றைக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் செம்மலை அவர்கள் பேசுகின்ற போது, ஐ.ஏ.எஸ். பரிட்சைக்கு நம் தமிழகத்திலிருந்து செல்லும் மாணவர்கள் சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற ஒரு நிலையை எடுத்துக் கூறினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுவது எல்லாம், உண்மையிலேயே, நல்ல முறையில் தான் அங்கே தேர்வு நடைபெறுகிறது. ஏன் என்று சொன்னால், டெல்லியில் என்னிடம் சில மாணவர் கள் அது பற்றி கோரிக்கைகளைச் சொன்னபோது, அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினரையும், அமைச்சர் உயர்திரு மாண்புமிகு ஆர். வி. அவர்களையும் சந்தித்து, அதுபற்றிக் கேட்டபோது, அப்படித் தமிழகத்திலிருந்து வருபவர்கள் கருதுவது தவறு என்பதை மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

ஆனாலும் கூட, ஒன்றைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாம் தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டு, தமிழையும், ஆங்கி லத்தையும் மட்டும் தான் படிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குகின்ற காரணத்தால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங் களை நாம் உருவாக்குகிறோம் என்பதை மட்டும் சுட்டிக்காட்டா மல் இருக்க முடியாது.

ஆக, நாம் இந்தியைப் படிப்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அனைவரையும் நிர்ப்பந்தப் படுத்த வேண்டும் என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட நேரங் களில் படிக்க முன் வருகின்ற ஆர்வமுள்ள அந்த மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க நாம் ஏன் தயங்க வேண்டும் என்ற கேள்வியைத் தான் நான் வைக்க ஆசைப்படுகிறேன்.



இன்றைக்கு கம்யூனிட்டி சர்ட்டிபிகேட் என்று பிற்படுத்தப் பட்டவர்கள் வாங்குவதற்கு தாசில்தாரிடம் சென்று மிக கஷ்டப் படுவதை இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள் என்று கருதுகிறேன். அதோடு மட்டும் அல்லாமல், ஏதோ, இதற்கு மட்டும் தான் கையூட்டு பெறுகிறார்கள் என்று சொல்லவில்லை. உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பல மாணவர்கள் சான்றிதழ் பெறுவதற்கு மிகச் சிரமப் பட்டு, ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் விண்ணப்பம் அனுப்ப முடி யாத ஒரு சூழ்நிலையில் கல்லூரியில் சேர்வதற்கும், மற்ற இடங் களில் சேர்வதற்கும் வாய்ப்பை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை கூட இன்று இருக்கிறது.

ஆக, அப்படிப்பட்ட ஒருநேரத்தில், கல்விச்சான்றிதழ், அதா வது 10-வது, எஸ்.எஸ்.எல்.சி. படிக்கின்ற மாணவர்களுடைய சான்றிதழின் முதல் பக்கத்திலேயே அவர்களுடைய ஜாதி என்ன என்று குறிப்பிட்டு இருக்கிற காரணத்தால், நாம் ஏன் ரெவின்யூ அதிகாரிகளை தாசில்தார்களை அணுகி அந்தச் சான்றிதழ் பெறச் செய்ய வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

எனவே, அரசு தயவு செய்து அதை மாற்றியமைத்து, சந் தேகம் ஏற்படுமேயானால், அங்குள்ள பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி அவர்களிடம் சான்றிதழ்கள் வேண்டு மானால், வாங்க உத்திரவிடலாம் என்பதைச் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு புத்தகங்கள் விநியோகத்தைப்பற்றி எல்லோருமே கூறிவிட்டார்கள். இருந்தாலும்கூட, என்ன காரணத்தால், இன்று வரை புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்பதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். சென்ற நான்கு முறையாக, சட்ட மன்றத்தில், கடைசி நேரத்தில், ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் கொடுப்பதால் அது அந்த மாணவர்களுக்கு உதவவில்லை என்று எடுத்துக் கூறியும் கூட, அதிகாரியினுடைய கவனக் குறைவா அல்லது நாம் உத்தரவிடுவதில் தாமதமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு நாம் 90 சதவீதம் மாணவர்கள் வருகை தந்திருந்தால் தான் அந்த ஸ்காலர்ஷிப் என்ற உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்ற அந்த நிலை இருக்கிறது. நான் நினைக்கிறேன். அநேகமாக கடந்த மூன்று நான்கு ஆண்டு களாகத்தான் இந்தச் சூழ்நிலை இருக்கிறது என்று, ஏற்கெனவே, அரசாங்கத் தேர்வுக்கு மாணவன் செல்லத் தகுதி என்று கருதி னால் அவர்களுக்கெல்லாம் உதவித் தொகை வழங்கப்பட்டு வந் தது. ஆனால் இன்றைக்கு அவர்களின் வருகை 90 பர்சென்ட் இருந்தால்தான் அவர்கள் உதவித் தொகை பெற முடியும் என்ற சூழ்நிலை இருப்பதன் காரணமாகப் பல ஏழைப் பிள்ளைகளின் வாழ்க்கை சீரழிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நீங்கள் சென்னை மாநகரத்தில் உள்ள பல உணவு விடுதிகளைப் பார்த்தால் அவைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. ஆனால் கல்லூரிகள் திறக்கப்பட்டுவிட்டன. கிராமங்களில் உள்ள எங்களைப் போன்றவர்களின் வீடுகளிலேயுள்ள பிள்ளைகள், தொலை தூரங்களிலேயிருந்து வருகின்றவர்கள் எப்படிக் கல்லூரிகளுக்கு வர முடியும்? வந்தால் அவர்கள் எங்கே சாப்பிடுவது, அவர்கள் எங்கே தங்குவது? ஆகவே, மாணவர்கள் 90 சதவீதம் வருகை தர வேண்டுமென்று சொல்லுகின்ற அரசு, கண்டிப்பாக இந்த ஒரு வசதியையும் அவர்களுக்கு உடனடியாகச் செய்து தர வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர் இல்லங்களில் பகுதி நேர ஆசிரியர்கள் என்று 9-வது, 10-வது, 11-வது, 12-வது ஆகிய வகுப்புகளுக்கு நியமித்து இருப்பதாகக் கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இதைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர அப்படி அவர்கள் எங்கேயாவது சென்று பாடம் போதிக்கிறார்களா என்று கேட்டால் அதைப்பற்றித் தயவு செய்து அமைச்சரவர்கள் தனிக் கவனம் செலுத்தி அந்த விடுதிகளுக்குச் சென்று பார்வையிட வேண்டுமென்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குப் பல ஜாதிச் சங்கங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்பவில்லை என்றாலும்கூட, ஒவ்வொரு ஜாதிச் சங்கமும் கூடும்பொழுதெல்லாம் எங்களுடைய ஜாதியில் ஒரு கோடி மக்கள், ஒன்றரை கோடி மக்கள், இரண்டு கோடி மக்கள் இருக்கிறார்கள் என்று ஏதோ புள்ளிவிவரங்களை அவர்கள் கையிலே வைத்துக் கொண்டிருப்பதைபோலப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆக, இப்படி எல்லாச் சங்கங்களும் சொல்வதையெல்லாம் கூட்டிப் பார்க்கும் நேரத்தில் இன்னொரு தமிழகம் எங்கே உருவாகுமோ என்ற அச்சம்கூட ஏற்படுகிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலைகளுக்குக் காரணம் யார் என்பதைப் பற்றிக்கூட நான் சொல்ல முன்வரவில்லை. இருந்தாலும்கூட, இதுசரியா என்ற கேள்வியைக் கேட்கத்தான் நான் ஆசைப்படுகிறேன்.

பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற நேரத்தில் இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பேசினார்கள். நான்கூட பலயிடங்களில் சொல்லியிருக்கிறேன். தயவு செய்து இந்த கான்வென்ட்டுகளை மூடிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். தனிப்பட்ட முறையில் என்னை எவ்வளவுபேர் பேசினாலும் அதற்காக நான் கவலைப்படவில்லை. பல கிராமங்களை உள்ளடக்கிய தமிழகத்தின் கிராமங்களில் உள்ள மாணவர்கள், குழந்தைகள் கான்வென்டில் படிக்க முடியவில்லை. இங்கே கான்வென்டில்



படித்த மாணவர்களோடு எங்களுடைய கிராமங்களில் இருந்து வருகின்ற மாணவர்கள் போட்டியிடுகின்றபொழுது எங்களுக்கு இடம் கிடைப்பது சிரமமாக இருக்கிறது என்பது கூட அல்ல, கிடைப்பதே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்று சொன்னால், இப்பொழுது மாணவ மாணவிகள் என்டரன்ஸ் தேர்வு எழுதியிருக்கிறார்கள். ஆனால் எனக்கிருக்கின்ற கவலையெல்லாம், கிராமங்களில் படிக்கின்ற மாணவர்களில் எத்தனைபேர் பட்டப்படிப்பு படிக்க அல்லது என்ஜினியரிங் கல்லூரிகளில் சேர அல்லது மருத்துவக் கல்லூரிகளில் சேர தகுதியுடையவர்களாக வருவார்கள் என்ற கேள்வியைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஏற்கனவே 1964 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது இருந்ததைப்போல இன்றைக்கு மாவட்டவாரியாகப் பிரித்து, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பத்து மருத்துவர்கள் வர வேண்டுமென்றால், அந்த மாவட்டத்தில் உள்ளவர்களை மார்க்கின் அடிப்படையில் பத்து பேர்கள் மருத்துவக் கல்லூரியில் சேரும் வகையில் உதவி செய்ய வேண்டுமென்ற கருத்தைக் கூறிக்கொள்கிறேன்.

மீனவர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, சான்றிதழ் தர வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தைப் பற்றியும் இங்கே கூறினார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவரிடமிருந்து சான்றிதழ் பெற்றால் போதும் என்ற நிலையை எடுத்துக் கூறினார்கள். அதைப் போல தம்மம்பட்டி என்ற ஊரில் தேன்மொழி என்ற பெண் மணியின் கணவர் ஒரு மரமேறி. அவர் தொழில் செய்து கொண்டிருக்கும்போது இறந்துவிட்டார். ஆனால் அந்தத் தொகையை வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அங்கே அரசு மருத்துவமனையில் உள்ள மருந்துவ அதிகாரி இதுவரையிலேயும் சான்றிதழ் கொடுக்கவில்லை.

(இரவு 7–30)

நானும் பலரை அணுகி மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பல கடிதங்கள் எழுதிய பிறகுதான் இங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஆகவே, என்ன காரணத்தினாலோ அவர்கள் எடுத்து உடனடியாக எரித்து விட்டால், அவர்களுக்குக் கிடைப்பதில்லை. தம்மம்பட்டியில் ஒரு தேர்த் திருவிழாவின்பொழுது, ஒரு வீட்டின் கூரையின் மேல் ஏறிநின்ற 6, 7 பேர்கள் இறந்து விட்டார்கள். பயந்துகொண்டு கிராம மக்கள் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் எடுத்துக் கொண்டு சென்று எரித்து விட்டார்கள்.

இதுவரை அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கவில்லை. காரணம், மருத்துவச் சான்றிதழ் கொடுக்கப்பெறவில்லை. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் அங்கே உள்ள பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர், அல்லது முக்கியஸ்தர்கள், அல்லது நிர்வாக அலுவலர் (ஈ. ஓ.) டவுன் பஞ்சாயத்து போன்றவர்களிடம் சான்றிதழ் பெற்றால் போதும் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இன்றைக்கு பிளஸ் 2, பிளஸ் 1 படிக்கும் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பது அரிதாக இருக்கிறது. 9-வது, 10-வது வகுப்பிற்குக் கிடைக்க வேண்டிய ஸ்காலர்ஷிப் கூட கிடைப்பதில்லை. ஆரூரைச் சேர்ந்த கரியப்பிள்ளையின் மகள் செல்வி என்பவர், உண்மையில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர். அது பார்வர்ட் கம்யூனிட்டி இல்லை. இருந்தபோதிலும் அவர் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற காரணத்தால், அவர் பி.சி. வகுப்பைச் சேர்ந்திருக்கிற காரணத்தினால், சான்றிதழ் பெற்று, ஸ்காலர்ஷிப் கிடைக்க வேண்டிய நிலையிருந்தும்கூட, அரசினுடைய சலுகை கிடைக்க வேண்டிய சந்தர்ப்பம் அவருக்கு இருந்தும்கூட, அங்கே உள்ள தலைமை ஆசிரியர், உரிய நேரத்தில் விண்ணப்பத்தைப் பெற்று அனுப்பாத காரணத்தினால் இரண்டு ஆண்டுகளாக வாங்கமுடியாத சூழ்நிலையில் மேல் படிப்புக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கம் சட்டங்கள் இயற்றியுங்கூட, கோடிக்கணக்கான தொகை ஒதுக்கியும் கூட ஏழைகளான அவர்களுக்குச் சேரவில்லையென்ற காரணத்தால், இவைபற்றியெல்லாம் நாம் மறுபரிசீலனை செய்து, எந்த அளவுக்கு மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதை ஒட்டு மொத்தமாக, எல்லா துறைகளிலும் கணக்கிட வேண்டுமென்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆத்தூரிலும், தம்மம்பட்டியிலும் சலவைத் தொழிலாளர்களுக்கு இரண்டு துறைகள் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு வீரகனூர், சாத்தப்பாடி ஆகிய இரண்டு ஊர்களிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி இருக்கிறது. நீண்ட நாட்களாக அவர்கள் வெளிச்சம் இல்லாத அரிசன நல விடுதிகள் இருக்கின்ற அதே ஒரு சூழ்நிலையின்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீண்ட நாட்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இடங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நகரத்தில் உள்ள விடுதிகள் பழுதடைந்து விட்டால் கூட வேறு ஒரு கட்டிடத்தை நீங்கள் வாடகைக்கு எடுக்க முடியும். ஆனால், கிராமத்தில் குடியிருந்த வீட்டைத்தான் வாடகைக்குக் கொடுக்கிறார்கள். அதில் மாணவர்கள் படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால்



வீரகனூர், சாத்தப்பாடி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க இந்த ஆண்டிலேயே அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். கீரிப்பட்டி, ஆத்தூர் ஆகிய இரண்டு இடங்களுக்கும் பாக்வேர்ட்கிளாஸ் ஹாஸ்டல் கேட்டுப் பலமுறை விண்ணப்பித்திருக்கிறோம். ஆனால், இதுவரை கிடைக்கவில்லை. கீரிப்பட்டிக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆத்தூர் தாலுகாவைப் பொறுத்தவரை, அங்குள்ளவர்கள் சொல்வதைக் கேட்கும்போது, இரண்டு, மூன்று முறையாக நான் சட்டமன்றத்தில் சொல்லக்கூடாது என்று நினைத் தாலுங்கூட, ஒட்டுமொத்தமாக வளர்ச்சியைப் பார்க்கும் போது, அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கின்ற இடத்தையும் எங்களுடைய இடத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நாங்கள் எவ்வளவுதான் விழுந்து விழுந்து வேலை செய்தாலும், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும் கூட, பலகாரியங்கள் நீண்ட நெடு நாட்களாக நிலுவையில் இருக்கின்ற காரணத்தால், அமைச்சர் அவர்கள் இந்த வீரகனூர் சாத்தப் பாடிக்குக் கட்டிடம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்

கடைசியாக கிறிஸ்டியன் பற்றி சில வாக்குவாதங்கள் வந்தன. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அரிசனங்களாக இருந்து கிறிஸ்டியனாக மாறினால், இந்து, கிறிஸ்டியன்களுக்கு உள்ள இரண்டு சலுகைகளையும் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் என்பது உண்மை என்றாலும் அவர்களை எப்படி அரிசனங்களாக நாம் ஏற்றுக்கொள்கிறோமோ, அதேபோல் இன்றைக்கு வன்னியர்கள் நிறைய பேர்கள் கிறிஸ்டியன்களாக மாறி இருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் பார்வார்ட் கம்யூனிட்டி என்ற காரணத்தினால் பொருளாதார முன்னேற்றம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களை பாக்வேர்ட் கிளாசில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாய் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, தாழ்த்தப்பட்டோர் நலத்துறை மானியத்தில் நான் பேச வேண்டுமென்று நினைத்தபொழுதுகூட எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் பிள்ளைகளுக்கு மருத்துவத்தில் 6, இன்ஜினியரிங் 5, மற்ற இரண்டு பிரிவுகளில், 2, 1 என்ற இட ஒதுக்கீட்டை நான் கண்ணுற்றேன். அதை நான் வரவேற்கிறேன். என்றாலும் கூட, அவர்கள் கலப்பு மணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தி, பிள்ளைகளைப் பெற்று, பிறகு படிக்க அனுப்பும் போது, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றிற்கு அனுப்பும்போதுதான் அந்தச் சலுகை வருகிறது. உடனே அரிசன நலத்துறை அமைச்சர் சொல்லலாம், ரூ. 6,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம் கொடுக்கிறோம். ரூ. 4,000 பாண்டாகக் கொடுக்கிறோம், என்று.

300 ரூபாய் செலவுக்குக் கொடுக்கிறோம் என்றார்கள். தயவுசெய்து இந்த இட ஒதுக்கீட்டை அவர்களுக்கு 6 சதவீதம், 5 சதவீதம், 2 சதவீதம், 1 சதவீதம் என்று கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரையில் இப்படிப்பட்ட பிள்ளைகள் எவ்வளவு பேர், எந்த எந்த படிப்பில் சேர்ந்திருக்கிறார்கள்? விண்ணப்பித்தவர்கள் எவ்வளவு பேர் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன். கேள்வியாகக் கேட்டு, விடை கிடைக்காத காரணத்தால் இப்போது கேட்கிறேன்.

அதோடு கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு தயவுசெய்து உடனடியாக தகுதி அடிப்படையில் வேலை வாய்ப்பு கொடுத்தால்தான் பிரயோஜனமாக இருக்கும், உடனடி நிவாரணமாக அது அமையும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று முறையாக என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, மாநிலத்தினுடைய இந்தத் துறைக்கு அமைச்சராக்கி, தமிழக மக்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பை அளித்திருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, மூன்று முறை என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த பேராவூரணி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி கூறி, என்னுடைய பதில் உரையைத் தொடங்குகிறேன்.

நம்முடைய கடற்கரை கிட்டத்தட்ட ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கிறது. கடலிலே மீன் பிடித் தொழில் செய்கின்றவர்கள், அதைப் போன்று உள் நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடிப்பவர்கள் நலன்களைக் கவனிக்கின்ற துறைக்கும் கிட்டத்தட்ட 2.65 கோடி மக்கள், அதாவது மொத்த மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 65 சதவீதமாக இருக்கிற பிற்பட்ட சமுதாயத்தினுடைய நலன்களைக் கவனிக்கின்ற துறைக்கும் நான் பொறுப்பு வகிக்கிறேன். இந்த இரண்டுமே முக்கியமான துறைகள். இந்த இரண்டு துறைகளுக்கும் இன்றைக்கு கடைசியாக இந்த நேரத்தில் பதில் சொல்லுகின்ற நிலையில், எதைச் சொல்வது, எப்படி பதில் அளிப்பது என்று தெரியாத சூழ்நிலையில் என்னுடைய கருத்துக்களை அரசின் சார்பில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே 15 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மிகச் சிறப்பாக தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிற அத்தனை விவரங்களையும் நல்ல முறையில் படித்து, சிறப்பாக விளக்கம் தந்து, சில கோரிக்கைகளையும் மக்கள் நலன் கருதி, அவர்களுடைய



உணர்வாக வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் மொத்தமாகவும் தனித்தனியாகவும் கூட எத்தனை கேள்விகள் கேட்டாலும் பதில் சொல்லக் கூடிய அளவுக்கு நான் குறிப்புகள் வைத்திருந்தாலும் இப்போது இருக்கிற நேரம் அதிகமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களும் எந்த நேரத்தில் வெளியே போகலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் நான் சில அறிவிப்புகளை மட்டும் வெளியிட்டு, மற்றபடி சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளை ஏற்றுக் கொண்டு, முடிந்தவரையில் அவைகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், கடற்கரை சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. சுமார் 4 இலட்சம் மீனவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு பல்வேறு சிறப்பான காரியங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி செய்து வருகிறது. சிலர், மீனவர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். அதை எல்லாம் தெளிவாக சொல்வதற்கு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆகும். ஆனால் 15 நிமிடங்களில் நான் இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கு பதில் சொல்ல இருக்கிற காரணத்தால் அந்த மக்களுக்கு என்னென்ன திட்டங்களை நாங்கள் விரைந்து செயல்படுத்தி வருகிறோம் என்பதை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் துறையில் எந்தவிதமான சுணக்கமும் இல்லாமல், இனி வேகமாகவும் விரைவாகவும் செயல்பட்டு உண்மையான மீனவர்களுக்கு பலன் கிடைக்கும் வகையில் அரசினுடைய திட்டங்கள், விரைந்து அவர்களைச் சென்றடைய வேகமாகச் செயல்படுவோம் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 7–40)

இங்கே உள்நாட்டு மீனவர்கள் பிரச்சினைகளைப் பற்றி ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திலே பல மாவட்டங்களில் உள்நாட்டு மீனவர் சங்கங்கள் இருக்கின்றன. ஒரு மீனவர் சங்கம் 5, 6 வட்டங்களைக் கொண்டிருக்கிறது. 2, 3 வட்டங்களைக் கொண்டிருக்கிறது. தனி வட்டமாகவும் இருக்கிறது. இப்படி இருக்கிறபோது, உண்மையான மீனவர்களை அந்தச் சங்கங்களிலே உறுப்பினர்களாகச் சேர்க்கவில்லை என்பதை பல நாம் இடங்களில் பார்த்திருக்கிறோம். உண்மையான மீனவர்களை இதுவரை சேர்க்கவில்லை. இனிமேலாவது உண்மையான மீனவர்களைச் சேர்க்க வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டால் பதிவு ஏடுகளைக் கூட சங்கத் தலைவர் தருவதில்லை. எப்போதாவது ஆடிட் செய்ய வேண்டும் என்று கேட்டால்கூட அவர்கள் தர மறுக்கிறார்கள். சரி சங்கத்தின் காலம் முடிந்த பின்னர் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்லி பதிவேடுகளைக் கேட்கிறபோது கோர்ட்டிலே நிற்கிறார்கள். அப்படிப்பட்ட

ஒரு நிலையிலே இருந்து கொண்டு மிக மோசமான தன்மையிலே மீனவர்களை எல்லாம் ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு வியாபாரத் தலமாக சங்கத்தினை தலைவர்கள் இருந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி மிகப் பெரும்பாலோர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது 5 ஆண்டுகள் கிட்டத்தட்ட 40 தடவை சென்றும்கூட ஒரு சங்கத் தலைவரைப் பார்க்க முடியவில்லை. அப்படி ஒரு சட்டமன்ற உறுப்பினராலேயே அங்கே சென்று கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கும், உண்மையான மீனவர்களை மெம்பர்களாக ஆக்குவதற்கும் என்று அவரைப் பார்க்கச் சென்றால் முடியவில்லை. மீனவர் அல்லாதவர்களை மெம்பர்களாகச் சேர்த்திருக்கிறார்கள். யாராவது மீனவர்களாக இருந்தால்தான் உள்நாட்டு குளங்களை அவர்களுக்கு ஒதுக்க முடியும் என்று சொன்னவுடனே அவர்கள் அந்த ஊரிலே இருக்கின்ற யாராக இருந்தாலும் அதாவது அவர்கள் மீனவர்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, 5 ஆயிரம் மதிப்புள்ள குளத்தை ஆயிரம் ரூபாய் என்றாலும் கவலை இல்லை என்று, நீ போய் மீனைப் பிடித்துக் கொள் என்று சொல்லி விடுகிறார்கள். அவ்வாறு 5,000 ரூபாய் மதிப்புள்ள குளத்தை 1,000 ரூபாய்க்கு எடுத்துக் கொண்டு 500 ரூபாயை அவர் வாங்கிக் கொண்டு அந்த ஊரிலே விட்டு விடுகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உண்மையான மீனவர்கள்தான் மீன் பிடிக்க வேண்டும் ; அவர்கள்தான் அந்தப்பயனை அடைய வேண்டும் ; மீனவர்கள்தான் நேரடியாக அந்தத் தொழிலில் ஈடுபட வேண்டும் என்று எண்ணி உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலில் உண்மையாக ஈடுபடுபவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையில் உள்நாட்டிலே இருக்கின்ற அந்த மீனைப் பிடிக்க உண்மையான மீனவர்கள்தான் அனுமதிக்கப்பட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற நிலையில் அங்கே ஆண்டு தோறும் கட்லா, ரோகு, மிருகால் போன்ற மீன் வகைகளை வளர்த்து அதனை 5,000 கிலோ அளவுக்கு 50,000 ரூபாய் என்ற அளவுக்குக்கூட விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உண்மையான மீனவர்களா என்று போய்ப் பார்க்கின்றபோது அந்தக் குளத்திலே தூண்டு கட்டிய ஒருமீனவர் மீனைக் கொண்டு போய் அங்கே உட்கார்ந்துக் கொண்டிருக்கின்ற ஒருவரிடத்திலே ஏதோ எஜமானனிடத்திலே கொடுப்பது போல கொண்டு போய்க் கொடுக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் எல்லாம் மீனை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சங்கத்தின் தலைவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். தாலுக்காவிற்கு ஒரு



சங்கம் இருக்க வேண்டும், ஒவ்வொரு தாலுக்காவிலும் உள்ள உண்மையான மீனவர்கள்தான் அங்கே உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று சொல்கிறபோது கிட்டத்தட்ட 2,000-க்கு மேற்பட்டு மீனவர்கள் ஒவ்வொரு வட்டத்திற்கும் இருப்பார்கள். அவர்கள் மீன் பிடித்தால் அதை எங்கே கொண்டு போய் விற்கிறார்கள் என்று சொன்னால்—இவர்கள் கொண்டு போய்க் கொடுக்கின்ற மீனை வாங்கிக் கொண்டு ஏதோ ஒரு தொகையை கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். இப்படி இருக்கின்ற நிலைமையை மாற்றி உண்மையிலேயே மீனவர்கள் பயனடைய வேண்டும் ; அவர்கள் மீன் பிடிக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும்: மீனவர்கள் பலனை அடைய வேண்டும் என்ற எண்ணத்திலே உள்நாட்டு மீனவர்கள் சங்கத்தை வட்ட அளவிலே அமைக்க வேண்டும் என்ற உணர்வைக் கொண்டு சமீபத்திலே ஒரு உத்தரவைப் பிறப்பித்தோம்.

நாம் வட்ட அளவில் சங்கம் அமைக்கின்றபோது அதிலே உண்மையான மீனவர்கள் சேரலாம். பெரிய தலைவராக இருப்பவர்கள் இங்கே அண்ணன் திரு. உத்திராபதி அவர்கள் சொன்னதுபோல் என்ன செய்கிறார்கள் என்றால் ஆண்டுதோறும் பல இலட்சக் கணக்கான வருவாய் வரும் மீன்களை அவர்களுக்கு வேண்டியவர்களிடத்திலும், மீன் வியாபாரிகளிடத்திலும், இடைத் தரகர்களிடத்திலும் கொடுத்து விடுவதைப் பார்க்கிறோம். நான் கூட மருத்துவமனையில் இருந்தபோது கடந்த மாதம் 24 ஆம் தேதி அவசரம் அவசரமாகத் திருத்துறைப் பூண்டியில் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் குத்தகைக்காக ஒதுக்கப்பட்டது. அப்போது சட்டமன்ற உறுப்பினர்களும் மீனவர் பிரதிநிதிகளும் மற்றவர்களும் வந்து என்னிடத்திலே சொன்னார்கள். அவசரம், அவசரமாக ஒதுக்கிக் கொண்டு வருகிறார்கள் : பிறகு தாலுக்கா வாரியாகச் சங்கம் அமைத்துத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறபோது அவர்கள் கோர்ட்டுக்குபோய் விடுவார்கள்; எனவே உடனடியாக அதனை நிறுத்தியாகவேண்டும் என்று சொன்னார்கள். அப்போது உடனடியாக அவ்வாறு ஒதுக்குவதை நிறுத்தி வைக்க நாங்கள் முயற்சி எடுத்தோம்.

அவ்வாறு நிறுத்தியதன் மூலம் அந்த மீனவர்களுக்குப் பாதிப்பு இல்லை. இனிமேலும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை. மீனவர்கள் பயன் அடைகின்ற அந்த ஏற்பாட்டைத்தான் செய்வதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, வேறல்ல. தொடர்ந்து ஆண்டுதோறும் இவ்வாறு உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடிப்பதில் இப்படிப்பட்ட பாதிப்புகள் இருக்கின்றன என்று சொன்னால்கூட, அதைப்பற்றி உடனடியாகப் பரிசீலிக்க இருக்கிறோம். இப்போது அணை திறந்து விட்டாகிவிட்டது. எனவே தண்ணீர் வந்ததால் மீன் துள்ளுகின்றது என்று சொன்னால், நாம் அந்தப் பகுதிகளை மீனவர்களுக்காக ஒதுக்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். சங்கத்

தலைவர் தேர்தலை நடத்த விடாது கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கெல்லாம் எதற்காக குத்தகை ஒதுக்க வேண்டும் என்பதுதான் புரியவில்லை.

எனவேதான் நாங்கள் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதோடு, மீனவர்களுடைய நலனிற்கு எல்லாத் திட்டங்களையும் எங்களால் முடிந்த வரையில் எவ்வளவு செயல்படுத்த முடியுமோ அவ்வளவையும் செயல்படுத்தி வருகிறோம். எப்பொழுதும் எந்தச் சட்டமன்ற உறுப்பினரும், எந்தஏரியிலாவது மீன்பிடிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நாங்கள் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியிலே இருக்கிற உண்மையான மீனவர்களுக்கு ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறோம். சங்கம் என்றால் அரசோடு ஒத்துழைக்க வேண்டும். மக்களுக்கு, உண்மையான மீனவர்களுக்கு அந்தக் குத்தகையை ஒதுக்கித் தரவேண்டும். சங்கத்தில் உண்மையான மீனவர்களைச் சேர்க்க வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு எசமானத்தன்மையோடும், வியாபார நோக்கத்தோடும் மட்டுமே இருந்து கொண்டிருக்கிறது. இன்றுகூட பத்திரிகையில் பார்த்தேன்.

சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் இரால் மீன் வியாபாரம் செய்யக்கூடிய மிகப் பெரிய இரால் வியாபாரி ஒருவர் உள் நாட்டு மீனவச் சங்கத்தினுடைய அமைப்பாளர் என்று போடப்பட்டிருக்கிறது. அவருடைய வேலை ஆட்கள் எல்லாம் இன்று உண்ணாவிரதம் இருந்துகொண்டு, உள்நாட்டு மீனவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் கூட சொல்கிறேன். அவர்கள் உள்நாட்டு மீனவச் சங்கத்தினர் அல்ல. பர்வதராஜகுல மீனவச் சங்கம் என்பது இரண்டே இரண்டு இடங்களில்தான் இருக்கின்றன. ஒன்று தஞ்சாவூர், இன்னொன்று மன்னார்குடி. ஆனால் தமிழகத்தில் 250 சங்கங்கள் இருப்பது போலச் சொல்லுகிறார்கள். அது அப்படியே முழுவதும் இங்கே வந்து உண்ணா விரதம் இருப்பது போலவும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நடவடிக்கை மூலமாகப் பாதிக்கப்படுபவர்கள் நிச்சயமாக இடைத்தரகர்கள், பெரிய வசதி படைத்தவர்கள், இதனாலே பயன் பெறுகிறவர்களும்தான். ஆனால் இந்த அரசை அச்சுறுத்துவதன் மூலம் மீனவர்களுக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்புகளை கிடைக்காமல் செய்து விடலாமா என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த அரசு உண்மையான மீனவர்களுக்குப் பயன் விளைவிக்கின்ற எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றும் என்பதைச் சொல்லி, மீனவர்கள் மீன்பிடிக்கும் காலம் ஏப்ரல் மே மாதங்கள், ஆகவே மீனவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் அரசுக்கும் நிதி இழப்பு ஏற்படாமல் உடனடியாக சரியான முடிவு நேரத்தில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீனவப் பிரதிநிதிகள், மீனவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் இந்த விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்



அடுத்து இராமேஸ்வரம் பிரச்னை. இராமேஸ்வரம் பிரச்னையைப்பற்றி பல உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். வெட்டுத் தீர்மானங்களும் கொடுத்திருக்கின்றனர். இப்பிரச்னையைப் பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வரும் சீரிய முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் என்று நினைக்கிறேன். 1974 ஆம் ஆண்டு இந்திய இலங்கை அரசுகளுக்கிடையே பேச்சு வார்த்தை நடத்தியபோது கச்சத்தீவு இலங்கை பகுதிக்குச் சென்றது. கச்சத் தீவு பகுதியில் அதிகமான மீன்கள் கிடைக்கும் வசதி இருப்பதால், தெரியாமல் சில சமயங்களில் மீனவர்கள் அங்கே செல்ல நேரிடுகிறது. 1983 வரை இராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்குப் பெரிய அளவில் இடையூறு எதுவும் ஏற்படவில்லை. இலங்கையில் தமிழர் பிரச்னை ஏற்பட்டதற்குப் பிறகு இந்திய மீனவர்களைக் கண்டிப்பதற்காக அவர்களுடைய உடைமைகளையும், பிடித்த மீன்களையும் இலங்கை கடற்படைப் பிரிவினர் பறிமுதல் செய்து சென்றனர். இச்சம்பவங்களைப் பற்றி அறிந்தபோதெல்லாம் தமிழக அரசு உடனடியாக இலங்கை அரசோடு தொடர்பு கொண்டு, மீனவர்களை அவர்களுடைய உடைமைகளோடு விடுவிக்க நடவடிக்கை எடுத்து வந்தது.

மீனவர்களை நம் எல்லையைத் தாண்டிச் செல்லக்கூடாது என்று தமிழக அரசு வேண்டுகோள் விடுத்தது. நம் மீனவர்களும் இந்த அறிவிப்புக்கு பிறகு அப்பகுதிக்குச் செல்வது தவிர்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தியப் பிரதமரின் தனிப்பிரதிநிதி இலங்கை சென்று இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா அவர்களுடன் பேசி அவதிக்குள்ளான மீனவர்களை மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதை இலங்கை அரசும் அப்போது ஏற்றுக்கொண்டது.

இருந்தாலும் 1983-84 ஆம் ஆண்டிலே இலங்கை கடற்படை மீனவர்களின் படகுகளைக் கைப்பற்றி அவர்களையும் கைது செய்தனர். 1984 ஆம் ஆண்டு அக்டோபரில் கச்சத் தீவு பகுதியில் 17 படகுகளையும், 94 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். எல்லையைக் கடந்ததாகக் கூறி காட்டு மிராண்டித்தனமாக நமது மீனவர்களைத் தாக்கத் தொடங்கினர். இலங்கை கடற்படையின் குண்டடி பட்டு நமது மீனவர்கள் சிலர் மாண்டனர். இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாக இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நேரிடைக் கடிதம் எழுதப்பட்டது. இது தவிர ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 11 ஆம் நாளில் நமது எல்லைக்குள் புகுந்து தாக்கிய இலங்கை கடற்படையினர் 6 பேர்களை இந்தியப் கடற்படையின் ரோந்துப் படையினர் கைது செய்தனர். பின்னர் பேச்சு வார்த்தை நடத்தி அக்டோபர் 1984-ல் கைது செய்யப்பட்ட நமது மீனவர்

களை விடுவிப்பதன்பேரில் இலங்கை கடற்படையினரை
இந்திய அரசு விடுவித்தது. இலங்கை கடற்படையினரின்
தாக்குதலால் உயிர் இழந்த 5 மீனவர்களின் குடும்பங்களுக்கு
முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா 2 ஆயிரம் ரூபாயும்,
இந்தியப்பிரதமர் நிவாரண நிதியிலிருந்து தலா 2,500 ரூபாயும்
இலவசமாக வழங்கப்பட்டன.

[இரவு 7-50]

பலத்த காயமுற்றவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியி
லிருந்து தலா 500 ரூபாயும், இலவசமாக உணவுப் பொருள்களும்
வழங்கப்பட்டன. மேலும் இதுபோன்ற சம்பவங்களில்
உயிரிழக்கும் மீனவர் குடும்பத்தினருக்கு உடனுக்குடன்
நிவாரணம் கிடைக்கச் செய்யும் வகையில் தொடர் நிதியாக 50
ஆயிரம் ரூபாய் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவ
ருக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு உயிர் கூட இழக்க நாம் சம்மதிக்க
வில்லை. எதிர்பாராமல் இப்படி யாராவது பாதிக்கப்பட்டால்
உடனடியாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், உதவி
கிடைப்பதில் நீண்ட நாள் ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்
தான் அந்தத் தொடர் நிதி ஏற்படுத்தப்பட்டது என்பதை
மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்
கிறேன். ஏனென்றால் அவர்கள் தான் இதுபற்றிக் குறிப்பிட்
டார்கள். அந்த மீனவர்கள் சாகவேண்டும், அவர்களுக்கு நீங்கள்
கொடுக்க வேண்டும் என்பதில் கருத்தாக இருக்கிறீர்கள் என்று
தெரிவித்தார்கள். அதனால் தான் இதனைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து இராமேஸ்வரம் மீனவர்களுக்கு சேதுபாவாசத்திரம்,
மல்லிப்பட்டினம், கோட்டைப்பட்டினம், ஜெகதாபட்டினம்
ஆகிய பகுதிகளில் உடனடியாக நிபந்தனையின்றி மீன்பிடிப்பத
தற்குத் தேவையான உதவி, பாதுகாப்பு தரவேண்டுமென்று
தஞ்சை, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்
கொள்ளப்பட்டார்கள். இது சம்பந்தமாக அனைத்து உதவி
களும் அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்வதற்கு மீனளத்
துறை அதிகாரிகளுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடிக்கும் துறை
முகம் ஒன்றை அமைக்க தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக்
கொண்டுள்ளது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் எடுத்துக்
கொண்ட பெருமுயற்சியைத் தொடர்ந்து இந்தியக் கப்பல் படை
சார்பில் மூன்று கப்பல்கள் மாறிமாறி பாதுகாப்புப் பணியில்
ஈடுபட்டுள்ளது. அதுமட்டுமல்ல, கப்பல் படை விமானம் ஒன்று
ரோந்துப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. ஆகவே மீனவர்களுடைய
அனைத்துப் பிரச்னைகளையும் உடனடியாகத் தீர்க்க
அரசு தயார்ாக இருக்கிறது. இதுவரையிலும் மீனவர் பிரச்னை
யில் அக்கறை கொண்டு யாரும் எந்த அரசும் இதுபோன்று நட
வடிக்கைகளை எடுத்தது கிடையாது. மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் நம்முடைய மரியாதைக்குரிய பாரதப்



பிரதமர் அவர்களை அடிக்கடி வேண்டிக் கேட்டுக்கொண்டதன்
அடிப்படையில் தான் இந்த மூன்று ரோந்து கப்பல்கள் நம்முடைய
கடலோரப் பகுதியைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன என்பதை
நீங்கள் உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்
களுக்கு மிக அதிகமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில்தான் எடுக்கப்பட்டிருக்
கின்றன என்பதை நான்தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதோடு, இன்னும் சில அறிவிப்புகளை இந்த அவைக்கு
அளிக்க விரும்புகிறேன். இறால் மற்றும் மீன்குஞ்சு உற்பத்திக்கு
இரண்டு கோடியே 39 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் செலவில்
புதிய திட்டங்களை இப்போது நான் அறிவிக்கிறேன்.

தமிழ் நாட்டில் தற்போது மீன்வளர்ப்போருக்கு 35 கோடி
மீன்குஞ்சுகள் தேவையென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.
செயற்கை முறையில் 17 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்
பட்டாலும், இதிலே விரல் அளவிற்கு வளரும் போது 3 கோடி
மீன்குஞ்சுகள்தான் தேறுகின்றன. இதோடு ஏற்கனவே சேகரித்த
2 கோடி மீன் குஞ்சுகளைச் சேர்த்தால் மொத்தமாக 5 கோடி
மீன்குஞ்சுகள்தான் நம்மால் பெறமுடிகிறது. ஆகவே இதனை
அதிகப்படுத்துவதற்காக 2 கோடியே 39 லட்சத்து 72 ஆயிரம்
செலவில் புதிய திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன.

தேசீய மீன்குஞ்சு உற்பத்தித் திட்டத்தின் கீழ் பவானிசாகரில்
10 எக்டேர் பரப்பில் ரூ. 90 லட்சம் செலவிலும், அமராவதியில்
10 எக்டேர் பரப்பில் ரூ. 90 இலட்சம் செலவிலும் மீன்குஞ்சு
உற்பத்திப் பண்ணைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

வறட்சிப் பணித் திட்டத்தின் கீழ் பிளவுக் கல்லில் 13.18
இலட்சம் ரூபாய் செலவில் மீன் பண்ணையும், ஆரியங்குண்டில்
ரூ. 12.59 லட்சம் செலவில் இறால் பண்ணையும் அமைக்கப்பட
விருக்கின்றன. மத்திய அரசினுடைய உவர் நீர் மீன் பண்ணை
மேம்பாடு திட்டத்தின் கீழ் தொண்டியங் காட்டில் 29 இலட்சம்
ரூபாய் செலவில் உவர் நீர் இறால் பண்ணை அமைக்கப்பட
விருக்கிறது.

சாந்தோம் உவர் நீர்ப்பண்ணையை மேம்பாடு செய்வதற்காக
4.95 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது
கடலோரங்களில் 15 வழிகாட்டி விளக்குகள் மீனவர்களுக்கு வழி
காட்டிக் கொண்டிருக்கின்றன. 25 வழிகாட்டி விளக்குகள்
முந்தைய ஆண்டில் அனுமதியளிக்கப்பட்டு கட்டப்பட்டு வரு
கின்றன. இந்த ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் பூம்புகார்,
கோவில்பத்து, வெள்ளப்பள்ளம், அதேபோல தென்னாற்காடு
மாவட்டத்தில் சாமியார்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டத்
தில் காரங்காடு, வாலிநோக்கம், புதுக்கோட்டை மாவட்டத்தில்

முத்துக்குடா ஆகிய ஊர்களில் சுமார் 2.31 இலட்சம் ரூபாய் செலவில் ஏழு வழிகாட்டி விளக்குகள் கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வழிகாட்டி விளக்கு அமைக்க 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 33 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகும்.

மீன்பிடி வலை தயாரிப்பு,- ஜப்பானிலிருந்து கிடைக்கப்பெற்ற வலை தயாரிப்பு இயந்திரங்கள், தற்போது பல வகையான வலைகளை கடல் மீனவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். நைலான் வலை, பாலிதீன் வலை போன்று ஒரு இலட்சத்து 25 ஆயிரம் வலைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். மீன் பிடிப்பதிலே ஈடுபடும் 2,600 படகுகளுக்கு எந்த்ரடன் பாலிதீன் வலைகளும், பாலிதீன் கோட்டட் நைலான் வலைகளும் தேவைப் படுகின்றன. அதிகமான பரிமாணமுள்ள வலைகள் குடிசைத் தொழிலாகத் தயாரிக்கப் படுகின்றன. தற்போது குறைந்த பரிமாணமுள்ளவலைகளைத்தான் மீனவர்கள் அதிகமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த வலைகளைச் செய்யும் பிரிவுகள் தமிழகத்திலும், பாண்டிச்சேரியிலும் பதிவாகி இருக்கின்றன. அவைகள் மூலமாக ஆண்டுக்கு 150 டன் வலைகள் தயாரிக்கப்பட்டு, அவை முழுவதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இருப்பினும், இவைகளால் இன்றைய தேவைகளைச் சமாளிக்க முடியாததால் அரசுக்குச் சொந்தமான மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 70 இலட்சம் செலவில் ஒரு மீன் பிடி வலை செய்யும் பிரிவினை அமைக்க 27–9–1984 இல் உத்தரவிடப்பட்டு உள்ளது. அதிலே தமிழக அரசின் பங்கு மூலதனமாக 20 இலட்சமும், நாபார்ட் மூலமாக கடனாக 45 இலட்சமும் பெறப்படும். இதற்குத் தேவையான இயந்திரங்களை கிராண்ட்-இன்-எய்ட்-ஆக 1984–85 இல் மத்திய அரசின் மூலமாக வழங்க ஜப்பான் அரசு முன் வந்தது. அதன் அடிப்படையில் ரூபாய் 30 இலட்சம் பெறுமானமுள்ள இயந்திரங்களை மீன் வளர்ச்சிக் கழகம் ஜப்பானிலிருந்து தருவித்து உள்ளது. அந்த இயந்திரங்களுக்கு சுங்கத் தீர்வையிலிருந்து மத்திய அரசு விலக்கு அளித்துள்ளது. இதற்குத் தொடர்புடைய வேறு சில இயந்திரங்களை உள் நாட்டிலேயே தயாரித்துக் கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. அந்த இயந்திரங்கள் நிறுவப்படும் இடம் ராயபுரம் மா. சிங்காரவேலர் படகு கட்டும் தளம். உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 21 இலட்சம் ரூபாய். வேலை வாய்ப்பு 115 பேர்கள். மீனவர்களுக்கு தரமான வலைகள் குறைந்த விலையில் கிடைக்கும். இந்த வலைகள் நீடித்து உழைப்பதோடு, அடிக்கடி புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதனால் மீனவர்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். வரும் செப்டம்பர் மாதம் இறுதிக்குள் அந்த இயந்திரங்கள் உற்பத்தியைத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



கட்டுமரங்கள் மற்றும் நாட்டுப் படகுகளுக்குப் பதிலாக படிப்படியாக நவீன படகுகளை விநியோகம் செய்ய வேண்டும் என்ற முறையில் அரசு சிறப்பாகக் கவனம் செலுத்தி, டென்மார்க் மற்றும் பெர்ரோ தீவு நாடுகளின் உதவியுடன் ஒரு திட்டம் தயாரித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 31 சதவீதமும், டென்மார்க் நாட்டைச் சார்ந்த ஐ.எஸ்.கியு. நிறுவனம் 20 சதவீதமும், பெர்ரோ தீவைச்சேர்ந்த மரைன் பிளாக் நிறுவனம் 20 சதவீதமும், ஜார்ஜ் மேஜோ நிறுவனம் 19 சதவீதமும், அஸ்த்வா மரைன் நிறுவனம் 10 சதவீதமும் என்ற வீதத்தில் பங்கு மூலதனம் செலுத்தி, கூட்டு நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க தமிழக அரசு பரிந்துரை செய்ததை சமீபத்தில் மத்திய அரசு ஏற்று, அதைப் பதிவு செய்ய அனுமதி அளித்துள்ளது. இந்த நிறுவனம் ஆகஸ்ட் திங்களில் செயல்படத் துவங்கும். இந்த நிறுவனம், 10, 20, 22 அடி உயரமுள்ள வெவ்வேறு விதமான நவீன கரையேற்றும் கண்ணாடி இழையால் ஆன படகுகளைத் தயாரிக்க இருக்கிறது. இதன் மதிப்பு சுமார் 80 ஆயிரம் ரூபாய் ஆகும். முதல் ஆண்டில் சுமார் 100 முதல் 200 படகுகள் வரையிலும், வரும் 5 ஆண்டுகளில் 600 முதல் 700 படகுகள் வரையிலும் தயாரிக்கும் வாய்ப்பு உள்ளது. இந்தப் படகு கட்டும் நிறுவனம் சென்னை ராயபுரத்தில் உள்ள மா. சிங்காரவேலர் படகு கட்டும் நிலையத்தில் நிறுவப்பட உள்ளது.

பிற்பட்ட சமுதாயத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஜாதி ஒதுக்கீடு பட்டியல் தயாரித்து, 31 சதவீதத்தை 50 சதவீதமாக ஒதுக்கியதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். இப்போது இந்த இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழுவைப் பற்றி இன்றைக்கு பல பேர்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அதைப் பற்றி நான் இந்த அரசின் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு இரண்டாவது பிற்பட்டோர் வகுப்பினர் நலக் குழுவின் தலைவர் 5 தொகுதிகள் அடங்கிய அறிக்கையையும், தமது பரிந்துரைகள் கொண்ட ஒரு தொகுதியையும் 28–2–1985 அன்று அரசிடம் அளித்துள்ளார். ஆங்கிலத்தில் உள்ள அவருடைய அறிக்கை 5 தொகுதிகளிலும் மொத்தம் 1,582 பக்கங்கள் உள்ளன. தமிழ் அறிக்கையில் 1,802 பக்கங்கள் உள்ளன. அவருடைய பரிந்துரைகள் மட்டும் ஆங்கிலத்தில் 354 பக்கங்கள் கொண்டவை. பெரும்பாலான உறுப்பினர்கள் தனியாகப் பரிந்துரைகளை அரசுக்கு அளித்து உள்ளார்கள்.

உச்ச நீதிமன்றம் மேற்கண்ட இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரைகளை ஆய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க 31–5–1985 வரையிலும்தான் அவகாசம் கொடுத்து இருந்தது. 31–5–1985-க்குள் இந்தப் பரிந்துரைகள் அனைத்தையும் பரிசீலித்து முடிவு எடுக்க இயலாததால் உச்ச நீதிமன்றத்திடம் உரிமையியல் பல்வகை மனுக்கள் மூலமாக 31–5–1987

வரை காலத்தை நீட்டித்துத் தருமாறும், இப்போதுள்ள இட ஒதுக்கீட்டு ஆணைகளை 31–5–1987 வரை நீட்டிக்க வேண்டப் பட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம் தன்னுடைய 8–5–1985 ஆம் நாளிட்ட ஆணையில் இட ஒதுக்கீட்டின் செயல் வரம்பை 1985 ஜூலைத் திங்கள் 31 ஆம் நாள் வரையில் மட்டும் நீட்டித்தும் அதற்குள் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றம், அதே நாளில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த வழக்கில் இப்பொருள் பற்றிக் கொடுத்த தீர்ப்பை ஆய்ந்து 1985 ஜூலைத் திங்கள் 31 ஆம் தேதிக்குள் முடிவு எடுக்க வேண்டும் என்று ஆணையிட்டது. கர்நாடக அரசின் வழக்கின் மீது வழங்கப்பட்ட தீர்ப்பின் நகல் பெறப்பட்டு இந்த அரசின் ஆய்வில் உள்ளது. 31–7–1985-க்குள் உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் மீதும், இரண்டாவது பிற் பட்டோர் வகுப்பு நலக் குழுவின் பரிந்துரைகள் மீதும், முடிவு எடுப்பது இயலாததாகையால் 31–5–1987 வரையில் அவகாசம் கேட்டோம். 31–5–1987 வரை சம்பந்தப்பட்ட இட ஒதுக்கீடு ஆணைகளின் செயல் வரம்பை நீட்டிக்கவும், மீண்டும் உரிமையியல் பல்வகை மனு ஒன்று உச்ச நீதிமன்றத்தில் 8–7–1985 அன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

(இரவு 8–00)

இன்னும் இது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிலைத. பிற்பட்ட சமுதாயத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லால் வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை உறுதி யுடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பட்டோர் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் 1985–86 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள்: ரூபாய் 8 இலட்சம் செலவில் 2 விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல் 13.33 இலட்ச ரூபாய் செலவில் 20 விடுதிகள் தொடங்குதல், 30 ஆயிரம் ரூபாய் செலவில் சென்னையில் உள்ள தனி பயிற்சி நிலைய நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குதல். மாநில அளவில் 10-வது வகுப்பில் தேர்வில் அதிகமான மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை உயர்த்திக் கொடுப்பதற்காக 9 ஆயிரம் ரூபாய் வழங்குதல், ரூபாய் 54 ஆயிரம் செலவில் 36 கள்ளர் நடுநிலைப் பள்ளிகளுக்குக்கல்வி உபகரணங்கள் வழங்கு தல், ரூபாய் 22 ஆயிரம் செலவில் 36 கள்ளர் நடுநிலைப் பள்ளி களுக்கு விளையாட்டுக் கருவிகள் வழங்குதல், ரூபாய் 86 ஆயிரம் செலவில் கள்ளர் பள்ளிகளுக்கு மரச் சாமான்கள் வழங்குதல். தமிழ்நாட்டில் உள்ள 241 கல்லூரிகளில் 1 இலட்சத்து 97 ஆயி ரத்து 952 மாணவர்களும், மாணவியர்களும், 38,488 பள்ளிகளில் 1 கோடியே 5 இலட்சத்து 46 ஆயிரம் மாணவ மாணவியர்களும் கல்வி பயின்று வருகிறார்கள். இந்தக் கல்லூரி மற்றும் பள்ளிகளில் தலா ஒரு மாணவர் இல்லம் என்றால் கூட 38,729 மாணவ மாணவியர் இல்லங்கள் வேண்டும். அதற்கான கட்டிடங்கள் கட்ட வேண்டும். இதற்குப் பல கோடி ரூபாய் தேவைப்படும்.



பிற்பட்ட வகுப்பைச்
தமிழ்நாட்டில் 70 இலட்சம் பேர்
சேர்ந்த மாணவ மாணவியர்கள் பள்ளிகளில், கல்லூரிகளில்
படிக்கிறார்கள். பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 5 ஆயிரத்
திற்கு மேற்படாத மாணவ மாணவியர்களுக்கு விடுதி வசதி
செய்ய வேண்டுமென்பது மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர்
அவர்களுடைய கொள்கை ஆகும். இந்தக் கொள்கையின்படி
இந்தத் துறையில் 523 மாணவர் இல்லங்கள் நடத்தப்
பட்டு வருகின்றன. இதன் மூலம் 31 ஆயிரம் மாணவர்கள்
பயன் அடைகிறார்கள். நடப்பு ஆண்டில் மேலும் 20 விடுதிகள்
தொடங்கப்பட உள்ளன. மொத்தம் உள்ள 523 விடுதிகளில்
தற்போது 49 விடுதிகள் அரசு கட்டிடங்களில் இருக்கின்றன.
மற்றவை தனியார் கட்டிடங்களில் இருந்து வருகின்றன.
இதற்கு ஆண்டு தோறும் 20 இலட்ச ரூபாய் வாடகையாக
கொடுக்கப்படுகிறது. பெரும்பாலான தனியார் கட்டிடங்களில்
கழிப்பிட வசதி, தண்ணீர் வசதி, காற்றோட்ட வசதி போன்ற
அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இருக்கிறது. கட்டிட
உரிமையாளர்கள் தேவையான வசதிகளை செய்து கொடுக்க
மறுப்பதுடன் கட்டிடங்களை காலி செய்யும்படி நீதி மன்றங்
களுக்குச் செல்கின்றனர். விடுதிகளுக்காக தனியார் யாரும் கட்
டிடங்களை வாடகைக்குத் தர முன் வருவது இல்லை. அரசின்
நிதிநிலை காரணமாக உடனடியாக அனைத்து விடுதிகளுக்கும்
சொந்தக் கட்டிடம் கட்டுவது சாத்தியம் இல்லை.

50 மாணவர்
இதுவரை தாட்கோவின் மதிப்பீட்டின்படி
களுக்கு அடிப்படை வசதிகள் கொண்ட விடுதிக் கட்டிடம் ஒன்று
கட்ட ரூபாய் 8 இலட்சம் முதல் ரூபாய் 10 இலட்சம் வரை செல
விடப்படுகிறது. எனவே குறைந்தபட்சம் அடிப்படை வசதி
களைக் கொண்ட புதிய விடுதி ஒன்று கட்ட பொதுப் பணித்
துறையைக்கலந்து ஆலோசித்து புதிய வடிவு அமைப்பு தயாரிக்கப்
பட்டது. இதன்படி 50 மாணவர்களுக்கு பள்ளி விடுதி கட்டிடம்
கட்ட ரூபாய் 4 இலட்சம் மட்டுமே செலவாகும். இந்த மதிப்
பீட்டின்படி நடப்பு ஆண்டில் 2 மாணவர் விடுதிக் கட்டிடங்கள்
கட்டுவதற்கு மட்டுமே ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கப் பட்டு இருக்
கிறது. இதே விகிதத்தில் போனால் தற்போது மொத்தம்
உள்ள 474 விடுதிகளுக்கு மட்டும் சொந்தக் கட்டிடம் கட்டு
வதற்கு சுமார் 237 ஆண்டுகள் ஆகும். எனவேதான் ரூபாய்
4 இலட்சம் மதிப்பீட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேசீய
கிராமப்புற வேலை வாய்ப்புத் (என்.ஆர்.ஈ.பி.) திட்டத்தின்கீழ்
5 விடுதிக்கட்டிடங்கள் வீதம் ஆண்டுக்கு ரூ. 3.60 கோடி செலவில
தொண்ணூறு விடுதிகள் கட்டுவதற்கான ஒரு திட்டம் இந்த
அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது.

அடுத்து, நுழைவுத் தேர்வு. மருத்துவம், பொறியியல், விவ
சாயம், கால்நடை மருத்துவம் போன்றவைகள் படிப்பதற்குச்
சென்ற ஆண்டுக்கு முன்பு வரை நேர்முகத் தேர்வு மூலம்
மாணவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு வந்தனர். நேர்முகத் தேர்வில்

சில முறைகேடுகள் நடைபெறுகிறது என்று அவ்வப்போது செய்திகள் வந்தன. உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு கல்வி, வேலை வாய்ப்புக்களில் பிற்பட்ட மக்களுக்கு நியாயமான பிரதி நிதித்துவம் கிடைக்க வேண்டும் என்பதற்காக 50 சதவீதம் இட ஒதுக்கீடு கொண்டு வந்தார்கள்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான 50 சதவீத ஒதுக்கீட்டிலும் இவ்வகுப்பைச் சேர்ந்த வசதியும், வாய்ப்பும் உள்ள ஒரு சிலர் தொடர்ந்து இச்சலுகையை அனுபவித்து வந்தனர் என்ற செய்தி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. நேர்முகத் தேர்வில் செய்யப்படும் மதிப்பீட்டிலும் ஒருவருக்கொருவர் வித்தியாசமான நிலை இருப்பதாகவும் கூறப்பட்டது.

அதோடு எழுத்து தேர்வுகளே எழுதிப் பழக்கப்பட்ட கிராமப் புற மாணவர்கள் திடீரென்று நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக் கப்படும்போது, கூச்சம் காரணமாக கேள்விகளுக்குச் சரியான முறையில் பதில் சொல்ல முடியவில்லை.

இக்குறைகளைக் களைவதற்காக கொண்டு வரப்பட்டதுதான் நுழைவுத் தேர்வு முறை. சென்ற ஆண்டு முதல் முறையாக இம் முறை அமுலுக்கு வந்தபோது, அரசின் எந்த நல்ல திட்டங்களை யும் ஆதரிப்பதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே மாற்றுக் கட்சியினர் இம்முறையை பலமாக எதிர்த்தார்கள்.

தேர்வு நடத்துகிறவர்கள் பாரபட்சமாக இருக்கிறார்கள் என்று குறை கூறினார்கள். கம்ப்யூட்டர்கள் மூலம் மதிப்பெண்கள் தரப்படும் முறையினை எதிர்த்து அறிக்கை விட்டார்கள். பிற் படுத்தப்பட்டவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று பேசினார்கள்.

ஆனால் நுழைவுத் தேர்வு முடிவுகள் வெளி வந்தவுடன் நடந்தது என்ன ? பொதுப் போட்டிக்கான 32 சதவிகிதத்திலும் பிற்படுத்தப் பட்டோர் 19 சதவிகித இடங்கள் பெற்றனர். மொத்தத்தில் 69 சதவிகித இடங்களே பிற்பட்டோருக்குக்கிடைத் திருக்கின்றன. இரவும், பகலும் கண் விழித்து மிகுந்த ஆர்வத் தோடு படித்த திறமை உள்ள மாணவர்கள், பெருநகரைச் சேர்ந் தவர்கள், கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வேறு பாடின்றி, எந்தவித லஞ்சமும் சிபாரிசும் இல்லாமல் பெருவாரி யாக வெற்றி பெற்றனர்.

தகுதிக்கும், திறமைக்கும் மதிப்பே இல்லாமல் போய் விடுமோ என்று நினைத்து பதறிய பெற்றோர்கள் நெஞ்சம் மகிழ்ச்சியில் நிறைந்தன. மாணவர்கள் முழு உற்சாகத்துடன் தீவிரமாகப் படிக்க ஆரம்பித்தனர். தமிழகத்தில் கல்வி முறையில் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவுக்கும் காரணமாக இருப் பவர் சரித்திரம் படைக்கும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்தான்.



புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில்தான் பிற் படுத்தப்பட்டவர்கள் கல்வி, சமூக, பொருளாதார வாழ்வில் முன் னேற்றம் காண ஆரம்பித்தார்கள். இந்த வேகத்தை அதிகமாக்கு வதற்காக பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் போட்டி தேர்வுகள் எழுத அரசு பயிற்சிகள் அளித்து வருகிறது

நுழைவுத் தேர்வு எழுதுவதற்கும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் சீர்மரபின மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இந்த ஆண்டு தொடங்கப்படும் புதிய மாணவர்— மாணவியர் விடுதிகள்: புதுக்கோட்டை மாவட்டம் வல்லத்தராகோட்டை— ஆண்; திருச்சிராப்பள்ளி— ஆண்டிமடம்- ஆண்; டி சுக்கான்பட்டி— ஆண்; கீழப் பெரம்பலூர்— ஆண்; தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை— ஆண்; இடையூர்— ஆண்; தென்னாற்காடு மாவட்டம்—பெண்ணலூர்— ஆண்; சிதம்பரம் டவுன்— ஆண்; மதுரை மயிலாடும்பாறை— ஆண்; எரியோடு— ஆண்; டி. கல்லுப்பட்டி— பெண்; சேலம்— ஆத்தூர்— ஆண்; பெரியார் மாவட்டம், மலையபாளையம்— ஆண்; திருநெல்வேலி— காயாமொழி— ஆண்; காமராஜர் மா வட்டம்— பந்தல்குடி— ஆண்; முத்துராமலிங்கம் மாவட்டம்— குன்றக்குடி— ஆண்.

சீர்மரபினர் மாணவர் இல்லங்கள் : திருச்சிராப்பள்ளி— உப்பிலியாபுரம்— ஆண்; புதுக்கோட்டை— கீரமங்கலம்— ஆண்; புதுக்கோட்டை கல்லூரி மாணவர் விடுதி தஞ்சாவூர்— புனவாசல்— ஆண்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம் பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்பட்ட வகுப்பினருக்கு 100 கோடி ரூபாய் அளவில் பல்வேறு புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு பரி சீலனையில் உள்ளது. இதற்கு அரசின் மூலதனமாக 20 கோடியும், வங்கிக் கடனாக 80 கோடியும் பெறப்படும். முதல் கட்டமாக 320 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் 150 பால் கூட்டுறவுச் சங்கங்களும் எல்லா மாவட்டங்களிலும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதன்மூலம் சுமார் 6 இலட்சத்து 25 ஆயிரம் பேர் பயன் பெறுவார்கள். 1 இலட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள் வாழ்வு பெறும். இக்கழகத்தின் பணிகளை விரைவுபடுத்தும் பொருட்டு, முதற்கட்டமாக 6 மண்டல அலுவலகங்கள் தொடங்கப்படும். மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் விரைவில் தொடங்கப்படும். அது மதுரை, ராமநாதபுரம், காமராஜர், முத்துராமலிங்கம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய தாக இருக்கும்.

நாளைய தமிழ்ச் சமுதாயம் வலிவுடனும், வளமுடனும் விளங்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு நடக்கும் எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு தமிழ் மகனும் கல்வி

பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் இப்போது இரண்டு வயது
முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க
வேண்டும் என்ற உலகம் புகழும் உன்னதத் திட்டத்தை செயல்
படுத்தி வருகிறார்கள். சுமார் 210 கோடி செலவில் அளிக்கப்
படும் சத்துணவினால், 80 இலட்சம் குழந்தைகளும், சுமார் 2
இலட்சம் முதியோர்களும், சுமார் 45 ஆயிரம் விதவைத் தாய்
மார்களும், 30 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்களும் சத்துணவு
பெற்று இந்த அரசை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

(இரவு 8–10)

ஏழை மாணவர்களுக்கு உணவு அளித்தால் மட்டும் போதாது,
புத்தகம் வாங்கக் கூட பணம் இன்றித் தவிக்கும் ஏழைகளின்
குழந்தைகள் எப்படியும் கல்வி கற்றே ஆகவேண்டும் என்ற
தாய்ப்பாசத்தோடு அவர்களுக்கு 11 கோடி ரூபாய் செலவில்
இலவச பாடப்புத்தகங்கள் வழங்கியதோடு, வசதி படைத்தவர்
களின் பிள்ளைகள் வண்ண வண்ண ஆடைகளை உடுத்திவர
இல்லாதவர் வீட்டுப் பிள்ளைகள் அதைப் பார்த்து ஏங்கி
கல்வியில் கவனம் செலுத்தாமல் போய்விடக் கூடாது என்று கருதி,
பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-லிருந்து
14 கோடி ரூபாய் செலவில் சீருடைகளும் வழங்க இருக்கும்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உலக வரலாறு காணாத
ஒப்பற்ற கொடை வள்ளலாகத் திகழ்கிறார்கள்.

பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவரின் தலைமை
யில் இயங்கும் இந்த அரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
மூலம் நடத்தப்படும் சீர்மரபினர் பள்ளிகளில் பயிலும் 40
ஆயிரத்து 200 மாணவர்களுக்கு சத்துணவு வழங்க 26 இலட்சத்து
63 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதுபோல 65 ஆயிரம்
மாணவ மாணவியருக்கு சீருடைகள் வழங்க ரூபாய் 21 இலட்சத்து
5 ஆயிரமும், இலவச பாடப் புத்தகங்கள், எழுது பலகைகள்
46 ஆயிரம் மாணவர்களுக்கு வழங்க ரூபாய் 6 இலட்சத்து 87
ஆயிரமும் ஒதுக்கியுள்ளது.

எனவே, தமிழ் மக்கள் பெற்ற குழந்தைகள் அனைத்தையும்
தத்து எடுத்துக் கொண்டதைப் போல எதிர் காலத்தில் எல்
லோரும் கல்வி பெற்றவர்கள் என்ற நிலைமை ஏற்படும் வகையில்
செயல்படும் டாக்டர் புரட்சித் தலைவரின் இதயம் மகிழ,
எண்ணங்கள் வெற்றி பெற குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்
குறிப்பாகத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத்
தவறாமல் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். இந்த நல்ல நிலையை, புரட்சித் தலைவரின் பொற்கால
அரசைப் பயன்படுத்திக் கொண்டு பிற்படுத்தப்பட்ட சமுதாய
மக்கள் அனைவரும், தங்கள் குழந்தைகளை நன்கு கல்வி பெறச்
செய்து பிற்படுத்தப்பட்ட நிலையிலிருந்து மீண்டு முற்பட்ட
நிலையை நோக்கி முன்னேற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்
கொள்கிறேன்.





இத்துறைக்கென தனி அமைச்சரை நியமித்து பிற்பட்டோர்
பின்தங்கியோர் என்பதை 'பிற்படுத்தப்பட்டோர்' என்றும்,
குற்ற மரபினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட இனம் என்பதை
அழகு தமிழில் சீர்மரபினர் என்றும் மாற்றி பிற்படுத்தப்பட்
டோருக்கு 50 சதவீதமாக ஒதுக்கீட்டை உயர்த்தி, சரித்திர
சாதனை புரிந்துள்ள இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர்
அவர்களின் தலைமையில் இயங்கும் அண்ணாவின் அரசு
தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு உறுதியுடன் செயல்
படும் எனக் கூறி இம்மானியக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்கு
மாறு பேரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது;
இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 21—மீனளம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்
கீழ் ரூ. 5,24,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்
பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்
பெற்றது.

**கோரிக்கை எண் 32—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர்
முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,54,12,000-க்கு
மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்
பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய
அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (12—7—1985) காலை
9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8–13 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

255. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 28—3—1985 ஆம் நாளிட்ட 250 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

256. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 22—4—1985 ஆம் நாளிட்ட 427 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

257. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 22—5—1985 ஆம் நாளிட்ட 538 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

258. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 22-5-1985 ஆம் நாளிட்ட 539 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

259. தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர்-வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

260. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

168. கோரிக்கை எண் 21—மீனளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

169. கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு I.

*(142ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

தமிழ் நாட்டின் மீன் வளம் மிகச் சிறப்பு வாய்ந்ததும் பல்வகைப்பட்டதுமாகும். புரதச் சத்து நிறைந்த மீன் சாதாரண மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க வழி வகுப்பதும், அதே சமயம் அந்த மீன்களைப் பிடித்துக் கொண்டு வரும் மீனவர்களுக்கும் போதிய வருமானம் கிடைக்கச் செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு மீன்வளத் துறை செயல்பட்டு வருகின்றது. அதற்காக மீனள ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி இவற்றை அடிப்படையாகக் கொண்டு, மாநிலத்தின் கடல், உள்நாடு மற்றும் உவர் நீர் மீனளத்தை அபிவிருத்தி செய்ய மீன் வளத்துறை பெரு முயற்சி செய்து வருகின்றது. சுமார் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள நமது கடற்கரையோரப் பகுதியும் அதனைச் சார்ந்த கோரமண்டல கடற் பகுதி, பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா ஆகியவற்றை உள்ளடக்கிய பெரும் கடற் பகுதியும், அத்துடன் நன்னீர் மற்றும் உவர் நீர் நிலைகள் கொண்ட கணிசமான அளவில் அமைந்துள்ள உள்நாட்டு நீர் நிலைகளும் தமிழ் நாட்டில் கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய நல்ல வாய்ப்பளிக்கின்றன. தமிழ்நாடு கடல் மீன் பிடிப்பில் மூன்றாவது இடத்தையும் உள்நாட்டு மீன் வளத்தில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. நமது நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 15 விழுக்காடு நமது மாநிலத்தின் பங்காகும். கடல் மீன் பிடிப்பு எனத் தனியாக எடுத்துக் கொண்டால் அது 19 விழுக்காடாகவும், உள் நாட்டு மீன் உற்பத்தி 18 விழுக்காடாகவும் உள்ளன.

1.1. மீனளம் வளர்ச்சி பெற்று வருகின்ற ஒரு தொழிலாகும். அது அநேக மக்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கின்றது. கடல் மீனவ மக்கள் தொகை சுமார் 4 இலட்சங்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் சுமார் ஒரு இலட்சம் மீனவர் மீன் பிடித் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. உள் நாட்டு மீன் வளத் தொழிலில் சுமார் 60,000 பேர் ஈடுபட்டுள்ளனர். மாநில மீன் வளத் துறை மீனளத்தை அபிவிருத்தி செய்து வருவதுடன் மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மும்முரமாக ஈடுபட்டு நேரடியாகவும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் உதவி செய்து வருகின்றது.

2. மீனள வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும் கீழ்க்கண்ட முக்கியமான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன:—

2.1. சிறு விவசாயிகளுக்கு அளிக்கப்படுவது போன்று சிறு மீனவர்களுக்கும் அடையாள அட்டை வழங்குவது. இம் முறையால் கடன், ஊக்கத் தொகை போன்றவை அளிக்கும்போது மீனவர்களை அடையாளம் கண்டு கொள்ள உதவியாக இருக்கும்.

2.2. மீன் குஞ்சு உற்பத்தியில் ஒவ்வொரு மாவட்டமும் தன்னிறைவு பெறச் செய்வது முதற் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சில குளங்கள் மீன் குஞ்சு வளர்ப்புக் குளமாக தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

2.3. தற்போது நடைமுறையில் உள்ள மீனவர் குடியிருப்புச் சாலை அமைக்கும் பணியை நெடுஞ்சாலைத் துறையினரிடமிருந்து மீன் துறையே ஏற்று நடத்துவது, மீன் வளத் துறைக்குத் தொடர்புடைய புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுதல் மற்றும் கடலரிப்பைத் தடுத்தல் போன்றவற்றை பொதுப் பணித் துறையிடமிருந்து இத்துறைக்கு மாற்றுவதைப் பற்றி பரிசீலனையில் உள்ளது.

2.4. கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு குழுக்கள் அமைப்பதற்கும் பரிசீலனையில் உள்ளன :—

(அ) உள்நாட்டு மீனவர் ஆலோசனைக் குழு மற்றும் கடல் மீனவர் ஆலோசனைக் குழு.

(இ) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மீன்வளத் துறை அதிகாரிகள் ஐவர் அடங்கிய உயர்மட்டக் கண்காணிப்புக் குழு ஏற்படுத்துதல், இக்குழு புகார்கள் குறித்து விசாரணை செய்யும்.

(உ) மீன் வளத் துறை மற்றும் மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மீன் பிடிக்கப்படும் மற்றும் விற்பனை செய்யப்படும் இடங்களில் தவறுகள் நடைபெற்றால் அதை அரசுக்கு எடுத்துக் கூற ஐவர் அடங்கிய பொதுமக்கள் கண்காணிப்புக் குழு ஏற்படுத்துதல்.

(எ) மீனவர்களுக்கு மீன் பிடிச் சாதனங்கள் வாங்க கடன் வழங்கவும், திருப்பிச் செலுத்தவும், படகுகள் பழுது பார்க்கும் வழி முறைகளைக் கண்டறிந்து அரசுக்குப் பரிந்துரை செய்யவும் ஒரு குழு அமைக்கப்பட விருக்கிறது. சங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்து வந்ததை ரத்து செய்து சங்கு கடத்தலைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.



கடல் முகத்துவாரங்களில் கிடைக்கும் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இறால்களை பிடிப்பதற்குத் தனியாருக்கு அனுமதி வழங்குவதற்குப் பதில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழில் செய்யும்போது இறக்கும் மீனவர் குடும்பத்துக்கு வேண்டிய நிவாரணம் மற்றும் உதவிகளை உடனுக்குடன் கிடைக்கச் செய்ய நேரடி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மீன் வளத் துறை உதவி இயக்குநர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங்கப்படவிருக்கும் மீன் அங்காடி மற்றும் வறுவல் மீன் உணவகங்கள் ஓதுக்குவதில் மீனவ விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.5. ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது சம்பந்தமாகவும் பரிசீலனையில் உள்ளது.

2.6. கூட்டுறவுச் சங்கங்களில் உண்மையிலேயே மீன் பிடி தொழில் செய்கின்ற மீனவர்களை மட்டுமே உறுப்பினர்களாக சேர்க்குமாறு உறுதி செய்தல்.

2.7. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் படகுகள் வழங்கும் தற்போதைய முறையை சுழல் முறையில் மாற்றி ஒழுங்கு படுத்துதல்.

2.8. மீனவர்கள் தங்கள் மீன் பிடிச் சாதனங்களை பாதுகாப்புடன் வைத்துக் கொள்வதற்கு வசதியாக மீனவர்களுக்காக இனிமேல் கட்டப்படும் வீடுகளின் பரப்பளவை அதிகமாக்குதல், மீனவக் குடியிருப்புக்குத் தேவையான முறையில் சாலைகள், சாலை விளக்குகள், குடிநீர் வசதி, மின் வசதி போன்ற எல்லா அடிப்படை வசதிகளுடன் அமையுமாறு கட்டுதல்.

2.9. மீனவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட மீனவர்கள் அல்லது அவர்களது குடும்பங்களுக்குச் சரியான முறையில் கிடைக்கச் செய்வதற்காக சமூகப் பொருளாதார திட்டங்களை ஒழுங்குபடுத்துதல்.

2.10. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மூலம் தற்போது 10 ஆண்டுகளுக்குக் குளங்கள் குத்தகைக்கு விடப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் அதிக அளவில் உண்மையான மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் பயன் பெறுவதற்கு வாய்ப்பாக, குத்தகைக் காலத்தை மத்திய அரசின் அனுமதி பெற்று 3 ஆண்டுகளாகக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

128-203—31

2.11. மீனவர் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற மீனவர்கள் எந்த அளவிற்குத் தனியார் துறையில் வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள் அல்லது தங்களுடைய நலனுக்காக தாமே படகுகளை ஓட்டுகிறார்கள் என்பதைக் கண்காணிப்பது.

2.12. பயிற்சிக்கான பாடத் திட்டங்களில் படகு பழுது பார்த்தல் மற்றும் பொறியியல் படிப்புப் பற்றிய பிரிவு ஆகியவற்றையும் கூடுதலாக ஏற்படுத்துதல்.

2.13. எல்லா பயிற்சியாளர்களுக்கும் பயிற்சிக்கான உதவித் தொகையை ரூ. 75-லிருந்து ரூ. 125-க்கு உயர்த்தி அமைப்பதற்கு உத்தேசித்தல்.

2.14. அன்னியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டும் பொருட்டும், இறால் கொள்முதல் மற்றும் ஏற்றுமதியில் இடைத்தரகர்களின் குறுக்கீட்டைத் தவிர்த்து மீனவர்களுக்குத் தங்களின் மீன் பிடிப்புகளுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும், இறாலை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் கொள்முதல் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

2.15. மீனவர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனைப் பெற மீனவர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற விதியை யொட்டி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் அனைவரையும் மீனவ கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகப் பதிவு செய்ய அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

2.16. மீனவர்களுக்காக சேமிப்புத் திட்டத்தின் கீழ் தொழில் இல்லாத மூன்று மாதங்களில் மாதம் ரூ. 60 வீதம் தாமதமின்றி கிடைப்பதற்கு உதவியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை முன்பணமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.17. இலங்கை கடற் படையினரின் தாக்குதலுக்கு ஆளாகி உயிர் இழக்கும் மீனவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உடனுக்குடன் உதவித் தொகை வழங்கிட வசதியாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் ரூ. 50 ஆயிரம் சுழல் நிதியாக அளித்து அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த சுழல் நிதியிலிருந்து காயமுறும் மீனவர்களுக்கும் உதவித் தொகை வழங்குவதற்கு அரசு பரிசீலித்து வருகிறது.



2.18. நமது மீனளத் துறையின் வளர்ச்சியை ஒப்பிட்டு நோக்குவதற்கு ஏதுவாக பிற மாநிலங்களில் மீன்வளத் துறையின் வளர்ச்சியையும் பணிகளையும் பற்றிய விவரங்களைப் பெற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

3. கடல், உள்நாடு மற்றும் உவர் நீர் மீன்வளத் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவது மாநில மீன்வளத் துறையின் பொறுப்பாகும். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளும் மீன் வளத்துறை தனது குறிக்கோள்களை எய்துவதற்கேதுவாக இருந்து செயல்பட்டு வருகின்றன.

ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நிறைவேற்றப் பட்ட மீனள அபிவிருத்தித் திட்டங்களின் செயலாக்க அளவு குறித்து நோக்குமிடத்து கீழ்க்கண்ட முக்கியமான செயற்பாடுகளைக் காணலாம்.

4.1. தமிழ்நாட்டில் மீனள அபிவிருத்திக்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2,400 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

அதில் இறுதிச் செலவினம் சுமாராக ரூ. 2,317 இலட்சமாகும். ஆண்டுவாரியான செலவினங்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வருடம். | | செலவினம். |
|---|---|---|
| (1) | | (2) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1980–81 | .. | 341.18 |
| 1981–82 | .. | 384.18 |
| 1982–83 | .. | 355.30 |
| 1983–84 | .. | 450.37 |
| 1984–85 (திருத்திய மதிப்பீடு). | .. | 785.91 |
| | | 2,316.94 |

[1985 ஜூலை 11

4.2. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் நமது மாநிலத்தின் மீன் உற்பத்தி 3.77 இலட்சம் டன்களாகும். (இவற்றில் கடல் மீன் உற்பத்தி 2.17 இலட்சம் டன்கள் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தி 1.60 இலட்சம் டன்களாகும்.) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதிஆண்டான 1984–85 ஆம் ஆண்டு முடிவில் மீன் உற்பத்தி 4.30 இலட்சம் டன்களாக (கடல் மீன் உற்பத்தி 2.60 இலட்சம் டன்கள் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தி 1.70 இலட்சம் டன்கள்—தற்காலிக மதிப்பீடு) உயரும்.

4.3. 6 சுருக்குப்பை வலை மீன் பிடி கலங்களும், 51 மரப் படகுகளும், 77 கண்ணாடி இழைப் படகுகளும், 1,000 நாட்டுப் படகுகளும் புதிதாக மீன் பிடிப்பிற்கு கொணரப்பட்டன. நாட்டுப் படகுகளில் பொருத்துவதற்காக 97 இயந்திரங்கள் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டன. இன்னும் சுமார் 200 இயந்திரங்கள் விநியோகிக்கப்பட விருக்கின்றன. மேலும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாட்டுப் படகு மீனவர்களுக்காக ரூ. 30.88 இலட்சம் பெறுமானமுள்ள நைலான் வலைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

4.4 உள்நாட்டு மீன்வளத்தை பொறுத்தவரையில் 10 ஹெக்டேர் பரப்பளவுள்ள இரு மீன் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மொத்த மீன் பண்ணை பரப்பளவு 31 ஹெக்டேராக உயர்த்தப்பட்டுள்ளது. தூண்டுதல் இனப் பெருக்க முறையில் மீன் குஞ்சு உற்பத்தி 1980-81 ஆம் ஆண்டில் 1,068 இலட்சங்களாக இருந்தது. 1984-85 ல் அது 1,776 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. மீனள அபிவிருத்திக்காக முன்னர் செயல்பட்டு வந்த நான்கு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகைமைகளால் சீரிய முறையில் நடத்தப்பட்ட கூட்டு இன மீன் வளர்ப்பின் வெற்றியைக் கண்டு நம் மாநிலத்தில் உள்ள பல நீர்த்தேக்கங்களும், குளங்களும் இத்துறையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் மேலும் 7 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4.5. ஒரு முன்னோடித் திட்டமாக, தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டத்தை அமுல்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் மதுரை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள அனைத்து உள்நாட்டு நீர் நிலைகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக முக்கிய பாசன குளங்கள் மற்றும் நீண்ட கால பருவக் குளங்களில் 15,000 ஹெக்டேர் அளவுள்ள நீர்ப்பரப்புகளில் மீன் வளர்க்கப்படுகிறது. இத்



1985 ஜூலை 11]

திட்டத்தால் வருடத்திற்கு சுமார் 8,625 டன் மீன்கள் உற்பத்திச் செய்யப்படும். சுமார் 4,000 உள்நாட்டு மீனவர்கள் பலனடைவர். இந்தத்திட்டத்தால் பங்கு அடிப்படையில் மீன்படி தொழில் செய்கின்ற மீனவர் கூட்டுறவுச் சங்கதின் உண்மையான மீனவ உறுப்பினர்களே பயனடைவார்கள்.

4.6. உவர் நீர் மீனள அபிவிருத்திக்காக ஒரு ஹெக்டேர் பரப்பளவு கொண்ட 10 இறால் பண்ணைகள் 10 கடலோர மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டன. அதிராம்பட்டினத்தில் ஒரு 10 ஹெக்டேர் இறால் பண்ணை ஏற்படுத்தப்பட்டது. மேலும் நீலங்கரையில் ஒரு இறால் குஞ்சு- பொறிப்பகமும் நிறுவப்பட்டு வருகிறது.

4.7. படகுகள், வலைகள், போக்குவரத்து வாகனங்கம் ஆகியவை வாங்குவதற்கும், கிடங்கு கட்டுவதற்கும் மற்றுங் நடைமுறை முதலீடு வகையிலும் மீனவர் கூட்டுறவுச் சங்கய களுக்கு பங்கு முதலீடு, கடன் மற்றும் மானியம் அடங்கி ரூ. 2 கோடிக்கும் அதிகமான நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

5. இத்துறையின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கருத்துருக் கள், மைய திட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட கொள்கை களையும் திட்டங்களையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட் டுள்ளன. மைய திட்டக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி, சமத்துவநெறி, சமூக நீதி, மேம்பாடான திறம்பாடு, உற் பத்தித் திறன் ஆகிய வழிகாட்டும் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு, இத்துறையின் நோக்கங்களை எய்துவதற்காக, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பின்பற்றுவதற்கு வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் பின்வருமாறு:—

5.1. மீன்பிடிக்கத் தேவையான கலங்களை அதிக அளவில், புகுத்துதலும், சிறு அளவில் தொழில் புரியும் மீனவர்கள் தங்களுடைய மீன் பிடிப்பையும், வருமானத்தையும் அதிகப் படுத்திக் கொள்வதற்கேதுவாக அவர்களுடைய கலங்கள் மற்றும் கருவிகளின் செயற்திறனை மேம்பாடு அடையச் செய்தலும்;

5.2. பெரிய மற்றும் சிறிய இறங்கு துறைகளில் மீன் இறக்கும் இடவசதி, தங்குதுறை வசதி, மீன்பிடி துறைமுக வசதி, மீன்களை பதப்படுத்துதல், சிப்பமிடுதல், மற்றும் ஏல முறையில் விற்பதற்கும் தேவையான வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல்;

5.3. தமிழ்நாட்டின் பொருளாதார எல்லையாக விளங்கும் கிழக்குக் கடற்கரையின் பகுதிகளை அளவை செய்து மீன்வள முள்ள இடங்களைக் கண்டறிந்து ஆழ்கடல் மீன்பிடிப்பு நட வடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

5.4. மாநிலத்திலுள்ள எல்லா உவர் நீர் பரப்புகளிலும் உவர் நீர் மீன் வளர்ப்பை மேற்கொள்ளுதல்;

5.5. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடிப்பை அதிகபட்ச அளவு அதிகரிக்க மாநிலத்திலுள்ள எல்லா பாசன மற்றும் பாசனமல்லாத நீர் நிலைகளிலும் மீன் வளர்ப்பை மேற்கொள் தலும் விரிவாக்குதலும்;

5.6. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீன்பிடிப்பையும், மீன் விற்பனையையும் மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவியை அளிப்பதன் மூலம் அச்சங்கங்களை வலுப்படுத்து தல்:

5.7. மக்களுக்கு நியாயமான விலையில் தேக ஆரோக்கியத் திற்கு தகுந்த மீன் கிடைக்கச் செய்யும் பொருட்டு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் மீன் விற்பனையை ஓர் ஒழுங்கான முறையில் விரி வாக்குதல்;

5.8. மீனவர்களுக்கு வீட்டுவசதி, இணைப்புச் சாலைகள் மற்றும் இதர பொது வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல்.

6. மேற்சொன்ன நடைமுறை திறன்களை அடிப்படையாகக் கொண்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கருத்துருக்களில் சேர்க் கப்பட்ட முக்கிய திட்டங்கள் பின்வருமாறு.

கண்ணாடி இழைப்படகுகள், கடற்கரையில் ஏற்றக்கூடிய கலன்கள், உட்புறம்/வெளிப்புறம் பொருத்தக்கூடிய இயந்திரங் கள் நாட்டுக் கலன்கள் ஆகியவை வழங்குதல், ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு நிதியுதவி செய்தல், மீன்களை பதப்படுத்தி விற்பனை செய்வதற்கான வசதிகள், அடிப்படை வசதிகள் போன்றவை செய்து கொடுத்தல், நீர்த்தேக்கங்கள், குளங்கள் குட்டைகள் ஆகியவற்றில் மீனளத்தை மேம்படுத்துதல், மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்வதற்கு தனியாருக்கு ஊக்கமளித்தல், உள்நாடு மற்றும் உவர் நீர் மீன் பண்ணைகள் அமைத்தல், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல் போன்றவையும் அத்துடன் மீனவ சமுதாயத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலுமாகும்.

7. 1985-86 ஆம் ஆண்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத் தின் முதலாவது ஆண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். எனவே, இவ்வாண்டின் திட்டங்கள் யாவும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கருத்துக்களையொட்டியே உருவாக்கப்



பட்டன. என்பதை சொல்லத் தேவையில்லை. 1985-86 ஆம்
ஆண்டில் மீனள அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட த்தொகையில்
திட்டத்தில் சேர்க்கப்பட்ட இனங்களுக்காக ரூ. 404 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் புதிய திட்டங்களுக்ககாக பகுதி 2
மதிப்பீட்டின்கீழ் சேர்க்கப்பட்ட ரூ. 40.27 இலட்சமும் அடங்கும்.
மேலும், திட்டமில்லாத இனங்களுக்காக ரூ. 310.26 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆறாவது திட்ட காலத்தில் அரசு
ஏற்றுக் கொண்ட செலவினமான ரூ. 41.47 இலட்சமும் அடங்கும்.
மேற்படி ஒதுக்கீட்டில், ரூ. 524.74 இலட்சம் மீனள கோரிக்கை
எண். 21-ல் சேர்க்கப்பட்டுள்ளது. மீதித் தொகை வேறு கோரிக்
கைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. 1985-86 ஆம் ஆண்டுத் திட்டத்தில், கடல் மீன் உற்
பத்தியை 2.70 இலட்சம் டன்களாகவும், உள்நாட்டு மீன் உற்
பத்தியை 1.75 இலட்சம் டன்களாகவும் உயர்த்த திட்டமிடப்
பட்டுள்ளது.

9. கடல் மீன்வளம் :

கடல் மீன் உற்பத்தியைக் கணிசமான அளவில் பெருக்க மீன்
பிடிக் கலன்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அவசியம்.
மூன்றாவது, நான்காவது, ஐந்தாவதுத் திட்டக்காலங்களில் விசைப்
படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டு அதிக அளவில் பயனுக்குக்
கொண்டுவரப்பட்டன. இவ்வாறு பல திட்டங்கள் செயல்
படுத்தப்பட்டதின் விளைவாக கடல் மீன் உற்பத்தி 1961-62 ம்
ஆண்டில் 93,280 டன்னிலிருந்து 1971-72 ஆம் ஆண்டில்
2,12,937 டன்களாகவும், 1984-85 ஆம் ஆண்டில் 2,60,000
டன்களாகவும் அதிகரித்துள்ளது. இம்மாநிலத்தில் பிடிக்கப்படும்
மீன் உற்பத்தியில் 70 விழுக்காடுக்கு மேல் நாட்டுக் கலன்களால்
பிடிக்கப்படுகின்றன. எனவே, நாட்டுக் கலன்கள், கட்டுமரங்கள்
வள்ளங்கள் இவற்றின் மீன்பிடி திறனை அதிகரிக்கும் பொருட்டு
நிதியுதவி அளிக்க வேண்டியதின் அவசியம் உணரப்பட்டது. இக்
கலன்களின் கொள்ளளவு மற்றும் அவைகளின் மீன்பிடி திறனை
அதிகரிக்கும் பொருட்டு. உலக உணவு மற்றும் வேளாண்மை
நிறுவனத்தின் வங்காள விரிகுடாத் திட்டத்தால் உருவாக்கப்பட்ட
கரையேறும் கலன்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழகக்
கடலில் இதை வெற்றிகரமாக அறிமுகப்படுத்த முடியும் என்பது
இப்படகின் சோதனை இயக்கத்தின் மூலம் தெரிய வந்தது.

9.1. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் அயல் நாட்டு கூட்டுடன்
அமைத்துள்ள '' தமிழ்நாடு மெரைன் பிளாஸ்டீஸ் லிமிடெட் ''
என்ற கூட்டு நிறுவனம் பெர்ரோ ஐலண்ட் வடிவமைப்பு கொண்ட
இயந்திரக் கலன்களை கட்டிவருகிறது. இத்தகைய கலன்கள்
நமது மீனவர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.
வங்காள விரிகுடாத் திட்டத்தின், அலையில் செல்லும் படகு
களுடன் இப்படகுகளும் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்படும் என
நம்பப்படுகிறது. 45 கரையேறும் கலன்களை உட்புறம் பொருத்

துப்பட்ட டீசல் இயந்திரம், பாய்மரம், மற்றும் பல்வகைப்பட்ட வலைகளுடன், 9 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொரு கடற்கரையோர மாவட்டத்திலும் ஒரு சங்கம் வீதம்), 50 விழுக் காடு மான்யம், 50 விழுக்காடு கடன் என்ற அடிப்படையல் ரூ. 36 இலட்சம் செலவில் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே நடைமுறையிலிருந்து வரும் உட்புறம்/வெளிப்புறம் பொருத்தக் கூடிய இயந்திரங்களை வழங்குதல் மற்றும் 20 விழுக்காடு மான் யம், 80 விழுக்காடு கடன் என்ற அடிப்படையில் நைலான் வலை கள் வழங்குதல் என்ற திட்டங்களை 1985-86 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

10. உள்நாட்டு மீன்வளம்;

முதலாவது ஆண்டு திட்டக்காலத்தில், மீன்குஞ்சு உற்பத்தி ஆண்டுக்கு 103 மில்லியனாக இருந்தது. எல்லா உள்நாட்டுநீர் நிலைகளிலும் இருப்புச் செய்வதற்கு 360 மில்லியன் மீன் குஞ்சிகள் தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது நமது மீன்குஞ்சு தேவைகளுக்கும் மீன்குஞ்சு உற்பத்திக்கும் பெரிய அள வில் இடைவெளி உள்ளது. இயற்கையான நீரோட்டங்கள் மூலம் மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் சாத்தியம் இல்லை. எனவே, தரமான மீன்குஞ்சுகள் தேவையான அளவு கிடைத்திட தூண்டுதல் மூலம் மீன்குஞ்சு உற்பத்தி செய்வதற்கான எல்லா முயற்சிகளும் இத்துறை எடுத்து வருகிறது. தூண்டுதல் மூலம் மீன்குஞ்சு உற் பத்தி முறையைக் கையாண்டு மீன்குஞ்சு உற்பத்தி 170 மில்லிய னாக உயர்ந்துள்ளது. மேலும் அதிகப்படியான மீன் குஞ்சுப் பண்ணைகளை அமைப்பது அத்தியாவசியமாகிறது. தேசிய மீன் குஞ்சு உற்பத்தி திட்டம் என்ற திட்டத்தின் கீழ், ஒவ்வொன் றும் பத்து ஹெக்டேர் பரப்பளவுள்ள இரு மீன் குஞ்சுப் பண்ணை கள் அமைத்திட மைய அரசு ஒப்புதல் அளித்து அதற்கான கடனுதவியும் அளித்துள்ளது. நமது அரசு பவானிசாகர் மற்றும் அமராவதி நகர் ஆகிய இடங்களில் 10 ஹெக்டேர் பரப்பளவுள்ள இரு மீன் குஞ்சுப் பண்ணைகள் ரூ. 180 இலட்சம் செலவில் அமைத்திட ஒப்பளிப்பு வழங்கியது. இப்பண்ணைகள் அமைக் கும் வேலை தொடங்கப்பட்டுவிட்டது. இது முடிந்தால் நம் மாநிலத்தில் மொத்த மீன் குஞ்சுப் பண்ணையின் பரப்பளவு 31 ஹெக்டேருக்கு உயரும். ஆண்டுக்கு 300 மில்லியனுக்கும் மேலாக மீன்குஞ்சுகள் உற்பத்திச் செய்யக் கூடும்.

10.1 தற்போதைய மீன்குஞ்சு உற்பத்தியான 170 மில்லிய னில் மணிமுத்தாறு மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் மட்டும் 18 விழுக்காடு உற்பத்தியை அளிக்கிறது. இங்குள்ள பத்து நீர் குட்டைகளில் ஐந்து குட்டைகள் பழுதடைந்துள்ளன. இதைச் சீர் செய்ய 1985-86 வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 1.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, தூண்டு



தல் மூலம் மீன் குஞ்சு உற்பத்தியை நன்கு செயல்படுத்தவும் வளர்ப்புத் தொட்டிகளை நன்கு கண்காணிப்பதற்கும் ஏதுவாக மணிமுத்தாறு மீன் பண்ணையில் ரூ. 62,000 செலவில் மின்சார வசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10.2. மீன் உற்பத்தியை அதிகரிக்க. நமது மாநிலத்தில் அமைந்துள்ள சிறிய, பெரிய நீர்த்தேக்கங்களை மீன் வளர்ப்பிற் காக இத்துறை எடுத்துக் கொள்கிறது. கீழ்க்கண்ட நீர்த்தேக் கங்களை 1985—86 ஆம் ஆண்டில் இத்துறை எடுத்துக் கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காகும் செலவு ரூ. 1.58 இலட்சமாகும்

1. பெரியார் மாவட்டத்திலுள்ள வட்டமலைக்கரை ஓடை.
2. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வேப்பங்கோட்டை ஓடை.
3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உப்பர் ஓடை.
4. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராமநதி ஓடை.
5. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கருப்பாநதி ஓடை.
6. தருமபுரி மாவட்டத்திலுள்ள சூளகிரி சின்னாறு ஓடை.

இந்நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்க அமர்த்தப்படும் சுமார் 50 மீனவர்கள் பயன் அடைவார்கள். இதனால் மாநிலத்தின் மீன் உற்பத்தி அதிகரிப்பதுடன் மீன் துறைக்கும் இரண்டாவது ஆண்டிலிருந்து ரூ. 16,000 நிகர வருமானம் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

11. வறட்சிப் பணிக்கானத் திட்டத்தில் உள்நாட்டு மீன்வள மேம்பாடு

வறட்சிப் பணிக்கானத் திட்டத்தின் கீழ், பகுதி மீன்வளத் திட்டங்கள் தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகின்றன. தருமபுரி மாவட்டத்தில் உள்நாட்டு மீன்வளர்ப்பினை தீவிரமாக்கும் பொருட்டு, சின்னார், கிருட் டிணகிரி நீர்த்தேக்கப் பகுதிகளில் மீன் பண்ணைகள் அமைக்கப் பட்டுள்ளன. பாம்பாரில் தூண்டுதல் மூலம் மீன்குஞ்சு உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றும், கிருட்டிணகிரியில் குறைந்த அழுத்த பாலிதின் சாதனத்தில் அமைந்த பொறிப்பகம் ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்தில் மீனளத் திட்டங்களை அமுல் படுத்த, 1984-85 ஆம் ஆண்டுத் திட்டத்தில், ரூ. 5.64 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள் ளது. இதில் அனுமதிக்கப்பட்ட திட்டங்களாவன. 370 ஹெக்டேர்

பரப்பளவுள்ள நீர் நிலைகளில் நல்ல தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்தலும் இராமநாய்க்கன் ஏரியில் கூண்டு மீன்வளர்ப்பை பரிசோதனையாக நடத்துவதும் ஆகும். தருமபுரி மாவட்டத்தில் மீன்வளத் திட்டங்களுக்காக 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,200 ஹெக்டேர் பரப்புள்ள நீர் நிலைகளில் தரமுள்ள மீன் குஞ்சுகளை தீவிர இருப்பு செய்யும் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. பிலவக்கல்லில் ரூ. 13.18 இலட்சம் செலவில் ஒரு மீன் பண்ணை அமைக்கவும், ஆரியன் குண்டு என்ற இடத்தில் கூட்டுறவு இறால் பண்ணை ஒன்று ரூ. 12.59 இலட்சம் செலவில் அமைக்கவும் ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. இந்தப் பண்ணைகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்கள் மீன் உற்பத்தியை பெருக்க பேருதவியாக இருக்கின்றன.

12. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உள்நாட்டு மீன்வளம்:

நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்ச் என்னுமிடத்தில் உள்ள ட்ரவுட் மீன் குஞ்சுப் பண்ணையை ரூ. 4.19 இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட திட்டத்துடன் நீலகிரியில் உள்ள வெல்லிங்டன் ஏரியில் களையெடுத்தல் மற்றும் தூர் வாருதல் செய்து சுற்றுலா பயணிகள் நலனுக்காக அதில் மீன் வளர்ப்பை பெருக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 1.93 இலட்சம் 1984-85 ஆம் ஆண்டில் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

13. உவர்நீர் இறால் பண்ணைத் திட்டம் :

இறால் என்பது மிக்க மதிப்புள்ள அன்னிய செலாவணியை ஈட்டித் தரும் கடலிலுள்ள ஒரு தங்கச் சுரங்கமாகும். கடலில் கட்டுப்பாடில்லாமல் மிகுந்த அளவில் இறால்களைப் பிடித்ததினால், கடலில் இறால்களின் எண்ணிக்கை குறைந்தது. இதன் காரணமாக உவர்நீரில் இறால்களை வளர்ப்பதில் கவனம் திரும்பியது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சில உவர்நீர் இறால்/மீன் பண்ணைகள் நம் மாநிலத்தில் அமைக்கப்பட்டன.

13.1. மைய அரசு பொறுப்பேற்கும் உவர் நீர் மீன் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தொண்டியக்காடு என்னும் இடத்தில் ரூ. 29 இலட்சம் செலவில் ஒரு 50 ஹெக்டேர் உவர்நீர் பண்ணை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

13.2. 1984-85 ஆம் ஆண்டில், மாநில திட்டத்தின் கீழ், ரூ. 12.69 இலட்சம் செலவில் காரங்காட்டில் 15 ஹெக்டேர் பரப்பளவில் ஓர் இறால் பண்ணை அமைத்திட அரசு அனுமதி அளித்துள்ளது. இதனை அமைக்கும் வேலையை மீன் துறையின் பொறியியல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



13.3. 1985-86-ல் பரங்கிப்பேட்டையில், ரூ. 1.82 இலட்சம் செலவில் உவர்நீர் இறால்/மீன் பண்ணை ஒன்று தற்போதுள்ள பண்ணைக்கருகாமையில் 2 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

13.4. இறால் குஞ்சுகளின் தேவையை பூர்த்தி செய்ய, சாந்தோம் உவர் நீர் மீன் பண்ணையில் ஓர் இறால் குஞ்சு பொரிப்பகம் ஆராய்ச்சியுடன் கூடிய ஒரு முன்னோடித் திட்டமாக நிறுவப் பட்டது. இங்கு முட்டையிலிருந்து குஞ்சு பொரிப்பு பரிசோதனையில் நடத்தப்படுகிறது. இந்த நிலையத்தில், இறால் மீன்குஞ்சு பொரிப்பதற்கு அடிப்படை தேவையான கலப்படமற்ற தெளிவான கடல்நீர் இல்லை. எனவே, தற்சமயம் கடல்நீர் இந்த நிலையத்திற்கு வண்டிகளில் எடுத்துச் செல்லப்படுகிறது. இறால் குஞ்சுகள் உற்பத்தியில் ஆழ்ந்த கவனத்துடன் ஈடுபட கடல் நீர் தொடர்ந்து அளிக்கப்படுதல் அவசியம். இதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதைச் செய்வதற்காக, 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. ஆராய்ச்சி :

இத்துறையின் 5 அண்மைக் கடல் அளவாய்வு நிலையங்கள், கடலில் விசைப் படகுகளின் உதவியுடன் 20 கடல் அடிகள் ஆழம் வரையில் இலாபகரமாக மீன்பிடிக்கத் தகுந்த இடங்களை கண்டறியும் பொருட்டு செயல்படுகின்றன. அவைகள் சென்னை, கடலூர், மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய ஐந்து இடங்களில் அமைந்துள்ளன. இந்த ஆய்வின் முடிவு இத்துறையின் விளம்பரப் பிரிவின் மூலம் மீனவர்களுக்கு தெரிவிக்கப் படுகிறது. இந்த நிலையங்களில் உள்ள படகுகள் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக உபயோகிக்கப்பட்டமையால் பழுதடைந்து பலனற்று போய் விட்டது. எனவே, அவற்றிற்குப் பதில் நவீன இயந்திரங்களுடன் கூடிய புதியப் படகுகள் படிப்படியாக வாங்கப் படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 5.97 இலட்சம் செலவில், இரண்டு புதிய படகுகள் வாங்க அனுமதி அளிக்கப் பட்டது. அவ்வாறே, மேலும் இரண்டு படகுகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக, 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4.79 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

14.1. மீன்பிடிக்கும் முறையை நவீனப்படுத்தவும் மீனவர்களிடையே செவுள் வலை மீன்பிடிப்பை பிரபலப்படுத்தவும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் கண்ணாடி இழைப் படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறிய கண்ணாடி இழைப் படகுகளை இலாபகரமாக இயக்க முடியும் என்பதை பரப்பும் பொருட்டு இரண்டு 24 அடி கண்ணாடி இழைப் படகுகளை வெவ்வேறுபட்ட வலைகளுடன் இந்த அளவை நிலையங்களில் இயக்குவதற்காக வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக

1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்படகுகளின் இயங்குத் திறனை ஆய்வு செய்வதன் மூலம், இத்தகைய கண்ணாடி இழைப் படகுகளை பெரும் அளவில் மீனவர்களுக்கு வழங்கும் திட்டத்தை இத்துறை செயல்படுத்த உதவியாக இருக்கும்.

15. இதர வசதிகள்:

15.1. இறங்கு துறை, தங்குதுறை வசதிகள் :

இயந்திரப் படகுகளும், நாவாய்களும் பாதுகாப்பான முறையில் தங்குவதற்கும், அவை திறம்பட இயக்கப்படுவதற்கும், மாநிலத்தில் பொருத்தமான இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களும், தங்கு துறைகளும் அல்லது இதர வசதிகளும் மைய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கீழ்க்கண்ட இடங்களில் மீன்பிடித் துறைமுகம்/இறங்கு துறைகள் அமைத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது :-

(1) சின்னமுட்டம் (கன்னியாகுமரி மாவட்டம்)
(2) வாலிநோக்கம் (இராமநாதபுரம் மாவட்டம்)
(3) தொண்டி (இராமநாதபுரம் மாவட்டம்)
(4) பழையார் (தஞ்சாவூர் மாவட்டம்)
(5) கோட்டைப்பட்டினம் (புதுக்கோட்டை மாவட்டம்)

இத்தகைய வசதிகள் மற்ற பொருத்தமான இடங்களிலும் அமைக்கப்படும். இதற்கான இடங்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஆய்வு நடைபெற்று வருகிறது.

15.2. அடிப்படை வசதிகள் :

பிடித்த மீன்களை கையாள்வதற்கும், பதப்படுத்துவதற்கும், அவற்றை எடுத்துச் செல்வதற்கும், தேவையான பதப்படுத்தும் நிலையங்கள், பழுதுபார்ப்பு வசதிகள், அணுகு சாலைகள், விற்பனைக் கூடம், மீன் சிப்பக்கூடம், வலை சீரமைப்புக் கூடம் போன்ற அடிப்படை வசதிகள் முக்கியமான இறங்கு துறைப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன. கடலோர மீன்பிடி கிராமங்களில் இவ்வசதிகளை அமைத்திட ஆகும் செலவில் 50 விழுக்காடு ஏற்க மத்திய அரசு முன்வந்துள்ளது. இம்மாநிலத்தில் இத்தகைய வசதிகள் தேவைப்படும் அநேக கிராமங்கள் உள்ளன. முதல் கட்டமாக 33 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த 33 கிராமங்களில் இத்தகைய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு, 1985-86 ஆம் ஆண்டில் இரண்டாவது பகுதித் திட்டத்தில் 10 மீன்பிடிக் கிராமங்கள்



எடுத்துக்கொள்ளப்படும். இதற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ. 5 இலட்சம் வீதம் செலவாகும். மைய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி, 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மைய அரசு, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஏர்வாடி என்ற கிராமத்தில் ரூ. 25 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மாநில அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியதும், 1985-86 ஆம் ஆண்டில் இதன் பணிகள் துவங்கப்படும்.

15.3. வழிகாட்டி விளக்குகள் அமைத்தல் :

கடலோர கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைப்பது ஒரு முக்கியமான வசதி என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மீனவர்கள் தங்களுடைய கலங்களை பாதுகாப்பாக கரைசேர்க்க வழிகாட்டி விளக்குகள் பெரிதும் உதவுகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 11.40 இலட்சம் செலவில் 40 வழிகாட்டி விளக்குகள் கடலோர கிராமங்களில் அமைக்க அரசு நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், 7 மீனவ கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக, 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. மீனவர் நலத் திட்டங்கள் :

16.1. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் :

மீனவர் சமுதாயம் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகிறது. அவர்களுடைய உழைப்பை வியாபாரிகளும், இடைத்தரகர்களும் தன்னலத்திற்குப் பயன்படுத்திக்கொள்கின்றனர். மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர்களுக்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றன. நம் மாநிலத்தில் 271 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 220 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 25 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்படுகின்றன. கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் தொழில் செய்து வாழ்க்கை நடத்த படகுகள், வலைகள் ஆகியவை கொடுக்கப்படுகின்றன. இந்த கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு கடன் உதவி அளிக்கின்றன. சில கிராமங்களிலுள்ள சங்கங்கள், அத்தியாவசிய பண்டங்களையும் உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்கின்றன. உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், அவைகளின் உறுப்பினர்களுக்கு வலைகள் வாங்கவும், மீன்களை எடுத்துச் செல்ல சைக்கிள்கள் வாங்கவும் கடனுதவி அளிக்கின்றன.

16.2. பல கூட்டுறவுச் சங்கங்கள் தேவையான நிதியில்
லாமல் நலிவுற்று இருக்கின்றன. எனவே, அரசு இக்கூட்டுறவு
சங்கங்களுக்கு மான்யம், பங்கு முதலீட்டு உதவி, நடைமுறை
முதலீட்டுக்கடன் மற்றும் நிர்வாக நிதி உதவி ஆகிய வழிகளில்
நிதியுதவி செய்கின்றது. 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத்
திட்டத்தில் ரூ. 5 இலட்சம் பங்கு முதலீட்டு உதவியாக நிதி
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16.3. 1978-79 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிலுள்ள
மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சி
நிறுவனம் பெரும் அளவில் நிதியுதவி செய்து வருகின்றது.
இதனால் இந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய
நடவடிக்கைகளை பல வழிகளில் விரிவுபடுத்த ஏதுவாக உள்ளது.
அதற்கேற்ப விசைப்படகுகள், நாட்டுக் கலன்கள் வாங்குதல்,
மீன்களை எடுத்துச் செல்ல வாகனங்கள் வாங்குதல், கிடங்குகள்
கட்டுதல், மீன்களைப் பதப்படுத்துதல், விற்பனை ஆகியவை
களை மேற்கொள்ள ஏதுவாக இருக்கிறது. 1983-84 வரை
47 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மான்யம், பங்கு முதலீடு,
கடன் ஆகிய வழிகளில் ரூ. 188.06 இலட்சம் கொடுக்கப்
பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 31 மீனவர் கூட்டுறவுச்
சங்கங்களுக்கு ரூ. 158.33 இலட்சம் வழங்க நிதி ஒப்புதல்
செய்யப்பட்டுள்ளது.

16.4. அரசும், தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனமும்
மற்ற நிதி நிறுவனங்களும் பெரிய அளவில் மீனவர் கூட்டுறவுச்
சங்கங்களுக்கு நிதியுதவி செய்வதால், அவற்றின் நடவடிக்கை
களை மீண்டும் ஏற்படுத்தி மேம்பாடு செய்வதும் சங்க உறுப்
பினர்களுக்கு மிகுந்த அளவில் உதவிகரமாக இருக்கச் செய்
வதும் அவசியமாகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை
சரியாக பராமரிப்பது மிகவும் தேவையானதாகும். இச்சங்கங்
களின் நிர்வாகத் திறனை மேம்படுத்த 1983-84 மற்றும் 1984-85
ஆகிய ஆண்டுகளில் 267 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு,
சங்கத்திற்கு ஒரு எழுத்தர் வீதம் நியமனம் செய்வதற்கு நிர்வாக
நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்
பினர்கள் அறிவர். 1985-86 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தை
நீட்டிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதற்காக
1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.50
இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. நேரடி உதவி :

17.1. மீனவர் குடியிருப்பு வசதி :

நமது அரசு கடல் மீனவர்களுக்காக 10,031 வீடுகள் தமிழ்
நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மூலம்
கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள்
நன்கறிவார்கள். இதுவரை 8,608 வீடுகள் இக்கழகத்தால்



கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும். மேலும், 1983-84 ஆம் ஆண்டில் 1,373 வீடுகள் ரூ. 100 இலட்சத்திற்கும் மேற்படாமல் செலவு செய்து மீன் வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள தனிப்பொறியியல் பிரிவினால் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டன. அவற்றில் 603 வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் மிகவிரைவில் கட்டி முடிக்கப்படும். இந்தத் திட்டம் 1985-86 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். அதற்காக 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 50.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17.2. இணைப்புச் சாலைகள் :

மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை உடனடியாக விற்பனைச் செய்வதற்கேதுவாக பிற கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் அவற்றைக் கொண்டு செல்வதற்கு போதிய இணைப்புச் சாலைகள் அனேக மீனவ கிராமங்களில் அமைக்கப்படவில்லை. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 1983-84 ஆம் ஆண்டு முடிவு வரை, 76 (110.45 கி.மீ. நீளத்தில்) சாலைகள் அமைக்க ரூ. 181.5 இலட்சம் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 58 சாலைகள் அமைக்கப்பட்டு விட்டன. இதர சாலைகள் அமைக்கும் பணி விரைவில் முடிக்கப்படும். 1984-85 ஆம் ஆண்டில் மேலும் 16 (25.80 கி.மீ. நீளத்தில்) சாலைகள் அமைக்க ரூ. 40.75 இலட்சம் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் ரூ. 11.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17.3. மீனவர் காப்பீட்டுத் திட்டம் :

மீனவர் விபத்துக் காப்பீடுத் திட்டத்தில் மீனவர்களின் இறப்பிற்கும் விபத்துக்கும் காப்பீடு செய்யப்படுகிறது. அதற்காக அவர்கள் செலுத்த வேண்டிய வருடாந்திர பகுதிக் கட்டணம் ரூ. 12 மட்டுமே. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள மீனவர் ஒருவர் மரணமடைந்தாலோ அல்லது நிரந்தரமான ஈடு செய்ய முடியாத உடல் ஊனம் ஏற்பட்டாலோ ரூ. 15,000 வழங்க திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறன்றி அவரது உடலில் பகுதி இழப்பாக ஏதேனும் ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது கால் ஊனமுற்றால் ரூ. 7,500 வழங்கப்படும். இத்திட்டத்தில் மீனவர்கள் வருடாந்திரப் பகுதிக் கட்டணமாக செலுத்தும் ரூ. 12-ல் பாதிப் பணம் ரூ.6-ஐ மாநில அரசும், மீதி ரூ.6-ஐ மைய அரசும் சரிபாதியாக ஏற்றுக் கொள்கிறது. இதுவரை 1,16,264 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

17.4. மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் :

கடுமையான புயல் மற்றும் இதர பருவ நிலை காரணமாக
ஆண்டில் மூன்று மாதம் நிரந்தர வருமான வாய்ப்பு இல்லாது
இருக்கும் காலத்தில் கடல் மீனவர்களுக்கு உதவும் வகையில்
நிவாரணம் வழங்கும் திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தி
யுள்ளது. இத்திட்டத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்
களிடமிருந்து மாதத்திற்கு ரூ. 10 வீதம் ஆண்டில் 9 மாதங்
களுக்கு வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்கப்பட்ட ரூ. 90
உடன் அரசு ரூ. 90 சேர்த்து மொத்தம் ரூ. 180 வருவாய்
இல்லாத மூன்று மாதங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 வீதம்
வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் மீனவர்களிடையே நல்ல
வரவேற்பு பெற்றுள்ளது. இத்திட்டம் மீனவர் கூட்டுறவுச்
சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அவைகளே இதனை
வசூலிப்பதுடன் இதுபற்றிய வரவு-செலவுக் கணக்குகளையும்
நிர்வகித்து வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 23,451
மீனவர்கள் சேர்ந்துள்ளனர்.

17.5. மீன்பிடித்தலை முறைப்படுத்தல் சட்டம் :

கடலில் மீன்பிடித்தலை ஒழுங்குமுறைப்படுத்தவும், இயந்திரப்
படகுதாரர்களுக்கும், நாட்டுப்படகு மீனவர்களுக்கும் இடையே
ஏற்படும் தகராறைத் தீர்க்கவும், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு
கடல் மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்டம் இயற்றப்பட்டது
என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அச்சட்டத்
தின் சில பகுதிகள் உயர் நீதிமன்றத்தினால் தடை செய்யப்
பட்டுள்ளன. இந்தச் சட்டத்தை தீவிரமாக செயல்படுத்து
வதற்கும், திடீர் தகராறு ஏற்படுவதை தடுப்பதற்கும் வேகப்
படகுகளில் ரோந்து பணி மேற்கொள்ளப்பட வேண்டும். முதற்
கட்டமாக ஒரு வேகப்படகு வாங்குவதற்கும், தேவையான பணி
யாளர்கள் நியமனம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்
காக 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில்
ரூ. 8.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் :

" கலப்பின மீன் வளர்ப்பு " என்ற அதிக மகசூல் அளிக்கும்
புதிய தொழில் நுட்பமுறை ஒன்று நாட்டில் உருவாக்கப்பட்
டுள்ளது. இதன் நோக்கம் ஒரு ஹெக்டேர் நீர்ப்பரப்பில் 1,500
கிலோகிராம் எடையுள்ள மீன் கிடைக்குமாறு மீன்உற்பத்தியைப்
பெருக்குவதாகும். இந்தியாவில் இம்முறை உள்நாட்டு மீனள
மேம்பாட்டில் ஒரு சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தத்
தொழில் நுட்ப முறையை மீனவர்களிடையே பிரபலப்படுத்தும்
நோக்கில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மைய
அரசின் திட்ட அறிக்கை வடிவமைப்பை அடிப்படையாகக்
கொண்டு இந்தியா முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்



நாட்டில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மைய அரசு
பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி,
மதுரை, தருமபுரி, தென்னாற்காடு, செங்கல்பட்டு, பெரியார்
ஆகிய மாவட்டங்களிலும், மாநில அரசு பொறுப்பேற்கும்
முகமைகள் திருநெல்வேலி, வட ஆற்காடு, கன்னியாகுமரி, புதுக்
கோட்டை ஆகிய மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன.
மைய அரசு பொறுப்பேற்கும் முகமைகளுக்கான செலவுகள்
மாநில அரசாலும், மைய அரசாலும் ஏற்றுக் கொள்ளப்படு
கின்றன. அவற்றிற்கான பணியாளர்கள் செலவு மற்றும்
சில்லரைச் செலவுகளை மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.
மாநில அரசு பொறுப்பேற்கும் முகமைகளுக்கான அனைத்துச்
செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. இந்த முகமை
கள் தன்னிச்சையாக செயல்பட்டாலும், மீன்வளத் துறையால்
அவைகளின் செயலாக்கம் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகிறது.

18.1 இந்த முகமைகள் மாநிலத்தில் ஒரு உள்நாட்டு மீன்
வளர்ப்போர் பிரிவை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம்
பஞ்சாயத்து மற்றும் இதரத் துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள
குளங்களும், குட்டைகளும் நீண்டகால குத்தகைக்கு எடுத்துக்
கொள்ளப்பட்டு மீனவர்களுக்கு நீண்டகாலம் குத்தகைக்கு விடப்
படுகிறது. அந்த குளங்களை சீர்படுத்தவும், இடுபொருட்கள்
வாங்கவும் மீனவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது.
மிகவும் வறிய மீனவர்களுக்கு இடுபொருட்கள் இலவசமாக
வழங்க மைய அரசாலும் முழு நிதி உதவி அளிக்கப்படுகின்றது.
இந்தத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட மீனவர்களுக்கு நவீன
மீன்வளர்ப்பு தொழில் நுட்பம் குறித்து 15 நாட்களுக்கு பயிற்சி
அளிக்கப்படுகின்றது. இந்த முகமைகள் மீன் வளர்ப்போர்
களுக்கு விரைவில் வளரும் ஐந்தாறு வகை மீன் குஞ்சுகளை
அவர்களது குளங்களில் வளர்ப்பதற்காக விநியோகம் செய்
கின்றன.

18.2. 1984-85 ஆம் ஆண்டு முடிய இந்த முகமைகள் 3,020
ஹெக்டேர் பரப்புள்ள 2925 குளங்களை எடுத்துள்ளன.
அவைகள் 3,330 தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் வளர்ப்போர்
களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குளங்களில்
மீன் உற்பத்தியும் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது.
பெரும்பாலான மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளில்
ஒரு ஹெக்டேர் நீர்ப் பரப்பில் மீன் உற்பத்தியின் அளவு 1,000
கிலோ கிராமுக்கும் மேலாக அதிகரித்துள்ளது. 1982ல் சில
தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களில் முழு நீரின வளர்ப்புத்திட்டம்
அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திட்டத்தின் பணிகள் மிகவும்
ஊக்கமளிப்பதாக இருந்தது. இத்தகைய பெரும்பாலான குளங்
களில் மீன் உற்பத்தியின் அளவு ஒரு ஹெக்டேருக்கு 2,000
கிலோ கிராமுக்கும் அதிகமாக இருந்தது. பிடிக்கப்பட்ட மீன்
களை விற்பனை செய்வதற்கு மீன் வளர்ப்போர் கூட்டுறவு
விற்பனைச் சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன.

18.3. 1985-86 ஆம் ஆண்டில் புதிய மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஒன்று புதிதாகத் தோன்றிய காமராசர் மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கிறது. இம்முகமை மைய அரசின் ஒப்புதலுடன் விருதுநகரில் அமைக்கப்படும். முதல் வருடத்தில் இம்முகமை 100 ஹெக்டேர் நீர்ப்பரப்பில் மீன் வளர்ப்பை மேற்கொள்ளும் . அதற்கான மதிப்பீடு ரூ. 5.86 இலட்சமாகும். மேலும், 1985-86-ஆம் ஆண்டில் மதுரை, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் விரிவாக்கப்படும். இதற்காக 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது மாநில அரசு பொறுப்பேற்று நடத்தும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை மைய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மைய அரசின் நிதி உதவிப் பெறுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக நடவடிக்கைகள் :

மீன் வளத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும், அவற்றை மேம்படுத்தவும், வணிக ரீதியாக நிறைவேற்றும் நோக்குடன் 1974-ம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. 1974 ஆம் ஆண்டு மாநில அரசின் நிறுவனமாக நிறுவப்பட்ட இக்கழகம், 1-10-1977-ல் பொது நிறுவனமாக மாற்றப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடி ஆகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 212.57 இலட்சம் ஆகும்.

19.1. பொதுமக்களுக்கு புரதச் சத்து மிக்க மீன்கள் நியாய விலையில் கிடைக்கவும் மீன் உற்பத்தி செய்யும் மீனவர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வழிவகை செய்யவும் சில்லறை அங்காடிகள் மூலமாக மீன் விற்பனை செய்யும் திட்டத்தை கழகம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. சென்னையில் 39 சில்லறை அங்காடிகளும் ஒரு நடமாடும் ஊர்தியும் உள்ளன. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பெரியார் மற்றும் மதுரை மாவட்டங்களிலும், அளியார் மற்றும் சாத்தனூர் அணை போன்ற இடங்களிலும் 43 சில்லறை அங்காடிகள் இருக்கின்றன. வரும் ஆண்டுகளில் மேலும் பல சில்லறை அங்காடிகளை திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அங்காடிகள் 1985 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் தரகு முறையில் செயல்படுத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

19.2 மெக்சிகோ நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட நாவாய்கள் விசாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு இயங்கி நல்ல வருவாய் ஈட்டித் தந்துள்ளன. 1983-84 ஆம் ஆண்டு இந்த நாவாய்கள் மூலம் ரூ. 88.31 இலட்சம் மதிப்புள்ள 105.433 டன் இறால்களும், 31.019 டன் மீன்களும் பிடிக்கப்பட்டன. மைய



அரசு மான்ய உதவியுடன் வாங்கப்பட்ட 6 சுருக்கு வலை படகுகளும் மீன்களை ஏற்றிச் செல்லும் படகுகளும், சென்னை மற்றும் தூத்துக்குடியில் இயங்கி வருகின்றன. சென்னை (அடையார்), நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் மண்டபம் போன்ற இடங்களில் இருக்கும் பனிக்கட்டி நிலையங்களும் குளிர்பதன நிலையங்களும் கழகத்தின் தேவையை பூர்த்தி செய்வதுடன், அங்குள்ள மக்களின் பனிக்கட்டி மற்றும் குளிர்பதன தேவையை பூர்த்தி செய்து வருகின்றன. எண்ணூரில் உள்ள உறைய வைக்கும் நிலையமும், மண்டபத்தில் உள்ள மீன் உணவு நிலையமும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இராயபுரத்திலும், மல்லிப் பட்டினத்திலும் உள்ள டீசல் நிலையங்கள் இலாபகரமான முறையில் இயங்கி வருகின்றன.

19.3 மைய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட சென்னை மீன்பிடித் துறைமுகப்பகுதியில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், அரசு 1983-84 ஆம் ஆண்டு அத்துறைமுகப் பகுதியில் ஒரு பனிக்கட்டி நிலையம் அமைப்பதற்கு ரூ. 20 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியது. நமது மாநிலத்தின் மீன்பிடி வலைகள் தேவையைப் பூர்த்தி செய்யவும், மீனவர்களுக்குத் தேவையான நல்ல மீன்பிடி வலைகளைத் தயார் செய்வதற்காகவும் சென்னையில் ஒரு வலை பின்னும் தொழிற்சாலை நிறுவ அரசு 1983-84 ஆம் ஆண்டு பங்கு மூலதனமாக ரூ. 20 இலட்சம் அளித்துள்ளது. இத்தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் ஜப்பான் நாட்டிலிருந்து ஜப்பான் நாட்டு 1984-85 ஆம் ஆண்டின் மான்ய உதவி திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவ்விரு திட்டங்களும் தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

19.4. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் செங்கை மாவட்டத்தில் உள்ள நீலாங்கரை என்னுமிடத்தில் ரூ. 31.95 இலட்சம செலவில் இறால் மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணை ஒன்றை நிறுவ திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

19.5. பெர்ரோ தீவுகளில் (டென்மார்க்) உள்ள பி. எப். மெரைன் நிறுவனத்துடன், கரையேறும் கலன்கள் தயாரிக்கும் நோக்குடன் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் "தமிழ்நாடு மெரைன் பிளாஸ்ட்ஸ் லிமிடெட்" என்ற கூட்டு நிறுவனம் ஒன்றை அமைக்க அரசு ஒப்புதலளித்துள்ளது. இதில் பங்கு மூலதனம் ரூ. 18 இலட்சம் ஆகும். தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் ஐ.எப்.யூ.வின் நிதி உதவியுடன் கூடிய இத்திட்டத்தில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன:

| | |
|---|---|
| தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் .. | 31 விழுக்காடு |
| ஜார்ஜ்மெஜோ நிறுவனம் .. .. | 19 விழுக்காடு |

| | | |
|---|---|---|
| அக்வாமெரைன் நிறுவனம் | .. .. | 10 விழுக்காடு |
| ஐ. எப். யூ. நிறுவனம் | .. .. | 20 விழுக்காடு |
| மெரைன் பிளாஸ்ட்ஸ் நிறுவனம் | .. | 20 விழுக்காடு |
| மொத்தம் | .. | 100 |

இந்நிறுவனத்தை நிறுவுவதற்கான பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

19.6. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மீன் குஞ்சு உற்பத்திக்கென மிதக்கும்கூண்டு வளர்ப்புத்திட்டத்தினை மேற்கொள்ள ரூ. 7.23 இலட்சம் நிதி உதவி அளிக்க ஒப்புதலளித்துள்ளதுத் இத்தொகை அவ்வங்கியால் மான்யமாக வழங்கப்படும். இப்திட்டம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தபடும்.

19.7. இரு 23 மீட்டர் மற்றும் 28 மீட்டர் இழு படகுகளை இறக்குமதி செய்யவோ அல்லது ரூ. 4.20 கோடி செலவில் உள்நாட்டிலேயே கட்டவோ தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான தொடக்க முதலீட்டுத் தொகை இறக்குமதி செய்யப்படும் படகிற்கு 10 விழுக்காடும், கட்டப்படும் படகிற்கு 5 விழுக்காடும் ஆகும். மீதமுள்ள தொகை கப்பல் தொழில் வளர்ச்சி நிதிக் குழுவிடமிருந்து கடனாகப் பெறப்படும்.

19.8. கடல்படு பொருள் ஏற்றுமதி நிறுவனத்தினரால் தூத்துக்குடி துறைமுகத்தில் கட்டப்பட்ட கருவாட்டுக் கிடங்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் 1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அன்று பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டது. இக்கிடங்கை நடத்துவதற்கு வேண்டிய வழிமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

19.9. செயற்கை முத்துக்களை தயாரிப்பதற்கும், அவற்றை விற்பனை செய்வதற்கும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 'ஸ்பிக்' நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து ரூ.10 இலட்சம் சமபங்கீட்டுத் தொகையுடன் நிறுவப்பட்ட ''தமிழ்நாடு முத்து நிறுவனம்'' செயல்படத்தொடங்கியுள்ளது. என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். முதற்கட்டமாக முத்துக்களை சேகரித்தல் போன்ற பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.



வரவு—செலவுத் திட்ட ஒரு கண்ணோட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | கணக்குகள் 1983-84 | வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு 1984-85 | திருத்திய மதிப்பீடு 1984-85 | வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு 1985-86 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மீன்வளம் ரெவின்யூ (312)— | | | | |
| திட்டம் .. .. | 149.14 | 224.11 | 184.87 | 155.90 |
| திட்டத்தில் சேராதது .. | 225.86 | 234.72 | 248.74 | 295.46 |
| மீன்வளம் மூலதனம் (512)— | | | | |
| திட்டம் .. .. | 231.64 | 343.94 | 369.68 | 166.60 |
| திட்டத்தில் சேராதது .. | .. | 0.02 | 0.38 | 0.02 |
| மீன்வளம் கடன் (712)— | | | | |
| திட்டம் .. .. | 6.27 | 26.42 | 27.04 | 6.41 |
| திட்டத்தில் சேராதது .. | .. | 0.02 | .. | .. |

| கணக்குத் தலைப்பு (1) | கணக்குகள் 1983-84 (2) | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1984-85 (3) | திருத்தப்பட்ட மதிப்பீடு 1984-85 (4) | வரவு-செலவு திட்டமதிப்பீடு 1985-86 (5) |
|---|---|---|---|---|
| கூட்டுறவு ரெவின்யூ (298)— | | | | |
| திட்டம் .. .. .. | 19.80 | 8.79 | 14.37 | 8.90 |
| திட்டத்தில் சேராதது .. | 13.26 | 13.13 | 14.09 | 14.31 |
| கூட்டுறவு மூலதனம் (498)— | | | | |
| திட்டம் .. .. .. | 4.17 | 5.01 | 13.25 | 5.01 |
| கூட்டுறவு கடன் (698)— | | | | |
| திட்டம் .. .... .. | 8.65 | 2.52 | 17.16 | 0.02 |
| வீட்டு வசதி ரெவின்யூ (283)— | | | | |
| திட்டம் .. .. .. | 16.25 | 100.00 | 122.92 | 50.00 |
| வீட்டு வசதி மூலதனம் (483)— | | | | |
| திட்டம் .. .. .. | 1.21 | 1.00 | 3.42 | 0.01 |
| வீட்டு வசதி கடன் (683)— | | | | |
| திட்டம் .. .. .. | .. | 0.01 | 0.01 | 0.01 |



(ரூபாய் இலட்சத்தில்)

| | | | | |
|---|---|---|---|---|
| பொதுப்பணிகள் ரெவின்யூ (259)— | | | | |
| திட்டத்தில் சேராதது .. | 0.20 | 0.20 | 0.19 | 0.16 |
| ற்கை பாதிப்பு நிவாரணம் (289)— | | | | |
| திட்டத்தில் சேராதது .. | .. | .. | 11.59 | 0.01 |
| சாலைகளும் பாலங்களும் (537)— | | | | |
| திட்டம் .. .. .. | 26.34 | 28.00 | 33.19 | 11.14 |
| இயற்கை பாதிப்புகள் (695)— | | | | |
| திட்டத்தில் சேராதது .. | 0.42 | 0.30 | 38.75 | 0.30 |
| மொத்தம் .. | 703.21 | 988.19 | 1,099.65 | 714.26 |

வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1985–86.

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு (1) | திட்டம் (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| ரெவின்யூ .. .. .. .. .. | 214.80 | 309.94 | 524.74 |
| மூலதனம் .. .. .. .. .. .. | 182.76 | 0.02 | 182.78 |
| கடன் .. .. .. .. .. .. | 6.44 | 0.30 | 6.74 |
| மொத்தம் .. .. .. | 404.00 | 310.26 | 714.26 |

**மீன்வளத் துறையின் வருவாய்**

| கணக்குத் தலைப்பு | கணக்குகள் 1983–84 | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 1984–85 | திருத்திய மதிப்பீடு 1984–85 | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 1985–86 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| மீனளம் (112) .. .. | 242.03 | 102.29 | 110.54 | 112.54 |

**20. முடிவுரை**

தமிழ்நாடு ஏராளமான அளவு மீனளச் செல்வத்தைக் கொண்டுள்ளது. அச்செல்வம் வெவ்வேறு வழிமுறைகளை மேற்கொண்டு கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் மீனவர்களின் பொருளாதார நிலை சீர்படும். மீன்துறை, மீனவர்களின் நலனை முன்னோடியாகக் கொண்டு எல்லா வழிகளிலும் மீனள மேம்பாட்டுக்கான திட்டங்களை முறையாகச் செயல்படுத்தி வருகின்றது. மேலே விவரித்துள்ள அரசுத் திட்டங்களும், திட்டப்பணிகளும் மீனள ஆதாரங்களை உரிய அளவுக்குப் பயன்படுத்துதல், மீனவர் நலன், நியாயமான விலையில் மக்களுக்குப் புரதச் சத்துள்ள உணவுப் பொருள் வழங்குதல், அந்நிய செலாவணியைப் பெருக்குவதற்காக மிகவும் விலைமதிப்புள்ள இறால்களை ஏற்றுமதி செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. நமது திட்டங்கள் தொலைநோக்குடன் வகுக்கப்பட்டு கடின உழைப்புடன் செயலாக்கப்படுவதால் வற்றாத வளத்தைத் தன்னுள் வைத்துக்கொண்டிருக்கும் கடலும், தெளிந்த குளிர்ந்த உள்நாட்டு நீர்நிலைகளும் நிறைந்த நீங்காத செல்வத்தை நமது மாநிலத்தின் மீது பொழியுமென்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

மீனள திட்டங்களைச் செயற்படுத்துவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.



## இணைப்பு II

(142-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

### பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### மானியக் கோரிக்கை எண். 32.

### 1985-1986

### 1. முன்னுரை.

மானியக்கோரிக்கை எண். 32 ''பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்'' என்ற தலைப்பில் ரூ. 11,54,12,000 வழங்குமாறு நான் முன்மொழிகிறேன்.

2. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் நலத்தைப் பேணுவதற்காக 1969-ல் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டது. அது ஓர் ஐ.ஏ.எஸ். அலுவலரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்டங்களில் துணை ஆட்சியர் தகுதியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் வேலைகளைக் கவனித்து வருகின்றனர். சீர்மரபினர் முன்னேற்றத்திற்கென தனித் துணை ஆட்சியர் மதுரையில் செயலாற்றி வருகிறார்.

3. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறுவதற்காக, பிற்படுத்தப்பட்டோர் நலம் குறித்த தனி மானியக் கோரிக்கை 1971-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. 1967–68-ம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,61,40,000 படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1985–86-ம் ஆண்டில் ரூ. 11,54,12,000 ஆக உயர்ந்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அடைந்துள்ள துரித முன்னேற்றத்தை இவ்வுயர்வு எடுத்துக் காட்டுகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் மேம்பாட்டுக்காக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நலத் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :

**II. கல்வி :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் பெறக் கல்வி முக்கியமான சாதனம் என்று அரசு கருதுகிறது. எனவே, இந்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் கல்வியில்

ஏற்றம் பெற தனிக் கவனம் செலுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ-மாணவியர்கள் முன்னேற்றம் பெற வழிகோலும் வகையில் அவர்களுக்காகப் பள்ளிகள், உணவு விடுதிகள் போன்ற வசதிகளை அரசு செய்துள்ளது. அரசு இவர்களுக்காக மெட்ரிக் படிப்புக்கு முன் மற்றும் மெட்ரிக் படிப்புக்குப் பின் உபகாரச்சம்பளம், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் போன்றவைகளை வழங்குவதன் மூலம் நிதியுதவியளித்து வருகிறது.

(i) **பள்ளிகள் :** சீர்மரபினர் கல்வி மேம்பாட்டுக்காகத் தமிழ் நாட்டில் 277 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளைப் பற்றிய மாவட்ட வாரியான விவரங்கள் இணைப்பு—I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1984—85-ம் ஆண்டு 50,453 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயின்றனர். ரூ. 1,82,02,000 செலவிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வித் தரத்தை முன்னேற்றுவதற்காக 1985—86-ம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது :—

(1) 36 கள்ளர் நடுநிலைப்பள்ளிகளுக்கு போதனா உபகரணங்கள் வழங்க ரூ. 54,000 செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

(2) 36 கள்ளர் நடுநிலைப் பள்ளிகளிக்கு விளையாட்டுக் கருவிகள் வாங்கி வழங்க ரூ. 72,000 செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

(3) 81 கள்ளர் பள்ளிகளுக்கு மரச் சாமான்கள் வாங்கி வழங்க ரூ. 81,000 செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பள்ளிகளில் படிக்கும் 52,573 மாணவ, மாணவியர் நலனுக்காக 1985—86-ல் இப்பள்ளிகளை நடத்திட ரூ. 1,84,13,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 8-ம் வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு ஆகியவற்றில் ஆண்டுத் தேர்வுகளில் மிக அதிக மதிப்பெண்களும், அதற்கு அடுத்தபடியாக அதிக மதிப்பெண்களும் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும், சீர் மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கும் முதல் பரிசும், இரண்டாம் பரிசும் வழங்குவதற்காக ஆண்டிற்கு ரூ. 4,000 ஒதுக்கப்படுகிறது. இது தவிர, மாநில அளவில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது சீர் மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் ரூ. 500 மதிப்புள்ள பரிசும் வழங்கப்படுகிறது.



**மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு:**

| | | |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. .. | முதல் பரிசு .. | ரூ. 100 |
| | இரண்டாம் பரிசு .. | ரூ. 50 |
| எட்டாம் வகுப்பு .. | முதல் பரிசு .. | ரூ. 50 |
| | இரண்டாம் பரிசு .. | ரூ. 10 |

இப் பரிசுத் தொகைகளை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சார்ந்த, மாணவ, மாணவியர்களிடையே மேல் நிலைப்பள்ளித் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் தலா ரூ. 1,000 மதிப்புள்ள இரு முதல் பரிசுகள் மற்றும் போக்குவரத்துக் கட்டணமாக தலா ரூ. 100-ம் வழங்கும் திட்டத்தை அரசு 1983—84-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. 1984—85-ம் ஆண்டில் 66 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ரூ. 7,000 செலவிடப்பட்டது. இதற்காக 1985—86-ம் ஆண்டு வரவு—செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 16,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 66 மாணவர்கள் பயனடைவார்கள்.

**முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்:**

கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இத்துறை நடத்தும் [illegible] மரபினருக்கான பள்ளிகள் அனைத்திலும் 1—7—1982-லிருந்து 5 வயது முதல் 9 வயது வரையிலும் உள்ள எல்லா மாணவ-மாணவிகளும் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 15-9-1984 முதல் மதுரை மாவட்டத்தில் உள்ள 10 பள்ளிகளில் பயிலும் 10 முதல் 15 வயது வரையிலுள்ள 3,212 பள்ளி மாணவ-மாணவியர்களுக்கும் கூடுதலாக இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1984-85-ம் ஆண்டில் 40,000 மாணவர்கள் பயன்பெற்றனர். இதற்காக ரூ 25,39,000 செலவிடப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 1985—86-ம் ஆண்டிற்காக ரூ. 26,63,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 40,000 மாணவர்கள் பயனடைவார்கள்.

**புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள்:**

மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ-மாணவிகளுக்கு அரசு பாட நூல் நிறுவனத்தினால் வெளியிடப்படும் பாட புத்தகங்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. நான்காம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் மாணவர்

களுக்குப் பாடப்புத்தகங்களும், நோட்டுப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1984-85-ம் ஆண்டில் ரூ. 10,73,000 செலவிடப்பட்டது. 45,000 மாணவர்கள் பயனடைந்தனர். 1985-86-ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூ 6,87,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 46,000 மாணவர்கள் பயனடைவார்கள்.

உடைகள் (பள்ளிகள்):

எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவ-மாணவிகளுக்கும் இரண்டு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன. 1984-85-ம் ஆண்டு 62,000 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. ரூ 20,06,000 செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்காக 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 21,05,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 65,000 மாணவ-மாணவியர் பயனடைவர்.

(ii) அரசு மாணவர் இல்லங்கள் : பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்காக இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்கள் தங்கள் படிப்பை இடையூறு இல்லாமல் தொடர அரசு வகைசெய்துள்ளது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித்தனியே இல்லங்கள் நடத்தப்படுகின்றன. ஆண்டு வருமானம் ரூ 5,000-க்கு மேற்படாத பெற்றோர்களின் பிள்ளைகள் இந்த இல்லங்களில சேருவதற்கு தகுதியுடையவராவர். பிற்படுத்தப்பட்ட வகுப்பையும் மற்றும் சீர்மரபினர் இனத்தையும் சார்ந்த மாணவ-மாணவியரின் பயனுக்காக நடத்தப்படுவரும் மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை, அவற்றில் தங்கியுள்ள மாணவ-மாணவியர் எண்ணிக்கை ஆகியவை ஆண்டுவாரியாக இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1984—85-ம் ஆண்டு வரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களின் நலனுக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை 523 மாணவர் இல்லங்களை ஏற்படுத்தி நடத்திவருகிறது. 1984—85-ம் ஆண்டு 30,803 மாணவ, மாணவிகள் விடுதிகளில் சேர்ந்து தங்கிப் பயனடைந்தனர். இதற்காக ரூ. 3,13,32,000 செலவிடப்பட்டது. இந்த 523 மாணவர் இல்லங்களில், 68 இல்லங்கள் கல்லூரி மாணவ-மாணவியருக்கும், 3 இல்லங்கள் தொழிற்பயிற்சி பள்ளி மாணவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1985-86-ம் ஆண்டில் ரூ. 13,33,000 செலவில் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்காக மேலும் 20 மாணவர் இல்லங்கள் திறக்கப்பட உள்ளன. இந்நாள் வரை திறக்கப்பட்டிருக்கும் மாணவர் இல்லங்கள் பராமரிப்புக்கென 1985—86-ம் ஆண்டுக்கு ரூ: 3,82,85,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 32,000 மாணவ, மாணவியர் பயனடைவர். இதில் புதியதாகத் திறக்கவிருக்கும் 20 இல்லங்களிலுள்ள மாணவ-மாணவியரின் எண்ணிக்கையும் அடங்கும்.



மரச்சாமான்கள் :

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் இல்லங்களுக்கு மரச் சாமான்கள் வழங்க 1985—86-ம் ஆண்டில் முறையே ரூ.4,00,000-மும், ரூ.50,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

உணவுச் செலவு :

1981—82-ம் ஆண்டிலிருந்து மாணவர் இல்லங்களிலுள்ள மாணவ-மாணவியருக்குப் பின்வரும் விகிதத்தில் உணவுச் செலவு அனுமதிக்கப்படுகிறது :—

| தொடர் எண் | மாணவர் இல்லங்கள் | மாநகர் | வெளியூர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 1. | கல்லூரி மாணவர் இல்லங்கள் .. | 95 | 80 |
| 2. | தொழிற்கல்வி மாணவர் இல்லங்கள் | 95 | 80 |
| 3 | பள்ளி மாணவர் இல்லங்கள் .. | 60 | 60 |

மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டுதல் :

தற்பொழுது, இத்துறையால் 523 மாணவர் இல்லங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றில், 49 விடுதிகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் உள்ளன. மற்றவை வாடகைக் கட்டடங்களில் உள்ளன. 1985-86-ல் அரசு மேலும் 20 விடுதிகளைத் திறக்க உள்ளது. எல்லாவற்றிற்கும் கட்டடம் கட்ட அதிகத் தொகை தேவை என்பதால், இவற்றிற்கும் படிப்படியாக கட்டடங்கள் கட்ட அரசு திட்டமிட்டு, 1985 86-ம் ஆண்டிற்கு இரண்டு மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கென ரூ. 8,00,000 ஒதுக்கியுள்ளது

சீருடைகள் வழங்குதல் (மாணவ, மாணவியர் இல்லங்கள்) :

1971—72-ம் ஆண்டு முதல் அரசு நடத்தும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மற்றும் சீர்மரபினருக்கான மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களுக்கும் இரண்டு ஜோடி சீருடைகள் அளிக்கப்படுகின்றன. 1984—85-ம் ஆண்டு 24,367 மாணவ—மாணவிகள் பயனடைந்தனர். ரூ. 16,98,000 செலவிடப்பட்டது. 1985—86-ம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 18,34,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 25,367 மாணவ, மாணவிகள் பயனடைவார்கள்.

**பகுதி நேர போதனை ஆசிரியர்களை நியமித்தல்:**

மாணவர் இல்லங்களில் சேர்ந்து படிக்கும் ஒன்பது, பத்து மற்றும் மேல் நிலை வகுப்பு மாணவர்களுக்கு காலையில்/மாலையில் போதிப்பதற்கு ஏறக்குறைய எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களிலும் பகுதி நேரப் போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**உணவு மானியம் வழங்குதல் :**

தனியாரால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட 47 மாணவர் இல்லங்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிடமிருந்து உணவு மானியத்தைப் பெறத் தகுதியுடையன. சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையிடங்களிலுள்ள இல்லங்களில், மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 வீதமும், மற்ற இடங்களிலுள்ள இல்லங்களில் ரூ. 40 வீதமும், உணவுச் செலவுக்காகப் பத்து மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப் படுகிறது. உணவு மானியம் பெறும் இல்லங்களில் தங்கிப் பயில ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்குக் குறைவாக உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளே தகுதியுடையவர்களாவர். 1984-85 ஆம் ஆண்டு 2,500 மாணவர்கள் பயனடைந்தனர். ரூ. 9,29,000 செலவிடப்பட்டது. இம்மானியச் செலவை ஏற் பதற்காக 1985-86-ம் ஆண்டிற்கு ரூ. 10,07,000 ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2,500 மாணவ, மாணவியர் பயனடைவர்.

**(iii) படிப்புதவித் தொகைகள் :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் முன் னேற்றத்திற்கு கல்வியே மிக முக்கியமானதொரு அம்சம் என்று கருத்திற் கொண்டு அரசு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வருகிறது. இவ்வாறு வழங்கப்படும் உதவித் தொகை யில் மாணவர்களின் படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங் கள், புத்தகங்களின் விலை, தேர்வுக் கட்டணம், விடுதிகளில் தங்கிப் படித்தால் அதற்கான உண்டி, உறையுள் கட்டணமும் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் அடங்கும். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், சீர் மரபினர் இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. சீர்மரபினர் மாணவர்களுக்கு மூன்றாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள், எழுது பலகைகள் முதலியன இலவசமாக கல்வித் துறையால் அளிக்கப்படுகிறது. இந்த இனங்களைச் சார்ந்த மாணவர் களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற் படாமல் இருந்தால் பிற்படுத்தப்பட்ட நலத்துறையினரால் வழங்கப்படும் படிப்பு உதவித் தொகையைப் பெறுவதற்கு இம்



மாணவர்கள் தகுதியுள்ளவர்களாவார்கள். பிற்படுத்தப்பட்ட
வகுப்பினரைப் பொறுத்த மட்டில் முந்தைய ஆண்டுத் தேர்
வில் 40 சதவீதம் மதிப்பெண்ணிற்குக் குறையாமல் பெற்றிருந்
தால், அந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகி
றது. ஆனால், சீர் மரபினர் மாணவர்கள் முந்தைய ஆண்டுத்
தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே, படிப்பு உதவித் தொகை
யைப்பெற தகுதியுடையவர்களாவார்கள். 1984-85—ஆம் ஆண்
டில் பள்ளிப் படிப்பு மற்றும் பட்டப் படிப்பு மாணவ, மாணவி
கள் மொத்தம் 4,18,500 பேர் ரூபாய் 3,86,15,000 படிப்புதவித்
தொகையாகப் பெற்று பயனடைந்தனர். இவர்களில்
2,34,000 மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.
1,84,500 மாணவர்கள் சீர் மரபினர் ஆவர்.

1982–83—ஆம் ஆண்டிலிருந்து கல்லூரிகள் மற்றும் தொழிற்
கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அவர்களுடைய கல்லூரி
கள், தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்ட
வகுப்பு மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு உதவித் தொகை
வழங்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள மாணவ
வர்களுக்குப் படிப்பு உதவித் தொகையை விரைவில் அனுமதித்து
வழங்கும் பொருட்டு முந்தைய ஆண்டில் அந்த நிறுவனத்திற்கு
வழங்கப்பட்ட உதவித் தொகையில் 90 சதவீதத்திற்குச் சமமான
தொகை கல்வி நிறுவனங்களின் முதல்வர்களிடம் முன் பணமாகக்
கொடுக்கப்படுகிறது. கல்வி நிறுவன முதல்வர்களிடமிருந்து
ப் பெறும் அனுமதியின் அடிப்படையில் தேவையாயின் மேலும்
நிதி அளிக்கப்படுகிறது.

புதிதாக உதவித்தொகை கோரும் மாணவர்களுக்கு அவர்கள்
தகுதி பற்றிய அட்டைகள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அலுவலர்களின் மூலமாகக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்
கப்படுகின்றன. முந்தைய ஆண்டுகளில் பயனடைந்தவர்களின்
எண்ணிக்கை, உதவித் தொகை வழங்குவதற்குச் செலவிடப்
பட்ட தொகை ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு III-ல்
கொடுக்கப்பட்டுள்ளன.

கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கால் நடை
மருத்துவம், வேளாண்மை, சட்டம், பட்டப்படிப்பு, சான்றிதழ்
படிப்பு, பட்டயக் கணக்கர் படிப்பு போன்ற மெட்ரிக் படிப்
பிற்குப் பிந்திய பாட வகுப்புகளுக்கும் படிப்பு உதவித்
தொகை வழங்கப்படுகிறது. தகுதி வாய்ந்த எல்லா பிற்
படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களும் மற்றும் சீர்
மரபினரும் இந்த படிப்பு உதவித் தொகையைப் பயன்
படுத்திக் கொள்ளலாம்.

(iv) விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் படிப்பு உதவித் தொகையில் அடங்கும் உணவு உறைவிடக் கட்டண விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

| தொடர் எண் | பாடம் | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். | சீர் மரபினர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (மாதம் ஒன்றுக்கு ரூபாய்) | |
| சென்னை மாநகரம் : | | | |
| 1. | கலை, விஞ்ஞானம், சட்டம் | 60 | 70 |
| 2. | மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 60 | 75 |
| 3. | தொழில், தொழில் நுட்பக் கல்வி | 50 | 60 |
| வெளியூர் : | | | |
| 1. | கலை, விஞ்ஞானம், சட்டம் | 50 | 55 |
| 2. | மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள் | 55 | 70 |
| 3. | தொழில், தொழில்நுட்பக் கல்வி | 45 | 50 |

(v) படிப்புக் கட்டணச் சலுகைகள் :

மேல் நிலைப் பள்ளி வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு கல்வித் துறையின் மூலமும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமும் படிப்புக் கட்டணச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன.—





| வருமானம் | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | சீர் மரபினர் | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி முழுக் கட்டணச் சலுகை | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி முழுக் கட்டணச் சலுகை | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி அரைச் சம்பளச் சலுகை (பாதிப் படிப்புக் கட்டணம், உதவித்தொகையுடன் சேர்த்து பிற்படுத்தப்பட்டோர்நலத் துறையால் வழங்கப்படுகிறது) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் ரூ. 5,000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு | கல்வித் துறையிடமிருந்து சலுகை எதுவும் கிடையாது. இம்மூன்று பிரிவினருக்கும் பாதிப் படிப்புக் கட்டணச் சலுகை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | | |

உதவித் தொகை வழங்குவதற்காக 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,69,65,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 4,57,392 மாணவ, மாணவியர் பயனடைவர்.

(vi) கடன் உதவித் தொகை :

தொழிற் படிப்புகளைப் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,001 முதல் ரூ. 10,000-க்கு உட்பட்டு இருந்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 வீதம் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட படிப்பை படிக்கும் காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல் உதவித் தொகை ரூ. 2,500 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டு 29 மாணவர்களுக்குக் கடன் உதவித் தொகை வழங்கப்பட்டது. ரூ. 14,500 செலவிடப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டுக்கு ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 100 பேர் பயனடைவார்கள்.

1985 ஜூலை 11]

## III. பயிற்சி வகுப்புகள்

### ஐ.ஏ.எஸ்.,ஐ.பி.எஸ். போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சி நிலையம்

1971-ஆம் ஆண்டு டிசம்பரில் அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு அந்தத் தேர்வு எழுதப் பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் தொடங்கப்பட்டது. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள், தேர்வு எழுதியவர்கள் மற்றும் தேறிய மாணவர்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு IV-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மத்திய பணித் தேர்வாணைக்குழு நடத்தும் அரசுப் பணித் தேர்வுகள் எழுத புதுடெல்லியில் உள்ள டாக்டர் ராவின் ஐ. ஏ. எஸ். பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற தமிழ்நாட்டில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 10 பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களை அனுப்பி வைக்கும் இத்திட்டத்தை, அரசு 1983-ஆம் ஆண்டில் கொண்டு வந்தது. பயிற்சித் திட்டத்திற்கான மூன்று நிலைகளுக்குமாக அரசு ரூ. 1,00,000 அனுமதித்துள்ளது. இத்திட்டம் மூன்றாண்டுகளுக்கு சோதனை முறையில் செயலாக்கப்படவிருக்கிறது. 1984–85-ஆம் ஆண்டு 50 மாணவர்கள் பயனடைந்தனர். ரூ. 4,34,000 செலவிடப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 6,43,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 50 பேர் பயனடைவர். இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் விவரம் இணைப்பு V-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### பொதுநோக்கு பொறியியல் பட்டறைகள் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்கானூரணியிலும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் வீரகேரளம்புதூரிலும் உள்ள மூன்று பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் உள்ளன. இவை தொழிற் பயிற்சி நிலையங்களின் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. இவற்றிற்காகும் செலவு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப்பட்டறைகளில் பொருத்துதல், பற்றவைத்தல் மற்றும் கடைசல் ஆகியவற்றில் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர் மரபினர் மேற்கூறிய தொழில்களில் வேரூன்றி நின்று அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதோடல்லாமல் சுயவேலையில் ஈடுபட அவர்களிடம் போதிய தொழில்



1985 ஜூலை 11]

நுட்பத் திறமையை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டொன்றுக்கு 60 சீர் மரபினர் மாணவர்கள் இப்பயிற்சி நிலையங்கள் மூலம் பயன்பெறுவர். இதற்கான செலவு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிலிருந்து வழங்கப்படுகிறது.

### தொழிற்பயிற்சி நிலையங்கள் :

சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலனுக்காக பின்வரும் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன :—

1. தையல், மற்றும் ஆயத்த ஆடை பயிற்சி நிலையம், ரெட்டியார்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

2. தையல் மற்றும் பூ வேலைப்பாடு நிலையம், செக்கானூரணி, மதுரை மாவட்டம்.

3. பிரம்பு மற்றும் நாரிழைப் பிரிவு, தக்கலை மற்றும் குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

4. தையல் நிலையம், கிருஷ்ணன் கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

5. தையல் நிலையம், திருவெண்ணெய்நல்லூர், தென்னாற்காடு மாவட்டம்.

6. தையல் நிலையம், கம்பம், மதுரை மாவட்டம்.

7. தையல் நிலையம், தேவர்குளம், திருநெல்வேலி மாவட்டம்.

8. தையல் நிலையம், திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம்.

1984–85 ஆம் ஆண்டு ரூபாய் 10,03,000 செலவிடப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 11,06,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வேலை வாய்ப்புப் படிப்புகளுக்கான பயிற்சித் திட்டத்தினை அரசு 1984–85 ஆம் ஆண்டு முதல் துவக்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் அதிகபட்சமாக ரூ. 500-க்கு மேற்படாத கல்விக் கட்டணத்தை வழங்கி, 3 மாத பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்களின் பணி நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகளை எழுதத் தனிப் பயிற்சி அளிக்கப்படு கிறது. இதைத் தவிர, கம்ப்யூட்டர் புரோகிராமிங், விற்பனை யாளர் போன்ற துறைகளிலும் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. இதுவரை இத்துறை மூலம் வங்கி புரபேஷனரி அதிகாரி தேர்வு எழுதப் பயிற்சி, கம்ப்யூட்டர் பயிற்சி, விற்பனையாளர் போன்ற பயிற்சிக்கு 239 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 20 பேர் பெண்கள் ஆவர்.

இதுவரை இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் விவரம்:

| | |
|---|---|
| 1. வங்கி புரபேஷனரி அதிகாரி தேர்வுப் பயிற்சி முதல் குழு .. .. .. .. | 40 |
| இரண்டாவது குழு .. .. .. | 33 |
| 2. கம்ப்யூட்டர் புரோகிராமிங் முதல் குழு .. | 100 |
| இரண்டாவது குழு .. .. .. .. | 56 |
| 3. விற்பனையாளர் பயிற்சி .. .. .. | 10 |

இப்பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்தில் சென்னையில் தங்கிப் பயில ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் இரண்டு விடுதிகள் திறக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆண்கள் விடுதி திறக்கப்பட்டு அக்டோபர், 1984 முதல் இயங்கி வருகிறது. 1984–85-ம் ஆண்டு 239 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக ரூ. 1,87,000 செலவிடப்பட்டது. இத்திட்டதிற் காக 1985–86-ம் ஆண்டிற்கு ரூ. 8,16,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 600 மாணவர்கள் பயனடைவர்.

### சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்

பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த சட்டம் படித்த பட்டதாரிகள் புகழ் பெற்ற முதுநிலை வழக்குரைஞர்களிடம் பயிற்சி பெற இயலவில்லை. எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களிடையே இருந்து ஆண்டுதோறும் 20 சட்டப் பட்டதாரிகளைத் தெரிந்தெடுத்து, அவர்கள் பல் வேறு அனுபவம் பெறும் பொருட்டு, பல்வேறு சட்டப் பிரிவு களில் வல்லமை பெற்று சிறந்து விளங்கும் முதுநிலை வழக்குரை ஞர்களிடம் பயிற்சிக்கு அமர்த்தி 3 ஆண்டுகளில் பயிற்சி பெற திட்டமொன்றினை அரசு உருவாக்கியிருக்கிறது. பயிற்சிக் காலத் தில் பயிற்சி பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 பயிற்சி





உதவித் தொகையாக வழங்கப்படும். முதுநிலை வழக்குரைஞர் கள் இத்திட்டத்தில் பங்கேற்பதை சிறப்பிக்கும் பொருட்டு அவர் களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 மதிப்பூதியம் வழங்கப்படும். 1985–86-ம் ஆண்டுக்கு ரூ. 3,22,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## IV. பொருளாதார முன்னேற்றம்.

### முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், மற்றும் போயர் ஆகியோருக்கு தொழிற் கருவிகள் வழங்குதல்.

முடிதிருத்துதல், சலவைத் தொழில் செய்துவரும் நாவிதர், வண்ணார் போன்ற வகுப்பினைச் சார்ந்த ஏழை மக்களுக்கு அவர்கள் தங்கள் தொழிலைச் செய்து வாழ, அத்தொழில்களுக்கு தேவையான கருவிகளை இலவசமாக அரசு வழங்குகிறது. முடி திருத்தும் தொழிற் கருவிகள் ரூ. 120 மதிப்பிலும், சலவைக் கருவிகள் ரூ. 406 மதிப்பிலும் அரசால் வழங்கப்படுகின்றன.

கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள போயர்களுக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம் 1978–79-ம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. இதற்கான கருவிகளின் விலை ரூ. 200. தற்பொழுது இத்திட்டம் சென்னை மாநகரம் தவிர, எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது. 1984–85-ம் ஆண்டு 6,000 பேர் பயனடைந்தனர். இதற்காக ரூ. 20,15,000 செலவிடப்பட்டது. 1985–86-ம் ஆண்டிற்கு ரூ. 16,07,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 6,500 நபர்கள் பயனடைவர்.

### சலவைத் துறைகள் கட்டுதல்:

சலவைத் துறைகள் கட்டுவது சலவைத் தொழிலாளர்களுக் கென்று செய்து கொடுக்கப்படும் முக்கிய வசதியாகும். பேரு ராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் சலவைத் துறை கட்ட பின்வருமாறு நிதி உதவி அளிக்கப்படுகின்றன :—

1. அரசு உதவித் தொகை—75 சதவீதம்
2. உள்ளாட்சி மன்றம் அளிக்கும் தொகை—20 சதவீதம்
3. பயனடைவோர் அளிக்கும் தொகை—5 சதவீதம்

1984–85-ம் ஆண்டு 3 சலவைத்துறைகள் கட்ட ரூ. 1,44,000 செலவிடப்பட்டது. 1985–86-ம் ஆண்டுக்கு ரூ. 2,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

பாசன கிணறுகள் தோண்டுதல் :

சீர்மரபினர் பொருளாதார நிலையை மேம்படுத்தும்
பொருட்டு, அவர்களில் 2 ஏக்கருக்கும் குறைவான நிலச் சொந்தக்
காரர்களுக்கு பாசனக் கிணறுகள் வெட்ட மான்யம் அளிக்கப்
படுகிறது. ஒரு கிணறு வெட்ட வழங்கப்படும் அதிகபட்ச உதவித்
தொகை ரூ. 2,500 ஆகும். 1984-85-ம் ஆண்டு 105 பேர்
பயனடைந்தனர். ரூ. 2,62,000 செலவிடப்பட்டது. 1985–86-ம்
ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 1,18,000 ஒதுக்கப்பட்
டுள்ளது. 48 பேர் பயனடைவார்கள்.

வீட்டு வசதி :

சீர் மரபினர் சமுதாயத்தினருக்காக தமிழ்நாடு ஆதிதிரா
விடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1979–80 மற்றும்
1980–81-ம் ஆண்டுகளில் மொத்தம் 967 வீடுகள் கட்டும்
பணி மேற்கொள்ளப்பட்டது. இவற்றுள் 663 வீடுகள் கட்டி
முடிக்கப்பட்டுள்ளன. 1985-86-ம் ஆண்டிற்கு ரூ. 1,000
(அடையாளமாக) ஒதுக்கப்பட்டுள்ளது.

குழந்தை நல நிலையங்கள்:

அஜீஸ் நகர் குடியிருப்புப் பகுதியில் செயல்பட்ட 5 குழந்[illegible]
நல நிலையங்கள் தற்பொழுது உளுந்தூர்பேட்டை வட்டத்
தினுள்ள எடக்கால் என்ற இடத்தில் இயங்கி வருகின்றன. இந்
நிலையங்கள் தற்பொழுது முதலமைச்சரின் சத்துணவுக் கூடங்
களுடன் இணைக்கப்பட்டு சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டின்
கீழ் இயங்கி வருகின்றன.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக வீட்டு மனைகள் கையகப்
படுத்துதல்

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் மிகவும் நலிவுற்ற நிலை
யிலுள்ள மக்களுக்காக, குறிப்பாகத் தொழில் அடிப்படையிலான
வகுப்புகளைச் சார்ந்தவர்களும், மிகவும் நலிந்த நிலையிலுள்ள
வர்களுமான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர் வகுப்பை
சார்ந்தவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க நிலங்களைக் கையகப்
படுத்தும் சிறப்புத் திட்டமொன்றை அரசு 1981–82-லிருந்து
செயல்படுத்தி வருகிறது. 1984–85-ம் ஆண்டு ரூ. 23,51,000
இதற்காகச் செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்கு 1985–86-ம்
ஆண்டிற்கு ரூ. 10,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



V. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக்
கழகம்:

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை
உயர்த்தும் நோக்கோடு, ரூ. 10 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு
மூலதனத்துடன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' என்னும் அமைப்பை அரசு
ஏற்படுத்தியுள்ளது. இக்கழகத்தின் நோக்கம் பின்வருமாறு :—

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தங்களின் பொருளாதார
நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டுத் தொழில்
தொடங்குவதற்கான தொடக்க மூலதனத் தொகையைக்
குறைந்த வட்டியில் வழங்குதல்; மற்றும்

2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்
பாட்டிற்கு அவசியமென்று கருதக்கூடிய வர்த்தக, வணிகத்
தொழில் ரீதியான மற்றும் பொதுவான நடவடிக்கைகளை நேரடி
யாக அல்லது மறைமுகமாக மேற்கொள்ளுதல்.

இக்கழகத்தின் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு
இதுவரையில் ரூ. 30,00,000 பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது.
மேலும், ரூ. 10,00,000 வழிமுறை ஏற்பாட்டு முன் பணம்
வழங்கியுள்ளது. இக்கழகம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு
சங்கங்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது. கால் நடை வளர்த்
தல், கிராம குடிசைத் தொழில்கள் வளர்ச்சி மற்றும் இவை
போன்ற தொழில்களைச் செய்து பிற்படுத்தப் பட்டோரின்
வாழ்க்கை ஏற்றம் பெற தொழிலுக்குத் தேவையான முதலீட்டில்
20 சதவீதத் தொகையை 4 சதவீதம் வட்டி விதத்தில் இக்கழகம்
கடனாக வழங்குகிறது. எஞ்சியுள்ள 80 சதவீத முதலீட்டுத்
தொகையை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து,
கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ள
வேண்டும்.

1983–84-ல் ரூ. 55,47,000 மொத்த மூலதனச் செலவில்
23 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்படுவதற்காக
ரூ. 11,09,000 கடனாக இக்கழகம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்
கீழ் 717 குடும்பங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## VI. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்காக ஏற்படுத்தப்பட்ட இரண்டாம் உயர் ஆணைக்குழு

திரு. ஜே. ஏ. அம்பாசங்கர், இ. ஆ. ப. (ஓய்வு பெற்ற) அவர்களின் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக்குழுவை 1982-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு அமைத்தது. இக்குழு தன்னுடைய அறிக்கையை 28-2-1985-ல் அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

### முடிவுரை

இவ்வாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மானியக் கோரிக்கைக்கு ஒப்புதலளிக்குமாறு அவையிடம் நான் வேண்டுகிறேன்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
13421
சென்னை-600 008
JP
V3N,31 N85
N85-13.131